# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

## MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

## TIRUNELVELI

### தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

### DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

### TIRUNELVELI

## விருப்பப்பாடம் - பண்பாட்டு மானிடவியல்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012.

## விருப்பப்பாடம் பண்பாட்டு மானிடவியல்

## முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

**Learning Objective:**

- ❖ மானிடவியலை அறிமுகப்படுத்துதல்
- ❖ உடல்சார் பண்பாட்டு மானிடவியலை அறிமுகம் செய்தல்
- ❖ பண்பாட்டின் உட்கூறுகளை விளக்குதல்.
- ❖ பண்பாட்டு மாற்றத்தின் முறைகளைக் கற்பித்தல்
- ❖ திருமணம், உறவுமுறைகளை இயம்புதல்

| **Expected Course Outcomes** | | |
|---|---|---|
| **On the Sucessful Completion of the Studentswil be able to** | | |
| **இப்பாடத்தைக் கற்பதால் பின்வரும் பயன்களை மாணவர் அடைவர்** | | |
| **CO1** | மானிடவியல் துறையை மாணாக்கர் அறிந்துகொள்வர். | **K4,K2** |
| **CO2** | தமிழகப் பண்பாட்டு மாற்றம் குறித்து மாணவர்கள் அறிவர் | **K5,K6** |
| **CO3** | பிறசமயத்தழுவுதல் குறித்து விரிவாகத் தெரிந்துக் கொள்வர். | **K3,K1** |
| **CO4** | பழந்தமிழரின் சமூகநிலை, பண்பாட்டுநிலை, உயிரியல் நிலை போன்றவற்றை தற்கால வாழ்வியலுடன் பொருத்திப் பார்த்தல். | **K3,K4** |
| **CO5** | தமிழ் ஆய்விலும் பிறதுறையை ஆய்வு செய்யும் நோக்கை அறிந்துகொள்வர். | **K2,K6** |
| **K1-Remember; K2-Undestand; K3-Apply; K4-Analyze; K5-Evaluate; K6-Create** | | |

**அலகு - 1**

மானிடவியலின் தோற்றம் - அரிஸ்டாட்டிலின் கொள்கை - மானிடவியலின் உலகம் தழுவிய வளர்ச்சி.

**அலகு - 2**

மானிடவியல் பிரிவுகளின் அறிமுகம் - உடல்சார் மானிடவியல் பண்பாட்டு மானிடவியல் - தொல்லியல் - மொழியியல்

**அலகு - 3**

சாதிமுறை - சாதிமுறையின் வகைகள் - இந்தியச் சாதிமுறை - சாதிக் கொள்கைகள் - மரபுக்கொள்கை - தொழிற்கொள்கை - சமயக்கொள்கை - அரசியற்கொள்கை - படிமலர்ச்சிக்கொள்கை - குடி ஊழிய முறை.

**அலகு - 4**

சமய நம்பிக்கைகளும் வாழ்வியலும் - சமயத்தின் தோற்றம் ஆவியுலகக் கோட்பாடு - உயிரியம் - குலக்குறியியம் - முன்னோர் வழிபாடு - புனிதத் தன்மையை ஏற்படுத்தியுள்ளமை - சடங்குமுறைகள் - மக்கள் வாழ்வில் சமயத்தின் பங்கு.

**அலகு - 5**

உணவு ஈட்டுதலும் பரிமாற்ற முறைகளும் - பொருளியல் முறைகள் - பரிமாற்றமும் பகிரிந்து கொள்ளுதலும் - பொதுப்படியான பரிமாற்றம் சமச்சீரி பரிமாற்றம் - குலப் பரிமாற்றம் - குடிஊழிய முறை - விருந்துப் பரிமாற்றம் - மௌனப் பரிமாற்றம்- அன்பளிப்புப் பரிமாற்றம் - மறுபங்கீட்டு முறை.

**துணைநூற் பட்டியல்**

1. பண்பாட்டு மானிடவியல் - பக்தவச்சல பாரதி

2. சங்க இலக்கியம் (சமூக மானிடவியலின் ஆய்வுக் கட்டுரைகள்), சிலம்பு

நா.செல்வராசு, அனிச்சம் பதிப்பகம்,

3. மானிடவியல் கோட்பாடுகள் பக்தவச்சல பாரதி, வல்லினம் வெளியீடு, முதல்

பதிப்பு, 2005.

4. திராவிட மானிடவியல் பக்தவச்சல பாரதி, க.வைஷ்ணவி, காலச்சுவடு பதிப்பகம், 2014.

5. பாணர் இனவரைவியல், பக்தவச்சல பாரதி, அடையாளம் வெளியீடு, 2015.

**OUTCOME MAPPING**

| | **PO 1** | **PO 2** | **PO 3** | **PO 4** | **PO 5** | **PO 6** | **PO 7** | **PO 8** | **PO 9** | **PO 10** | **PO 1** | **PO 2** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CLO1 | 3 | 2 | 1 | 3 | 3 | 2 | 3 | 2 | 1 | 3 | 3 | 2 |
| CLO2 | 3 | 3 | 2 | | 2 | 3 | 3 | 2 | | 2 | 3 | 3 |
| CLO3 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 |
| CLO4 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 1 | 3 | 3 | 2 |
| CLO5 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | | 2 | 3 | 3 | 3 | 3 |

**Strong -3, Medium -2, Low -1**

# அலகு - 1

## மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும்

மானிடவியல் ஒரு முறையான அறிவியல் என்ற நிலையில் ஓர் இளம் துறையாகும். கல்விசார் நிலையில் இத்துறை தோன்றி ஏறக்குறைய 119 ஆண்டுகள்தாம் ஆகின்றன. அதாவது சர் எட்வர்ட் பானட் டைலர் கி.பி. 1884 - ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறைக்குப் பொறுப்பேற்ற ஆண்டுதான் இத்துறை முறைப்படியான தோற்றத்தைப் பெற்றது. இப்பல்கலைக் கழகத்தில் டைலர் பெற்ற நியமனமே கல்விசார் நிலையில் மானிடவியலார் பெற்ற முதல் பதவியாகும் இதன் பின்னரே உலகெங்கும் மானிடவியல் துறை வேரூன்றத் தொடங்கியது. இருப்பினும் மானிடவியல் துறையானது பல்வேறு துறை அறிஞர்களின் அறிவு வேட்கையினாலும் உழைப்பினாலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்றுவிட்டது. அவ்வாறு கூறுவதே அவ்வறிஞர்களின் உழைப்புக்கு நாம் செலுத்தும் மிகப்பெரும் நன்றியாகும்.

தொடக்கக் காலத்திலிருந்தே ஐரோப்பியர்கள் உலகின் எந்தெந்தப் பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்தனரோ அங்கெல்லாம் சமகாலத்திய மேற்கத்தியத் தத்துவ மரபுகளின் எச்சங்கள் பரவியிருந்தன. இத்தத்துவ மரபுகளின் அடிப்படையில் பல சமுதாய அறிவியல்கள் தோன்றின. மானிடவியலும் பல மேற்கத்தியத் தத்துவக் கூறுகளின் தொகுப்பாகக் காலத்தினூடே வளர்ந்து வந்துள்ளது. தொடக்ககாலத் தத்துவவியலார் மனிதனையும், அவனது சமுதாய அமைப்புகளையும், பண்பாட்டுக் கோலங்களையும் கண்ணுற்று அவற்றை உய்த்துணரும் போக்கில் பலவாறு சிந்தனை செய்தனர். அச்சிந்தனைகளின் வெளிப்பாடே இன்றைய சமுதாய அறிவியல்களின் வளர்ச்சியாகும்.

மானிடவியலின் இன்றைய நிலையை அறிய அது எந்தெந்த ஆதாரங்களைக் கொண்டு வளர்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பல்வேறு கால மக்களின் மரபுகள், வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள் முதலானவற்றைத்

தொடக்கத்திலிருந்து எந்தெந்தமுறைகளில் ஆராய்ந்தனர் என்பதை அறிய வேண்டும். இதற்கடுத்து மனிதனைப் பண்பாட்டு நிலையிலும், உயிரியல் நிலையிலும் ஆராயும் இக்கால மானிடவியல் முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதையும் அறிய வேண்டும். இவற்றைத் தொகுத்துக் காண்பது மானிடவியலின் தொடர்ச்சியான வரலாற்றைக் காண்பதற்கு உதவும்.

இக்கால மானிடவியல் கடலென விரிந்த துறையாதலால் அதை உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) என்னும் பிரிவுகளில் நின்று அறிவதே சாலப் பொருத்தம்.

**மானிடவியலின் தோற்றம்**

மானிடவியலின் வளர்ச்சியில் பல காரணிகள் பங்கு பெற்றுள்ளன. இருப்பினும், மேற்கத்தியத் தத்துவமும், மேற்கத்திய வரலாற்று நிகழ்ச்சிகளுமே அடித்தளமாய் அமைந்துள்ளன. மனிதனின் தோற்றம், தன்மை, அவர்களுக்குள் உள்ள வேறுபாடுகள் முதலானவை குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுப்பப்பட்ட வினாக்களே இன்றைய மானிடவியலின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன. மனிதனைப் பற்றிய அக்காலத்தவர்களின் ஊகங்களும் ஆர்வமும் நீண்ட வரலாறு கொண்டவை. பல்வேறுபட்ட மக்களின் வழக்கங்களை அறிவதில் பழம்பொருள் ஆய்வாளர்கள் (Antiquarians) மிகுந்த ஆர்வங்காட்டினர். அவர்களுள் ஹெரோடாட்டஸ், ஸ்ட்ராபோ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் பரந்து விரிந்த பண்டைய பிரான்ஸ் நாட்டில் (Gaul) பலவகையான மக்கள் வாழும் முறையை அறியும் பொருட்டு, சீசர் என்பார் அந் நிலப்பரப்பினை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆராய்ந்தார். இன்று பண்பாட்டு வகைகளையும், பண்பாட்டுப் பரவலையும் ஆராய்வதில் செல்வாக்குப் பெற்று விளங்கும் பண்பாட்டுப் பரப்புக் (Culture Area) "கோட்பாட்டை அன்றே சீசர் பயன்படுத்தியுள்ளார் எனக் கருதவேண்டியுள்ளது. இதுபோன்று பலசெய்திகளைத் தொகுத்துக் காணும்போது மட்டுமே தொன்மைக் காலத்தில் மனிதனைப் பற்றி அறிவதில் எவ்வாறான சிந்தனைகள், செயற்பாடுகள் நிலவின என்று அறிய முடியும் இதற்கு மானிடவியலின்

வரலாற்றினைப் பல நிலைகளாகப் பகுத்து அறிய வேண்டியது அவசியமாகிறது. மானிடவியல் தோன்றியது முதல் இன்றைய நிலை வரை அது நான்கு காலகட்டங்களாக வளர்ச்சியடைந்துள்ளது என்பார் பென்னிமன்! அவை

1. கருவுற்ற காலம் (Formulatory Period - கி.பி. 1835 க்கு முன்னர்)
2. ஒருமுகப்படுத்தப்பட்ட காலம் (Convergent Period கி.பி. 1835 - முதல் 1859 வரை)
3. ஆக்கநிலைக் காலம் (Constructive Period கி.பி. - 1859 முதல் 1900 வரை)
4. வளர்ச்சியுற்ற காலம் (Critical Period - 1900 முதல் 1935 வரை)

மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும் உலக வரலாற்றோடு பின்னிப் பிணைந்தவையாக உள்ளதால் மேற்கூறிய நான்கு நிலைகளுள் முதல் மூன்றினைப் பின்வரும் வரலாற்றுப் படி மலர்ச்சியோடு (Evolution) இணைத்து அறிவது மிகப் பொருத்தமாக இருக்கும்.

1. புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய காலம் (Period Before Age of Exploration)
2. புத்தாய்வுக் காலம் (Age of Exploration)
3. அறிவொளிக் காலம் (The Enlightenment Period)

**புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய காலம்**

இக்காலகட்டத்தை அறிய முற்படும்போது கிறித்து பிறப்பதற்கு முன்னர் வாழ்ந்த சிந்தனையாளர்கள் தொடங்கி புத்தாய்வுக் கால அறிஞர்கள் வரை அனைவரின் கருத்துகளைத் தொகுத்துக் காண வேண்டும். மானிடவியல் சார்ந்த சிந்தனை எந்தக் கால கட்டத்தில் தோன்றியது என்று மிகவும் துல்லியமாகக்

கூறமுடியாது. அவ்வாறு ஒருவர் அறிய முயன்றால் பிளேட்டோ அரிஸ்டாட்டில் காலம் வரை செல்ல வேண்டும் அல்லது அவர்களுக்கு முந்தையவர்கள் காலத்திலிருந்தே அறிய வேண்டும்.

இக்காலத்தைச் சேர்ந்த சிந்தனையாளர்களுள் செனோபேன்ஸ் (கி.மு. 570 - 475), ஹெரோடாட்டஸ் (கி.மு. 484 - 425), டெமோகிரிட்டஸ் (கி.மு. 460 - 370), புரோட்டோகோரஸ் (கி.மு. 480 - 410), சாக்ரட்டீஸ் (கி.மு. 470 - 399), பிளேட்டோ (கி.மு. 427 347), அரிஸ்டாட்டில் (கி.மு. 384-322), எப்பிக்கூரஸ் (கி.மு. 341 -270) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவருமே இன்றைய மானிடவியலோடு தொடர்புடைய பல கருத்துகளை வெவ்வேறு நிலைகளில் சிந்தித்தவர்கள். இக்கால மானிடவியலில் இவர்களின் கருத்துகள் ஆராயப்பட்டும், மறுக்கப்பட்டும், மாற்றங்கள் பெற்றும், அப்படியே ஏற்கப்பட்டும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**செனோபேன்ஸ் (ஏறக்குறைய கி.மு. 570 - 475)**

மானிடவியல் சார்ந்த கருத்துகளை முதன் முதலில் சிந்தித்தவர் செனோபேன்ஸ். இவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர் பல இடங்களுக்குப் பயணம் செய்தவர். பல்வேறு வகையான மக்களை நேரில் கண்டவர். பல இடங்களுக்குப் பயணம் செய்து புதிய புதிய மக்களினத்தவர்களை நேரில் கண்டதால் மனித சமுதாயத்தைப் பற்றிப் பல நிலைகளில் சிந்தித்தார். மனித சமுதாயம் என்பது மக்களால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அமைப்பே என்பார் செனோபேன்ஸ். அதோடு கடவுளர்கள் மனிதர்களாகப் பூமியில் படைக்கப்பட்டனர் என்றும், சமயம் என்பது ஒரு சமுதாயப் படைப்பே என்றும் இவர் உறுதியாக நம்பினார். இவ்வகைக் கருத்துகளைத் தெரிவித்த முதல் சிந்தனையாளர் என்னும் சிறப்பு இவருக்கு உண்டு.

**ஹெரோடாட்டஸ் (ஏறக்குறைய கி.மு 484 - 425)**

தொடக்கக் காலத்தில் உலகின் பல பகுதிகளுக்கும் அரிய பயணங்களை மேற்கொண்டவர் ஹெரோடாட்டஸ். போக்குவரத்து வளர்ச்சியுறாத அக்காலத்தில் இவர் இருந்த இடத்திலிருந்து கிழக்கு மேற்காக 1700 மைல்களும் தெற்கு வடக்காக 1600 மைல்களும் சென்று வந்தவர் என்பர் வரலாற்றியலார். இவர் மேற்கொண்ட பயணங்கள்

மூலம் 50க்கும் மேற்பட்ட மக்களினத்தவர்களைக் கண்டு அவர்களின் வாழ்க்கை முறைகளை விரிவாக எழுதினார். அதோடு இவர் சென்றுவந்த பகுதிகளைப் பற்றியும், அவற்றின் புவியியல், இயற்கைக் கூறுகளைப் பற்றியும் விரிவாக எழுதினார். இதனாலேயே கிரேக்க இலக்கியவியலார் முதற்கொண்டு அனைவரும் இவரை "வரலாற்றியலின் தந்தை" எனப் போற்றுகின்றனர்.

ஹெரோடாட்டசின் சமகாலத்தவர்கள் பல்வேறு இனமக்களையும், அவர்களின் மாறுபட்ட வாழ்க்கை முறைகளையும் ஆராய முற்பட்டனர் என்றாலும் இவர் அளவிற்குப் பரந்த நிலையில் அவர்களால் ஆராய இயலவில்லை. இவர் மக்கள் வழங்கிய மொழிகள், மக்களின் உருவவகைகள், பொருள்சார் பண்பாடு (Material Culture), திருமணம், மணவிலக்கு (Divorce) சமுதாயச் சட்டமுறைகள், அரசு, நீதிமுறைகள், போர், சமயம் போன்ற பல கூறுகளை விரிவாக ஆராய்ந்து எழுதினார். அதோடு, குழந்தையைப் பெற்றெடுக்கும் பேறுகாலத்தின்போது மனைவி பெறும் துன்பங்களுக்கும் விலக்குகளுக்கும் ஈடாகக் கணவனும் அவ்வகையான சிரமங்களை ஏற்கும் பேறுகாலத் தனிமையை (Couvade) முதன்முதலில் கண்டறிந்து எழுதினார்." இத்தகைய முறை பண்பாட்டு மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளதால் ஹெரோடாட்டஸ் பெயர் இன்றும் மானிடவியலில் இடம் பெற்றுள்ளது. எண்ணற்ற மனித இனத்தவர்களை அவர்களின் சூழலிலேயே ஆராய்ந்து எழுதிய மிகத் தொடக்கக் கால அறிஞர் ஹெரோடாட்டஸ் என்பதால் இவரை வரலாற்றியலின் தந்தை என்பதோடு "கிரேக்க இனவரைவியலின் தந்தை" என்று கூறுவதும் மிகப் பொருத்தமே.

ஹெரோடாட்டஸ் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வெவ்வேறு வகையான இனத்தவர்களை அறிந்த பின் கிரேக்கர்களின் பண்பாடே உயர்ந்தது என மதிப்பிட்டார். இருப்பினும் இவர் அனைத்து மக்களின் பண்பாட்டையும் ஒருமுகக் கண்கொண்டு பார்க்க விரும்பினார். ஒரு பண்பாட்டைச் சேர்ந்த எந்த ஒரு பழக்க வழக்கமும் பொருளற்ற தன்மையில் அவர்களின் பண்பாட்டில் இடம்பெறவில்லை என்பதை நன்கு உணர்ந்தார். இக்கருத்தே இன்றைய மானிடவியலின் மையக் கருத்தாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இனவரைவியல் தனிப் பரப்பாகத் திகழ்வது போன்று ஹெரோடாட்டஸ் காலத்தில் இல்லை என்றாலும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுச் செய்திகளைச் சேகரித்ததே மானிடவியலுக்கு அவர் ஆற்றிய மிகப்பெரும் பங்களிப்பாகும்.

**டெமோகிரிட்டஸ் (ஏறக்குறைய கி.மு. 460 - 370)**

ஹெரோடாட்டசுக்குப் பின்னர்க் கிரேக்கச் சிந்தனையாளர்கள் பலர் மனித சமுதாயத்தின் தன்மைகளை ஆராயத் தொடங்கினர். குறிப்பாக, சமுதாயத்தின் படிமலர்ச்சியையும் பண்பாட்டின் தோற்றத்தையும் அறிய விழைந்தனர். இவர்களுள் டெமோகிரிட்ட்ஸ் குறிப்பிடத்தக்கவர். இவர் தொன்மை மக்களிடம் காணப்பட்ட வழக்கங்களை ஒருமுகப்படுத்தி அதன் மூலம் பொதுவான கொள்கைகளை வகுக்க முயன்றார். தொன்மை மக்கள் காட்டுப்பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் தன்னந்தனியாக உணவு ஈட்டவோ கொடிய விலங்குகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவோ இயலவில்லை. ஆகவே அவர்கள் மற்றவர்களுடன் ஒன்றுசேர்ந்து அவர்களின் உதவியுடன் வாழ முற்பட்டனர். இதனால் தோன்றியதே சமுதாய வாழ்க்கை, இவ்வமைப்பு தேவையின் அடிப்படையிலேயே தோன்றியது. டெமோகிரிட்டசின் இக்கருத்துகள் அனைத்தும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இவர் மனித சமுதாயத்தின் படிமலர்ச்சி குறித்தும் விவாதித்தார். மனித சமுதாயம் தொன்மை நிலையிலிருந்து நாகரிக நிலை வரை படிப்படியாக வளர்ச்சியுற்று வந்துள்ளது என்றும் இவ்வளர்ச்சி அந்தந்தக் காலத்தில் ஏற்பட்ட வாழ்க்கைப் போராட்டங்களிலிருந்து மீளுவதற்கு மக்கள் மேற்கொண்ட முயற்சிகளின் மறுவடிவமே என்றும் கூறினார். படிமலர்ச்சிக் கருத்துக்களுக்கடுத்து இவர் பண்பாட்டுக் கூறுகள் (Culture Traits) தோன்றிய முறை குறித்தும் சிந்தனை செய்தார். இதற்கு மனிதனை விலங்கினங்களோடு ஒப்புமைப்படுத்தினார். மனிதன் விலங்குகளிடமிருந்து கற்ற பல்வேறு உத்திகளின் அடிப்படையிலேயே பல பண்பாட்டுக் கூறுகள் தோன்றின என்று இவர் நம்பினார். இதனால் இவர் மனிதனை முதன்முதலில் பறவைகளோடும் விலங்குகளோடும் ஒப்புமைப் படுத்தி ஆராய்ந்தவர் என்னும் பெயரைப் பெற்றார்.

மனிதன் சிலந்தியிடமிருந்து நெசவு நெய்தலையும், தூக்கணாங் குருவியிடமிருந்து வீடுகட்டும் முறையையும் நைட்டிங்கேல் பறவையிடமிருந்து இசையையும், அன்னத்திடமிருந்து பாடுவதையும் கற்றுக் கொண்டான் என்பார் இவர்." இதைப் போன்றே வேறு சில பண்பாட்டுக் கூறுகளின் தோற்றத்தினையும் விவரிப்பார். இன்றைய அறிதல்சார் மானிடவியலாரின் (Cognitive Anthropologists) கருத்துகளுடன் ஓரளவு தொடர்புடையனவாக இவர்தம் சிந்தனைகள் அமைந்திருந்தன என்று கருதலாம்.

**புரோட்டோகோரஸ் (ஏறக்குறைய கி.மு. 480-410)**

இவர் தம் சீரிய சிந்தனைகள் மூலம் பண்டைய கிரேக்க இலக்கியத்தில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றவர். "உண்மை அல்லது ஒதுக்குதல்" (Truth or the Rejection) என்ற இவரது புகழ்மிக்க நூலில் மனிதன் அனைத்தையும் கணிக்கக் கூடியவன் என்றும் இறைவன் இவ்வுலகில் நிலைபெற்றுள்ளானா இல்லையா என்பதைக் கூறவியலாது என்றும், பிரபஞ்சம் முழுவதிலும் மனிதனே முதற்பொருளாக உள்ளான் என்றும், மனிதர்களின் செயல்களில் கடவுளின் பங்கு ஏதுமில்லை என்றும், தொடக்கக் காலச் சமுதாயம் ஏற்றத்தாழ்வுகளின்றி ஒரு படித்தானதாக (Homogeneous) இருந்தது என்றும், மனித சமுதாயத்தில் குடும்பச் சிக்கல்களைத் தீர்க்கும் நீதிமுறை, ஒழுக்கமுறை, மொழி போன்ற சில கூறுகள் தொடக்கத்திலேயே தோன்றிவிட்டன என்றும் கூறினார்.

**சாக்ரட்டீஸ் (ஏறக்குறைய கி.மு. 470-399)**

பண்டைய கிரேக்க இலக்கியங்கள் பெரும் செல்வாக்குப் பெறுவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர்களுள் சாக்ரட்டீசும் ஒருவர். இவர் மானிடவியல்சார் போக்கில் பெருமளவு சிந்தித்தவர். இவரின் சிந்தனைகள் பெரும்பாலும் மனித சமுதாயத்தைப் பற்றியனவாக இருந்தன. ஒவ்வொரு சமுதாயமும் சில உலகளாவிய விழுமியங்களால் (Universal Values) நெறிப்படுத்தப்படுகின்றது. சமுதாயத்தில் நிலவும் ஒழுக்க முறைகளுக்குப் பின்னால் அறவியல் (Ethics) கூறுகள் இருப்பதைக் காணமுடியும். உலகளாவிய நீதிமுறை ஒன்றின் அடிப்படையிலேயே ஒவ்வொரு

சமுதாயத்தின் சட்டதிட்டங்கள் ஏற்பட்டுள்ளன. உலகில் உள்ள எவ்வகையான சமுதாய வாழ்விலும் உலகளாவிய விதிமுறைகள் இடம் பெற்றிருப்பதைக் காண முடியும் எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

மனித சமுதாயத்தில் இடம்பெற்றுள்ள உலகளாவியக் (Universal) கூறுகளைச் சாக்ரட்டீஸ் விவரிக்கும்போது, இவை கண்ணுக்குப் புலப்படாதவை ஒரு சில சூழல்களில் இவற்றைப் பற்றிச் சொற்களால்கூட விவரிக்கவியலாத் தன்மையைப் பெற்றவை எனக் கூறுவார். இவரது கருத்துப்படி, சமுதாயத்தின் அனைத்துக் கூறுகளையும் அறிந்து, அதன்படி ஒருவர் வாழவேண்டுமானால் அவருக்கு முறைப்படியான கல்வி இன்றியமையாததல்ல. பள்ளிக்குச் சென்று ஆசிரியரிடம் கற்க வேண்டிய தேவையுமல்ல. வகுப்புகளுக்குச் செல்லாமலேயே சமுதாய வாழ்க்கையைக் கற்க இயலும். ஆனால் மனிதன் செய்யும் மிகப்பெரும் தவறு அவன் அறியாமையில் வாழ்வதேயாகும். ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தின் இயல் நிகழ்ச்சிகளையும் (Phenomena) நடைமுறைகளையும் முறைப்படியான பயிற்சி மூலம் (பள்ளிக் கல்வி) கற்றுக் கொள்ளாமல் இயல்பான மனநிலையில் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் மட்டுமே அவனது சொந்த சமுதாயத்தின் நெறிமுறைகளை (Norms) முழுமையாக அறிய முடியும்.

சாக்ரட்டீசின் இவ்வகைக் கருத்துகளனைத்தும் சமுதாயத்தைப் பற்றிய தத்துவமாகவே அமைந்தன. இவர் கருத்துகள் பண்டைய அறிவார்ந்த கிரேக்க அறிஞர்களால் மிகவும் விரும்பி விவாதிக்கப்பட்டன. இன்றைய சமுதாய அறிவியல்களில் விவாதிக்கப்படும் பல கோட்பாடுகளிலும் கூட அவர்தம் கருத்துகள் குறிப்பிடத்தக்க பங்கினைப் பெற்றுள்ளன.

**பிளேட்டோ (ஏறக்குறைய கி.மு. 427 - 347)**

இவர் சாக்ரட்டீசின் மாணவர் கிரேக்கச் சிந்தனையாளர் குழுவில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவர். இவர் சாக்ரட்டீசின் சில கருத்துகளை மறுத்துப் பேசியதும், அவரால் எழுப்பப்பட்ட சில விடை காணப்படாத கேள்விகளுக்கு முடிவு

காண்பதில் ஈடுபட்டதும் இவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும் என்பர் இவரைப் பற்றிய திறனாய்வாளர்கள்.

மனித சமுதாயம் என்பது மக்களின் தேவைகளுக்காகத் தோன்றியது. மிகத் தொடக்கக் காலத்தில் மக்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒன்றுகூடி வாழமுற்பட்டபோது அவர்களின் தேவையை ஈடுசெய்ய ஒவ்வொருவரும் அவரவருக்குத் தெரிந்த வேலையைச் செய்து தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். இதனடிப்படை யிலேயே உழவர்கள், நெசவாளர்கள், கருமார்கள், தச்சர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், படைவீரர்கள், ஆட்சியாளர்கள் போன்ற பல்வேறு வகுப்பினர் தோன்றினர் என்பார் பிளேட்டோ. இக்கருத்தை இவர் வேறுவகையிலும் கூறுவார். “மனித சமுதாயம்“ என்னும் அமைப்பு, தொன்மை மனிதனின் (Primitive Man) நுண்ணறிவிலிருந்து தோன்றியதாகும். இம்மக்கள் அவர்களின் தேவைகளைப் பற்றியும், சுற்றுப் புறச் சூலுலைப் பற்றியும், அங்கு எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். பிளேட்டோவின் இவ்வகைக் கருத்துகளில் ஹெர்பர்ட் ஸ்பென்சரும் பிற சிந்தனையாளர்களும் பெருமளவு தாக்கம் பெற்றிருந்தனர்.

பிளேட்டோ மனித சமுதாயத்தின் தோற்றம் குறித்துச் சிந்திப்பதில் மிகுதியாகக் கவனம் செலுத்தவில்லை என்றும் அதைக்கொள்கை ரீதியில் விவரிக்க முனையவில்லை என்றும் சில திறனாய்வாளர்கள் கருதுவர். இவரின் சிந்தனை முழுவதும் ஒரு விரும்பத்தக்க சமுதாயம் அல்லது மாதிரி சமுதாயம் (Model Society) எவ்வாறு அமைய வேண்டும் என்பதாகவே இருந்தது. இதற்கடுத்துப் பிளேட்டோவின் சிந்தனை சமுதாயத்தின் படிமலர்ச்சி பக்கம் திரும்பியது. இவரின் படி மலர்ச்சிக் கருத்துக்கள் ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கையை ஒத்துள்ளது. சமுதாயம் ஒரே வழியில் (Unilineal) மட்டுமே வளர்ச்சி பெற்று வந்துள்ளது எனக் கருதினார். சமுதாயத்தின் படிமலர்ச்சி பற்றி ஆராய்வது இவரது முதன்மையான ஆய்வாக இல்லை என்பதை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர் சிந்தனைகள் அனைத்தும் பல கால கட்டங்களைக் கடந்து வந்துள்ள மனித சமுதாயத்தில்

அனைத்துக் காலங்களிலும் நிலைபெற்றிருந்த கூறுகள் என்னென்ன என்பதைப் பற்றியதாகவே இருந்தன.

விரும்பத்தக்க சமுதாயம் அல்லது மாதிரி சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது பண்டைய கிரேக்க மக்கள்தொகைக் கொள்கையை ஒத்துப்போகிறார் பிளேட்டோ. நகரங்களிலோ நகர அரசுகளின் பரப்பிலோ மக்கள்தொகை மிகுதியாக இருக்கக்கூடாது என்பதே இக்கொள்கையின் கருத்தாகும். பிளேட்டோ மக்கள்தொகைப் பெருக்கத்தை விரும்பாதவர். அதே நேரத்தில் நகர அரசுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இனத்தவர்களின் இனப்பெருக்கம் மூலம் மக்கள்தொகை கட்டுக்குள் இருக்க வேண்டும் என்ற கருத்தினை முன்மொழிந்த முதல் சிந்தனையாளர் என்ற பெயரையும் பெற்றவர். பிளேட்டோவின் கருத்துகள் இக்கால மானிடவியலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனினும் 19-ஆம் நூற்றாண்டுப் படிமலர்ச்சிக் கொள்கை யாளர்களின் சில கருத்துகளோடு ஒத்திருந்தன. குறிப்பாக, தொடக்கக்காலச் சமுதாயம் தந்தை வழித் தலைமையைப் (Patriarchy) பெற்றிருந்தது என்ற ஹென்றி மெய்னின் கருத்தோடு இவர்தம் கருத்துகள் தொடர்பு கொண்டிருந்தன.

**அரிஸ்டாட்டில் (ஏறக்குறைய கி.மு. 384 - 322)**

கிரேக்கச் சிந்தனையாளர்கள் அனைவரையும் கடந்து உயர்ந்து நிற்பவர் அரிஸ்டாட்டில் இவரே முதன்முதலில் “Anthropologist“ (மானிடவியலார்) என்னும் சொல்லைப் பயன்படுத்தியவர். எவனொருவன் அவனைப்பற்றி விவாதிக்கிறானோ அவனே “மானிடவியலார்“ என்னும் கருத்தில் இச் சொல்லைப் பயன்படுத்தினார்.

மனிதனையும் அவனது சமுதாயத்தையும் பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துகள் இன்றும் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவரது புலமைத்துவம் பல பரிமாணங்களைக் கொண்டது பல பொருள்கள் பற்றியது. இயற்கையிலேயே மனிதன் சமுதாய இயல்புடையவனாக (Social Being) உள்ளான் என முதன்முதலில் வாதிட்டவர் இவரே எனலாம். பிறக்கும்போதே மனிதனின் இயல்புகள் சமுதாயத்தோடு ஒன்றுபடும் தன்மைகளைப் பெற்றுள்ளன என்றும், இத்தன்மைகள் மொழி, பழக்கங்கள்,

வழக்கங்கள், அறிவார்ந்த முறையில் சிந்தித்தல் போன்றவற்றில் புதைந்துகிடக்கின்றன என்றும் இவர் கருதினார்.

சமுதாயம், பண்பாடு ஆகியவற்றை அறிவதில் அரிஸ்டாட்டில் கொண்டிருந்த அணுகுமுறை இக்கால முறையைப்பெரிதும் ஒத்திருப்பதால் இவர் மானிடவியல் கண் கொண்டு ஆராய்ந்த முன்னோடிகளுள் மூத்தவர் எனக் கருதப்படுகிறார். பண்பாடு என்பது சமுதாயத்தினர் அனைவரும் கற்ற ஒன்று என்பது இவரது கருத்து. சமுதாயத்தின் பல்வேறு தன்மைகளை நன்கு ஆராய வேண்டுமானால் இயல் நிகழ்ச்சிகளைக் கண்ணுற்று ஆராயும் செயலறிவு முறை (Empiricial Method) மூலம் காணவேண்டியது அவசியமென்றார். இதில் சமுதாயத்தின் பல்வேறு உறவுகளை உற்றுநோக்கி அவற்றைப் பகுத்தாய்தல் அவசியமெனக் கருதினார். இன்றைய அமைப்பியல் வாதிகள் (Structuralists) பாணியில் அன்றே சிந்தித்தவர் அரிஸ்டாட்டில் என்பது இதன்மூலம் அறியப்பெறும்.

பண்பாட்டையும் சமுதாயத்தையும் பற்றிய கருத்துக்களைத் தவிர உயிரியல்சார் பண்புகள் குறித்தும் அரிஸ்டாட்டில் சிந்தித்தார். “விலங்குகளின் வம்சாவளி“, “விலங்குகளின் வரலாறு“ விலங்குகளின் இடம்பெயரும் முறை“ முதலியவை குறித்துப் பல கட்டுரைகள் எழுதினார். இவர்தம் கருத்துகள் இன்றைய உடல்சார் மானிடவியலோடு ஒத்திருக்கவில்லை என்றாலும் விலங்கினங்களின் பண்புகளைக் கொண்டு மனித சமுதாயத்தை அறிய விழைத்த முன்னோடி அரிஸ்டாட்டில் இவரது இந்த அணுகுமுறை இன்று மானிடவியலில் உயிர்மூச்சாக உள்ள முழுதளாவிய அணுகுமுறையைச் (Holistic Approach) சார்ந்தது எனவும் கூறலாம்.

**எப்பிக்கூரஸ் (ஏறக்குறைய கி.மு. 341 - 270)**

அரிஸ்டாட்டிலுக்குப்பின் அங்கிருந்த அரசியல் நிலை மிகவும் சீர்கெடத் தொடங்கியதால் இயல்பான வாழ்க்கையில் பெரும் குழப்பங்களும் மாறுதல்களும் ஏற்பட்டன. இதனால் அறிஞர்களின் மனப்போக்குகளும் சமுதாயத்தைப் பற்றிய

எண்ணங்களும் மாற்றம்பெறத் தொடங்கின. இம்மாற்றங்களைப் பற்றி விளக்க முற்பட்ட சிந்தனையாளர்கள் பல்வேறு கருத்துடையவர்களாக இருந்ததால் இவர்கள் பல கொள்கைக் குழுவினராகக் (Schools) காணப்பட்டனர். அவற்றுள் ஒன்றே எப்பிக் கூரசைத் தலைவராகக் கொண்ட சிந்தனைக்குழு டெமோகிரிட்டஸ் கொள்கையில் பெருமளவு பற்றுடையவராய் எப்பிக்கூரஸ் இருந்தார். இவர் சமுதாயம் என்பது முற்றிலும் மனிதனோடு மட்டும் தொடர்புடையது கடவுளுடனோ பிற ஆற்றல்களுடனோ தொடர்பற்றது எனக் கூறினார். அதோடு கடவுளைப் பற்றிய நம்பிக்கையும், அதிர்ஷ்டம், தலைவிதி, ஊழ்ப்பயன் போன்றவற்றில் கொண்டுள்ள நம்பிக்கையும் தவறானது மட்டுமல்லாமல் ஆபத்தானதுமாகும் என வாதிட்டார்.

இவர் மனிதனையும் சமுதாயத்தையும் பற்றி மேலும் பல கருத்துக்களைத் தெரிவித்தார். சமுதாய வாழ்வை ஏற்படுத்திக் கொண்டவன் மனிதனே. ஆகவே அவனால் மட்டுமே அதை மாற்றியமைக்க இயலும். சமுதாயத்திற்கேற்ப மனிதன் தகவமைய வேண்டும். ஏனெனில், மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்யும் கருவியாகவே சமுதாயத்தை ஏற்படுத்தினான். அதோடு மனிதன் இறந்த பிறகு அவனது உடலும் ஆவியும் உடனடியாக இயற்கையோடு மறைந்து விடுகின்றன. ஆவி மட்டும் பலகாலம் வாழ்வதில்லை என்றார். எப்பிக்கூரசின் சில கருத்துகளைப் பண்டைய கிரேக்க அறிஞர்கள் பெரும் சர்ச்சைக்குரியதாக்கினர். இருப்பினும், இவர் கருத்துகளில் சமுதாயமும் மனிதனும் பெரும்பங்கு இடம்பெற்றுள்ளன என்பதை எவராலும் மறுக்க இயலாது.

**பிற சிந்தனையாளர்கள்**

கிரேக்க, உரோமப் பேரரசுகளின் வீழ்ச்சிக்குப்பின் மனிதனையும் சமுதாயத்தையும் பற்றிய அறிஞர்களின் சிந்தனை பெரும் மாற்றத்திற்கு உள்ளானது. இதற்குக் காரணமாக அமைந்தது கிறித்தவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியுமாகும். கிறித்தவத்தின் வளர்ச்சி சமுதாயத் தத்துவவியலாரை அவர்களின் பழைய பிடியிலிருந்து விலக்கி, சமய நெறிமுறைகளுக்குட்பட்ட முறையில் சிந்திக்கும் நிலைக்குக் கொண்டு வந்தது. கிறித்தவத்தின் தோற்றத்தினால் ஏற்பட்ட இம்மாற்றம்

உடனடியாகப் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. பிரபஞ்சத்தைப் பற்றிக் கிறித்தவத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துக் கருத்துகளும் மக்களிடையே வேதக் கருத்துகளாக நிலைபெற, பல நூற்றாண்டுகளாயின. எளிய நிலையில் தோற்றம்பெற்ற கிறித்தவம் பேரரசர் மகா கான்ஸ்டாண்டைன் (கி.பி 280 - 337) காலத்தில் நன்கு வேரூன்றத் தொடங்கியது. கிறித்தவம் 4 -ஆம் நூற்றாண்டில் வேரூன்றத் தொடங்கினாலும் இதன் மரபாண்மைகள் (Christian Orthodoxy) அந்த நூற்றாண்டில் நன்கு ஏற்படவில்லை.

கிறித்தவச் சமய குருக்கள் அப்போது நிலவிய கிரேக்கச் சிந்தனையாளர்களின் கொள்கைகளையும் கருத்துக்களையும் ஏற்க மறுத்தனர். இவர்கள் மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பை விளக்க முற்பட்டனர். கடவுளே அனைத்திற்கும் மூலமானவன். அவனால் மட்டுமே மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நல்லூழினை வழங்க இயலும். ஆகவே அவனை வணங்கி நல்லூழினைப் பெறுதல் மனிதனுக்குக் கிடைத்த பெரும் சிறப்பு என விளக்கினர்.

இக்கருத்துக்களைத் தொடர்ந்து பல அறிஞர்கள் வெவ்வேறு நிலையில் விளக்கமளித்தனர். இவர்களுள் அகஸ்டின் (கி.பி. 354 - 430) குறிப்பிடத்தக்கவர். இவர் மண்ணுலகம், விண்ணுலகம் வளிமண்டலம் உட்பட பிரபஞ்சம் அனைத்தும் மனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த ஆற்றலால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்று கருதினார். இக்கருத்தை மையமாகக் கொண்டே மனிதனையும் சமுதாய முறைகளையும் இவர் விளக்கினார். இவர்தம் கருத்துகள் பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சிகளையும், கிறித்தவ மக்களையும் பற்றியதாக அமைந்தன. இவரது புகழ்மிக்க நூல் “கடவுளின் நகரம்“ (The City of God) ஆகும்.

அகஸ்டினுக்கடுத்து அவர் மாணவர் ஒரோசியஸ் (கி.பி. 385 420) வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு சமுதாயத்தைப் பற்றி எழுத முனைந்தார். இவர் எழுதிய ஏழுதொகுதிகளில் கிறித்தவ மக்களின் வரலாற்றையும், புறச்சமயச் சமுதாயத்தினரின் (Pagan Society) வரலாற்றையும் விரிவாக எழுதினார். இந்நூற்றொகுதி கி.பி. 494 -இல் போப் அவர்களால் சட்ட முறைப்படி

அங்கீகரிக்கப்பட்டது. கிறித்தவர்களால் புறச்சமயத்தவர் எனக் கருதப்பட்ட தொன்மை மக்களைப் பற்றி இந்நூலில் ஒரோசியஸ் விரிவாக எழுதியிருந்ததால் இடைக்காலம் (Middle Age) முழுவதும் இவ்வகை மக்களைப் பற்றிய முதன்மையான நூலாக இது திகழ்ந்தது.

**புத்தாய்வுக் காலம்**

புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய கால அறிஞர்களின் கருத்துகள் ஆணித்தரமாக அமையவில்லை. ஆயினும், அவை பிற்கால வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் அமைந்தன என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. எனினும், புத்தாய்வுக் காலத்தின் போது பெரும் எண்ணிக்கையிலான ஆய்வாளர்கள் உலகம் முழுவதும் சுற்றி வரும் வாய்ப்பினைப் பெற்றிருந்ததால் மனிதனைப் பற்றி அறிந்து கொள்வதில் புதிய புதிய திருப்பங்களும் விளக்கங்களும் ஏற்பட்டன. இப்புத்தாய்வுக் காலத்தில் (Age of Exploration) விளைந்த நிகழ்வுகளே மானிடவியலின் தோற்றத்திற்கு வழிகோலின.

புதிய புதிய நிலப்பகுதிகளும் மக்களும் கண்டறியப்பட்ட நூற்றாண்டாக, கி.பி. 13 -ஆம் நூற்றாண்டு போற்றப்படுகிறது. தொடக்கக்காலம் முதலே ஐரோப்பியர்கள் புத்தாய்வுகளை மேற்கொள்வதில் கோலோச்சத் தொடங்கினர். இந்நூற்றாண்டின் தலைசிறந்த புத்தாய்வாளராக மார்க்கோபோலோ (கி.பி. 1254 1313) திகழ்ந்தார். இவர் மேற்கொண்ட புத்தாய்வுகள் மூலம் அதுவரை எவரும் அறியாத இனத்தவர்களைப் பற்றிய உண்மைச் செய்திகளை அறிய முடிந்தது. இருப்பினும் இவருக்கு முன்னரே ஆசியப் பகுதி மக்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கப் பெற்றன. 13ஆம் நூற்றாண்டில் மன்னராக இருந்த போப் (Pope) மங்கோலியப் பேரரசுடன் அரசுமுறையிலான தொடர்பு வைத்துக்கொள்ள கார்ப்பினி (கி.பி. 1182 1252) என்பவரை அனுப்பி வைத்தார். இவர் மங்கோலியப் பேரரசில் சிலகாலம் தங்கி பின் தாய்நாடு வந்ததும் “மங்கோலியர்களின் வரலாறு“ (History of the Mongols) என்னும் நூலை எழுதினார். இந்நூலில் அம்மக்களின் உடலமைப்பு, வாழ்க்கைமுறை, பிற பழக்கவழக்கங்கள் குறித்து விரிவாக எழுதினார்.

வில்லியம் ரூப்ருகுயிஸ் 13 -ஆம் நூற்றாண்டில் (கி.பி. 1215 - 1270) ஆசியப் பகுதிகளுக்குப் பயணம் செய்து அம்மக்களின் பொருள்சார் பண்பாடு, உணவுப் பழக்கங்கள், பெண்களின் தொழிற் பகுப்பு, இறந்தவர்களைப் புதைக்கும் முறைகள் ஆகியவற்றைத் தொகுத்து எழுதினார். இதற்கடுத்து சர் ஜான் மாண்டி வில்லி மத்தியகிழக்கு நாடுகளுக்குச் சென்று அம் மக்களின் விசித்திரமான பழக்க வழக்கங்களை 'The Travels of Sir John Mandeville“ என்னும் நூலாக எழுதினார்.

புத்தாய்வுக் கால வரலாற்றில் பெரும் மைல் கல்லாகத் திகழ்வது 15 -ஆம் நூற்றாண்டாகும். இந்நூற்றாண்டில் ஆப்பிரிக்கக் கண்டத்தை அறிய மேற்கொண்ட பயணம் குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியரின் இப்புத்தாய்வுப் பயணத்திற்குப் போர்ச்சுகல் இளவரசர் ஹென்றி (கி.பி. 1394 - 1460) உதவி செய்தார். முதலில் டாங்கியர் (Tangier) என்னும் பகுதிக்குக் கடல் பயணம் மேற்கொள் வதற்கும், பின்னர்ப் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கும் இவர் ஊக்கமளித்தார். இதன் பயனாய்க் காம்பியா, செனகல் பகுதிகளைக் கண்டறிய முடிந்தது. இவ்வகைப் பயணங்களின் எழுச்சியால் அதற்கடுத்தடுத்த நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகள், வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, பசிபிக் தீவுகள் முதலான பகுதிகள் கண்டறியப்பட்டன. பல ஆய்வாளர்கள் மேற்கொண்ட இவ்வகைப் பயணங்களால் புதிய புதிய நிலப் பரப்புகளும், உருவத் தோற்றத்தில் மாறுபட்ட இனத்தவர்களும், அவர்களின் வியத்தகுப் பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் தெரிய வந்தன.

புத்தாய்வுச் செய்திகளைக் கல்விசார் துறையினர் ஓரளவு பயன்படுத்துமளவிற்குத் தொகுத்தவர் வாஸ்கோடகாமா (கி.பி. 1397 1499) ஆவார். இவரது பயணங்களின் போது, அவர் கண்ட மக்களின் ஆடை அணிகலன்கள், உணவுப் பழக்கங்கள், பிற பழக்கவழக்கங்கள், அடுத்தடுத்த இன மக்கள் கொண்டிருந்த பரிமாற்ற முறைகள், மொழி முதலான அனைத்தையும் விரிவாகத் தொகுத்து எழுதினார்.

கிரிஸ்டோ.ஃபர் கொலம்பஸ் (கி.பி. 1451 - 1506) அமெரிக்க நிலப்பகுதியைக் கண்டுபிடித்தவர் என்ற செய்தி மட்டுமே பலருக்குத் தெரியும். இவரது பயணத்தின்போது இவர் தொகுத்த இனக்குழுவியல் செய்திகளும் பிற நிகழ்ச்சிகளும் பலருக்குப் புதுமையான செய்திகளாக இருக்கும். கி.பி. 1492 -இல் இவரது புகழ்மிக்க கப்பல்களில் உலகின் புதிய புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில் பயணம் தொடங்கினார். பிற புத்தாய்வாளர்களைப் போன்றே இவரும் அவர் சென்ற இடங்களில் வாழ்ந்த மக்களைப் பற்றிப் பெருமளவு செய்திகளைச் சேகரித்தார். அதோடு பயணம் முடியும் தறுவாயில் ஏழு பழங்குடி இந்தியர்களைக் கடத்திக் கொண்டு ஸ்பெயின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். பின்னர் அவர்களிடம் மேற்கொண்ட உரையாடல்கள் மூலம் அவர்களின் மொழியைப் பதிவு செய்தார். அதன்மூலம் புத்துலக மக்களின் மொழியைப் பற்றிய முதல் ஐரோப்பிய ஆவணத்தைத் தயார் செய்ய முடிந்தது.

கொலம்பசுக்குப் பின் வாஸ்கோ முன்னஸ் டி பால்போல் (கி.பி. 1475 - 1570) என்பவர் பசிபிக் கடற் பகுதிகளுக்குச் சென்று சேகரித்த செய்திகளே அமெரிக்க இந்தியர்களை (அமெரிக்க இந்தியர் என்பது அமெரிக்காவின் தொல் குடியினரான செவ்விந்தியர்களைக் குறிக்கும்.) பற்றிய முதல் விவரமாக அமைந்தன. பிரெஞ்சு நாட்டு எழுத்தாளர் மிசல் டி மாண்டெய்ன் மேற்கொண்ட பயணம் மூலம் அமெரிக்க இந்தியர்களின் தன்னின உண்ணுந் தன்மையை (Cannibalism) அறிய முடிந்தது.

எண்ணற்ற புத்தாய்வாளர்கள் பல இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்ததால் அம்மக்களைப் பற்றி அவர்கள் சேகரித்த செய்திகளும், அவற்றை எழுதிய முறையும் அவரவருக்கே உரியபாணியில் இருந்தன. ஒரு முறைப்படியான முறையில் எவரும் எழுதவில்லை. சில செய்திகளை மிக விரிவாகவும், சில செய்திகளைச் சுருக்கமாகவும், சில செய்திகளை அறவே விடுத்தும் எழுதிய முறைகளே காணப்பட்டன. இருப்பினும், வெனடிய (Venetian) வணிகரான மார்க்கோபோலோ எழுதிய உரை அக்காலத்தில் எழுதப்பட்ட ஒரு தலைசிறந்த இனக்குழுவியல் வகையிலான விவரமாகும். அவர் பீக்கிங்கில் குப்லய்கான் அரண்மனையில் 17

ஆண்டுக்காலம் தங்கியிருந்தபோது அம்மக்களின் வணிக உறவுகள், அங்காடி முறை, பணத்தின் மதிப்பு, குடியிருப்பு முறைகள், ஆண், பெண் தொழிற் பகுப்பு, திருமண முறைகள், சமயம், ஈமச்சடங்குகள் முதலானவை பற்றி நன்கு உற்றுநோக்கினார். அவற்றைக் “கண்டுபிடிப்புகளைப் பற்றிய நூல் (The Book of Discoveries) என்னும் தலைப்பில் எழுதினார். மார்க்கோபோலோவும் பிற புத்தாய்வாளர்களும் கையாண்ட பல்வேறு அணுகுமுறைகளே இனக்குழுவியலின் தோற்றத்திற்கு வித்திட்டன.

**புத்தாய்வுகளும் ஐரோப்பியர்களின் இன உயர்வுக்கொள்கையும்**

ஐரோப்பியர்கள் உலகின் பிற பகுதிகளில் மேற்கொண்ட புத்தாய்வுகளாலும், அந்நிலங்களைக் கைப்பற்றி அங்குக் குடியேற்ற அரசுகளை அமைத்ததாலும் அவர்கள் தொழில்நுட்பத்தில் மேம்பட்டவர்களாயினர். கடல்வழி மூலம் பிற பகுதிகளைக் கண்டறிந்ததால் கப்பல் கட்டுவதிலும் சிறந்த தொழில் நுட்பம் பெற்றவர்களாயினர். அதனால் கடற்பகுதியில் அவர்களை வெல்வது இயலாததாகிவிட்டது. நிலப்பகுதிகளிலும் ஐரோப்பிய வீரர்களை விரட்டுமளவிற்குக் குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்களால் இயலவில்லை. அரசியல் அதிகாரத்தை நேரடியாகத் திணிக்காத வேறு சில நிலப்பகுதிகளிலும் ஐரோப்பியர்கள் பொருளாதாரம், வாணிகம் ஆகியவற்றில் ஆதிக்கம் பெற்றனர். தொழில் நுட்பத்தில் உயர்ந்து காணப்பட்ட ஐரோப்பியர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றனர். ஐரோப்பியரல்லாத மக்களைத் தாழ்ந்தவர்கள் என்றனர். உயர்வு, தாழ்வு வரிசையில் ஐரோப்பியர்கள் மேல் வகுப்பினர் என்றும், ஐரோப்பிய உழவர்கள் அவர்களுக்கடுத்த நிலையினர் என்றும், திணைக்குடியினர் கீழ்நிலையினர் என்றும் கூறினர். அதற்குக் காரணம் அவர்களின் போர்க்கருவிகள் சிறந்தவையாக இருந்தமையாகும். அதனால் அவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் எனக்கருதினர். இந்த உயர்வெண்ணம் புவியியல், அரசியல் வெற்றிகளோடு நிற்காமல் இனஉயர்வு வாதம் (Racism) வரை சென்றுவிட்டது. அன்று தோன்றிய இக்கருத்து மானிடவியல் வளர்ச்சிபெறும் வரை நிலவி வந்தது.

19ஆம் நூற்றாண்டில் இனஉயர்வுக் கொள்கையினை எதிர்த்த சிலருக்கு ஐரோப்பியரின் பதில் ”வெள்ளையர்களின் பொறுப்பு” என்றே அமைந்தது. அதாவது,

அவர்கள் கைப்பற்றிய நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தாழ்ந்தவர்களாக இருந்தனர் என்றும், அவர்களுக்குச் சிறந்த வாழ்க்கை முறையையும், பொருளாதார வளத்தையும் ஏற்படுத்தித் தருபவர்கள் ஐரோப்பியர்களே என்றும் கூறிக் கொண்டனர். அம்மக்களின் வாழ்க்கை வளத்திற்கு அவர்களே ”பொறுப்பு” என்றனர். ஆனால் அவர்களின் குறிக்கோள்கள் அனைத்தும் புதிய நிலப்பகுதிகளைக் கைப்பற்றி அங்கு அதிகார உரிமையை ஏற்படுத்துதல், அங்குள்ள வளங்களைச் சுரண்டுதல், அங்குள்ளவர்களைக் கிறித்தவர்களாக மாற்றுதல், அவர்களுக்கு ஐரோப்பிய முறையிலான கல்வியைக் கொடுத்தல் ஆகியவையே.

**புத்தாய்விற்கு அறிவார்ந்த கருத்தியக்கம்**

புத்தாய்வுகள் மூலம் ஐரோப்பியர்கள் புதிய புதிய இனத்தவர்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றனர். அப்புதிய நிலப்பகுதிகளைச் சேர்ந்த விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றின் புதுமையான பண்புகளும், அங்கு வாழும் மக்களின் புதுமையான வழக்கங்களும் புத்தாய்வுகள் மூலம் அறிய முடிந்ததால் ஐரோப்பியர்கள் பல நிலைகளில் சிந்திக்கத் தொடங்கினர். புத்தாய்வில் கலந்து கொள்ளாத அறிஞர்களிடமும், ஐரோப்பியப் பொதுமக்களிடமும் புதுநில மக்களை அறிந்துகொள்வதில் பேரார்வம் காணப்பட்டது. அதனால் அப்பகுதிகளுக்குச் சென்ற புத்தாய்வாளர்கள் எழுதிய நூல்களுக்கும், அப்பகுதிகளுக்கான வழிகாட்டி நூல்களுக்கும் மிகுந்த வரவேற்பு இருந்தது. குறிப்பாக, ஆப்பிரிக்கர்கள் கீழ்த்திசை நாட்டினர், அமெரிக்க இந்தியர், பசிபிக் கடற்பகுதி மக்கள் ஆகியோரை அறிந்து கொள்வதில் மிகுந்த விருப்பமுடையவர்களாய் இருந்தனர்.

பெரும்பாலான நூல்கள் நுட்பமாக எழுதப்பட்டவையல்ல. மனித வேறுபாடுகளை விளக்குவதையும் அவர்களின் வாழ்க்கை முறையை முழுமையாகக் கூறுவதையும் தவிர்த்து அவர்கள் தொடர்புகொண்ட மக்களின் விந்தைகளையும் வேடிக்கைகளையும் விவரிப்பதாக அந்நூல்கள் அமைந்தன. இனக்குழுவியல் அடிப்படையில் எழுதப்பட்ட நூல்கள் மிகக் குறைவானவை ஐரோப்பியரல்லாத மக்களின் புதுமையான வாழ்க்கையினை எழுதும்போது ”அது அம்மக்களின் தன்மை”

என்னும் போக்கில் மட்டுமே எழுதினர். அனைத்து மக்களும் சில வகைகளில் ஒன்றாக காணப்படுகின்றனர் சில வகைகளில் வேறுபடுகின்றனர். அவ்வேறுபாடுகள் பெரும் பாலாகப் பண்பாட்டளவில் மட்டுமே உள்ளது எனக்கருதினர். இக்கருத்தினை மானிடவியல் பிற்காலத்தில் உணர்த்தியதற்கு முன்னரே அவர்கள் அவ்வாறு சிந்தித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பல புத்தாய்வுகளுக்குப் பின்னர் ஐரோப்பியர்களிடம் அறிவுத் திறனும், தத்துவச் சிந்தனைகளும் மிகுதியாயின. அதனால் மனித வேறுபாடுகள் பற்றிய அவர்கள் கருத்துகள் இரண்டு வகையாக அமைந்தன. முதல் குழுவினர் ஒருவழித் தோற்றக் கொள்கையில் (Monogenesis) பற்றுடையவராய் இருந்தனர். இரண்டாவது குழுவினர் பலவழித் தோற்றக் கொள்கையில் (Polygenesis) பற்றுடையவராய் இருந்தனர். ஒருவழித் தோற்றக் கொள்கையினரின் கருத்துப்படி, மனிதர்கள் அனைவரும் ஒரு தாய், தந்தையிடமிருந்து தோன்றியவர்கள். அனைவரும் கருணையின் இடத்திலிருந்து வந்தவர்கள். சமகாலத்திய மக்களிடம் உள்ள வேறுபாடுகளுக்கு அவரவர் சுற்றுப்புறச் சூழ்நிலையின் இயல்புகள் ஒரு காரணம். மூதாதையர் களிடமிருந்து பெற்ற மரபுப் பண்புகளைச் (Genetic Characters) சந்ததியினருக்குக் கொடுக்கும் தன்மை இரண்டாவது காரணம் என ஒரு வழித் தோற்றக் கொள்கையினர் சுட்டிக்காட்டினர். ஐரோப்பியர்கள் ஒருவழித் தோற்றக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் ஐரோப்பியரல்லாதாரை அவர்களோடு தொடர்புபடுத்தும் போது உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் அடிப்படையிலேயே பாகுபடுத்தினர். இருப்பினும், பொதுவான தோற்றத்தைக் கூறும்போது அனைவரும் ஒத்த திறனையுடையவர்கள். எவரும் காட்டுமிராண்டிகளில்லை அவ்வாறு கீழ் நிலையிலும் காட்டுமிராண்டிகளாகவும் உள்ளவர்கள் முன்னேற்றப்பட வேண்டியவர்கள் என்று கூறினர்.

ஐரோப்பியர்கள் கொண்டிருந்த இக்கருத்துக்களுள் ஒருபகுதி சார்பற்றதாகவும் மறுபகுதி சார்புடையதாகவும் இருந்தன. அனைவரும் சமமாகப் படைக்கப்பட்டனர் மனித வேறுபாடுகளுக்கு மரபுவழியில் சமமின்மையாகப் பெறப்பட்ட மரபுப் பண்புகளும்,

படைக்கப்பட்டபின் அவரவர் ஏற்றுக்கொண்ட நிலையும் காரணம் என்ற கூற்று இன உயர்வுக் கொள்கை சார்ந்ததன்று. அந்த வகையில் அது சார்பற்ற கருத்து. ஆனால் ஐரோப்பியர்கள் அவர்கள் தரத்தையும் மதிப்புகளையும் கொண்டு ஐரோப்பியரல்லாதாரைத் தாழ்ந்தவர்கள் என்னும் கருத்து "இனமைய வாதம்" (Ethnocentrism) சார்ந்ததாகும். இரண்டாம். வகைக் கருத்து சார்புடைய கருத்தாக அமைகிறது.

பலவழித்தோற்றக் கொள்கையினர் இன வேறுபாடுகளுக்குப் புதுவிளக்கம் கொடுப்பதில் பங்கேற்றனர். இக்கொள்கையினர் கருத்துப்படி, தனித்தனியான பல படைப்புகளின்மூலம் மனிதர்கள் தோன்றினர். அதனால் பல சிறப்பினங்கள் (Species) தோன்றின. அச் சிறப்பினங்கள் தோன்றியதிலிருந்தே அறிவுத் திறனில் வேறுபாட்டுத் தன்மையைப் பெற்றுவிட்டன. அவற்றுள் ஒரு பிரிவினரே உயர்ந்த சிறப்பினமான ஐரோப்பியர். பலவழிக் கொள்கையினரின் இவ்வகைக் கருத்துகளையடுத்து மனிதகுலத்தின் தன்மைகளை ஆராய்வதில் பெரும் திருப்புமுனை ஏற்பட்டது. இக்காலத்தில் அறிவார்ந்த இயக்கம் பெருகியதால் இது அறிவொளிக் காலம் (Enlightenment Period) எனப் போற்றப்படுகிறது.

**அறிவொளிக் காலம்**

17ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரை அறிவாற்றல் சார்ந்த சிந்தனைகளுக்கு எப்போதும் இல்லாத அளவிற்குப் பெரும் விறுவிறுப்பு ஏற்பட்டதால் இக்காலம் "அறிவொளிக் காலம்" எனச் சிறப்பிக்கப்படுகிறது. இக்காலத்தைச் சேர்ந்த சிந்தனையாளர்கள் பல துறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். கணக்கியல் இயற்பியல் துறைகளைச் சேர்ந்த காட்ஃபிரீடு லீப்னிட்ஸ் (Gottfied Leibneitz), ஐசக் நியூட்டன் ஆகியோரும் உயிரியல் துறையைச் சேர்ந்த ஜார்ஜ் டி பஃபன், கார்ல் வான் லின்னே ஆகியோரும் வேதியியல் துறையைச் சேர்ந்த ஜோசப் பிரீஸ்ட்லி, அண்டாய்னி லவாய்சியர் முதலானோரும் சமுதாயத் தத்துவவியல் துறையைச் சேர்ந்த வால்டெய்ர், ஜான் லாக், ஜீன் ழாக் ரூசோ

ஆகியோரும் குறிப்பிடத் தக்கவர்களுள் சிலர். நியூட்டனின் 'கணக்கியல் விதிகள்" (Principia Mathematica) என்ற நூலும், லாக் எழுதிய "மனிதனைப் புரிந்து கொள்வதற்கான கட்டுரை" (Essay Concerning Human Under- standing) என்ற நூலும் முறையே இயற்கைத் தத்துவவியல், சமுதாயத் தத்துவவியல் ஆகிய துறைகளில் அறிவொளிக்காலத்தவரின் நிலையினை வெளிப்படுத்துகின்றன. இவர்களது கருத்தின் சுருக்கம் பின்வருமாறு: இந்த உலகம் (பிரபஞ்சம்) காரண காரியத் தொடர்புகளைப் பெற்று ஒரு முறைமை நிலையில் உள்ளது. இதை அறிந்து கொள்வதன் மூலம் கோள்களின் (கிரகங்கள்) இயக்கங்கள் பற்றியும், மனிதனின் நடத்தைமுறைகள் பற்றியும் சில விதிகளைக் கண்டறிய முடியும்.

அறிவொளிக் காலச் சிந்தனையார்கள் மிகுந்த மனவளத்தைப் பெற்று ஆழ்நிலையில் ஆராயும் தன்மையைக் கொண்டிருந்தனர். அவர்கள் பல துறைகளில் ஆர்வம் கொண்டிருந்தனர். ஒரு துறையைச் சேர்ந்தோரின் ஆய்வுகளும் கருத்துகளும் மற்ற துறையினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளதென எண்ணினர். கல்வியறிவுடைய ஐரோப்பியர்களின் சிந்தனைகளுக்குப் பலவாறு இவர்கள் ஊக்கமளித்தனர். புதிய கொள்கைகளையும், சமுதாய, பொருளாதார, அறிவியல் கருத்துகளையும் மக்களிடையே பெருமளவு பரவச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களின் சில கொள்கைகள் அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகளுக்கும் அடித்தளமாக அமைந்தன. ரஷ்யாவின் கேத்தரைன் (Catherine) புருசியாவின் மகா பிரடரிக் ஆகிய புரட்சிகளுக்கும் ஏகாதிபத்தியர்களும் கூட அறிவொளிக் காலத் தத்துவ அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு தாமும் "அறிவொளிக் காலக் கருத்துகளால் உந்தப்பட்டுள்ளோம்" எனத் தெரிவித்தனர்.

அத்தத்துவ அறிஞர்கள் தத்தம் சிந்தனைத் திறனால் அவரவர் துறையில் பல எல்லைகளைக் கடந்து உயர்ந்திருந்தனர். இருப்பினும், அனைவருமே சமுதாயத்தைப் பற்றிய பொதுவான சிக்கல்களை ஆராய்வதில் ஆர்வம் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரின் விவாதங்கள் பெரும்பாலும் மனிதனின் தன்மைகள் என்ன? மனிதச்

சமுதாயத்தின் தன்மைகள் யாவை? பல்வேறு மனித நடத்தைகளுக்கான காரணங்கள் என்ன? போன்ற கருத்துகளை ஒட்டியே அமைந்தன. இருப்பினும் அவர்களின் ஆய்வுப் பரப்பு விரிந்து கொண்டேயிருந்தது. குறிப்பாக, மனிதர்களின் இயல்போடு ஒன்றிய கற்றல் திறன் மூலம் வெளிப்படும் ஆர்வங்கள், மனப்போக்குகள் ஆகியவற்றிற்கு அடிப்படையாக உள்ள ஒருவரின் தன்மைக்கும் (nature), அவரின் வளர்ப்புமுறைக்கும் (Nurture) இடையேயுள்ள தனித்தன்மையைப் பெருமளவு விவாதித்தனர். அவர்களின் முடிவு அப்போதைக்கு எளிமையாக இருந்தாலும் வருங்காலங்களில் விரிவாக அறியப்பட வேண்டியவற்றிற்கு அது வழிகோலியது. பல நிலைகளில் பார்த்தால் (அச்சமுதாயத் தத்துவவியல் அறிஞர்களை “மானிடவியலின் முன்னோடிகள்“ (Precursors of Anthropology) என்றோ “தொன்மை மானிடவியலார்“ (Proto - Anthropologists) என்றோ குறிப்பிடலாம்.

மனிதனின் தன்மை பற்றிய 18ஆம் நூற்றாண்டு அறிஞர்களின் கருத்துகள், புனைவியல் கருத்து மிகுந்த தொன்மைத் தன்மை (Romantic Primitivism) முதல் இயற்கையிலேயே தன்னல நாட்டம் கொண்ட மக்களைக் கட்டுப்படுத்த வலுவான முடியாட்சி தேவை என்னும் நம்பிக்கை வரை பரந்து நிற்பவையாகும். பரந்த பரப்புடைய அக்கருத்துகளை தாமஸ் ஹாப்ஸ் (1588-1679), ஜான் லாக் (1632 - 1704) ஜீன் ழாக் ரூசோ (1712 - 1778) ஆகிய மூவரின் சிந்தனைகளைக் கொண்டு அறியலாம்.

தாமஸ் ஹாப்ஸ் கருத்துப்படி மனிதர்கள் இயற்கையிலேயே கொடுமையான வர்களாகவும் தன்னல நாட்டமுடையவர்களாகவும் இருப்பதால் அவர்களைக் கட்டுப்படுத்த வலுவான, அடக்கும் திறனுடைய அரசு தேவை என்பதாகும்.19 ஆனால் ரூசோ முற்றிலும் மாறுபட்ட கருத்தினைக் கூறினார். இவரது கருத்துப்படி அடிப்படையில் மனிதர்கள் கூடிவாழும் இயல்புடையவர்கள் அல்லர். அவர்கள் “இயற்கை நிலை“யில் (Natural State) தனித்தனியாக வாழ்ந்தபோது சுதந்திரமாக இருந்தனர் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாமல் வாழ்ந்தனர். அதன் பின்னர்

ஒருவருடன் ஒருவர் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்பட்டதாலும், சமுதாய வளர்ச்சி ஏற்பட்டதாலும், நாகரிகம் தோன்றியதாலும் அழிக்கப் பட்டனர். அதனால் “இயற்கை நிலை“ மீண்டும் திரும்ப வேண்டுமென வலியுறுத்தினார். இயற்கை நிலையில் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தபோது அவர்களின் தேவைகளைச் (உணவு, உடை, உறைவிடம்) சுற்றுப்புறத்திலிருந்து எவ்விதத் தடையுமின்றி பெற்றுக் கொண்டனர். ஆனால் சமுதாயம் என்னும் அமைப்பிற்குள் வாழமுற்பட்ட போது செயற்கை வகையிலான தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் பல சிக்கல்கள் தோன்றின. அதனால் இயற்கை நிலையில்“ வாழ்வதே மனிதனுக்கு உகந்தது. சமுதாய அமைப்பில் வாழ்வது ஏற்றதல்ல என்பர் ரூசோ.

ஹாப்ஸ், ரூசோ ஆகிய இருவரின் கருத்துகளை ஒன்றிணைக்கும் வகையில் ஜான் லாக்கின் கருத்து அமைந்தது. மனிதர்கள் பிறப்பின் போது நல்லவர்களாகவோ தீயவர்களாகவோ பிறக்கவில்லை என்றும் அனைவரும் “வெறுமையானவர்“களாகப் (Blanks) பிறந்து அவர்கள் அனுபவங்களின் அடிப்படையிலேயே உருவாகுகின்றனர் என்றும் லாக் கருதினார். அனுபவம் என்பது ஒருவர் அவரது சமுதாயத்தில் பெற்ற பயிற்றுவித்தல் மூலம் செய்யும் செயல்களினால் விளைவது. ஆகவே நன்மை விளைந்தாலும் சரி, தீமை விளைந்தாலும் சரி ஒவ்வொருவரையும் அவரது சமுதாயச் சூழலிற்கேற்பவும், கால இடச் சூழலிற்கேற்பவும் கற்பித்தல் இன்றியமையாதது என்றார் ஜான் லாக்.

அறிவொளிக் காலச் சிந்தனைகளின் பெரும்பகுதி சமகால மானிடவியல் கோட்பாடுகளில் இடம் பெற்றுள்ளது. இவற்றுள் காலத்தால் அழியாத பங்களிப்பு மனிதநேயம் (Humanism) என்னும் கோட்பாடாகும். இக்கோட்பாடு இனம், சாதி, வகுப்பு, சமயம் போன்ற அனைத்துப் பிரிவுகளையும் கடந்து மனிதர்கள் அனைவரின் பெருமானத்தையும் மதிப்பையும் வலியுறுத்துகிறது. அறிவொளிக் காலத்திய பங்களிப்பில் இரண்டாவதாகக் குறிப்பிட வேண்டியது கல்வி, சமுதாயச் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியது. குறிப்பாக, இளம்வயதினரைச் சமுதாயவயமாக்கும் (Socialization) முறை பற்றியது. நடத்தைசார் கொள்கையில்

இன்றளவும் ஒன்றியமாகிக் காணப்படும் கருத்துகள் மூன்றாவது பங்களிப்பாகும். இக்கருத்துப்படி, இயற்கை உலகத்தின் ஒருபகுதியாக மனிதன் திகழ்கின்றான். இதிலிருந்து அவன் தனித்தோ ஒதுங்கியோ வாழவில்லை இயற்கையின் விதிக்குட்பட்டே இயங்குகின்றான். ஆகையால், இப்போக்கின் அடிப்படையில் மட்டுமே மனிதனை அறிய வேண்டும் மேற்கூறிய கருத்துகளின்படி அறிவொளிக் காலச் சமுதாயத் தத்துவவியல் மனிதனைத் தெய்விகப் பிறப்பு என்றநிலையிலிருந்து விடுவித்து அவனைச் செயலறிவு ஆய்விற்கு (Empirical Research) ஈடுபடுத்தும் நிலைக்குக் கொண்டு வந்தது.

மனிதர்களுக்குக் கற்பித்தல் முதன்மையானது என்று கூறிய சமுதாயத் தத்துவவியல் அறிஞர் பெரும்பாலோர் மனிதர்களின் நிறைவுடைய பண்புகளை மதிப்பிடுவதில் ஐரோப்பியர்களின் தரத்தை அளவுகோலாகக் கொண்டனர். வரலாற்று மாற்றத்தை அவர்கள் விளக்கிப் பொருள்கூறும்போது கூட இம்மாற்றம் ஐரோப்பியரின் நிலையை நோக்கிச் செல்கிறது என்பர். அதாவது. ஐரோப்பியரல்லாதார், அறிவு, பகுத்தறிவுத் தன்மை, ஒழுக்கம், தகுதியுடைமை, அறிவியல்தன்மை முதலானவற்றை மேலும் மேலும் பெற்று ஐரோப்பியர்கள் எட்டியுள்ள நிலையை நோக்கி வளர்ச்சி பெறுகின்றனர் என்ற கருத்தைக் கொண்டவர்களாய் அவர்கள் திகழ்ந்தனர். அதனால் அவர்களின் அறிவியல் நோக்குடைய சிந்தனைகள் இனச்சார்புடையனவாக அமைந்தன.

தத்துவவியலார் சிலர் மனிதனின் இயல்பான நடத்தை முறைகளைக் கொள்கை அளவில் நிலைப்படுத்த முயன்றனர். அத்தத்துவவியலார் தம் சொந்த சமுதாயத்தினர் மட்டும் பகுத்தறிவு நிலையோடும், இயற்கை விதியின் (Natural Law) . நெறிமுறைகளுக் கேற்பவும் சிந்திக்கும் திறன் பெற்றிருப்பதாகக் கருதினர். அதனால் அவர்களது சமுதாயமும் வாழ்க்கை முறையும் மேம்பட்டது என எண்ணினர். அதனடிப்படையில் ஐரோப்பியர்கள் தங்களை அனைத்துச் சமுதாயத்தினரைக் காட்டிலும் முன்னேற்ற மடைந்தவர்கள் எனக் கூறிக்கொண்டனர்.

“வளர்ச்சி“ (Progress) என்னும் கருத்து அண்மைக் காலத்தியதாகும். பண்டைய உரோமானிய, கிரேக்கக் காலத்திலும் இடைக் காலத்திலும் மனித வரலாறு

குறித்து ஒருமித்த கருத்து நிலவவில்லை. ஒவ்வொரு சிந்தனையாளரும் அவர்களின் கருத்துகளை வெவ்வேறு வகையில் கூறிவந்தனர். அவர்கள், மனிதன் பொற்காலத்திலிருந்து அல்லது கருணையின் இடத்திலிருந்து தோன்றியவன் என்று கூறினர். மறுமலர்ச்சிக் காலத்தவர்கள் (Renaissance people - கி.பி. 14 - 16 வது நூற்றாண்டுகளில் வாழ்ந்த கலை, இலக்கிய மறுமலர்ச்சியாளர்கள் இப்போதுள்ள காலத்தைக் காட்டிலும் கடந்த காலமே பொன்னானதும் சிறப்பானதும் என்று எண்ணினர். அக்கருத்துகளைக் கொண்டு மனித சமுதாயத்தின் வரலாறு தொன்மையான பொற்காலத்தில் தொடங்கி, வெள்ளி, செப்புக் காலங்களைக் கடந்து இறுதியில் இரும்புக்காலத்தை (சமகாலம்) அடைந்துள்ளது என அவர்கள் சுட்டிக் காட்டினர். பொற் காலத்தில் தொடங்கி இரும்புக் காலத்தில் முடியும். இவ்வரலாறு தேய்வுப் போக்கையே காட்டுகிறதென மேலும் விளக்கிக் கூறினர். 18-ஆம் நூற்றாண்டிலும் “உலகம் சீரழிந்து வருகிறது“ (Decay of the World) என்ற கருத்தே பரவலாக இருந்தது. ஆனால் அக்கருத்தை இயற்கை அறிவியலின் வளர்ச்சி மாற்றியது. இயற்கை அறிவியல் துறையைச் (Natural Science) சேர்ந்தோர் மனிதனின் திறமைகளுக்கு ஓர் எல்லையில்லை என அறிவுறுத்தினர். அதோடு மனிதர்கள் அனைவரும் வளர்ச்சியடைந்துள்ளனர். எதிர்காலத்திலும் வளர்ச்சியடைவர். அந்த வளர்ச்சி பற்றி விளக்க வேண்டியதில்லை. அவரவரே காணக் கூடியதாக உள்ளது என்றனர். இயற்கை அறிவியலாரின் இக் கருத்துகள் மறுமலர்ச்சியியலாருக்குப் பெரும் சவாலாக அமைந்தன.

அதன் பின்னர், சமுதாயத் தத்துவவியலார் அனைவரும் இயற்கை அறிவியலின் உயிரோட்டத்தினாலும் “அறிவியல் முறை“யின் வளர்ச்சியினாலும் மிகுந்த தாக்கம் பெற்றனர். கணக்கியலாரும் இயற்பியலாரும் கொண்டுள்ள கோட்பாடுகளைப் போன்றே சமுதாயச் சிந்தனையாளர்களும் மனித நடத்தை முறைகளைப் பற்றி உலகளாவிய விதிகளையும் முறைமைகளையும் உருவாக்க விழைந்தனர். அவ்வாறான விதிகளும் முறைமைகளும் நிலைபெற்றுள்ளன எனத் திட்டவட்டமாக நம்பினர். நியூட்டனின் இயக்கவியல் விதி, உலகளாவிய ஈர்ப்புத் தன்மை விதி ஆகியவற்றைப்

போன்ற ஓர் இயக்கவியல் விதியே உலகத்தை இயக்குகிறது என்று இயற்கை அறிவியலார் உறுதிப்படுத்தினர். அக்கருத்தை சமுதாயத் தத்துவவியலார் பயன்படுத்த விரும்பினர். அதன்மூலம், மனித நடத்தை முறைகளைப் பற்றி ஒரு முறைப்படியான நடத்தையியல் விதியை உருவாக்க முடியும் என நம்பினர். இயற்கைவியலாரின் கொள்கைப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு மனித நடத்தை முறைகளுக்கான கொள்கையை உருவாக்குவதில் சோதனை முறையைப் (Experimental Method) பயன்படுத்தலாம் என்று எண்ணினர். இயற்கைவியலில் உள்ளதைப் போன்றே சமுதாயத்தின் இயல்நிகழ்ச்சிகளை (Phenomena) உற்றுநோக்க முடியும் என்றும், அதனைக் கொண்டு எடுகோள்களை (Hypotheses) உருவாக்கி, மேலும் தொடர்ச்சியான உற்றுநோக்கல் மூலமும் சோதனைகள் மூலமும் எடுகோள்களைச் சோதித்துக் கொள்கையை உருவாக்க முடியும் என்றும் நம்பினர்.

அறிவொளிக் காலச் சிந்தனைகள் விளைந்த இடங்களு ஸ்காட்லாந்தும் பிரான்சும் அடங்கும். அந்நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் பல்வேறு பரப்புகளில் சிறந்த பங்களிப்பினையும் செய்துள்ளதால் அவர்களின் கருத்துகள் இன்றளவும் சிறப்பிடம் பெற்றுள்ளன. அவர்களின் சிந்தனையில் விளைந்த கருத்துகள் மனிதனைப் பற்றிய ஆய்வில் மேலும் பல புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்தன. பிரஞ்சுக் குழுவைச் சேர்ந்த மூன்று சிந்தனையாளர்களின் கருத்துக்களையும், ஸ்காட்லாந்து குழுவைச் சேர்ந்த மூன்று அறிஞர்களின் கருத்துகளையும் சுருக்கமாக அறிவதன் மூலன் அதனை அறியலாம்.

## பிரஞ்சுக்குழு

### சார்லஸ் மாண்டஸ்கு (கி.பி. 1689 - 1755)

மாண்டஸ்கு தொடக்கக் காலத்தில் மனித வேறுபாடுகளை அறிவதில் ஆர்வங்கொண்டு பல ஆய்வுகளை மேற்கொண்டவர். பின்னர்ச் சமுதாயங்களுக்கிடையே காணப்படும் மாறுபாடுகளை அறிவதிலும் ஆர்வங் கொண்டார். இவ்வகை ஆய்வுகளில் இவர் பண்பாட்டிடை அணுகுமுறையைப் (Cross) - Cultural Approach)

பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளுக்குப் பயணம் செய்தமையாலும், பலபொருள் குறித்துமிகுதியான அளவில் படித்தமையாலும் மனித சமுதாயம் என்பது பல வகையான இயல்நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு கலப்புத் தொகுதி என உணர்ந்தார்.

ஏறக்குறைய இருபது ஆண்டுகள் வரை மனித நடத்தைகளை ஆழ்ந்து உற்றுநோக்கிப் பதிவுசெய்த தரவுகளைக் கொண்டு இவர் “விதிகளின் மெய்க்கருத்து“ (Spirit of the Laws, 1748) என்னும் நூலினை எழுதினார். அந்நூலில் அரசியல், சட்டம் குறித்து இவர் தம் கருத்தாக்கங்களை விளக்குகிறார். குறிப்பாக, சமுதாயச் செயல்களையும், பல்வேறு நிறுவனங்களுக்கிடையே நிகழும் இடைவினைகளையும் பகுத்தாய்ந்தாரீ. விதியைப் (law) பற்றிய தோற்றத்தையும் (Origin) தன்மையையும் கூறும் நவீன விளக்கவுரையாக அந்நூல் அமைந்தது. அதில் சமுதாய ஒருமைப்பாட்டிற்குச் சமுதாயக் கட்டுப்பாடு ஒரு வழியாகும் என்ற கருத்தைப் பொதுநோக்கில் சுட்டிக் காட்டுகிறார். சமுதாயங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளுக்குக் காரணம் அச்சமுதாயங்களின் கடந்த கால வரலாறும், சமுதாயப் பண்பாட்டுக் கட்டமைப்பும் பல்வேறுபட்ட சுற்றுச் சூழல்களுமே (Enviornmenவ) என முடிவு செய்தார். அவற்றுள் சுற்றுச் சூழல்களின் வேறுபாடுகள் முதன்மையானவை எனக் கருதினார். சமுதாயங்களின் வேறுபாட்டுத் தன்மைக்குச் சுற்றுச்சூழல் அறுதிப்பாட்டியும் (environmental determinism) காரணம் என்று சிலர் உய்த்துணரும் முறையிலேயே இவரும் வலியுறுத்திக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்டஸ்கு அவரது சமகாலத்தவர்கள் கொண்டிருந்த இனச் சார்புடைய கருத்துகளை முழுவதுமாகக் கைவிட்டார். ஒரு சமுதாயத்தின் தரங்களைக் கொண்டு மற்றொரு சமுதாயத்தை மதிப்பிடக் கூடாது. அந்தந்தச் சமுதாயத்தின் முறைகளைக் கொண்டே மதிப்பிட வேண்டும். மாண்டஸ்கின் இக்கருத்து 19 -ஆம் நூற்றாண்டு மானிடவியலில் உருவாக்கப்பட்ட பண்பாட்டுச் சை4ற (Cultural Relativism) உட்கருத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாண்டஸ்கு அவருடைய முதன்மையான ஆய்வில் மனித வரலாறு மூன்று வளர்ச்சி நிலைகளைக் கொண்டுள்ளதாகக் கூறுவார். அவை : வேட்டை நிலை அல்லது விலங்காண்டி நிலை (Hunting or Savagery), ஆயர் நிலை அல்லது காட்டாண்டி நிலை (Herding or Barbarism), நாகரிகம் (Civilization). இவரது வகைப்பாடு 19ஆம் நூற்றாண்டில் பெரும் சிறப்புப் பெற்றது.

**டுர்காட் (1727 - 1781)**

“மனித மனத்தின் வரலாற்றுக் கால வளர்ச்சி (The Historical Progress of the Human Mind, 1750 என்னும் நூல் டுர்காட்டின் சிந்தனையில் உருவானதாகும். வரலாற்றுக் காலத்திலிருந்து இக்காலம் வரை மனிதனது அனைத்துப் போக்கிலும் அவனது செயல் முறைகள் நாளுக்கு நாள் மிகுதியாகிக் கொண்டே வருகிறது என இவர் எண்ணினார். இதை மனிதனின் உணவு ஈட்டும் திறனில் ஏற்பட்ட மாறுதல்களைக் கொண்டு அறிய முடியும் என இந்நூலில் விளக்குகிறார். மனிதனின் வாழ்க்கைப் பொருளாதாரம் (Subsistence Economy) வேட்டுவ வாழ்க்கை, ஆயர் வாழ்க்கை ஆகிய மூன்று நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. வேட்டுவத் தொழிலையும் ஆயர்தொழிலையும் மேற்கொண்டிருந்தபோது மனிதன் ஒரே தன்மையான வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தான். வேளாண் தொழிலை மேற்கொண்ட பின்பே நிலையான வாழ்க்கை, தொழிலில் வேறுபாடு, மக்கள் தொகைப் பெருக்கம், ஓய்வு நேரம் முதலானவை ஏற்பட்டது என நம்பினார்.

மனிதர்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகள் உலகளாவிய நிலையில் உள்ளதற்கு உயிரியல்சார் வேறுபாடுகள் (Biological Differences) காரணமல்ல் பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் என்பார் டுர்காட். இப்பண்பாட்டு வேறுபாடுகள், கற்றல் முறையிலுள்ள (சமுதாய மாக்கம்) வேறுபாடாகவும், சுற்றுச் சூழலிலுள்ள வேறுபாடாகவும், ஒருவரிடமிருந்து மற்றொருவர் தனித்திருக்குமளவில் உள்ள வேறுபாடாகவும் அல்லது இது போன்ற பிற வேறுபாடாகவும் இருக்கும் தன்மையன எனக் கூறினார் டுர்காட்.

நாகரிகத்தின் உரிமையைக் குறிப்பிட்ட சில குழுவினர் மட்டும் சொந்தம் கொண்டாடிய முறைக்கு டுர்காட் கூறிய கருத்துச் சுவையானது. (உலகின் பல்வேறு அரசுகளின் வளர்ச்சியும் தோல்வியும் மாறி மாறித் தொடர்ந்து ஏற்பட்டுள்ளதால் மனிதனின் வளர்ச்சி நிலையில் இடத்திற்கிடம் வேறுபாடுகள் உள்ளன. ஆகவே நாகரிகத்தின் முற்றுரிமையை (Monopoly) எந்தவொரு தனித்தக் குழுவோ ஒரு குறிப்பிட்ட பகுதியோ பெற்றிருக்கவில்லை. டுர்காட்டின் இவ்வகைக் கருத்துக்கள் பிற சமுதாயத் தத்துவவியலாரிடமிருந்து மாறுபட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**கண்டார்சே (கி.பி. 1743 - 1794)**

அறிவொளிக் காலத்தவரின் “வளர்ச்சி“ (Progress) பற்றிய கருத்தினை மேலும் விளக்குவதாக கண்டார்சேயின் கருத்துகள் அமைந்தன. மனிதர்கள் தொடர்ந்து எல்லையற்ற முன்னேற்றத்தைப் பெற்று வருகிறார்கள் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் கண்டார்சே”. மனிதனைப் பற்றிய அறிவியல் ஆய்வில் மனிதனின் முன்னேற்றத்தையும், வெற்றிகளையும் வரலாற்றுக் காலந்தொடங்கி மிகவும் உச்சகட்டமான பிரஞ்சுப் புரட்சிக் காலம் வரை விளக்கலாம் என்பார்) இவர் எழுதிய “மனித மனத்தின் வளர்ச்சி பற்றிய சுருக்கம்“ (The Outline of the Progress of the Human Mind, 1795) என்னும் நூலில் மனித அறிவின் வரலாற்றினைச் சுருக்கமாக விவரித்திருந்தாலும் இதனை ஏதோ ஒரு நாளில் உறுதியாக எழுத முடியும் என நம்பினார். இவர் வர-லாற்றைப் பத்து நிலைகளாகப் பிரித்து இறுதி நிலையில் நம்பிக்கையுடைய எதிர்காலத்தைப் பற்றி விவரிக்கிறார். இவர் தம் கருத்துகள் பொதுப்படையானதாக அல்லாமல் குறிப்பிட்ட இனத்தவரைப் பற்றியனவாக இருந்தன. உலக மக்கள் அனைவரின் அறிவு எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்று எழுதாமல் ஐரோப்பியரின் வரலாறாக எழுதினார். இவர் எண்ணிய இப்பெரும் படைப்பை எழுதி முடிக்கும் முன்பே காலமானார்.

## ஸ்காட்லாந்துக் குழு

**டேவிட் ஹியூம் (கி.பி. 1711 - 1776)**

நியூட்டன் எவ்வாறு இயற்பியலை உருவாக்கினாரோ அவ்வாறே ஒழுக்கம்சார் அறிவியல்களையும் (Moral Sciences) சமுதாய அறிவியல்களைச் சுட்டிக்காட்ட ஹியூம் பயன்படுத்திய மொழித்தொடர் வளப்படுத்த முடியும் என ஸ்காட்லாந்தின் தத்துவவியலாரும், வரலாற்றியலாரும், பொருளியலாருமான டேவிட் ஹியூம் நம்பினார். ஒன்றைப் பற்றிய நுண்ணிய அறிவு உற்றுநோக்கல் மூலம் மட்டுமே கிடைக்குமேயன்றி ஊகத்தினால் கிடைக்காது என உறுதியாகக் குறிப்பிட்டார். அதில் இயற்கை மீறிய செயல்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது என வாதிட்டார். பரவல் நிகழ்ச்சி அல்லது பண்பாட்டுக் கடன் (Cultural Borrowing) ஆகியவற்றின் விளைவாகவே பண்பாடுகளுக்கிடையில் ஒற்றுமை நிலவுகிறதென விளக்கினார். 25 சமுதாயத்தை உளவியல் அடிப்படையில் ஆராய வேண்டியதன் அவசியத்தையும் ஹியூம் வலியுறுத்தினார். மனிதனின் பாலுணர்வுத் தன்மைகள், மனித மனத்தின் இயக்கத்தன்மைகள், ஆளுமையின் மீது பண்பாட்டின் தாக்கம் ஆகியன சமுதாயத்தின் வடிவமைப்பில் பங்கு பெற்றுள்ளதால் இவை பற்றிய ஆய்வையும் ஹியூம் வலியுறுத்தினார். அதன் மூலமே மனிதனைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவியலும் என நம்பினார்.

**வில்லியம் ராபர்ட்சன் (கி.பி. 1721 - 1793)**

ராபர்ட்சன் எடின்பர்கு பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்தவர். சிறந்த வரலாற்றறிஞரும் ஆவார். மாண்டஸ்கு வகைப்படுத்தியவாறே இவரும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை விலங்காண்டி நிலை, காட்டாண்டி நிலை, நாகரிகம் என மூன்று நிலைகளாகப் பகுத்தார். மனிதர்கள் உலோகங்களைக் கண்டெடுத்து அதை உருக்கும் திறன் பெறுவதற்கு முன் கற்கருவிகளைப் பயன்படுத்தினர். இது படிமலர்ச்சியில் முதன்மையாகப் பங்கு வகிக்கிறது. படிமலர்ச்சிக் கருத்து களுக்கடுத்து ராபர்ட்சன் மக்களிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கான காரணத்தையும் ஆராய்ந்தார். மனிதர்களுக் கிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கும்

பண்பாட்டுவயமாதல் (Enculturation) முறையும், சுற்றுப்புற உலகத்தின் தாக்கமும் காரணம் எனக் கருதினார். இன்று பண்பாட்டு மானிடவியலில் சிறப்பிடம் பெற்று விளங்கும் பண்பாட்டுவயமாதல் பற்றிய சிந்தனை ராபர்ட்சன் காலத்திலேயே வேரூன்றிவிட்டது என்பது இதன் மூலம் புலனாகிறது.

அமெரிக்க இந்தியர்கள் ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்னும் கருத்தை முதன்முதலில் தெரிவித்தவர்களுள் இவர் ஒருவராயிராவிட்டாலும் அம் மக்களின் தோற்றத்திற்கும் (Origin), அவர்கள் ஆசியாவிலிருந்து பெருங் கடற்கால் வழியாக வட அமெரிக்காவினுள் நுழைந்தனர் என்பதற்கும் தாவரங்கள், இனக்குழுவியல் அடிப்படையில் தகுந்த சான்றுகளைக் காட்டினார். மனித சமுதாயத்தின் "எளிய நிலையிலான சமுதாய வாழ்க்கை"யை எடுத்துக் காட்டுபவர்களாகப் புத்துலகத் திணைக்குடியினர் உள்ளனர் எனக் கூறினார்.

**ஆடம் ஃபெர்கூஷன் (கி.பி. 1723 - 1816)**

ஸ்காட்லாந்து அறிஞரான இவர் மனிதனின் தன்மைகள் குறித்த அறிவொளிக்காலச் சிந்தனைகளுக்கு மேலுமோர் உருவம் கொடுக்க முற்பட்டார். "குடிமைச் சமுதாயத்தின் வரலாறு பற்றிய கட்டுரையில் (An Essay on the History of the Civil Society, 1767) சமுதாயத்தின் வளர்ச்சி தொடர்ச்சியான பல படிநிலைகளைக் கடந்துவந்துள்ளது என்கிறார். விளக்கமாகக் கூறும் இவ்வுரை 19ஆம் நூற்றாண்டினரின் முழுமை பெற்ற சமுதாயப் படிமலர்ச்சிக் கொள்கைகளை முன்னுணர்ந்து கூறியதாக அமைந்தது. சமுதாயம் நிலைபேறுடையதாகவும் இயக்கத் தன்மைகளைக் கொண்டதாகவும் விளங்குகிறது என்பதை வலியுறுத்திக் கூறியதோடு, பல நாட்டினங்களின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் உரிய காரணங்களையும் இந்நூலில் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

பண்பாடு என்னும் சொல்லை பெர்கூஷன் நேரடியாகப் பயன்படுத்தவில்லையாயினும் இச்சொல்லிற்கான கருத்தினைத் தெளிவாகக் கையாண்டுள்ளார். பண்பாட்டின் பல்வேறு வகைகளுக்குச் சுற்றுச்சூழலின்

வேறுபாடுகளும் காரணமாகின்றன என மாண்டஸ்கு எண்ணியதைப் போன்றே பெர்கூஷனும் கருதினார். மனிதன் கூட்டமாகச் சேர்ந்து வாழும் முறை, அவன் ஒருவரோடு ஒருவர் உதவிபெறா நிலையில் வாழ்ந்த குழந்தைப் பருவத்தை எண்ணியதிலிருந்து தோன்றியதாகும். அதன் பின்னர்ச் சமுதாயவயமாக்கத்தின் (Socialization) மூலம் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டும் புரிந்துகொண்டும் தம் சமுதாய அமைப்பிற்கேற்ற பெரியவர்களாக வளர்கின்றனர். பலர் குழுவாகச் சேர்ந்து சமுதாயவயமாக்கப்படும் போது ஒவ்வொருவரும் தத்தம் சமுதாயத்தின் சிறப்புகளை உயர்வாகப் பேசி அவற்றை மற்றவர்கள் மீது சுமத்தும் போக்கு (தன்னின உயர்வுக் கொள்கை) காணப்படுகிறது என்பார். பெர்கூஷனின் பெரும்பாலான கருத்துகள் 19 ஆம் நூற்றாண்டில் சமுதாய அறிவியல் - வளர்ச்சியுற்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**மானிடவியலின் வளர்ச்சிக்கு அறிவொளிக் காலச் சிந்தனையின் பங்கு**

18 -ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமுதாயத் தத்துவவியலார் மனித சமுதாயத்தின் மிகப் பெருமளவிலான வேறுபாடுகளை எண்ணிப் பாராட்டத் தொடங்கினர். ஆனால் அவர்கள் இயற்கைச் சூழலில் நாகரிகமற்ற நிலையில் வாழ்ந்த மேற்கத்தியரல்லாத மக்களை மட்டுமே இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிட்டு வந்தனர். எவ்வாறிருப்பினும் அதன் மூலம் அடுத்த நூற்றாண்டில் மிகச் சரியான இனக்குழுவியல் தரவுகளைப் பெருமளவு சேகரித்து அதனடிப்படையில் அறிவார்ந்த பண்பாட்டிடை ஆய்வுகள் மேற்கொள்வதற்கு வழிகோலினர். இது அவர்களின் முதல் பங்களிப்பாகும்.

மனிதத் தோற்றத்தை (Origin) அறிவதில் ஆர்வம் கொண்ட 18-ஆம் நூற்றாண்டுத் தத்துவவியலார் சமுதாயப் படிமலர்ச்சியில் இடைவிடாத ஒரு தொடர்ச்சி உள்ளது என்ற கருத்தை வலியுறுத்தினர். (படிமலர்ச்சி என்ற சொல்லிற்குப் பதில் அறிவொளிக் காலச் சிந்தனையாளர்கள் “வளர்ச்சி (Progress) என்று குறிப்பிட்டதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்) அக்கருத்தை விளக்கும் பொருட்டு வரலாற்று வளர்ச்சி அடிப்படையிலான விளக்க முறைகளைச் சுட்டிக் காட்டினர். அதன்படி ஐரோப்பியர்களுக்கு முந்தைய நிலையிலிருந்த கிரேக்க, ரோமானியர்களிடமிருந்து

மனித சமுதாயம் வளர்ச்சி பெற்றதாகக் கூறினரே தவிர மனிதத் தோற்றத்தையோ வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றையோ (Pre-history) குறிப்பிட்ட முயலவில்லை. ஏனெனில் அவர்களின் கருத்துகள் மண்ணியல், தொல்லியல் ஆகிய துறைகளின் வளர்ச்சியை எதிர்பார்த்திருந்தன. பின்னர் அத்துறைகளின் வளர்ச்சிப் போக்கினால் மனிதனின் தோற்றம் பற்றிய அவர்களின் கருத்துகள் மாற்றம் பெற்றன. இது அவர்களின் இரண்டாவது பங்களிப்பாகும்.

அறிவொளிக் காலத் தத்துவவியலார் கற்றுணர்ந்த நடத்தை (Learned Behaviour) முறைகளிலிருந்து உயிரியல் சார் நடத்தை முறைகளைப் (Biological Bevaviour) பிரித்துக் காண முயன்றாலும் அவற்றிற்கிடையே அவ்வளவு வேறுபாடுகள் ஏன் உள்ளன என்பதை விளக்க இயலாதவர்களாய் இருந்தனர். அதனாலேயே அவர்கள் கூறிய பல விளக்கங்கள் மிகவும் சுருக்கமானவையாகவும். அளவில் நிறைவற்றவையாகவும் இருந்தன. அவ்வாறான விளக்கங்களுள் இனவியல் கருத்துகள், சூழ்நிலை அறுதிப்பாட்டியம் (Environmental Determinism) முதலானவற்றைக் குறிப்பிடலாம். இவ்விளக்கங்கள் இந்நாள் வரை பலவகையான சச்சரவுகளுக்குக் காரணமாயிருந்தன. இவைதவிர அச்சிந்தனை யாளர்கள் மனித நடத்தைமுறைகளுக்கான விதிமுறைகளைக் காண முற்பட்டபோது மனிதனின் பேணிப்பயிற்றுவிக்கும் நிலையிலிருந்து (Nurure) இயற்கையைத் ((Nurure) தனியே பிரிக்கவியலாதவராயினர். அவர்களுக்கடுத்து வந்த பிற்காலத் தலைமுறையினரே (மானிடவியலர்) உயிரியல் சார் செயல்களையும், தகவமைப்பின் செயற்பாடுகளையும் புரிந்துகொண்டனர். ஆகவே, பிற்காலத் தலைமுறையினருக்கு ஊன்றுகோலாய் அமைந்த கருத்துகள் அவர்களின் மூன்றாவது பங்களிப்பாகும்.

அறிவொளிக் காலச் சிந்தனையாளர்கள் சமுதாய நிறுவனங்களை அறிய முற்பட்டபோது அரசு, சமயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஆராயத் தொடங்கினர். இவ்வாறான முறை மானிடவியலிலும் சமுதாயவியலிலும் இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது. சமுதாயத்தை இயற்கையிலேயே ஒருங்கிணைந்த அமைப்பு

என்று அவர்கள் எண்ணினர். சமுதாயத்தில் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு செயல்புரியும் பல உட்பிரிவுகள் உள்ளன என்ற அவர்களின் கருத்து பிற்காலச் செயற்பாட்டியற் கொள்கையின் (Functionalism) சாயலாக அமைந்தது. இது அவர்களின் நான்காவது பங்களிப்பாகும்.

மனித நடத்தை முறைகளை அறிவதில் இயற்கை அறிவியலின் முறையியலைப் (Methodology) பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தே, அறிவொளிக்காலம் முதல் இன்றைய அறிவியல் காலம் வரை தொடரும் அவர்களின் பங்களிப்பாகும். இதுவே அவர்களின் தலையாய பங்களிப்புமாகும். இயற்கை ஒழுங்கானது (Natural Order) கண்டுபிடிக்கவியலா விதிகளின் அடிப்படையில் இயங்குகிறது என அத்தத்துவவியலார் நம்பினர். அதே நேரத்தில் ஆராய்ந்தறியாமலே ஊகிக்கும் போக்கைப் புறக்கணித்து, தரவுகளையும் முடிவுகளையும் சோதித்துக் காணும் வழிமுறைகளை மேற்கொண்டனர். ஆகவே சமுதாய முறைமைகளையும், சமகாலத்தியச் சமுதாய, அரசியல் அமைப்புகளையும் குறித்த பகுத்தறிவுவாத அணுகுமுறையுடன் ஆராயும் இன்றைய கோட்பாடானது 18ஆம் நூற்றாண்டினரிட மிருந்து பெறப்பட்டது என்பது தெளிவாகிறது. இது அவர்களின் ஐந்தாவது பங்களிப்பாகும்.

அமெரிக்க அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள விடுதலை பற்றிய கோட்பாடுகளும், அமெரிக்காவின் விடுதலை அறிவிப்பு (Declaration of Independence), மனித உரிமைகள் பற்றிய பிரஞ்சு அறிவிப்பு முதலானவையும் அறிவொளிக்காலத் தத்துவவியலி லிருந்து பெறப்பட்டதாகத் தொடர்புபடுத்திக் காட்டலாம். இக்கருத்து அனைவருக்கும் ஏற்புடையதாயின் இதனை அவர்களின் ஆறாவது பங்களிப்பாகக் கொள்ளலாம்.

**ஐரோப்பியர்களின் பேரரசுக் கொள்கையும் மானிடவியலும்**

மனிதனைப் பற்றிய அறிவொளிக் காலத்தவர்களின் கருத்துகள் மானிடவியலின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தவை போன்றே ஐரோப்பியர்களின்

அரசியல் நடவடிக்கைகளும் மானிடவியலின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. ஐரோப்பியரின் பேரரசுக் கொள்கை (Imperialism) தொடக்கக்கால மானிடவியல் வரலாற்றில் பெரும் பங்கு பெற்றது. புத்தாய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட நிலப்பகுதிகளின் வளங்களைக் கண்டு ஐரோப்பியர்கள் மலைத்துப்போயினர். அங்கிருந்த கச்சாப் பொருள்கள், நறுமணப் பொருள்கள், தங்கம் கனிம வகைகள் முதலானவற்றைக் குவித்துச் சொந்தம் கொண்டாட விரும்பினர். அவ்விருப்பத்தை ஈடேற்ற அப்பகுதிகளில் நிலையாகத் தங்க முற்பட்டனர். அங்குக் குடியேறவும் செய்தனர். அம்முயற்சியில் போர்சுகல், ஸ்பெயின், இங்கிலாந்து, நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் பலவேறு நிலப்பகுதிகளில் குடியேற்ற அரசுகளை (Colonial Governments) அமைப்பதில் முன்னணி நாடுகளாய் விளங்கின. அவர்கள், நிலப்பகுதிகளுக்குக் குடியேறிய பின்னர் அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் விழிப்புணர்வையும் எதிர்ப்பையும் கட்டுப்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதனால் அம்மக்கள் மீது அதிகாரம் செலுத்தத் தொடங்கினர்.

குடியேற்ற அரசுகளை அமைத்த ஐரோப்பியர்களும் பிற வணிக நிறுவனத்தினரும் அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினரைக் (Native people) கட்டி ஆளுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கினர். அதனால் அந்தந்த நிலப்பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினரை நன்கு அறிய வேண்டியவர்களாய் இருந்தனர். அக்கட்டாயத்தின்பேரில் திணைக்குடியினர் பற்றிய இனக்குழுவியல் செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊக்கமளித்தனர். அவ்வகைச் செய்திகள் மூலம் அம்மக்களின் அரசியல், பொருளாதார முறைகளை நன்கு அறிய முடிந்தது. அதனால் அப்பகுதிகளில் உறுதியுடன் நிலைபெற முடிந்தது. இருப்பினும், அவர்களின் அணுகுமுறை சிறந்த இனக்குழுவியல் ஆய்வுகளுக்கு வழிகோலவில்லை. குறிப்பாக, ஸ்பெயின், போர்ச்சுகல் போன்ற பெரும் பேரரசுகளின் போக்கு மானிடவியலை வளர்ப்பதற்குப் போதுமான வாய்ப்பினைக் கொடுக்கவில்லை. எவ்வாறிருப்பினும் முறைப்படியான இனக்குழுவியல் வளர்ச்சிக்குப் பேரரசுக் கொள்கை மிகுந்த பயனளிக்கவில்லை என்றாலும் அதன் தேவை உணரப்பட்டது.

குடியேற்ற அரசுகளின் தேவைக்காகச் சேகரிக்கப்பட்ட இனக்குழுவியல் தரவுகள் பலவகையானவை. அத் தரவுகள் சிறிய அளவில் துண்டு துண்டாக இருந்தன என்றும், அவை இரண்டாம் தரமென்றும் ஒரு கருத்து நிலவியது. குடியேற்ற அரசுகளின் தேவைகளுக்கேற்ப அமைந்த ஆய்வுகள் என்பதால் அக்கருத்து உண்மை என நம்பப்பட்டது. பெரும்பாலானவை அவ்வாறிருப்பினும் விதிவிலக்காகச் சில ஆய்வுகள் சிறப்பாக இருந்தன. சகாகுன் என்பவர் அஸ்தெக் (Aztec) பழங்குடி களிடையே கி.பி. 1529 முதல் 1590 வரை வாழ்ந்து அவர்களின் மொழியையும் வாழ்க்கை முறைகளையும் பதிவு செய்தார். அது அம்மக்களைப் பற்றித் தொகுக்கப்பெற்ற மிகச்சிறந்த இனக் குழுவியல் தரவாக விளங்குகிறது.

பிரஞ்சு நாட்டவரான ல.ஃ.பிட்டாவ் (1681 - 1746) 17 -ஆம் நூற்றாண்டில் வடகிழக்கு அமெரிக்க இந்தியர்களிடம் ஆய்வுசெய்து மதிப்பிடமுடியாத அளவிற்குச் செய்திகளைச் சேகரித்தார், ஸ்கூல்கிரா.ஃ.ப்ட் என்ற அமெரிக்க அரசின் முகவர் சிப்பிவா (Chippewa) இந்தியப் பெண்ணை மணந்து கொண்டு அமெரிக்க இந்தியர்களிடம் விரிவான அளவில் செய்திகள் சேகரித்து ஆறு தொகுதிகள் வெளியிட்டார். இப்பெரும் நூல்வரிசை அவரது களப்பணி நிபுணத்துவத்தைக்காட்டுவதாகவும், எவ்வாறு இனக்குழுவியல் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு முன் மாதிரியாகவும் அமைந்தது. அமெரிக்க இந்தியர்களின் தொன்மக் கதைகளையும், மரபுகளையும் வெளி உலகிற்குக் கொண்டு வந்தவர்களுள் அவரும் குறிப்பிடத்தக்கவர்.

குடியேற்ற அரசுகளின் உதவியால் விளைந்த இனக்குழுவியல் தொகுப்புகள் பற்றி இங்குக் கூறப்பட்டுள்ளவை மிகச் சில மட்டுமே. எண்ணற்றோர் இப்பணியில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர் காலத்தில் இந்தியப் பழங்குடிகள் பற்றியும் இவ்வகைச் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இது பற்றி இதே அத்தியாயத்தில் “இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி“ என்னும் உட்தலைப்பில் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் 1910-11 ஆண்டுகளை ஒட்டி அமைதி குன்றத் தொடங்கியது. உலகம் எப்போதும் கண்டிராத அளவிற்கு ஐரோப்பிய நாடுகள் அழிவை நோக்கி தங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டன. அம்முரண்பாடுகள் முதல்

உலகப் போரில் முடிந்தன. இப்பெரும் போரில் 9 மில்லியன் மக்கள் இறந்தனர். ஆனால் ஆங்கியேலப் பேரரசு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு விரிவடைந்தது. ஆப்பிரிக்காவில் முன்னாளைய ஜெருமானியப் பகுதிகள்,ஜெருமானிய நியூகினி, 100 பசிபிக் தீவுகள், மெசபடோமியா, பாலத்தீனம் முதலான பகுதிகளை ஆங்கிலேயப் பேரரசு அதன் ஆட்சிக்குள் சேர்த்துக்கொண்டு 450 மில்லியன் மக்கள் தொகை அளவிற்குப்பெருகிற்று. அந்த மக்கள் தொகையானது ஏறக்குறைய உலகின் அனைத்து இனத்தவரையும் சமயத்தவரையும் உள்ளடக்கியது எனலாம். அந்த அனைத்து வகையான இனத்தவர்களையும் அடக்கி ஆள வேண்டியவர்களாய் ஆங்கிலேயர்கள் இருந்தனர்.

அந்நிலையில் மானிடவியலுக்கும் குடியேற்றக் கொள்கைக்கும் (Colonialism) இடையேயுள்ள உண்மையான தொடர்புகள் குறித்து மிகுந்த ஈடுபாட்டுடன் விவாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்போதிருந்த அரசியல், பொருளாதார நிலைமைகளையும் சிக்கல்களையும் ஆராயும் போக்கை இனக் குழுவியல் ஏற்படுத்திக் கொண்டது. இனக்குழுவியல் ஆய்வுகளுக்கான நிதி பெரும்பாலும் அரசுத் துறையினரிடமிருந்தும் குடியேற்றப் பகுதிகளின் பொருளாதார வளத்தைக் கண்டறிவதில் ஆர்வமுடைய நிறுவனங்களிடமிருந்தும் கிடைத்தது. அமெரிக்காவில் மானிடவியலின் முழுக்கவனம் அமெரிக்க இந்தியர்களைப் பற்றியதாக இருந்தது. சுமித்சோனியன் நிறுவனம் (Smithsonian Institute), பல்கலைக்கழகத் துறைகள் உள்பட பல நிறுவனங்களைச் சேர்ந்தோர் விரைந்து மாறிவரும் அல்லது மறைந்து வரும் சமுதாயங்களையும், திணைக்குடிகளையும் பற்றி எவ்வளவு செய்திகள் சேகரிக்கமுடியுமோ அந்த அளவிற்குச் சேகரித்தனர்.

அதே நேரத்தில் இங்கிலாந்தின் கவனம் இங்கிலாந்து எங்கெங்கெல்லாம் குடியேற்றப் பகுதிகளைக் கொண்டிருந்ததோ அப்பகுதி மக்களைப் பற்றி அறிவதாக இருந்தது. ஏனெனில், அவர்கள் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்ந்த. எண்ணற்ற இனத்தவர்களை அடக்கி ஆளவேண்டிய நிலையில் இருந்தனர். அதனால் வேத்தியல் மானிடவியல் நிறுவனம் (Royal Anthropological) Institute), பல்கலைக் கழகத்

துறைகள் உள்பட பலர் அம்மக்களைப் பற்றிய செய்திகளுக்குப் பொறுப்பேற்றிருந்தனர். அப்பகுதி மக்களின் சமுதாய, அரசியல் அமைப்புகள் குறித்த செய்திகளைக் கொண்டு அவர்களைப் போன்ற பிற மக்களின் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கும், கைப்பற்றிய மக்களை அடக்கியாளவும் முற்பட்டனர். ஆங்கிலேய அரசின் மூத்த அதிகாரிகள் இனக்குழுவியலில் பெரும்பாலும் ஈடுபடவில்லை. அந்தந்தப் பகுதியிலிருந்த வல்லாண்மைப் போக்குடைய ஊழியர்கள், மாவட்ட அதிகாரிகள் போன்றவர்களே திணைக் குடிகளை அறிய முற்பட்டனர். அவர்களுள் பெரும்பாலோர் முறைப்படியான ஆய்வுகளைச் செய்யவில்லை. அதற்குரிய பயிற்சியினையோ ஆர்வத்தையோ பெற்றிருக்கவில்லை. இராட்ரே என்னும் அதிகாரி அஷாந்திப் (Ashanti) பழங்குடிகளிடம் மேற்கொண்ட சிறந்த ஆய்வு ஒரு விதிவிலக்கு பெரும்பாலான அதிகாரிகள் திணைக்குடிகளைக் கட்டுக்குள் வைத்திருப்பதிலேயே கவனம் செலுத்தினர். அம்மக்களைக் குழந்தைகள் என்றும், அக் குழந்தைகள் பெற்றோரின் ஆதரவையும் வழிகாட்டலையும் எதிர்பார்க்கின்றனர். என்றும், அப்பெற்றோர்கள் ஆங்கிலேயர்கள் என்றும் கூறிக் கொள்வதிலேயே காலத்தைச் செலவழித்தனர்.

18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்தே முழுநேர மானிடவியலார் திணைக்குடிகளை ஆய்வு செய்வதில் முழுமூச்சாக ஈடுபட்டனர். அவர்கள் அரசின் பயன்பாட்டிற்கென்று ஆய்வுகள் மேற்கொள்ளாவிட்டாலும் பழங்குடிகளின் பல்வேறு நிறுவனங்களைப் பற்றிச் சேகரித்த இனக்குழுவியல் தரவுகள் ஆங்கிலேய அரசு அதன் கொள்கைகளை வகுப்பதற்குப் பல நிலையில் பயனுடையதாக இருந்தன. குறிப்பாக, சமுதாய, அரசியல் நிறுவனங்களைப் பற்றிய செய்திகள் அதற்குப் பயன்பட்டன.

இனக்குழுவியலின் பயனை உணர்ந்த மானிடவியலார் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தங்கள் துறையின் செல்வாக்கைப் பெருக்க முயன்றனர். குடியேற்ற அரசினர் அவர்கள் ஆளும் மக்களின் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்வதில் உதவமுடியும் என்பதை இவர்கள் வலியுறுத்திக் கூறினர். அதிகாரிகளும் வணிகர்களும் தேவையற்ற குழப்பத்தின் மூலம் திணைக்குடிகளின் மீது தொடுக்கும் சண்டைகளையும் அடக்குமுறைகளையும் தவிர்க்க முடியும் என விளக்கினர். அதனையடுத்துப் பேரரசு

மானிடவியல் நிறுவனம் அவர்களுக்கு மானிடவியல் பயிற்சி மையம் ஒன்றைத் துவக்கியது. இவ்வாறு மானிடவியல் குடியேற்ற அரசுகளின் நிழலில் சீரான முறையில் வளர்ச்சி பெற்று வந்தது.

**கிறித்தவச் சமயத்தினரும் மானிடவியலும்**

ஐரோப்பியர்கள் குடியேற்ற நாடுகளில் ஆட்சி செலுத்த முற்பட்ட அதே நேரத்தில் கிறித்தவச் சமய நெறிகளைப் பரப்புவ்திலும் குறியாயிருந்தனர். இச்சமய மரபுகளைப் பரப்புவதற்குமுன் பழங்குடிகளின் சமய நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என உணர்ந்தனர். அம்மக்களை சமயமாற்றம் செய்ய விழைந்ததால் அவர்களின் மொழிகளைக் கற்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தனர்.

திருச்சபையினரைப் போன்று பிற சமயத்தினரும் இதே குறிக்கோளைக் கொண்டிருந்ததால் திணைக்குடியினரின் வரிவடிவமற்ற மொழிகளை அறிவதில் புதிய வேகம் உண்டானது. அதனால் பல வரிவடிவமற்ற மொழிகள் பிற மொழிகளின் எழுத்துவடிவத்தில் பதிவுசெய்யப்பட்டன. திணைக்குடியினரை சமயமாற்றம் செய்ய வேண்டுமென்ற குறிக்கோளுடன் பலகாலம் அவர்களோடு ஒன்றி வாழ்ந்த சமயப்பரப்பிகள் அவர்களின் வாழ்க்கை முறைகள், தத்துவங்கள், நெறிமுறைகள் முதலானவற்றை நன்கு அறிந்து கொண்டனர். அவர்களின் நெடுநாளையத் தொடர்பு மூலம் அவர்களை ஆழ்ந்து அறிந்து கொள்ளவும் அவர்களின் காட்டுமிராண்டித் தன்மையின் (Heathenism) பாங்கினை வெளிப்படுத்தவும் முடிந்தது. அதனால் மேற்கத்தியரல்லாதாரின் தத்துவங்களும் வெளி உலகத்தவரிடம் பரவின. சில ஐரோப்பியர்கள் திணைக்குடியினரின் நம்பிக்கைகளும் விழுமியங்களும் (Values) அவரவர்களின் பண்பாட்டளவில் மிகவும் சார்புடையவை என்று நன்கு அறிந்திருந்தனர். அவ்வகைக் கருத்துகள் ஐரோப்பியர்களின் பண்பாடு மட்டுமே உயர்ந்தது என்ற கருத்தை வலுவிழக்கச் செய்ய உதவின.

கிறித்தவச் சமயத்தினர் திணைக்குடிகளிடம் கிறித்தவத்தைப் பரப்புவதில் நாட்டங்கொண்டிருந்த அதேவேளையில் அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டுமென்ற

உயரிய நோக்கத்தையும் கொண்டிருந்தனர். அதற்காக எண்ணற்றோர் அவர்களின் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டனர். அவர்களின் உழைப்பால் இனக் குழுவியல் துறையும் மேம்பட்டது. கிறித்தவச் சமயப் பரப்பிகளால் சேகரிக்கப்பட்ட இனவரைவியல் செய்திகளின் அளவு மிகப் பெருமளவாகும்.

**மானிடவியலின் தந்தை**

ஹெரோடாட்டஸ் வாழ்ந்த கி.மு. 4 -ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் அறிவொளிக் காலம் வரை மனிதனின் தன்மைகளையும், சமுதாயத்தின் அமைப்புகளையும் அறிஞர்கள் பல நிலைகளில் சிந்தனை செய்துள்ளனர். அச்சிந்தனைகளின் அடிப்படையிலேயே மனிதனைப் பற்றியும், மனித சமுதாயத்தைப் பற்றியும் இன்று நாம் தெளிவான கருத்துகளை வளர்த்துக் கொண்டுள்ளோம். அக்கருத்துகளை நுணுகிப் பார்க்கும்போது மானிடவியல் எந்தக்காலகட்டத்தில் தோற்றம் பெற்றது என்று அறுதியிட்டுக் கூறவியலா நிலையே ஏற்படுகிறது. ஆகையால் மானிடவியல்சார் கருத்துகள் ஹெரோடாட்டஸ் காலத்திலிருந்து மெதுவாக வளர்ச்சி பெற்றுக் காலத்தினூடே முழுமை பெற்றுள்ளது என்று கூறுவதே பொருத்தமாக அமையும்.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் 18ஆம் நூற்றாண்டை மானிடவியலின் தொடக்கக் காலம் என்று கூறலாம். இந் நூற்றாண்டில் ஜெருமானியத் தத்துவவியலார் தத்துவவியலார் ஜே.ஜி. ஹெர்டர்

“மனித வரலாற்றைப் பற்றிய தத்துவத்தின் கருத்துக்கள்“ (Ideas for the Philosophy of Human History, 1784 - 1791) என்ற தலைப்பில் நான்கு தொகுதிகளை வெளியிட்டார். அந்நூல் வரிசையில் ஹெர்டர் உலகத்தின் தோற்றம் குறித்தும், மனிதனின் தோற்றம் குறித்தும், வரலாற்றுக் காலத்தினூடே மனிதனின் செயல்கள் எவ்வாறிருந்தன என்பது குறித்தும், மனிதனோடு தொடர்புடைய பிற கருத்துகள் குறித்தும் விவரிக்கிறார். ஒரு குறிப்பிட்ட மக்களின் வரலாறு என்பது அம்மக்களுக்கே உரிய தனித்தன்மைகளால் உருவாக்கப்படுவது என்றும், ஒவ்வொரு குறிப்பிட்ட மக்களினத்தவரும் மனஅளவில் தனிப்பட்டவர்களாக உள்ளனர் என்றும், அப்பண்புகள்

மரபுவழியில் செல்லக்கூடியவை என்றும், அவ்வினத்தவர்களின் தனிப்பட்ட பண்புகள் அவர்களின் வரலாற்றுக்கால நிகழ்ச்சிகளில் காணக்கூடியவையாக உள்ளன என்றும் ஹெர்டர் நம்பினார். இவ்வகையான முறையில் சிந்தித்த முதல் அறிஞர் தாம்தான் என்றும் ஹெர்டர் கருதினார்.

ஆர்.ஜி. காலிங்வுட் எழுதிய “வரலாற்றின் கருத்துகள்“ (Ideas of History, 1946) என்னும் நூலில், மானிடவியல் என்பது தனிப்பட்ட உடலமைப்பையும், உளப்பாங்கினையும் கொண்ட ஒவ்வோர் இனத்தவரின் பண்பாட்டை அறியும் அறிவியல் என்று கூறப்படுமானால், இத்துறையின் தந்தையாகப் போற்றப்பட வேண்டியவர் ஹெர்டரே என்பார். இக்கால மானிடவியல், மனித வேறுபாடுகளுக்கான காரணங்கள் உயிரியல் சார்ந்தவையாக மட்டுமே உள்ளன என்று முடிவு செய்துள்ளது. உள அடிப்படையில் அன்று. ஆகவே அவ்வகைக் கருத்துகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த ஹெர்டரை மானிடவியலின் தந்தை எனக் கொள்ளலாம் என்பர் சிலர்.

மனிதனின் “வளர்ச்சி“ (அறிவொளிக் காலத்தில் “படிமலர்ச்சி“ என்பதற்கு ஈடாகப் பயன்படுத்தப்பட்ட சொல்) குறித்து நிலவிவந்த ஊகக் கருத்துக்களுக்கு உயிரியல் அடிப்படையில் தார்வின் ஏற்படுத்திய படிமலர்ச்சிக் கொள்கையானது (Evolutionism) மனித அறிவியலில் என்றும் அழியாத, உண்மையான திறவுகோலாய் அமைந்ததால் தார்வினை மானிடவியலின் தந்தை எனக் கொள்ளலாம் என்பர் வேறு சிலர்.

அமைப்பியலின் (Structuralism) தந்தையான லெவிஸ்ட்ராஸ் 1963- இல் எழுதிய “ரூசோ : மானிடவியலின் தந்தை“ (Rousseau: Father of Anthropology) என்னும் கட்டுரையில் ரூசோவை மிக உயரிய நிலையில் வைத்துப் போற்றுகிறார். இயற்கையையும், பண்பாட்டையும் இரட்டை எதிர்வு நிலைக்குக் கொண்டு வந்து அறிய வேண்டியதை முதன்முதலில் சுட்டிக் காட்டியவர் ரூசோ. அதோடு,”மனிதன் தன்னைப் பற்றி, தன்நிலையில் அறிந்து கொள்வதற்கு முன்னர்த் தன்னையே ஓர் “அயலார்“ என்ற நிலையில் முதலில் ஆராய வேண்டுமெனக் கூறியவரும் ரூசோ. ஆகவே

ரூசோவை மானிடவியலின் தந்தை எனக் கூறுவதே சிறப்பானது என்பார் லெவிஸ்ட்ராஸ்.

**இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி**

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே இந்தியாவில் மானிடவியல் தோற்றம் பெற்றது. இந்திய மானிடவியல் இனவரைவியல் (Ethnography) இன ஒப்பாய்வியல் (Ethnology) ஆகியவற்றின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும்பங் காற்றியவர்கள் அவர்களே. குடியேற்ற அரசின் அதிகாரிகளாகவும், சமயப்பரப்பிகளாகவும், கல்விசார் பணியாளர்களாகவும் வந்த ஐரோப்பியர்களின் எண்ணிக்கை மிகுதியானது. அவர்களின் பெரும் உழைப்பினாலேயே இந்திய மானிடவியல் பெரும் வளர்ச்சி கண்டது.

இந்தியாவில் மானிடவியலின் தோற்றம் வங்க ஆசியக் கழகத்தோடு (Asiatic Society of Bengal) தொடர்புடையது. இக்கழகம் கி.பி. 1774 - இல் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. மனிதனையும் இயற்கையையும் அறிவியல் கண்கொண்டு அறிவதே இக்கழகத்தின் நோக்கமாக இருந்தது. அன்று தொடங்கிய மானிடவியல்சார் ஆய்வு 200 ஆண்டுக் காலத்தில் மானிடவியல் பெற்ற வளர்ச்சியை இந்திய மானிடவியலின் தந்தையான சரத் சந்திர ராய் முதற்கொண்டு பல அறிஞர்கள். ஒழுங்குபடுத்திக் கூறியுள்ளனர். மஜும்தார் உள்பட பெரும்பாலோர் இந்திய மானிடவியலின் வளர்ச்சியை மூன்று நிலைகளாகப் பகுத்துக் கூறுவர். இப்பொருள் குறித்துப் பலமுறை எழுதிய வித்தியார்த்தி அண்மைக் கால கட்டுரையில் மூன்று நிலைகளைக் குறிப்பிடுகிறார். பின்வரும்

1. கருவுற்ற நிலை (Formative Phase : 1774 - 1920)
2. உருவாக்க நிலை (Constructive Phase: 1920 - 1950)
3. பகுத்தாய்வு நிலை (Analytical Phase : 1950 முதல் இன்று வரை)

இம்மூன்று நிலைகளையும் மிகச் சுருக்கமாக இங்குக் காணலாம். 1770 -களில் தொடங்கிய இந்திய இனக்குழுவியல், முதல் 50 ஆண்டுகள் வரை குறைவான

வேகத்தில் வளர்ந்தது, தொடக்கக் காலத்தில் பழங்குடி மக்களின் பண்பாட்டையும், ஊரக மக்களின் வாழ்க்கை முறைகளையும் பற்றிய தரவுகளே சேகரிக்கப்பட்டன. இவ்வகைப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் பெரும்பான்மையோர் ஆங்கிலேய நிருவாகத்தினராகவும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சமயப் பரப்பிகளாகவும், பயணியர்களாகவும், மானிடவியலில் ஆர்வங்கொண்டிருந்த தனிமனிதர்களாகவும் இருந்தனர். இக்கால கட்டத்தைச் சேர்ந்தவர்களுள் பலர், அவர்கள் தொகுத்த செய்திகளைத் தனி நூல்களாக வெளியிட்டனர். மற்றவர்கள் "வங்க ஆசியக் கழகத்தின் ஆய்விதழ்" (Journal of the Asiatic Society of Bengal). "இந்தியப் பழம்பெருள்" (Indian Anti- quary) ஆகிய ஆய்விதழ்களில் கட்டுரைகளாக வெளியிட்டனர். இந்நிலையில் இந்திய இனவரைவியல் வளர்ந்தது.

1850களுக்குப் பின்னர் இத்துறையில் ஒருபடி முன்னேற்றம் ஏற்பட்டது. இக்கால கட்டத்தில் பெரும்பாலோர் சிறந்த முறையில் இனக்குழுவியல் செய்திகளைச் சேகரித்தனர். குறிப்பாக, கேம்ப்பெல் (1856) தொகுத்த செய்திகளையும், லத்தும் (1859) சேகரித்தவைகளையும், ரிஸ்லி (1891) எழுதியவற்றையும் இந்திய மானிடவியல் மதிப்பாய்வகம் (Anthropological Survey of India) இன்று சில மாற்றங்களுடன் மீண்டும் பதிப்பிக்க முடிவு செய்துள்ளது இதற்குத் தக்க சான்றாகும்.

அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேய நிருவாகத்தில் பணியமர்த்தப் பட்டவர்கள் பெரும்பான்மையோர் கல்விசார் நிலையில் மிகுந்த பற்றுடையவர்களாய் இருந்தனர். அவர்கள் ஏராளமான இனவரைவியல் செய்திகளை முறைப்படி சேகரித்தனர். அவ்வாறு சேகரித்தவர்களுள் கிழக்கிந்தியப் பகுதியில் ரைஸ்லி, தால்டன் ஆகியோரும், நடு இந்தியப் பகுதியில் வெர்ரியர் எல்வின், ரஸ்ஸல், குரூக் ஆகியோரும், வட இந்தியப் பகுதியில் மில்ஸ், ஹட்டன், எல்வின் ஆகியோரும், தென்னிந்தியப் பகுதியில் அனந்த கிருஷ்ண ஐயர், தர்ஸ்டன், எரன்பெ.ஃ.ல்ஸ் ஆகியோரும் விரல் விட்டுக் குறிப்பிடத்தக்கவர்கள். மேற்கூறியவர்களைப் போன்று பலர் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அனைவரையும் இங்குக் குறிப்பிட முடியாததால் மிகச் சிலர் மட்டும்

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தொகுத்து வெளியிட்ட செய்திகள் அந்தந்தப் பகுதி மக்களின் பண்பாட்டை விளக்கும் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன.

தர்ஸ்டன் பிறந்து வளர்ந்தது இங்கிலாந்தில், ஆங்கிலேய ஆட்சியின்போது சென்னை அருங்காட்சியகத்தைக் கவனிக்கும் பொருட்டு இங்கு வந்தவர் கால் நூற்றாண்டுக்காலம் (1885-1908) சிறப்பாகப் பணியாற்றி, தென்னிந்திய இனக் குழுவியலை வளம்பெறச் செய்தார். அவர் 7 தொகுதிகளாகத் தொகுத்த "தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும்" (Castes and Tribes of Southern India) என்னும் நூல்வரிசை தென்னிந்திய இனக் குழுவியலில் என்றும் அழியாச் சின்னமாகத் திகழும். அந்நூலில் தர்ஸ்டன் தென்னிந்தியாவின் வடகோடிப் பகுதியில் வாழும் கோண்டுப் பழங்குடி தொடங்கி தென் தமிழ்நாட்டைச் சேர்ந்த கோட்டைப் பிள்ளைமார், செறுமர் வரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பிரிவினரை ஆராய்ந்து அவர்களின் சமூகப் பொருளாதார முறைகள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள் போன்ற எண்ணற்ற பண்பாட்டுக் கூறுகளைத் தொகுத்து எழுதியுள்ளார். அந்நூல்வரிசை தஞ்சை சரபோஜிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் க. ரத்னம் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. தர்ஸ்டன் 2 தொகுதிகளாக (Ethnographic Notes in South India) நூல்களை ரத்னம் அவர்கள் "தென்னிந்திய மானிட இன இயல்" என்னும் தலைப்பில் மொழிபெயர்த்து மெய்யப்பன் தமிழாய்வகம் மூலம் வெளியாகியுள்ளது.

எரன்.ஃபெல்ஸ் எழுதிய "கொச்சின் காடர்கள்" (Kadars of Cochin) என்னும் நூல் எவ்வாறு ஓர் இனக்குழுவைப் பற்றித் தனிவரைவு நூல் (Monograph) எழுத வேண்டும் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். அந்நூல் சென்னைப் பல்கலைக்கழக மானிடவியல் மாணவர்களுக்குப் பாடமாகவும் வைக்கப்பட்டது. தென்னிந்திய இனவரைவியல் வளர்ச்சிக்கு அனந்த கிருஷ்ண ஐயரின் பங்கும் மிகவும் குறிப்பிடத்தக்கது. அரசு அலுவலராகப் பணியாற்றத் தொடங்கிய காலம் முதல் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிப் பின்னர் சொந்த மாநிலத்தில்

தங்கியிருந்த காலம் வரை ஏராளமான இனவரைவியல் செய்திகளைத் தொகுத்தார். அவற்றுள் “மைசூர்ப் பழங்குடிகளும் சாதிகளும்“ (The Mysore Tribes and Castes), “கொச்சின் பழங்குடிகளும் சாதிகளும்“, “திருவாங்கூர் பழங்குடிகளும் சாதிகளும்“ குறிப்பிடத்தக்கவை.

இந்தியாவின் பிற பகுதிகளைச் சேர்ந்த பழங்குடிகளின் இன வரைவியலைப் பலர் ஆராய்ந்தனர். மிகுந்த உடல் உழைப்புடன் அவர்கள் ஈடுபட்டதையும் அவர்கள் சேகரித்த செய்திகளின் தரத்தையும் பற்றி சிலரைக் கொண்டு அறிவதன் மூலம் அவ்வகை ஆய்வில் ஈடுபட்ட மற்றவர்களின் பங்களிப்பினை மதிப்பிடமுடியும்.

ரசல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய ஆட்சிப் பணியில் பணியாற்றியவர். அவரின் இனவரைவியல் பணி போற்றத்தக்கது. குறிப்பாக 4 தொகுதிகளாகத் தொகுத்த “இந்திய நடு மாகாணங்களின் பழங்குடிகளும் சாதிகளும்“ (The Tribes and Castes of the Central Provinces of India) என்னும் நூல் வரிசை இரு நிலைகளில் பயனுடையதாக உள்ளது. முதல் தொகுதி, அப்பகுதியில் இனவரைவியல் செய்திகளை ஒப்பீட்டு நிலையில் விவரிக்கிறது. பிற தொகுதிகள் ஒவ்வொரு குடியினரின் இனவரைவியல் செய்திகளை விரிவாக விவரிக்கின்றன.

போடிங் என்பவர் நார்வே நாட்டிலிருந்து வந்த ஒரு கிறித்தவச் சமயகுரு. கிறித்தவப் பணியிலும் பழங்குடிகளின் மேம்பாட்டிலும் ஈடுபாடு கொண்ட அவர் சந்தால் பழங்குடிகளுடன் நெடுங்காலம் வாழ்ந்தார். அப்பழங்குடி குறித்து எண்ணற்றோர் ஆராய்ந்திருந்தாலும் இன்று வரை போடிங்குடைய வெளியீடுகளின் எண்ணிக்கையே மிகுதியாகும். அந்த அளவிற்கு உழைத்தவர் அவர். அண்மையில் அப்பழங்குடியைப் பற்றி ஆர்ச்சர் (1907 1979) எழுதிய “பழங்குடியினரின் சட்டமும் நீதியும்: சந்தால்களைப் பற்றிய ஓர் அறிக்கை“ (Tribal Law and Justice: A Report on the Santal, 1984) என்னும் நூல்வரிசை அவர் மறைவுக்குப் பின் 3 தொகுதிகளாக

வெளியிடப்பட்டுள்ளது. மானிடவியலில் ஆர்வங்கொண்ட ஒரு தனி மனிதரின் பெரும் உழைப்பினைப் பறைசாற்றுவதாக உள்ளது அந்நூல் வரிசை.

ஆர்ச்சர் ஆங்கிலேய ஆட்சியின்போது பீகார் மாநில அதிகாரியாக 1931 முதல் 1946 வரை பணியாற்றியவர். கவிதை, கலை முதலானவற்றில் மிக்க ஈடுபாடுடையவர் அவர் பணியாற்றிய இடங்களில் வாழ்ந்த பழங்குடிகளில் வழக்காறுகளையும் (Folklore), கலைகளையும், வாழ்க்கை முறைகளையும் பற்றி ஏராளமான செய்திகளைத் தொகுத்து வந்தார். குறிப்பாக, சந்தால் பழங்குடிகளிடையே பணியாற்றிய காலத்தில் (1942-1946) சந்தாலி மொழியை முழுவதுமாகக் கற்றுக் கொண்டு அவர்களின் அன்றாட வாழ்வில் எழுந்த முரண்பாடுகளும் சச்சரவுகளும் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பது குறித்துத் தினமும் செய்திகள் சேகரித்தார். அவ்வகைச் செய்திகள் ஆங்கிலேய அரசின் நிருவாகத்திற்கு நேரடியாகத் தொடர்புடையவை என்றாலும் அவர்களுக்குத் தேவைப்படாத செய்திகளையும் கொண்டதாகும். பீகார் அரசின் அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ள அந்நூலைப் பற்றி பி.கே. மிஸ்ரா "இந்தியாவில் மனிதன்" (Man in India) என்னும் ஆய்விதழில் மதிப்புரை வழங்குகையில் ஆர்ச்சரின் உழைப்பினைச் சுட்டிக் காட்டுகிறார். சந்தால்களின் ஒவ்வொரு மரபுசார் சட்டத்தின் (Customary Law) நுட்பத்தை அதற்கான வழக்குகள் எழுந்த போது ஏற்பட்ட உண்மைச் சூழலுடன் ஆர்ச்சர் விளக்குவதால் அவரின் உழைப்பு இமயமென உயர்ந்துநிற்கிறது. என்கிறார்.30

இந்திய இனக்குழுவியலில் மிகப்பெரும் மனிதராகத் திகழ்பவர் வெர்ரியர் எல்லின் இவர் ஆங்கிலேயர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் பயின்று பட்டம் பெற்றவர் தொடக்கத்தில் பழங்குடிகளின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு புதினங்களையும் கதைகளையும் எழுதி வந்தவர். பின்னர்க் கிறித்தவச் சமயப்பரப்பாளராகப் பணிபுரிய விழைந்து இந்தியாவிற்கு 1936 ஆம் ஆண்டு வந்தார். இங்கு வந்தவுடன் ஆங்கிலேய அரசின் நிருவாகத்தில் பெரும் பொறுப்பு ஏற்றார். குறிப்பாகப் பழங்குடிகளின் விவகாரங்களுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அவரது சிறப்பான பணியை அறிந்ததனாலேயே விடுதலை பெற்ற பின்னரும் நேரு

அவரைப் பழங்குடி நலத்திட்டங்களுக்கு அரசின் ஆலோசகராக அமர்த்தி அவரின் பட்டறிவினைப் பயன்படுத்திக் கொண்டார்.

எல்வின் நடு இந்தியா, மேற்கு இந்தியா, கிழக்கிந்தியா, வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்கள் (NEFA) முதலான பரந்த நிலப் பகுதிகளைச் சேர்ந்த பழங்குடிகளைப் பற்றி ஏராளமான இனக்குழுவியல் செய்திகளைச் சேகரித்து அவற்றைக் கட்டுரைகளாகவும் தனிவரைவு நூல்களாகவும் வெளியிட்டார். இந்தியப் பழங்குடிகளைப் பற்றி அவரைப் போல் எழுதியவர்கள் மிகச் சிலரே. கோண்டி மொழி முதற்கொண்டு பல பழங்குடி மொழிகளைக் கற்றதுடன் பழங்குடிப் பெண்ணையும் மணந்து கொண்டார். அதன்மூலம் பழங்குடிகளின் பால்வாழ்க்கையை மிக விரிவாக எழுதிப் பெயர் பெற்றார். இவர் எழுதிய "மரியரும் அவர்களின் கோட்டுலும்" (Maria and their Ghotul) என்னும் நூல் பெரும் புகழ் பெற்றது. இவர் எழுதிய நூல்களுள் "நடு இந்தியத் தொன்மங்கள்" (The Myths of Middle India), "இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களின் தொன்மங்கள்" (The Myths of North - East Frontier of India), "வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களின் தத்துவம்" (The Philosophy of NEFA), "அகாரியா" (The Agaria), "பெய்கர்" (The Baiga) முதலானவை குறிப்பிடத்தக்கவை. அவை தவிர மேலும் பல நூல்களையும் எண்ணற்ற கட்டுரை களையும் எழுதியுள்ளார்.

இந்திய மானிடவியலில் ஐரோப்பியர்களின் பங்களிப்பினைத் தொகுத்துப் பட்டியலிட்டால் அது பல நூல்களாக விரியும். இங்குச் சிலரைப் பற்றியே விவரிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் பற்றி விரிவாக அறிய விரும்புவோர் வித்தியார்த்தி இரண்டு தொகுதிகளாக எழுதியுள்ள "இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி" (Rise of Anthropology in India) என்னும் நூல் வரிசையைக் காண்க.

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்த இனக்குழுவியல் விவரங்கள் தனித்தனியானவர்களால் எழுதப்பட்ட நிலையிலேயே உள்ளதால் அதனை ஒருமுகப்படுத்தி இன்றைய நிலையில் பதிவு செய்யும் மாபெரும் திட்டத்தை இந்திய மானிடவியல் மதிப்பாய்வகம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் “இந்தியாவின் மக்கள்“ (People of India) என்று பெயரிடப்பட்டு வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் அனைத்துப்பகுதி மக்களின் இன்றைய நிலையை இது படம்பிடித்துக் காட்டுகிறது. தமிழகம் குறித்த தொகுதி 3 பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய மானிடவியலை வளர்க்க முற்பட்ட இந்திய மானிடவியலாருள் முன்னோடிகளாய்த் திகழ்நதவர்கள் சரத் சந்திர ராயும், எல்.கே. அனந்த கிருஷ்ண ஐயருமாவார். முன்னவர் வடஇந்திய மானிடவியலை வளர்த்த பெருமைக்கும் பின்னவர் தென்னிந்திய மானிடவியலை வளர்த்த பெருமைக்கும் உரியவர்கள். இந்திய மானிடவியலில் தனிப் புகழுடன் விளங்கும் “இந்தியாவில் மனிதன்“ (Main in India) என்னும் முத்திங்கள் ஆய்விதழை 1921 - இல் நிறுவிய பெருமையும் சரத் சந்திர ராய் அவர்களையே சாரும்.

இந்தியாவில் மானிடவியல் 1921 ஆம் ஆண்டுதான் முறைப் படியான தோற்றத்தைப் பெற்றது. இவ்வாண்டில் தான் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் முதல் மானிடவியல் துறை ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னரே பல்வேறு பல்கலைக் கழகங்களில் மானிடவியல் துறைகள் தொடங்கப்பட்டன. அண்மையில் புதுவைப் பல்கலைக் கழகத்தில் இத்துறை தொடங்கப்பட்டுள்ளது. இன்று ஏறக்குறைய 28 துறைகள் மானிடவியலைக் கற்பித்து வருகின்றன.

இந்தியாவில் இன்று மானிடவியலுக்கென்று ஏற்படுத்தப் பட்டுள்ள நிறுவனங்களுள் மிகப் பெரியது இந்திய மானிடவியல் மதிப்பாய்வகமேயாகும் (Anthropological Survey of India) முதலில் இந்திய விலங்கியல் மதிப்பாய்வகத்தில் ஒரு பிரிவாக 1916 இல் ஏற்படுத்தப்பட்டுப் பின்னர் 1945ஆம் ஆண்டு “மானிடவியல் துறை“ (Department of Anthropology) எனப் பிரிக்கப்பட்டு, பின்னர்த் தனி நிறுவனமாக 1946 - இல் உருவெடுத்தது.)

பல்கலைக் கழகங்களில் மானிடவியல் துறைகள் ஏற்பட்ட பின்னரும், இந்திய மானிடவியல் மதிப்பாய்வகம் நிறுவிய பின்னரும் தொள்கைசார் நிலையில் பெருமளவு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தொடக்கத்திலிருந்தே இந்திய மானிடவியல் ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலின்சாயலில் வளர்ச்சிபெற்று வந்தது. அதற்குக் காரணம் ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்டதிலிருந்தே மிகுந்த எண்ணிக்கையில் ஆங்கிலேய மானிடவியலார் இங்கு வந்து ஆய்வுகள் நடத்தியதும், அவர்களிடம் இந்தியர்கள் பயிற்சி பெற்றதுமாகும். இந்திய மானிடவியலின் மூத்த அறிஞரான மஜும்தார் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்றவர். இன்றைய முன்னோடி மானிடவியலார் அனைவரும் மஜும்தாரால் உருவாக்கப் பட்டவர்களே. அதோடு அய்யப்பன், குர்யே போன்ற எண்ணற்ற தொடக்கக்கால அறிஞர்கள் ஆங்கிலேய அறிஞர்களின்கீழ் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்கள்.

இந்திய மானிடவியலின் ஆய்வு முறையியலைப் (Methodology) பெருமளவு மேம்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்களே. குறிப்பிட்டுச் சொல்வதானால் தோடர்கள், தென்னிந்திய உறவு முறை முதலானவை பற்றி ரிவர்ஸ் செய்த ஆய்வுகளும், அந்தமான் தீவினரைப் பற்றி ராட்கிளி∴ப் பிரௌன் செய்த ஆய்வுகளும், இந்தியாவின் பல்வேறு பழங்குடிகளைப் பற்றி ஹெய்மண்டார்∴ப் மேற்கொண்ட ஆய்வுகளும் பெரும் வழிகாட்டிகளாய் அமைந்தன. அவர்களின் ஆய்வுகள் அனைத்தும் கொள்கைசார் நிலையில் ஆராயப்பட்டவை. அவர்களைத் தொடர்ந்து பலர் அதே வகையில் ஆய்வுகளை மேற்கொண்டு இந்திய அறிஞர்களுக்கு வழிகாட்டினர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், குறிப்பாக இந்தியா விடுதலை பெற்ற பின் அமெரிக்க மானிடவியலாருடன் தொடர்புகள் பெருகின. அவர்களின் வருகையால் புதிய அணுகு முறைகளும் ஆய்வு நெறிகளும் வளர்ந்தன. அமெரிக்க அறிஞர்கள் பலர் இங்குவந்து நெடுங்காலம் தங்கி ஆய்வுகள் செய்ததன் வாயிலாக இப்பயன் ஏற்பட்டது. இந்தியாவில் தங்கி ஆய்வு செய்தவர்களுள் கார்னல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மோரிஸ் ஆப்லர், இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆஸ்கார். லூவி, கலிபோர்னியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேவிட் மேண்டல்பாம்,

சிக்காகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ராபர்ட் ரெட்பீல்டு, மில்டன் சிங்கர், மக்கிம் மேரியட் முதலான அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் அனைவரும் இந்திய அறிஞர்களோடு கிராமங்களில் தங்கி ஆய்வு செய்தனர். இந்தியச் சமுதாயத்தில் சிறப்புக் கூறாகத் திகழும் சாதி அமைப்புடைய சமூகங்கள் சிற்றூர்களில் வாழ்வதால் இந்தியச் சிற்றூர்களைப் பற்றிய ஆய்வுகள் (Village Studies) தொடக்கத்தில் பெரும் ஆய்வுப் பரப்பாகக் கருதப்பட்டது. இவ்வகை ஆய்வுகளை வளப்படுத்திய அமெரிக்க அறிஞர்கள் இந்திய மானிடவியலுக்குப் பின்வரும் மூன்று நிலைகளில் பங்களிப்புச் செய்துள்ளனர்.

1. இந்தியச் சிற்றூர்களை முறைப்படி ஆராய்ந்து அதன் மூலம் நடைமுறையிலுள்ள சில எடுகோள்களைச் (Hypotheses) சோதித்தல்.

2. இதுவரை மானிடவியலில் ஏற்படுத்தப்பட்ட முறையியலை இந்தியச் சூழலிற்கேற்ப நெறிப்படுத்துதல்.

3. இந்தியச் சிற்றூர்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சமூக நலப்பணித் திட்டங்களுக்கு மானிடவியல் அறிவு மூலம் உதவுதல்.

அமெரிக்காவின் வருகைக்குப் பின் இந்திய மானிடவியலானது ஆங்கிலேய மானிடவியலையும் அமெரிக்க மானிடவியலையும் தொகுத்துப் பகுத்தாயும் நிலையை ஏற்படுத்திக் கொண்டது.

**வினாக்கள்**

1. மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.
2. மானிடவியலின் வளர்ச்சிக்கு அறிவொளி கால சிந்தனையின் பங்கு யாது? விளக்குக.
3. இந்தியாவில் மானிடவியல் வளர்ச்சி பெற்றதை விளக்குக.

## அலகு - 2

### மானிடவியல் உட்பிரிவுகள்

மானிடவியல் எதைப் பற்றியது என்பதை மிகச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால் “மனிதனைப் பற்றிய அறிவியல்“ என்று கூறுவதே மிகவும் பொருத்தம். “மானிடவியல்“ என்ற சொல்லாக்கம் ஆங்கிலத்தில் வழங்கப்பெறும் “anthropology“ என்னும் சொல்லுக்கு நேரானது. இச்சொல் “anthropos“, “logos“ ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. கிரேக்கத்தில் இச்சொற்கள் முறையே “மனிதன்“ “அறிவியல்“ என்னும் பொருளைச் சுட்டுகின்றன.

மானிடவியல் பற்றிய சிந்தனை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டது. “மானிடவியலார்“ என்னும் பொருளுடைய ‘‘Anthropologist“ என்ற சொல்லை முதன்முதலில் அரிஸ்டாட்டில் பயன்படுத்தினார். எவனொருவன் அவனைப் பற்றிப் பேசுகிறானோ அவனே மானிடவியலார் என்ற பொருளில் இச்சொல்லை அவர் பயன்படுத்தினார். ஜெருமானியத் தத்துவவியல் அறிஞர் இமானுவல் காண்ட் கி.பி.1789 - ‘‘Anthropology“ என்னும் தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அந்நூலில் மனிதனின் தோற்றத்தைப் பற்றி காண்ட் விளக்குகிறார். ஆனால் அவருக்கு முன்னரே கி.பி. 1655 - இல் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படாமல் 'Anthropologie - Abstracted' என்னும் தலைப்பில் ஒரு நூல் வெளியாகியுள்ளது அந்நூல் மானிடவியலை மனித ஆன்மாவின் வரலாற்றை அறியும் துறை என்றும் மனித உடற்கூற்றியலை (Anatomy) அறியும் துறை என்றும் கூறுகிறது.

மானிடவியல் அது தோன்றிய காலந்தொட்டு வளர்ந்து வருகிறது. ஆகவே மானிடவியலைப் பற்றிய வரையறைகளும் அதன் பரப்பும் காலத்தோடு மாறி வந்துள்ளன. இன்றைய மானிடவியல் மனிதனைப் பற்றிய ஒரு முழுமையான அறிவியலாகத் திகழ்கிறது. இது மனிதனை உயிரியல் நிலையிலும், சமுதாய நிலையிலும், பண்பாட்டு நிலையிலும், வரலாற்று நிலையிலும் அறிய முயலுகிறது.

இதன் ஆய்வுப் பரப்பானது இடம் காலம் அனைத்தையும் கடந்து நிற்கிறது. ஒரு குறிப்பிட்ட இடம், காலம் என்ற குறுகிய நோக்கமில்லாமல் அனைத்து இடங்களைச் சேர்ந்த மக்களையும், அனைத்துக் காலத்தைச் சேர்ந்த மக்களையும் ஆராயும் துறையாக உள்ளது. இதனடிப் படையிலேயே குளுக்கான் மனிதனைப் பற்றி அறியும் பல துறைகளுள் மானிடவியல் ஒரு "முழுமையான அறிவியல்" என்பார்." மானிடவியல் பல்வேறு துறைகளின் அறிவை ஒருங்கிணைத்து மனிதனை ஆராய்வதால் இதனை "ஒன்றிணைக்கும் அறிவியல்" (Coordinating Science) என்பார் குரோபர்? மானிடவியல் இந்த இந்த பரப்புகளில் மட்டும் தான் மனிதனை அறிய முற்படுகிறது என்ற ஒரு வரையறை இல்லாமல் இதன் பரப்பு விரிந்து கிடக்கிறது என்பர் மானிடவியலறிஞர்கள் சிலர் மானிடவியலின் பரப்பு எவ்வாறு விரிந்து நிற்கிறதோ அவ்வாறே அதன் அணுகுமுறையும் தனித்தன்மையானது. இது மானிடவியல் வழக்கில் முழுதளாவியம் (Holism) என்று சிறப்பாக வழங்கப்பெறும்.

**முழுதளாவிய அணுகுமுறை**

மனிதனைப் பற்றிய அறிவியலே மானிடவியல் எனக் கூறுவது ஒருவகையில் சரியாகவும், வேறொரு வகையில் குழப்பமாகவும் இருப்பதாகச் சிலருக்குத் தோன்றும். இவ்வகைக் குழப்பத்திற்குக் காரணம் உண்டு. மனிதனைப் பற்றி ஆராயும் துறை மானிடவியல் எனப் பொருள் கொள்ளும் போது இதனை "மனித அறிவியல் என்று கூறுவது சரியாகத் தோன்றுகிறது. ஆனால், வேறு சில துறைகளும் மனிதனைப் பற்றி அறிவதால் இக்கூற்று குழப்பமாக உள்ளது. சமுதாய அல்லது நடத்தைசார் அறிவியல்களும் (Social or Behavioural Sciences) சில இயற்கை அறிவியல்களும் (Natural Sciences) மனிதனைப் பற்றி ஆராய்கின்றன. எடுத்துக்காட்டாக, சமுதாயவியல் மனித சமுதாயத்தைப் பற்றி அறிகிறது. உளவியல் மக்களின் நடத்தை முறைகளை அறிகிறது. அரசியல் மக்களின் ஆட்சிமுறை, அதிகார முறை, சட்டம், ஒழுங்கு முறைகள் முதலானவற்றை ஆராய்கிறது. பொருளியல் மக்களின் உற்பத்திமுறை, பங்கீட்டு முறை, விற்பனை முறை, நுகர்வு முறை, தொழிற் பகுப்பு (division of labour) போன்றவற்றை ஆராய்கிறது. தொல்லியல் முன் வரலாற்றுக் கால மனிதனின்

வரலாற்றை ஆராய்கிறது. மருத்துவவியல், விலங்கியல் ஆகிய துறைகள் மனிதனின் உடற்கூறுகளையும் உடலியக்கத்தையும் ஆராய்கின்றன. மேற்கூறிய பல துறைகள் மனிதனைப் பற்றி அறிவதால் னிடவியலை மட்டும் "மனித அறிவியல்" எனக் கூறுவது ஏன்? என்ற குழப்பம் எழுகிறது. அதனால் நடத்தை சார் அறிவியல் துறைகளிடமிருந்தும், மருத்துவம் போன்ற அறிவியல் துறைகளிடமிருந்தும் மானிடவியல் எவ்வாறு "மனித அறிவியல் என்னும் தனித்துவத்தைப் பெற்று விளங்குகிறது. என்பதும், இதன் அணுகுமுறை எவ்வாறு முழுதளாவிய அணுகுமுறையாக (holistic approach) உள்ளது என்பதும் ஒருவரது முறைப்படியான வினாக்களாகும்.

மானிடவியல் மேற்கூறிய அனைத்துத் துறைகளையும் கடந்து நிற்கிறது. அதற்குக் காரணம் அவ்வனைத்துத் துறைகளின் ஆய்வுப் பரப்பையும் ஒருங்கிணைந்த நிலையில் இது கொண்டுள்ளதே யாகும். இத்துறை இடம், காலம் அனைத்தையும் கடந்து மனிதனை விலங்காகவும், சமுதாயத்தினராகவும் (social being) ஆராய்கிறது. அதாவது,மானிடவியலின் ஒரு பிரிவு ஒருமனிதனை உயிரியல்சார் (biological) நிலையில் ஆராய்கிறது. மனிதனின் மூதாதையர்களான உயர்பாலூட்டிகளின் படிமலர்ச்சி (primate evolution) நிலைகள் என்னென்ன? மனிதன் முதன் முதலில் எங்கு, எப்போது, எவ்வாறு தோன்றினான்? அவன் எவ்வாறெல்லாம் வளர்ச்சி பெற்று வந்துள்ளான்? அவனது படிமலர்ச்சி நிலைகள் என்னென்ன? மனிதர்களுக்குள் நிறத்தாலும் உடற் பண்புகளாலும் ஏன் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன? இவ்வகை மரபுப் பண்புகளை எவை அறுதியிடுகின்றன? பல்வேறு இனங்களாக (races) வேறுபட்டுள்ளதால் அவர்களுக்கிடையே உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடு உள்ளதா? போன்ற பல நிலைகளில் இப்பிரிவு ஆராய்கிறது.

மானிடவியலின் மற்றொரு பகுதி மனிதனைச் சமுதாய விலங்காக எடுத்துக்கொண்டு அவனைப் பண்பாட்டு (cultural) நிலையில் ஆராய்கிறது. இப்பிரிவு உலகின் மூலை முடுக்குகளிலும் வெளி உலகத்திலிருந்து அறவே துண்டிக்கப்பட்ட

தனித்த பகுதிகளிலும் வாழும் பழங்குடிகளின் பண்பாட்டையும், காலங்காலமாகச் சிற்றூர்களில் வாழ்ந்து வரும் ஊரக மக்களின் பண்பாட்டையும், தொழில் துறையில் மேம்பட்ட நகர மக்களின் பண்பாட்டையும் ஆராயும் பெரும் பரப்பினைக் கொண்டுள்ளது. இவை தவிர, இப்பிரிவின் ஆய்வுப் பரப்பு மேலும் விரிந்து நிற்கிறது. எண்ணற்ற நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய மனிதனின் பண்பாடு எங்கெங்கு எவ்வாறெல்லாம் மலர்ச்சியடைந்து வந்துள்ளது? இன்று நூற்றுக்கும் மேற்பட்ட வகைகளில் சமுதாயங்கள் வேறுபட்டிருக்கக் காரணம் என்ன? அவற்றிற்குள் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன? அவற்றின் முறைகள் என்ன? சமுதாயப் பண்பாட்டு முறைகளில் பழக்க வழக்கங்கள் ஒருவருக்கொருவர் ஒத்தில்லாதது ஏன்? மக்களின் சமய நம்பிக்கைகள், கலைகள், குடும்பம் திருமணம், அரசியல் முதலானவை பல்வேறு வகைகளில் ஏன் மாறுபட்டுக் முதலான்றன? அவற்றின் செயற்பாடுகள் என்ன? போன்ற பல நிலைகளில் இப்பிரிவு ஆராய்கிறது.

மானிடவியலின் அடுத்த நிலை வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்தில் (prehistoric period) வாழ்ந்த மக்களின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதாகும். கற்காலங்களிலும் அதற்கு முன்னரும் மக்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டெடுத்து அங்கு அகழாய்வு செய்து அம்மக்களின் புதைபடிவங்களையும் பிற பண்பாட்டு எச்சங்களையும் கொண்டு அம்மக்களின் பண்பாட்டை ஆராய்வது இதிலடங்கும்.

மனிதனின் பண்பாட்டை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் மொழியியல் கூறுகள் பண்பாட்டில் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பதால் இது பற்றிய அறிவினைத் தனி நிலையில் நின்று ஆராய்வதிலும் மானிடவியல் கவனம் செலுத்துகிறது.

மேற்கூறிய நான்கு நிலைகளின் வாயிலாகப் பெறப்படும். அறிவு மானிடவியலுக்கு நான்கு வலுவான பரிமாணங்களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அதாவது மனிதனைப் பற்றி அறியும் பிற துறைகளிடமிருந்து மானிடவியல் எவ்வாறு தனித்துவம் பெறுகிறது என்பது அதன் நான்கு பரிமாணங்களில் அடங்கியுள்ளது.) குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் வெளி உலகத்தைப் பற்றி ஒருவர் முழுமையாக

அறிய வேண்டுமாயின் அவர் நான்கு திசைகளிலும் சென்று சுற்றி வருவது எவ்வளவு முக்கியமானதோ, அவ்வாறே மனிதனைப் பற்றி முழுமையாக அறிய வேண்டுமாயின் அவனை நான்கு பரிமாணங்களில் அறிய வேண்டியது அவசியம். அவை:

1. கடந்த கால மனிதனை அறிவது..
2. நிகழ்கால மனிதனையும் வருங்கால மனிதனையும் அறிவது
3. மனிதனை உயிரியல்சார் நிலையில் அறிவது.
4. மனிதனைப் பண்பாட்டு நிலையில் அறிவது.

இந்நான்கு வகையான பரிமாணங்களில் மனிதனை ஆராயும் ஒரே துறையாக மானிடவியல் விளங்குகிறது. வேறு எந்தத் துறையும் இந்நான்கு நிலைகளில் ஆராய்வதில்லை. தொல்லியலார் கடந்த கால மனிதனை ஆராய்வதில் மட்டுமே ஆர்வங் கொண்டுள்ளனர். சமுதாயவியலார், உளவியலார், பொருளியலார். அரசியலார் போன்றோர் நிகழ்கால மனிதனை அவரவர் ஆய்வுப் பரப்பிற்கேற்ப மட்டுமே ஆராய்கின்றனர். உடற்கூற்றியலாரும் (anatomists) உடலியங்கியலாகும் (physiologists) மனிதனின் உயிரியல் கூறுகளை அவரவர் தேவைக்கேற்ப மட்டுமே ஆராய்கின்றனர். மனிதனின் பண்பாட்டுக் கூறுகளையும் வருங்காலத்தைப் பற்றியும் முழுமையாக அறிவதில் பிற துறையினர் ஆர்வங்காட்டவில்லை. இந்நான்கு பிரிவுகளையும் ஒருங்கிணைந்த நிலையில் ஆராயும், போக்கை மானிடவியல் பெற்றுள்ளது. இதற்காக இத்துறையானது படிமலர்ச்சியில், உயர்பாலூட்டியியல், மரபியல், இனவியல் தொல்லியல், புதைபடிவவியல், மொழியியல், சமயம், கலை, பொருளியல், அரசியல் போன்ற எண்ணற்ற உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

மானிடவியலார் மேற்கூறிய அனைத்துப் பிரிவுகளின் செய்திகளையும் ஒன்றாகத் தொகுத்து அவற்றை முறைப்படியாக உய்த்துணர்ந்து மனிதனைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள முயலுகின்றனர். எடுத்துக்காட்டாக, (பழங்காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி அறிவதற்கு இன்று மிகவும் தனித்த பகுதிகளில் வாழும் தொன்மைக் குடியினரை (primitive people) ஆதாரமாகக் கொள்கின்றனர். அதன்பின்

அம்மக்களிடமிருந்து இக்கால நகர மக்கள் எந்த அளவு வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதையறிய இவ்விருவரையும் ஒப்பிட்டு இவர்களுக்கிடையே உள்ள வளர்ச்சி நிலைகளைக் காண்கின்றனர். அதனாலேயே மானிடவியல் இடம் தாலம் அனைத்தையும் கடந்ததாக விளங்குகிறது. இது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மக்களை மட்டும் ஆராயும் பிரிவு என்றில்லாமல் தனித்த பகுதிகளில் வாழும் பழங்குடி மக்கள் முதல் தொழில்மயமான பகுதிகளில் வாழும் நகர மக்கள் வரை ஆராய்கின்றது. அதே போன்று, ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மனிதனை மட்டும் ஆராயாமல், பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித மூதாதையர்களின் புதைபடிவங்கள் முதல் இன்றைய மனிதன் வரை ஆராய்கிறது. மேற்கூறிய அனைத்துக் கருத்துகளையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும்போது மானிடவியல் மனிதனைப் பற்றிய ஒரு முழுமையான அறிவியல் என்பதும், இதன் அணுகுமுறையானது முழுதளாவிய அணுகுமுறை என்பதும் தெளிவாகும்.

**மானிடவியலின் உட்பிரிவுகள்**

மானிடவியலின் பரப்பு கடலென விரிந்ததாகையால் அதில் ஈடுபடும் மானிடவியலார் அவரவர் விருப்பத்திற்கேற்ப ஒரு குறிப்பிட்ட பரப்பை மட்டும் முதன்மையாக எடுத்துக் கொள்கின்றனர். சிலர் மனிதனின் உயிரியலை அறிவதில் ஈடுபடுகின்றனர். சிலர் மனிதனின் பண்பாட்டை அறிவதில் ஈடுபடுகின்றனர். வேறு சிலர் மனிதனிலா மனிதனற்றுக் காலத்தை அறிவதில் ஈடுபடுகின்றனர். மேலும் சிலர் மனிதனின் மொழிகளை அறிவதில் ஈடுபடுகின்றனர். இதனடிப்படையில் பின்வரும் நான்கு முதன்மையான பிரிவுகளாகப் பாகுபடுத்தப் படுகிறது. மானிடவியலானது

1. உடல்சார் மானிடவியல் (Physical Anthropology)
2. பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology)
3. தொல்லியல் (Archaeology)
4. மொழியியல் (Linguistics)

இந்நான்கு பிரிவுகளுள் பின்னிரண்டு பிரிவுகள் மானிடவியலோடு தொடர்புடையவை ஆயினும் இப்பிரிவுகள் இன்று தனிப்பெருந்துறைகளாக மாறியுள்ளன. இந்நூலில் நாம் பண்பாட்டு மானிடவியலைப் பற்றி அறிய முற்பட்டிருந்தாலும் மானிடவியலின் ஏனைய உட்பிரிவுகளையும் பற்றி இங்குச் சுருக்கமாகக் காண்பது பல நிலைகளில் உதவியாக அமையும்.

**உடல்சார் மானிடவியல்**

உடல்சார் மானிடவியல் முற்றிலும் ஓர் அறிவியல் பிரிவாகும். இப்பிரிவு மனிதனை முழுக்க முழுக்க உயிரியல்சார் நிலையில் ஆராய்கிறது. அதனாலேயே இப்பிரிவு உயிரியல்சார் மானிடவியல் (Biological Anthropology) என்றும் கூறப்பெறும். இன்றைய உடல்சார் மானிடவியல் பரந்து விரிந்த அறிவியல் துறையாக விளங்குகிறது பல்துறை அறிவினை ஏற்றுமனிதனை ஆராய்கிறது காலந்தோறும் வளர்ந்து வருகிறது. இப்பிரிவின் ஆய்வுப் பரப்புகள் விரிந்துகொண்டே இருந்தாலும், பல்துறை அறிவினைத் தேடுவதாக இருந்தாலும் பின்வரும் மூன்று வினாக்களுக்கு விடைகாண்பதை மையமாகக் கொண்டே அனைத்துப் பரப்புகளும் விளங்குகின்றன. அவை :

1. மனிதன் எப்போது தோன்றி எந்தெந்த நிலைகளில் மலர்ச்சியடைந்து இன்றுள்ள நிலையினை அடைந்துள்ளான்?

2. மனிதன் இன்றைய நிலையை அடைவதற்கு எந்தெந்த நிகழ்ச்சிகள் காரணமாய் இருந்தன? அவை எவ்வாறு நிகழ்ந்தன?

3. இக்கால மக்கள் வெள்ளையர்கள், கருப்பர்கள்: நெட்டையானவர்கள், குட்டையானவர்கள் தடித்த உதட்டினர். மெலிந்த உதட்டினர் சுருள் மயிரினர் சுருளற்றமயிரினர் போன்ற எண்ணற்ற உயிரியல் கூறுகளில் வேறுபட்டுப் பல்வேறு இனங்களாக இருப்பதற்குக் காரணமென்ன? வருங்காலத்தில் இவர்களிடையே எவ்வகையான மாற்றங்கள் நிகழும்?

இம்மூன்று வகையான வினாக்களுக்கு விடைகாணும் பொருட்டு உடல்சார் மானிடவியலானது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் புவிப்பரப்பு முழுவதும்

பனியாறுகளால் (glaciers) சூழப்பட்டிருந்த காலத்திற்கு முன்னர் வாழ்ந்த விலங்குகள் தொடங்கி இன்றைய மனிதன் வரை ஆராய்கிறது. இந்நீண்ட வரலாற்றைக் கொண்ட விலங்கினங்களையும் மனிதனையும் ஆராய வேண்டியுள்ளதால் உடல்சார் மானிடவியல் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக, பனியாற்றுக் காலத்திற்கு முற்பட்ட விலங்கினங்களின் உடலமைப்பு, அவற்றின் வளர்ச்சி நிலைகள், உயிரியல் மாற்றங்கள், இவ் விலங்கினங்களோடு தொடர்புடைய புதைபடிவங்கள் (கழளளடைள), அவற்றின் காலக்கணிப்பு முதலானவை பற்றியும், இக்கால மனிதனின் மூதாதையர்கள், அவர்களின் சமுதாய வாழ்க்கை, நடத்தை முறைகள் முதலானவை பற்றியும் பல நிலைகளில் இதன் உட்பிரிவுகள் ஆராய்கின்றன. உடல்சார் மானிடவியலின் முதன்மையான உட்பிரிவுகளை வரிசைப்படுத்தி அவற்றைச் சுருக்கமாகக் காண்பது நலம் பயக்கும்.

1. படிமலர்ச்சியியல் (Study of Evolution)

2. உயர்பாலூட்டியியல் (primatology)

3. தொல்லுயிரியல் (palaeontology)

4. ஒப்பியல் உடற்கூற்றியல் (comparative anatomy)

5. எலும்பியலும் பல்லியலும் (osteology and odontology)

6. விலங்கின நடத்தையியல் (ethology)

7. இனவியல் (raciology)

8. மானிடஉடலளவையில் (anthropometry)

9. தோற்கூற்றியல் (dermatoglyphics)

10. மனிதச் சூழலியல் (human ecology)

11. குடித்தொகை மரபியல் (population genetics)

12. குடித்தொகையியல் (demography)

13. கருவியலும் உடலியங்கியலும் (embryology and physiology)

14. உணவியல்சார் மானிடவியல் (nutritional anthropology)

15. மூலக்கூற்று (molecular biology)

16. இனமேம்பாட்டியல் (eugenics)

17. மருத்துவ மானிடவியல் (medical anthropology)

18. பயன்முறை உடல்சார் மானிடவியல் (applied physical anthropology)

**படிமலர்ச்சியியல்**

நாம் வாழும் உலகம் உட்பட இப்பிரபஞ்சம் (universal) தோன்றி இன்றுவரை 15 பில்லியன் ஆண்டுகளாகின்றன என வானியலார் மதிப்பிட்டுள்ளனர். பலகோடி ஆண்டுகளாக நிலைத்திருக்கும் இப்பிரபஞ்சத்தின் வரலாற்றைச் சுருக்கமாக அறியும் பொருட்டு, கார்ல் சாகன் ஓர் ஆண்டுக் குறியீட்டு முறையை (calendar system) வகுத்தார். இம்முறையில் 15 பில்லியன் ஆண்டுகளை ஓர் ஆண்டாகச் சுருக்கிவிட்டார். இவர் பயன்படுத்திய அளவுகோலின் படி 24 நாட்கள் ஒரு பில்லியன் ஆண்டையும், ஒரு வினாடி 475 ஆண்டுகளையும் குறிக்கின்றன.

பிரபஞ்சத்தின் வரலாற்றை ஓர் ஆண்டுக்குள் சுருக்கிய இத்திட்டத்தில் ஜனவரி 1 -ஆம் நாள் பிரபஞ்சம் தோன்றியதாகவும் (big bang) - மே -1ஆம் நாள் வான் கங்கை (milky way) தோன்றியதாகவும், செப்டம்பர் 25 -ஆம் நாள் முதல் உயிரினம் பூமியில் தோன்றியதாகவும், டிசம்பர் 31 -ஆம் நாள் இரவு 10.30 மணிக்கு முதல் மனிதன் தோன்றியதாகவும் சாகன் குறிப்பிடுகிறார்.? இவர் எழுதிய நூலில் நமக்குத் தேவைப்படுவது அந்த ஆண்டின் இறுதி ஒன்றரை மணி நேர நிகழ்ச்சி மட்டுமே.

பிரபஞ்சத்தின் வரலாற்றை ஓராண்டுக்குள் சுருக்கிய சாகனின் திட்டம் மூலம் பிரபஞ்சத்தின் மொத்தக் காலத்தில் மனிதன் தோன்றி வாழ்ந்து வரும் காலம்

எவ்வளவு குறைவானது என்பதை ஒப்பிட்டு அறிய முடிகிறது. ஆண்டு முழுவதற்குமான 12 மாத காலத்தில் இறுதி 90 நிமிடங்களில் மட்டுமே மனிதன் வாழ்ந்து வருகிறான். மனிதனோடு நெருங்கிய தொடர்புடைய உயர்பாலூட்டிகள் தோன்றிய காலத்தையும் இங்குக் காண்பது நன்று.

225 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாலூட்டிகள் (mammals) தோன்றின. பிரபஞ்சம் தோன்றிய காலத்தை நோக்கும் போது பாலூட்டிகள் அண்மைக் காலத்தில்தான் தோன்றியுள்ளன. ஊர்வன இனங்களும் மிகப்பெரும் டைனோசார்களும் ஆதிக்கம் செலுத்திய அக்காலத்தில் அவற்றிடமிருந்து தப்பி வாழும் பொருட்டு பாலூட்டிகள் பூச்சிகளை இரவில் உண்டு பசுற்பொழுதில் ஒளிந்து வாழ்ந்திருந்தன.

90 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்தான் உயர் பாலூட்டிகள் (primates) தோன்றின. அவையே இன்று உயிர் வாழும் குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் (apes), மனிதர்கள் ஆகியோரின் மூதாதையர்கள் 5 காடுகளின் செழுப்பினால் உயர் பாலூட்டிகள் மரங்களில் வாழ முற்பட்டன. அதனால் விரல்களும் பற்றும் தன்மையுடைய (prehensile) கைகளும் தோன்றின. குரங்குகளும், வாலில்லாக் குரங்குகளும் தோன்றிய அடுத்த 20 மில்லியன் ஆண்டுகளில் மனிதனின் நேர் மூதாதையர்கள் தோன்றினர். இக்கால மனிதனை ஒத்த மூதாதையர்கள் 40,000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றினர்.

முதல் உயிரினம் தோன்றியது முதல் இக்கால மனிதன் வரை உயிரினங்களிடையே ஏற்பட்ட வளர்ச்சிக்குக் காரணம் ஒரு தொடர்ச்சியான மாற்றமேயாகும். அம்மாற்றம், தான் தோன்றித் தனமாகவோ முறையற்ற நிலையிலோ ஏற்படவில்லை. ஒரு முறையான அமைப்பிலேயே நிகழ்ந்துள்ளது. அவ்வாறே அம்மாற்றத்தின் இயக்கமும் செயல்பாடுகளும் ஒரு வரையறைக்குள் நின்று செயல்பட்டுள்ளன. உயிரினங்களிடம் தொடர்ச்சியான மாற்றத்தை ஏற்படுத்திய அந்நிகழ்வைப் படிமலர்ச்சி (evolution) என அறிஞர்கள் கூறுவர் இதைப் பற்றிய முழுமையான அறிவிற்கு 18,19 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இயற்கைவியலார்

காரணமாவர். அவ்வறிஞர்கள் அனைவரையும் கடந்து உயர்ந்து நிற்பவர் சார்லஸ் தார்வின் ஆவார்.

**படிமலர்ச்சியின் படிமலர்ச்சி**

சார்லஸ் தார்வின் கிபி. 1859ல் சிறப்பினங்களின் தோற்றம். (On the Origin of Species) என்னும் நூலை வெளியிடுவதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே படிமலர்ச்சி பற்றிய சிந்தனை தோன்றிவிட்டது. கிரேக்கத் தத்துவவியல் அறிஞர் அரிஸ்டாட்டில் (384 322) படிமலர்ச்சிக் கருத்துகளுக்கு வித்திட்டவர் எனலாம். பழைய உயிரினங்களிடமிருந்து உயிரினங்கள் படிமலர்ச்சி அடைந்து வந்துள்ளன என்பதை முதன்முதலில் கிரேக்கத் தத்துவவியல் அறிஞர்களே உணர்ந்தனர். அவர்களுள் தேல்ஸ், அனெக்சிமாண்டர் (கி.மு. 611-547) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். (தண்ணீர்தான் மூலப்பொருள். அதிலிருந்துதான் அனைத்து உயிரினங்களும் தோன்றின என தேல்ஸ் கூறினார். வெப்ப ஆற்றலின் மூலமே முதல் உயிர் (life) தோன்றியது என்பார் அனெக்சிமாண்டர்

படிமலர்ச்சிக் கருத்துகளை ஆழ்ந்து சிந்தித்த முதல் அறிஞர் அரிஸ்டாட்டில் (கி.மு. 384-322) என்று கூறலாம். பழைய உயிரினங்களிடமிருந்து புதிய உயிரினங்கள் தோன்றுகின்றன. அவை அனைத்தும் அறிவு வளர்ச்சியில் ஏதோ ஒரு வகையான மாற்றத்தைப் பெற்று உகந்த நிலையை (ideal) அடையும் இலக்கில் ஈடுபடுகின்றன. அந்த உகந்த நிலையை அடையும் பொருட்டு உயிரினங்கள் பெற்ற மாறுபாட்டைக் கொண்டு அவை அனைத்தையும் வரிசைப்படுத்திக் காணமுடியும். அவ்வாறு வரிசைப்படுத்திப் பார்க்கும்போது உகந்த நிலைக்கு மிக அருகில் உள்ளவர்கள் மனிதர்களே. மிகவும் கீழ்நிலையில் உள்ளவை கனிமப் பொருள்களே (Inorganic Matter). அப்பொருள்களிலிருந்தே முதல் உயிர் தோன்றியது. இக்கொள்கையைக் கொண்டிருந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அனெக்சிமாண்டர், செனோபேன்ஸ், ஐசக் நியூட்டன் ஆகியோராவர் (உயிரற்ற கனிமப் பொருள்களிலிருந்து உயிர் தோன்றியது

என்பதால் அவர்களின் கொள்கை உயிரிலிப் பிறப்புக் கொள்கை (theory of a biogenesis) எனப்படும்.

உலகத்தின் தோற்றம் பற்றிய தொடக்கக் கால விவிலியத்தின் கருத்துகள் அரிஸ்டாட்டிலின் கருத்துகளை மிகவும் ஒத்திருந்தன. பழைய உயிரிலிருந்து புதிய உயிர் தோன்றுகிறது என்பதையே “தோற்றம் பற்றிய நூல்“ (Book of Genesis) குறிப்பிடுகிறது. ஆனால் பிற்கால விவிலியக் கருத்துகள் உயிரினம் தோன்றியது முதல் இன்று வரை மாறாமல் இருக்கின்றன என்று கூறுகின்றன.

பண்டைக் காலத்தில் வாழ்ந்த எபிரேயர்கள் சிறப்புப் படைப்புக் கொள்கையில் (Theory of Special Creation) நம்பிக்கை கொண்டிருந்தனர். பின்னர் அக்கொள்கை கிறித்தவர்களிடமும் வேரூன்றியது. அக்கொள்கையை விளக்கிக் கூறியவர் ஸ்பெயின் ட்டுத் திருச்சபைத் தலைவர் சுவாரஸ் (கி.பி. 1548 - 1617) ஆவார். இவ்வுலகத்தையும் உயிரினங்களையும் இறைவன் 6 நாட்களில் படைத்தான். முதல் நாள் ஒளியையும் (light) இரண்டாம் நாள் ஆகாயத்தையும் (sky), மூன்றாம் நாள் மண்ணுலகம், கடல், தாவரங்களையும், நான்காம் நாள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றையும், ஐந்தாம் நாளில் நீரில் வாழும் விலங்குகளையும் பறவைகளையும் ஆறாம் நாளில் தரை வாழ் விலங்குகளையும் மனிதனையும் படைத்தான். சிறப்புப் படைப்புக் கொள்கையின் இக்கருத்து மக்களிடம் சிலகாலம் நிலவியிருந்தது.

ஜூடியோ கிறித்தவத்தின்படி (Judaeo - Christianity) இவ்வுலகம் சில ஆயிரமாண்டுகளுக்கு முன்னர்த்தான் தோன்றியது. விவிலிய நிகழ்ச்சிகளை அறுதியிட்டுக் கூறுவதில் சிறப்புப்பெற்ற பேராயர் (Archbishop) ஜேம்ஸ் உஷர் ஆதாமும் ஏவாளும் கி.மு. 4004இல் தோன்றினர் எனக் கூறகிறார். இவர் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் ஒரு படிநிலையில் அடுக்கப்பட்டுள்ளன என்ற கருத்தே 17, 18-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மேற்கத்தியர்களிடம் மேலோங்கி யிருந்தது. உயிரினங்களின் இந்தப் படிநிலை

(hierarchy) இயற்கையின் வரிசை (scala naturae) என இறையியல் நூல்களில் குறிப்பிடப்பெறுகின்றது. இது “உயிரினங்களின் தொடர்ச்சி (உாயபை ழுக டிநபைெ) என்றும் கூறப்பெறும். இந்த உயிரினத்தின் வரிசையில் மனிதன் மேல்நிலையிலும், விலங்குகள், தாவரங்கள், பாறைகள் முதலானவை மனிதனுக்குக் கீழும் உள்ளன . “இயற்கையின் வரிசை“யில் மனிதனுக்கு மிக அருகில் உயர்பாலூட்டிகள் வைக்கப்பட்டுள்ளன எனினும், ஒவ்வோர் உயிரினமும் இறைவனால் தனித்தனியாகப் படைக்கப்பட்டன. மனிதனுக்கும் உயர்பாலூட்டிகளுக்கும் உள்ள உருவத்தோற்ற ஒற்றுமை இறைவனின் தெய்விகப் படைப்பின் தனித்தனி செயல்களால் உண்டானதாகும் என நம்பினர்.

இடைக்காலத்தைச் (middle ages) சேர்ந்த அறிஞர்களிடையே இயற்கையை நேரடியாக உற்றுநோக்க (observation) வேண்டும் தோன்றியது. இருப்பினும், அறிவியல் முறைப்படி ஆராய முற்பட்ட ஆய்வாளர்கள்கூட, சமயச்சார்புடைய பழம்பெரும் ஆசிரியர்களைப் (classical authorities) ஏற்பட்டது.ண்டுகளில் உற்றுநோக்கும் முறையில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. அம்முறைக்கு உருளும். கொடுத்தவர் ஆங்கிலேயத் தத்துவவியல் அறிஞர் பிரான்சி பேச்சன். அவர் 1620 - இல் எழுதிய `Novam Organum' என்னும் பேலில் உய்த்துணரும் முறை (inductive method) அறிவியல் நோக்குடைய ஆய்வுகளுக்கு மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்தினார். உய்த்துணரும் முறையானது பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டது. உற்று நோக்குவனவற்றின் காரண காரியங்களைப் பொதுமைப்படுத்தி பின்னர்ப் பொதுமைப்படுத்திய வற்றை எடுகோளாகக் (hypothesis) கொண்டு அவற்றைச் சோதனைகள் மூலம் சோதித்துப் பார்த்து, அதன்பின் அவற்றை இயற்கை விதிகளாக (natural laws) மாற்றுவதைக் குறிக்கும்.

பிரான்சிஸ் பேக்கனின் சிந்தனையைப் பெற்று உய்த்துணரும் முறையில் ஆழ்ந்து செயல்பட்டவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த லின்னேயஸ் (1707 - 1778) ஆவார். இன்று லின்னேயஸ் உயிரின வகைப்பாட்டியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

இவர் உலகின் பல பகுதிகளில் புத்தாய்வுகள் மேற்கொண்டு அங்குக் கண்ட ஆயிரமாயிரம் தாவரங்களையும் விலங்குகளையும் தொகுத்து வகைப்படுத்தினார். அவ்வாய்வுகளால் விளைந்ததே உயிரின வகைப்பாட்டியல் (taxonomல) ஆகும். இம்முறையில் ஒத்த உயிரினங்களைத் தொகுதி (phylum) என்றும் அதனுள் சில வேறுபாடுகள் உள்ளனவற்றைப் பிரித்து அதனை வகுப்பு (class) என்றும், அதனுள் சிற்சில மாற்றங்களுடன் வேறுபட்டுக் காணப்படுவனவற்றை இனம் (genus) என்றும், அதனுள் மேலும் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளவற்றைச் சிறப்பினம் (species) என்றும் வகைப்படுத்தினார். லின்னேயஸ் வகுத்த வகைப்பாட்டியலில் இங்குக் குறிப்பிடப்பெற்றவை ஒருபகுதியே. இவ்வகைப் பாட்டில் லின்னேயஸ் பொதுப்பண்புகள் கொண்ட உயிரினங்களைப் பருநிலையில் ஒரு தொகுதியாக வகைப்படுத்தி, பின் அவற்றுக்குள் நிலவும் நுண்ணிய வேறுபாடுகள் அடிப்படையில் படிப்படியாகப் பிரிக்கின்றார். இறுதியில் ஒவ்வொரு உயிரியையும் அதன் இனப் (genus) பெயரோடும். சிறப்பினப் (species) பெயரோடும் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, மனிதனும் அவனின் தொலை மூதாதையரும் 'homo' என்ற இனப் பெயரைக் கொண்டவர்கள். ஆனால் இக்கால மனிதன் `sapien' என்ற சிறப்பினப் பெயரோடும், தொலை மூதாதையர்கள் அப்போதுதான் நிமிர்ந்து நடக்கும் முறையை ஏற்படுத்திக் கொண்டதால் அவன் 'crectus' என்ற சிறப்பினப் பெயரோடும் குறிக்கப்படுகின்றனர். இதனால் லின்னேயஸ் வகைப்பாடு இருவழிப் பெயரிடல் (binominal nomenclature) முறை எனக் கூறப்படும்.

லின்னேயஸ் தான் முதன் முதலில் மனிதனையும், வாலில்லாக் குரங்குகளையும், குரங்குகளையும் ஒரே இனமாகச் சேர்த்தார். இம்மூவகை இனமும் ஒத்த உடலமைப்பைப் பெற்றுள்ளன என்பதை இவர் ஊகித்தார் என எண்ணவேண்டியுள்ளது. இருப்பினும், இம்மூவகை இனத்திற்கும் பொதுவான மூதாதையர் உண்டு என்பதை லின்னேயஸ் உறுதிப்படுத்தவில்லை. உயிரினங்கள் மாறாத உடலமைப்பைப் பெற்றுள்ளன என்ற கருத்தை முதலில் லின்னேயஸ் ஒப்புக்

கொண்டாலும் உயிரினங்களுக்கிடையே சிறிய சிறிய வேறுபாடுகள் தோன்றுமென்றும், அப்பண்புகள் பின்னர் அவ்வுயிரினத்தைத் தனி இனமாக மாற்றுமென்றும் கூறத் தலைப்பட்டார். லின்னேயஸ் முதலில் விவிலியக் கருத்துகளைப் பற்றி நின்றதும் பின்னர் அவற்றை மாற்றிக் கொண்டதும் இதன் மூலம் தெளிவாகிறது. இவரது வகைப்பாட்டியலானது உயிரினங்களுக்கிடையே உள்ள உறவுகள் என்னென்ன, அவற்றின் வளர்ச்சி நிலைகள் என்னென்ன என்ற பிற்கால படிமலர்ச்சியியல் ஆய்வுகளுக்கு அடித்தளமாக விளங்கியது.

லின்னேயசின் வகைப்பாட்டியல் முறை 18ஆம் நூற்றாண்டில் மண்ணியல், தொல்லுயிரியல் (புதைபடிவங்களை ஆராயும் இயல்), தாவரவியல், விலங்கியல் ஆகிய துறைகளில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இக்காலக் கட்டத்தில் கூறப்பட்ட கருத்துகள் தார்வின் படிமலர்ச்சிக் கருத்துகளைப் பெரிதும் ஒத்திருந்தன. குறிப்பாக, கோம்ட் டி ப.்.பன் கூறிய கருத்துகள் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். அவை: 1. ஒரு சிறப்பினத்திற்குள் வேறுபாடுகள் தோன்றுகின்றன. 2. சூழ்நிலையோடு நன்கு தகவமைந்த உயிரினங்கள் மட்டுமே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்று வாழ்கின்றன. 3. ஓர் உயிரினத்திலிருந்தே மற்றோர் இனம் தோன்றுகிறது. ப.்.பன் தன் கருத்துகளை உறுதிப் படுத்துவதும் பின்னர் அவற்றைப் பின்வாங்குவதுமாக இருந்ததால் அவர்தம் கருத்துக்கள் செல்வாக்கு பெறவில்லை.

18ஆம் நூற்றாண்டில் படிமலர்ச்சி பற்றி ஆழ்ந்து சிந்தித்தவர்களுள் லெமார்க்மூ (1744 - 1829), சார்லஸ் தார்வினின் பாட்டன் எராஸ்மஸ் தார்வின் (1731 - 1802) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். உயிரற்ற பொருளிலிருந்து பல சிக்கலான வேதியியல் மாற்றங்களால் தோன்றிய உயிர் எந்த நிகழ்வினால் வேதியியர்க்கில் ஆயிரக்கணக்கான சிறப்பினங்களாக மாறின என்பது பற்றி லெமார்க் ஆராய்ந்தார். சூழ்நிலையின் தன்மைக்கேற்ப உயிரினங்களின் உறுப்புகளில் ஏற்பட்ட மாறுபாடுகளே புதிய புதிய சிறப்பினங்கள் தோன்றக் காரண மென்றார் லெமார்க். இதனை விளக்க பயனுண்மை பயனின்மை விதியையும் (law of use and disuse), முயன்று பெற்ற

பண்புகள் மரபு வழியில் வரும் (inheritance of acquired characters) கொள்கையையும் வகுத்தார்.

விலங்குகளும் தாவரங்களும் அவை வாழும் சூழ்நிலை மாற்றம் பெறும்போது புதிய சூழலிற்கேற்ப மாறிக் கொள்கின்றன என லெமார்க் உறுதியாக நம்பினார். அதனால் விளைந்ததே பயனுண்மை பயனின்மை விதியாகும். அவ்விதியை லெமார்க் பல எடுத்துக் காட்டுகள் மூலம் விளக்கினார். அவற்றுள் ஒன்று ஒட்டகச்சிவிங்கி பற்றியது. ஒட்டகச் சிவிங்கிகள் முதலில் நீண்ட கழுத்தையோ கால்களையோ பெற்றிருக்கவில்லை. ஏனெனில், அவை வாழ்ந்த சுற்றுச் சூழலில் மேய்வதற்குத் தேவையான அளவு புல்வெளிகள் இருந்தன. - பின்னர்ச் சூழ்நிலை காரணமாகப் புல்வெளிகளும் தரையில் படரும் செடி கொடிகளும் குறைந்துவிட்டன. அதனால் அவ்விலங்கினம் மரக்கிளைகள், உயரத்தில் தொங்கிய புற்பூண்டுகள் போன்றவற்றைக் கால்களைத் தூக்கியும் கழுத்தை நீட்டியும் மேயவேண்டியிருந்தது. ஆதலின் காலப்போக்கில் நீண்ட கால்களையும், கழுத்தையும் பெற்றன. இதனை எடுத்துக்காட்டாகக் கொண்டு பயன்படும் உறுப்புகள் மேன்மேலும் வளருமென்றும், பயன்படா உறுப்புகள் காலப்போக்கில் குறைந்துவிடுமென்றும், புதிய சூழலில் ஏற்படும் புதிய புதிய பண்புகள் சிறப்பினங்களின் தோற்றத்திற்குக் காரணமாகின்றன என்றும் லெமார்க் கூறினார்.)

லெமார்க்கின் இரண்டாம் கொள்கை “முயன்று பெற்ற பண்புகள் மரபுவழியில் வரும்“ என்பதாகும். இக்கொள்கையை விளக்க முன்னர்க் கூறிய எடுத்துக்காட்டையே பயன்படுத்தலாம். நீண்ட கால்களையும் கழுத்தையும் ஒட்டகச்சிவிங்கி அது உணவு தேடும் முயற்சியில் முயன்று பெற்றவை. இப்பண்புகள் அதன் அடுத்தடுத்த தலைமுறைகளிலும் தொடர்ந்துவரும். பயனற்ற பண்புகள் அடுத்தடுத்த தலைமுறைகளில் தேய்ந்து கொண்டே செல்லும் குரங்கிலிருந்து தோன்றிய வாலில்லாக் குரங்குகளிடம் (apes) வாலின் அளவு பெருமளவு குறைந்துவிட்டது. வாலில்லாக் குரங்கிலிருந்து தோன்றிய மனிதனிடம் வால் அறவே இல்லாமல் அவ்வுறுப்பு ஓர் எச்ச உறுப்பாகக் (vestigial organ) காணப்படுகிறது. ஏனெனில்,

குரங்குகள் பயன்படுத்திய அளவிற்கு அதற்கடுத்தடுத்த இனங்கள் வாலினைப் பயன்படுத்தாமையால் அவ்வுறுப்பு காலப்போக்கில் தேய்ந்துவிட்டது. முயன்று பெறும் பண்புகளும், பயன்பாடு மிக்க உறுப்புகளும் வரும் தலைமுறைகளில் நிலைபெறுகின்றன. லெமார்க்கின் கொள்கைகளை அறிஞர்கள் பலர் ஏற்க மறுத்தனர். ஆனால், அவர்தம் மாணவர்கள் அதனை மறுத்துப் புதிய விளக்கங்கள் கொடுத்தனர். அவர்களின் கொள்கை புதிய லெமார்க்கியம் (neo - Lamarckism) எனப்படும்.

18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மண்ணியலார் புதைபடிவங்களைத் தோண்டி எடுத்தனர். அப்புதைவடிவங்களை ஆராய்ந்த பின்னர் உயிரினங்கள் எவ்வாறு வளர்ச்சியுற்றன என்பதை விளக்க முடியுமென நம்பினர். அவர்களுள் ஜார்ஜ்கூவியர் (1769 - 1832) குறிப்பிடத்தக்கவராவார். இவர் உயிரினப் படிமலர்ச்சியை விளக்க திடீர் நிகழ்வுக் கோட்பாட்டை (catastrophism) வகுத்தார். அக்கொள்கையின்படி வெவ்வேறு காலகட்டத்தில் பூமியின் மேற்பரப்பானது பெருவெள்ளங்களாலும், நில அதிர்வுகளாலும், எரி மலைகளாலும், இன்னும் பிற திடீர் நிகழ்வுகளாலும் அடித்துச் செல்லப்பட்டது அல்லது மாற்றம் பெற்றது. அந்தத் “திடீர் நிகழ்வுகள்“ (catastrophes) அந்தந்தக் கால கட்டத்தில் பூமியின் மேற்பரப்பில் வாழ்ந்த உயிரினங்களை அழித்து விட்டன. அவையே இன்று புதை படிவங்களாகக் கிடைக்கின்றன.)

ஒவ்வொரு முறையும் திடீர் நிகழ்வுகள் நிகழ்ந்த பின்னர்த் தெய்விகப் படைப்பு மூலம் புதிய உயிரினங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அவ்வுயிரினங்கள் அடுத்து நிகழ்ந்த திடீர்நிகழ்வுகள் மூலம் அழிந்து அவை மண்ணியலின் அடுத்த அடுக்கில் புதை படிவங்களாகச் சேர்ந்துவிட்டன. இன்று உயிர்வாழும் உயிரினங்கள் அனைத்தும் இறுதியாகப் படைக்கப்பட்டவையாகும். விவிலியத்தில் கூறப்பட்டுள்ள பெருவெள்ளமே (biblical flood) மிக அண்மையில் நிகழ்ந்த மண்ணியல் மாற்றம் (திடீர் நிகழ்வு) ஆகும்.

கூவியரின் திடீர்நிகழ்வுக் கோட்பாட்டை ஆங்கிலேய மண்ணியல் அறிஞர் சர் சார்லஸ் லயல் (1797 - 1875) ஏற்க மறுத்தார். மண்ணடுக்குகள் திடீர் நிகழ்வுகளால்

ஏற்பட்டவையல்ல என்றும் உயிரினங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுப் பின்னர்ப் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டவையல்ல என்றும் வாதிட்டார். இவர்தம் கருத்துக்களை ஒருமுகத்தன்மைக் கொள்கை (uniformitarianism) மூலம் விளக்குகிறார். அக் கொள்கையை 1930 - இல் இவர் எழுதிய “மண்ணியலின் விதிகள்“ (Principles of Geology) என்னும் நூலில் விவரிக்கிறார்.

பூமியில் மண்ணடுக்கானது திடீர் திடீரென மாறாமல் மிகவும் மெதுவாக, ஒரே சீராக, காலந்தோறும் மாறி வந்துள்ளது. மண்ணியலின் விசைகள் (geological forces) இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளன. மண்ணரிமானம், எரிமலை நிகழ்ச்சிகள், நில அதிர்வுகள் போன்றவை இன்றும் நிகழ்கின்றன. மண்ணியல் மாற்றங்கள் மிகவும் மெதுவாக நிகழ்ந்துள்ளதால் பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் புதை படிவங்கள் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த உயிரினங்கள் என்றும், பூமியின் வயது பல்லாயிரக்கணக்கான மில்லியன் ஆண்டுகள் என்றும் லயல் உறுதியாகக் கூறினார். இவர் நிகழ்கால நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு ஒருமுகத்தன்மைக் கொள்கையை உறுதிப்படுத்துகிறார். 19ஆம் நூற்றாண்டில் மண்ணியல் மாற்றங்கள் நிகழும் இதே அளவில்தான் பல ஊழிக் காலங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. காலநிலை, வேதிப்பொருள்கள் சிதைதல், உள்ளார்ந்த மாற்றங்கள் போன்றவை அனைத்துக் காலத்திலும் ஒரே சீராக மாறிக்கொண்டு வந்துள்ளன. இம்மாற்றல் களுக்கேற்பவே உயிரினங்கள் மாறி வந்துள்ளன. இவை திடீர் திடீரென அழியவில்லை புதிது புதிதாய்த் தோன்றவில்லை. ஒரு சீரான மாற்றத்தின் வழி உயிரினப் படிமலர்ச்சி நிகழ்ந்துள்ளது என்றார்.”

லயலின் இக்கொள்கையை அறிஞர்கள் தொடக்கத்தில் சில ஐயப்பாடுகளுடன் ஏற்றுக் கொண்டனர். இருப்பினும், உயிரினங்களின் படிமலர்ச்சியை விளக்க முற்பட்ட அனைத்துக் கொள்கைகளும் சார்லஸ் தார்வின் தோன்றிய காலம் வரை தான் நிலைபெற முடிந்தது.

**தார்வினியம்**

தார்வின் ஓர் இயற்கைவியலார் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று உயிரினங்களை நுண்ணாய்வு செய்தவர். பல புத்தாய்வுகள் மேற்கொண்டதிலிருந்தே உயிரினங்களின் படிமலர்ச்சி குறித்து மிகத் தீவிரமாய் ஆய்வு செய்து வந்தார். இந்தக் கால கட்டத்தில்தான் பொருளியல் மேதை தாமஸ் மால்தஸ் எழுதிய மக்கள் தொகை பற்றிய கட்டுரை“ இவரைப் பெரிதும் ஊக்குவித்தது. 20 ஆண்டுகளுக்கு மேல் ஆய்வு செய்த பின் இறுதியாக, தார்வின் உயிரியல் படிமலர்ச்சியை விளக்க இயற்கைத் தேர்வு (natural selection) என்னும் கோட்பாட்டை வகுத்தார். அக்கோட்பாட்டினை 1859 இல் வெளியிட்ட சிறப்பினத்தின் தோற்றம் (On the Origin of Species) என்னும் நூலில் விளக்குகிறார்.

ஒவ்வொரு குறிப்பிட்ட உயிரினத்திற்குள்ளும், தனி உயிரிகளிடமும் “வேறுபாடுகள்“ (variations) உள்ளன. அவ்வேறுபாடுகளே உயிரினங்களுக்குள் மாற்றங்களை ஏற்படுத்தி, புதிய புதிய சிறப்பினங்களைத் தோற்றுவிக்கின்றன. வேறுபாடுகளைக் கொண்ட உயிரினங்கள் இயற்கைச் சூழலில் வாழ முற்படும்போது இயற்கையின் ஆற்றல் சில உயிரிகளை (organisms) மட்டும் ஆதரிக்கிறது சிலவற்றை ஆதரிப்பதில்லை. அதற்குக் காரணம் சுற்றுச் சூழலோடு தகவமைத்து வாழும் தன்மையைச் சில உயிரிகள் பெற்றுள்ளன் சில பெற்றிருக்கவில்லை. இயற்கையோடு தகவமைந்து வாழும் இயல்புடையன தொடர்ந்து வாழ்கின்றன. மற்றவை காலப் போக்கில் அழிந்து விடுகின்றன.

இயற்கைச் சூழலில் தகவமையும் நிகழ்வே ஒவ்வோர் உயிரினத்திடமிருந்தும் புதிய சிறப்பினம் தோன்ற வழிகோலுகிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட சூழலிலும் உயிரினங்கள் நிலைத்து வாழும் வீதத்தைக் காட்டிலும் மிகுதியாகவே இனப்பெருக்கம் செய்கின்றன. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட அனைத்தும் அக்குறிப்பிட்ட சூழலில் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அந்நிலையில் அவை வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளை ஈட்டி நீண்டகாலம் வாழ தீவிரமாக முயல்கின்றன. அதனால்

உயிரினங்களுக்கிடையே வாழ்க்கைப் போராட்டம் (struggle for existence) ஏற்படுகிறது. இப்போராட்டத்தில் தகுதியனப் பிழைக்கின்றன (survival of the fittest) போகின்றன. தகுதியனப் பிழைத்தல் என்பது இயற்கைத் தேர்வு நிகழ்வால் கிடைக்கப் பெறும் தேர்ச்சியைக் குறிக்கும்.

இயற்கைத் தேர்வு என்பது ஒரு நீண்டகால நிகழ்வாகும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வாழும் ஒவ்வோர் உயிரினமும் இயற்கையின் தேர்வுக்கு உட்படுகிறது. தான் சார்ந்திருக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தகவமையும் உயிரிகளை இயற்கையானது தேர்வு செய்து கொள்கிறது. மற்றதைக் கழித்துவிடுகிறது. இதனால் உயிர்கள் வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஒவ்வாத பண்புகளைக் கழித்துவிட்டு மிகவும் இணக்கமுற்ற பண்புகளை மேன்மேலும் வ்ளர்த்துக் கொள்கின்றன. சிறந்த முறையில் தகவமையும் உயிரிகள் தலைமுறைதோறும் மேலும் மேலும் இணக்கமுடைய பண்புகளைப் பெருக்கிக்கொள்வதால் காலப்போக்கில் இவ்வுயிரிகள் தனிச் சிறப்பினமாக மாறிவிடுகின்றன. இதனை விளக்க தார்வின் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக் காட்டினார்.

இயற்கைத் தேர்வின் நிகழ்விற்கு உயிரிகளிடமுள்ள ”வேறுபாடுகளே“ முதன்மையான காரணமாகின்றன. உயிரிகள் வேறுபாடுகளின்றிக் காணப்படுமேயானால் இயற்கைத் தேர்வு எவ்வித குழுவையும் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்த முடியாமல் போய்விடும்.

தார்வினின் இயற்கைத் தேர்வுக் கொள்கையை அறிந்த இந்நிலையில் இக்கொள்கையின் ஐந்து அடிப்படைக் கருத்துகளைப் பின்வருமாறு சுருக்கிக் காணலாம்.

1. ஒவ்வோர் உயிரினமும் உயிர்வாழும் வீதத்தைக் காட்டிலும் மிகுதியான அளவில் இனப்பெருக்கம் செய்கின்றது.

2. தனி உயிரிகளிடமும் தனிப்பட்ட இனத்திற்குள்ளும் வேறுபாடுகள் எல்லா நிலைகளிலும் காணப்படுகின்றன.

3. இயற்கைச் சூழலில் நிகழும் இயற்கைத் தேர்வின் வாயிலாக ஒவ்வோர் உயிரியும் நீண்ட காலம் வாழ வேண்டுமென்றும் சிறந்த முறையில் வாழ வேண்டும் என்றும் உறுதிப்படுத்த முயல்கிறது. இதனால் வாழ்க்கைப் போராட்டம் ஏற்படுகிறது. இது இரு வேறுபட்ட குழுக்களிடையேயும், ஒரே குழுக்குள்ளும் நடைபெறலாம்.

4. வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியன வாழ்கின்றன. தகுதியற்றவை அற்றுப் போகின்றன. இச்செயல்தான் புதிய சிறப்பினத்தை உருவாக்கக் காரணமாகின்றது.

5. ஒரு தலைமுறையைச் சேர்ந்த தகவமைந்த பண்புகள் (வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற உதவிய பண்புகள்) வருங்காலத் தலைமுறைகளிலும் இடம் பெறும். இருப்பினும், வருங்காலத் தலை முறைகளில் மேலும் மேலும் புதிய தகவமையும் பண்புகளை உயிரிகள் ஏற்படுத்திக் கொள்வதால் அவை அவற்றின் மூதாதையர்களிடமிருந்து சிறிது சிறிதாக விலகி இறுதியில் ஒரு புதிய சிறப்பினமாக மாற்றம் பெறும்.

சிறப்பினத்தின் தோற்றம் என்னும் நூலை வெளியிட்ட 12 ஆண்டுகளுக்குப் பின் (1871) தார்வின் மனிதனின் வம்சாவழி (The Descent of Man) என்னும் நூலை வெளியிட்டார். அந்நூலில் மனிதனின் மூதாதையர்கள் குரங்கினங்களே என்பதை உறுதிப்படுத்துகிறார். இக்கருத்தை உறுதிப்படுத்த இவ்விரு உயிரினங்களின் உடற்கூற்றியலை ஒப்பிட்டுக் காட்டுகிறார். மனிதப் படிமலர்ச்சியை விளக்கிக் கூறியதில் தார்வினைப் போன்று வேறு எவரும் அதற்கு முன்னர் விரிவாகக் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மனிதனும் குரங்கினங்களும் மிகவும் நெருக்கமுடையன என்பதை உறுதிப்படுத்தும்போதும், படி மலர்ச்சிக் காலத்தில், உயிரினங்கள் பெற்ற உடற்கூற்றியல் நிலைகளை விளக்கும்போதும் தார்வின் மூன்று குறிப்பிடத்தகுந்த கருத்துகளைக் கூறுகிறார். அவையாவன :

1. உயிரினங்களின் படிமலர்ச்சி எளிய நிலையில் தொடங்கி பின் ஒவ்வொரு நிலையிலும் பல சிக்கலான அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு வந்துள்ளது.

2. உடற்கூற்றியல் பண்புகளைப் பார்க்கும்போது மனிதன் சில உயிரினங்களோடு மட்டுமே தொடர்புடையவனாக உள்ளான். பிற

உயிரினங்களிடமிருந்து மிகவும் விலகி நிற்கிறான். இந்த இடைவெளி அந்தந்த உயிரினத்தின் தன்மைக்கேற்ப நீண்டோ குறுகியோ உள்ளது.

3. மனிதனின் மனவியல், உளவியல், ஒழுக்கவியல் பண்புகள் விலங்குகளிடமும் உள்ளன. ஆனால் அதன் அளவு மட்டுமே வேறுபடுகின்றது.

உயிரியல் படிமலர்ச்சி குறித்த தார்வினியம் (Darwinism) அவர் காலத்திற்கு மட்டுமன்றி எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பது காலத்தால் உறுதியாகியுள்ளது.

இன்றைய உடல்சார் மானிடவியலார் படிமலர்ச்சியைக் குவியும் படிமலர்ச்சி (convergent evolution), விரியும் படிமலர்ச்சி (divergent evolution), இணைப் படிமலர்ச்சி (parallel evolution), கிளைப் படிமலர்ச்சி (cladogenic evolution) ஒருவழிப் படிமலர்ச்சி (anagenic evolution), நுண்படிமலர்ச்சி, (micro - evolution), பெருநிலைப் படிமலர்ச்சி (macro - evolution) போன்ற பல்வேறு நிலைகளில் ஆராய்கின்றனர்.

**உயர்பாலூட்டியியல்**

ஓரணு உயிரியான அமீபாவிலிருந்து உயர்ந்த நிலையில் உள்ள மனிதன் வரை அனைத்து உயிரினங்களும் அவற்றின் படிமலர்ச்சி நிலைகளுக்கேற்ப முதுகுத்தண்டற்றவை (ளைெநசவநடிசயவநள), முதுகுத்தண்டுள்ளவை (vertebrates) என இரு பிரிவுகளாகப் பாகுபடுகின்றன. அவற்றுள் முதுகுத் தண்டுள்ள விலங்கினங்கள் அவற்றின் படிமலர்ச்சி நிலைகளுக்கேற்ப மீனினம் (pisces) இருவாழ்விகள் (amphibia) ஊர்வன (reptiles), பறப்பன (aves), பாலூட்டிகள் (mammals) எனப் பல தொகுதிகளாகப் (phylum) பாகுபடுகின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் விலங்கினங்கள் மெலும் பல வரிசைகளாகப் (order) பாகுபடுகின்றன. பாலூட்டிக் தொகுதியில் மனிதன் இடம் பெறும் வரிசை உயர்பாலூட்டி (primate) ஆகும். அதனாலேயே உயர்பாலூட்டிகளைப் பற்றிய ஆய்வு உடல்சார் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

உயர்பாலூட்டி வரிசையில் மனிதன், மனிதனின் நேர் மூதாதையர்களான வாலில்லாக் குரங்குகள் (apes), அவற்றின் மூதாதையர்களான குரங்கினங்கள், அக்குரங்குகளின் மூதாதையர்களான தொடக்கக்காலக் குரங்கினங்கள் போன்றவை அடங்கும். மனிதனைத் தவிர ஏனைய குரங்கினங்கள் அனைத்தும் மனிதரல்லாத உயர்பாலூட்டிகள்“ (non - human primates) என வழங்கப்பெறும். அவற்றுள் சில சிறப்பினங்கள் (species) காலத்தால் அற்றுப்போயின. சில இன்றும் வாழ்ந்து வருகின்றன.

மனிதனின் மூதாதையர்களைப் பற்றி அறிய நமக்குள்ள ஒரே வழி உயர்பாலூட்டிகளை ஆராய்வதேயாகும். உயர்பாலூட்டி களைப் பற்றிய ஆய்வுகள் மனிதனின் உயிரியலையும், பண்பாட்டையும் அறிய உதவுகின்றன. குறிப்பாக, படிமலர்ச்சியியல் ஆய்வுகளில் உயர்பாலூட்டிகளின் பங்கு இன்றியமையாதது. உயர்பாலூட்டிகளின் உடலியங்கியல் (physiology), உடற்கூற்றியல் (anatomy), புறத்தோற்றம். தகவமைப்பு, நடத்தைமுறைகள் முதலானவற்றை அறிந்து அதன்மூலம் மனிதனோடு தொடர்புடைய படிமலர்ச்சித் தொடர்ச்சியினைப் பெருமளவு அறுதியிடலாம். அதற்கு இன்று வாழும் உயர்பாலூட்டிகளும், அற்றுப் போன உயர்பாலூட்டிகளின் புதைபடிவங்களும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

மண்ணுள் புதைந்து கிடக்கும் அனைத்து எலும்புகளையும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தி அவற்றை நுண்ணிலையில் ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு புதைபடிவத்தின் உடலமைப்பை மீட்டுருவாக்க முடியும் அவ்வகையான மீட்டுருவாக்கத்திற்குப் பின் பல்வேறு உடலமைப்புகளை ஒப்புமைப் படுத்திப் பார்க்கும் போது அவற்றின் வளர்ச்சி நிலைகளை மதிப்பிட இயலும். புதை படிவங்களைப்பற்றிய ஆய்வில் மேலும் பல முதன்மையான செய்திகளைக் கண்டறிய இயலும் புதைபடிவகங்களின் ஒவ்வோர் உறுப்பிற்கான எலும்புகளை நுணுகி ஆராயும்போது அவற்றின் உணவுமுறை, அவற்றின் நகர்ச்சிமுறை (locomotion), சுற்றுச் சூழலுடன் கொண்டிருந்த தகவமைப்புப் போன்ற பல்வேறு கூறுகளைக்காணமுடியும். இவ்வகையான செய்திகளைப் பல நிலைகளில் தொகுத்த பின்னர் எவ்வகையான

புதைபடிவங்கள் ஒன்றோடு ஒன்று ஒத்துள்ளன, எவையெவை வேற்றுமைத் தன்மைகளைக் கொண்டுள்ளன, மனிதனோடு எவை மிகுந்த தொடர்பினைப் பெற்றுள்ளன என்பனவற்றை மதிப்பாய்வு செய்யவேண்டும். அதற்கு இன்று வாழும் உயர்பாலூட்டிகளின் உடலமைப்பினை ஒப்பிட்டு ஆராய வேண்டியதாகிறது.

இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் உயர்பாலூட்டிகளை இரு நிலைகளில் உடல்சார் மானிடவியலார் ஆய்வு செய்கின்றனர். விலங்குகள் அதன் இயற்கைச் சூழலில் வாழும்போது அவற்றை நீண்டகாலம் உற்றுநோக்கி ஆராய்வது ஒரு வகையாகும். சில ஆய்வுகளின் தன்மை வேறுபடுவதால் அவற்றை ஆய்வுக் கூடங்களுக்குக் கொண்டு வந்து ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் அடைத்து ஆராயும் முறை இரண்டாவது வகையாகும். முதல் வகை ஆய்வுகள் பொதுவாக விலங்குகளின் நடத்தை முறைகளை ஆராயும் ஆய்வுகளாகவும், இரண்டாம் வகை ஆய்வுகள் மனிதர்களுக்காகச் செய்யப்படும் புதிய புதிய மருந்துகளின் செயல் திறனையும் எதிர்விளைவுகளையும் கண்டறியும் ஆய்வுகளாகவும் உள்ளன. உயர்பாலூட்டிகள் மனித உடலமைபைப் பெரிதும் ஒத்துள்ள விலங்குகளாக உள்ளதால் இவ்வகை ஆய்வுகளில் அவை பெரிதும் பயன்படுகின்றன. விலங்குகளைச் சோதனைக் கூடங்களில் அடைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுள் சில நடத்தை முறைகளை ஆராயவும் செய்யப்படுகின்றன.

**தொல்லுயிரியல்**

மனிதப் படிமலர்ச்சி தொடர்பான அனைத்து ஆய்வுகளிலும் தொல்லுயிரியல் முதன்மையான இடம்பெறுகிறது. இப்பிரிவு தொல்மானிடவியல் (palaeoanthropology) அல்லது “மனிதத் தொல்லுயிரியல்“ என்றும் கூறப்பெறும். மனிதனோடு தொடர்புடைய புதைபடிவங்களை ஆராய்வதே இப்பிரிவின் தலையான நோக்கமாதலால் இதனைப் “புதைபடிவவியல்“ என்றும் கூறுவதுண்டு.

நம் மூதாதையர்கள் எந்த உருவத்தைக் கொண்டவர்களாக இருந்தனர், எவ்வளவு உயரம் இருந்தனர், அவர்கள் எவ்வாறு நடந்தனர், எதை உண்டனர், எந்தச் சூழலில் வாழ்ந்தனர் போன்ற பலவகையான வினாக்களுக்குப் புதைபடிவ ஆய்வுகள்

விடை கூறுகின்றன. மனிதப் படிமலர்ச்சியின் வேகமும் வீதமும் அனைத்துக் காலங்களிலும் ஒரே சீராக இல்லை இதனைப் பல்வேறு காலகட்டத்தைக் காட்டும் மண்ணடுக்கியல் (stratigraphy) பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட புதைபடிவங்கள் உறுதிப்படுத்து கின்றன. சில மண்ணடுக்குப் பிரிவுகளைச்சேர்ந்த புதைபடிவங்கள் குறைவாகவும் சிலவற்றில் மிகுதியாகவும் உள்ளன. இது பல்வேறு வகையான வினாக்களுக்கு விடைகூறுவதாக அமைகிறது. படிமலர்ச்சி ஆய்வுகளில் விலங்கினங்களின் உடலமைப்பு எவ்வாறு காலந்தோறும் மாறிவந்தது என்பதைப் புதைபடிவங்களின் மூலம் துல்லியமாகக் கூறவியலும் எடுத்துக்காட்டாக, மனிதனின் இன்றைய தலையமைப்பு உருவாவதற்கு நெடுநாட்களுக்கு முன்னரே கால்கள் அதன் இன்றைய வடிவத்தைப் பெற்றுவிட்டன என்பதைப் புதைபடிவச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

தொல்மானிடவியலார் புதைபடிவங்களை ஆய்வு செய்யும் போது அதன் எலும்பு வகைகளைக் கொண்டும் அகழாய்வு செய்த இடத்தில் கிடைத்த எச்சங்களைக் கொண்டும் தொல் மனிதனின் வாழ்க்கையைப் பல பரிமாணங்களில் காண முயலுகின்றனர். குறிப்பாக, புதைபடிவங்களைப் பகுத்தாயும் போது மனிதப் படிமலர்ச்சியை இயக்கிய காரணிகளை இனங்காணுவர். இதில் உயிரியல் காரணிகள் (மனிதன் புறச் சூழலோடு கொண்டிருந்த இடைவினை), பண்பாட்டுக் காரணிகள் (மனிதன் சமுதாயச் சூழலோடு கொண்டிருந்த இடைவினை) ஆகிய இரண்டையும் கவனத்தில் கொள்வர். ஏனெனில், மனித மூதாதையர்களின் உடலமைப்பிலும் மனிதர்களின் உடலமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதில் இவ்விருவகையான காரணிகளும் பெருமளவு செல்வாக்குப் பெற்றிருந்தன.

உயிரியல்சார் படிமலர்ச்சியினை விளக்கும் எந்த ஒரு முயற்சியிலும் அந்தந்தப் படிமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த தொழிற் கருவிகளின் வளர்ச்சி, அவை பயன்படுத்தப்பட்ட முறை, வேட்டை முறை நெருப்பினைப் பயன்படுத்திய முறை, உறைவிடத்தை ஏற்படுத்திக்கொண்ட முறை போன்ற பல கூறுகளை ஆழ்நிலையில் ஆராயும் போக்கு இடம்பெற வேண்டும். மேற்கூறிய கூறுகளும், மனிதனின் புறச்சூழலும்

மாறுபட்டபோதெல்லாம் மனிதனின் உயிரியல் மலர்ச்சியில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்டுக் கூறவேண்டுமாயின் மனிதப் படிமலர்ச்சியில் ஏற்பட்ட சில உயிரியல் மாற்றங்கள் அம்மக்களின் பண்பாட்டு வளர்ச்சியோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தன. மிகத் தொடக்கக் காலத்தில் மனித மூளையின் அளவும் மூளையில் ஏற்பட்ட மாற்றங்களும் அவன் பயன்படுத்திய தொழிற் கருவிகளோடு மிக நெருக்கமாகத் தொடர்புற்றிருந்தன. மனிதப் பண்பாடும் மனித உயிரியலும் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டுள்ளதால் புதைபடிவங்களை ஆராயும் ஆய்வாளர்கள் அகழ்வாய்வுகளின்போது எலும்புகளைத் தவிர பிற பண்பாட்டு எச்சங்களுக்கும் சிறப்பிடம் தந்து அவற்றையும் நுணுகி ஆராயவேண்டும்.

புதைபடிவங்களை ஆராயும் தொல்மானிடவியலாரின் பணி பல சிக்கல்களைக் கொண்டதாகும். ஒரு புதைபடிவம் அகழாய்வு செய்து கண்டெடுக்கப்பட்டவுடன் ஆய்வாளரின் முதல் பணி அதன் காலத்தை வரையறுப்பதாகும். பின்னர் மனிதப் படிமலர்ச்சியின் காலவரிசையில் (chronology) அப்புதைபடிவம் கொண்டுள்ள உறவைக் கண்டறிவதாகும். அதற்கடுத்து, மனித மூதாதையர்களின் மலர்ச்சி எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்கு மாறியது என்ற படிமலர்ச்சித் தொடர்ச்சியில், கண்டெடுக்கப்பட்ட புதைபடிவம் எவ்வகைச் சான்றுகளை அளிக்கிறது என்பதை முடிவு செய்தல். இது மிக மிகச் சிக்கலான ஆய்வுப் பணியாகும். கண்டெடுக்கப்பட்ட புதைபடிவமானது மனிதன், மனிதனின் மூதாதையர்கள் (மனிதரல்லாத உயர்பாலூட்டிகள்) அல்லது அவற்றின் மூதாதையர்கள் (குரங்குகள்) ஆகிய இவற்றுள் எதனுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது என்பது புதைபடிவ ஆய்வுகளில் மிகப்பெரும் சவாலாகும். ஏனெனில் அண்மைக் காலம்வரை சில புதைபடிவங்களின் கால வரிசையைத் தொடர்புபடுத்திக் கூறுவதில் மாறுபட்ட கருத்துகள் இருந்துவந்தன. அதற்குக் காரணம் புதைபடிவங்களின் எலும்புகளும் பிற எச்சங்களும் முழுமையான நிலையில் கிடைக்காததேயாகும். இக்காலத் தொல்லுயிரியல் வளர்ச்சி மூலம் புதைபடிவங்களின் காலத்தைக் கணக்கிடும் முறைகள் வலுவாகியுள்ளன. ஆதலின் உடல்சார் மானிடவியலில் தொல்லுயிரியல் ஓர் இன்றியமையாத பிரிவாகத் திகழ்கிறது.

**ஒப்பியல் உடற்கூற்றியல்**

உடல்சார் மானிடவியலின் இன்றியமையாத பெரும் பிரிவுகளுள் ஒப்பியல் உடற்கூற்றியலும் ஒன்று. படிமலர்ச்சி ஆய்வுகளிலும், புதைபடிவ ஆய்வுகளிலும், மனித இனங்களுக் கிடையே உள்ள வேறுபாடுகளை அறியும் ஆய்வுகளிலும் இப்பிரிவின் பங்கு இன்றியமையாததாக உள்ளது

மனிதப் படிமலர்ச்சியின் வரலாறு என்பது உயிரினங்களின் உடலமைப்புகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான மாற்றங்களின் வரலாறேயாகும். இன்று மனிதர்கள் அவர்களுக்கென்று கொண்டுள்ள உடற்பண்புகள் மனிதரல்லாத உயர்பாலூட்டிகளின் உடலமைப்பிலிருந்து பெற்ற மாறுபாடாகும். மனிதனின் தோற்றத்தைத் (origin) துல்லியமாகக் காண வேண்டுமானால் மனிதனுக்கும் மனிதரல்லாத உயர்பாலூட்டிகளுக்கும் இடையேயுள்ள பொதுப்பண்புகளை நீக்கி ஒவ்வொரு குழுவுக்குமான தனிப்பண்புகளை இனங்காண வேண்டும். அதற்கு இக்கால மனிதனின் உடற்கூற்றையும் பிற உயர்பாலூட்டிகளின் உடற் கூற்றையும் ஒப்பீடு செய்ய வேண்டியதாகிறது.

உடற்கூற்றியல் அறிஞர்கள் பொது உடற்கூற்றியலில் வல்லுநர்கள். உடல்சார் மானிடவியலார் மனிதன், உயர்பாலூட்டிகள் ஆகிய இரண்டின் படிமலர்ச்சி சார்ந்த உடற் கூற்றியலில் வல்லுநர்கள். இவ்விரு துறையினரும் ஒன்று சேர்ந்து புதைபடிவங்களின் எலும்புகளைக் கொண்டு விலங்கினத்தின் உருவத்தை மதிப்பிடுவர். வாழும் உயர்பாலூட்டிகளின் எலும்புகளின் அமைப்புகளைப் பற்றியும், அதன் மெல்லிய தசைகள், திசுக்கள் போன்றவற்றின் அமைப்புகளைப் பற்றியும் உடல்சார் மானிடவியலார் தெளிவான அறிவினைப் பெற்றுள்ளதால் அற்றுப் போன உயிரிகளை வாழும் உயிரிகளோடு ஒப்புமைப்படுத்தி வகைப்படுத்த இயலுகிறது.

உயர்பாலூட்டிகளின் வரிசையில் இடம்பெற்றுள்ள பல்வேறு குடும்பங்களைச் (family) சேர்ந்த விலங்குகள் படி மலர்ச்சிக் காலத்தினூடே எவ்வாறு மாற்றங்களைப் பெற்றுத் தோன்றின என்பதை அறிவதில் ஒப்பீட்டு உடற்கூற்றியல் பெரிதும் உதவுகிறது. இன்று வாழும் உயர்பாலூட்டிகளுக்கிடையில் நிலவும் படிமலர்ச்சித்

தொடர்புகளை அறிவதில் 1960களில் ஒரு புதிய முறை உருவாக்கப்பட்டது. அம்முறையைக் கொண்டு ஆய்வாளர்கள் பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்த உயர்பாலூட்டிகளின் இரத்தச் சிவப்பணுக்களின் (haemoglobin) அமைப்பையும், புரத ஊண்நீரின் (scrum protein) அமைப்பையும் நுணுகி ஆராய்ந்தனர். இரத்தச் சிவப்பணுக்கள், புரத ஊண்நீர், அவற்றின் மூலக்கூறுகள் (molecules) ஆகிய அனைத்தும் படிமலர்ச்சிக் காலத்தினூடே ஒரு நிலையான வீதத்தில் மாறிக் கொண்டே வந்துள்ளதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். அதைக் கொண்டு உயர் பாலூட்டி வரிசையைச் சேர்ந்த விலங்கினங்கள் எந்தக் காலம் வரை பொதுவான மரபினைப் பெற்றிருந்தன என்றும், எப்போது அவற்றின் அமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டன என்றும், மனிதப் படிமலர்ச்சியோடு ஒப்பிடும் போது எது எதற்கடுத்து தோன்றியது என்றும் மதிப்பிட முடிகிறது.

ஆலன் வில்சன், வின்செண்ட் சாரிச் ஆகிய ஆய்வாளர்கள் மேற்கூறிய முறையைக் கொண்டு 1960களில் புதைபடிவங்களின் தொகுதிவழி வரலாற்றைக் (phylogeny) கணித்துள்ளனர். இவர்கள் செய்த ஓர் ஆய்வு மனித இரத்தத்திலுள்ள மூலக் கூறுகள் வாலில்லாக் குரங்குகளின் இரத்தத்திலுள்ள மூலக்கூறு களோடு ஒத்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறது. மற்ற உயர்பாலூட்டிகளின் இரத்த மூலுக்கூறுகள் குறைந்த அளவில் மட்டுமே ஒத்துள்ளன. இதன்மூலம் வாலில்லாக் குரங்குகள் மனிதனின் நேர் மூதாதையர் என்பது உறுதியாகிறது.

**எலும்பியலும் பல்லியலும்**

எலும்புகளையும் பற்களையும் பற்றிய அறிவியலே எலும்பியலும் பல்லியலும் ஆகும். உடல்சார் மானிடவியலில் இப்பிரிவுகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. ஏனெனில் எலும்புகள், பற்கள் ஆகிய இவ்விரண்டு உடற்கூறுகளே பல மில்லியன் ஆண்டுகளாகச் சிதைவுறாமல் மண்ணில் புதைந்து கிடக்கின்றன. இவை கடந்தகால படிமலர்ச்சியை மீட்டுருவாக்க பெரிதும் உதவுகின்றன.

முன் வரலாற்றுக் காலத்திய (prehistoric period) மக்கள். தொகையின் அமைப்பினை ஆராய்வதில் மானிடவியலார் பற்களையும் எலும்புகளையுமே மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். இவ்விரு கூறுகளும் மக்கள் தொகையின் இரண்டு அடிப்படைப் பண்புகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது இவை மக்களின் பால்தன்மை, வயதுத்தன்மை ஆகிய இரண்டையும் வெளிப்படுத்தக் கூடியன. கிடைக்கும் எலும்புகளையும் பற்களையும் கொண்டு அவை ஆண்பாலுக்குரியதா, பெண்பாலுக்குரியதா, இளங்குழந்தைக் குரியதா, வளரும் வயதினருக்குரியதா, முதிர்ந்த வயதினருக்குரியதா என்பனவற்றை மதிப்பிடமுடியும். இப்பண்புகளை அறிவதன் மூலம் ஓர் இடத்திற்குரிய மக்கள் தொகையின் பால் வீதம், வயதுவீதம், பிறப்பு இறப்பு வீதங்கள், சராசரி வாழும் வயது முதலானவற்றை மதிப்பிடலாம்.

இக்கால உடல்சார் மானிடவியலார் மேலும் ஒருபடி மேலே சென்று புதைபடிவச் சான்றுகள் மூலம் அக்கால மனிதச் சூழலியலையும் (human ecology) விலங்கினங்களின் உடற்பண்பு களையும் விளக்குகின்றனர். அகழாய்வில் கிடைக்கும் எலும்புகளையும் பற்களையும் கொண்டு அப்பகுதியில் வாழ்ந்த உயிரினங்களின் சூழலை மதிப்பிட பல ஆய்வு முறைகளை இவர்கள் கொண்டுள்ளனர். உயிரினங்களின் உணவமைப்போடு பற்கள் மிகவும் தொடர்புடையன. தாவர உண்ணிகளின். பற்களமைப்பும் விலங்குண்ணிகளின் பற்களமைப்பும் வெவ்வேறானவை. விலங்குண்ணிகளுள் மிகச் சிறு விலங்குகளை உண்ணும் பழக்கமுடையவற்றிற்கும் பெரும் விலங்குகளைக் கொன்று உண்ணும் பழக்கமுடையவற்றிற்கும் பற்களில் வேறுபாடுகள் உள்ளன. ஆகவே, வெட்டுப் பற்கள், கோரைப் பற்கள், முன், பின் கடைவாய்ப் பற்கள் ஆகியவற்றின் தன்மைகளைக் கொண்டு அதனதன் உணவு முறையை மதிப்பிட முடியும். ஒரு பகுதியைச் சேர்ந்த உயிரினங்களின் உணவு முறை அப்பகுதியின் சுற்றுச் சூழலோடு நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ளதால் கிடைக்கும் தரவுகளைக்கொண்டு அந்தந்தப் பகுதியின் சூழலியலையும் மதிப்பாய்வு செய்ய முடியும்.

19 - ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உடல்சார் மானிடவியலார் உலகின் பல பகுதிகளில் அகழாய்வு செய்தனர். அப்பகுதிகளில் கண்டெடுக்கப் பட்ட மண்டையோடுகளையும் பிற உடற்பகுதிகளையும் கொண்டு அங்கு வாழ்ந்த தொல் மனிதர்களைப் பல்வேறு இனங்களாக வகைப்படுத்தினர். இவ்வகைத் தரவுகள் இனவகைப்பாட்டிற்குப் பயன்படுவது மட்டுமல்லாமல் இவ்வினங்களின் படிமலர்ச்சியினை அறியவும் வழிகோலுகின்றன. அதோடு மக்களிடம் காணப்படும் நோய்களையும், அவர்களின் மரபுப் பண்புகளையும் (genetic characters), அவற்றோடு தொடர்புடைய பிறசெய்திகளையும் உய்த்துணர் எலும்புகளும் பற்களும் பல சான்றுகளைக் கொண்டுள்ளன.

**விலங்கின நடத்தையியல்**

இப்பிரிவு உடல்சார் மானிடவியலுக்கு மட்டும் உரியதன்று. விலங்கினங்களின் நடத்தை முறைகளை அறிவதில் பல்வேறு துறையினர் ஆர்வங் கொண்டுள்ளனர். ஆயினும், உயர் பாலூட்டிகளின் நடத்தை முறைகளை அறிவதில் உடல்சார் மானிடவியலாரும் பண்பாட்டு மானிடவியலாரும் பெரிதும் அக்கறை காட்டுகின்றனர் உயர்பாலூட்டிகளை அதன் இயற்கைச் சூழலிலும், விலங்கினப் பூங்காக்களிலும் (zoological parks), ஆய்வுக்கூடங்களிலும் அல்லது பிற செயற்கைச் சூழலிலும் ஆய்வு செய்யும் முறை 1950, 60களில் அதன் உச்ச நிலைக்குச் சென்றது. பெரும்பாலான ஆய்வுகள் அவை இயல்பாய்ச் சுற்றித் திரியும் காட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகை ஆய்வுகள் மூலம் உயர்பாலூட்டிகளின் சமுதாய வாழ்க்கை, உணவு ஈட்டும் முறைகள், பால்சார்ந்த வாழ்க்கை, கருத்துப் புலப்படுத்தும் முறை (communication system) வாழும் காட்டுப் பகுதிகளில் அவை கொண்டுள்ள ஆளுகை முறை, பல்வேறு செயல்களின்போது அவை வெளிப்படுத்தும் நடத்தை முறைகள் போன்ற பலவற்றைப் பற்றி அறிய முடிந்தது உயர்பாலூட்டிகளின் புதை படிவங்களைக் கொண்டோ அவற்றைச் செயற்கைச் சூழலில் வைத்து ஆய்வு செய்யும்போதோ கிடைக்காத விவரங்களை மேற்படி ஆய்வுகள் தந்தன.

புத்துலகப் பரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட இவ்வகை ஆய்வுகள் தொல்மனிதன் (proto - humans) எவ்வாறான நடத்தை முறைகளைக் கொண்டிருந்தான்? அவற்றிற்கான காரணங்கள் என்னென்ன? என்பனவற்றை விளக்கின. இவ்வகை ஆய்வுகளுள் சிம்பன்சிக்களைப் (chimpanzees) பற்றி இலாவிக் குட்டால் செய்த ஆய்வும், கொரில்லாக்களைப் (gorillas) பற்றி ஜார்ஜ் ஷாலர் செய்த ஆய்வும், பபூன்களைப் (baboons) பற்றி இர்வன் திவோர் செய்த ஆய்வும் குறிப்பிடத்தகுந்தவற்றுள் சில.

பண்பாட்டு மானிடவியலார் விலங்கின நடத்தை முறைகளை அறிவதில் உடல்சார் மானிடவியலாரிடமிருந்து வேறுபடுகின்றனர். ஒரு குறிப்பிட்ட சமுதாய முறை (social organization) உண்டாவதற்குச் சுற்றுச்சூழல் (environment) எவ்வகையில் பங்குபெறுகிறது என்பதும், சமுதாய நடத்தையை உண்டாக்குவதில் சூழலியல் காரணிகள் (ecological factors) எவ்வாறு பங்குபெறுகின்றன என்பதும் பண்பாட்டு மானிடவியலாரின் முதன்மையான நோக்கங்களாகும். இவைதவிர ஒரு குறிப்பிட்ட குழுவிற்குள் இடம் பெறும் குழு நடவடிக்கைகள், ஆதிக்க விலங்குகள், ஒடுங்கி வாழும் விலங்குகள், அவற்றின் நடத்தை முறைகள் முதலானவற்றை ஆராய்வதும் இந்நோக்கங்களுள் அடங்கும்.

உடல்சார் மானிடவியலார் விலங்குகளின் நடத்தை முறைகளை மட்டும் ஆராய்வதோடு நிற்காமல் மனிதர்களின் நடத்தைமுறைகளையும் ஆராய்கின்றனர். இவர்கள் ஈடுபடும் இப்பிரிவு சமுதாய உயிரியல் (sociobiology) எனப்படும். சமுதாய உயிரியலானது பல துறை அறிவைத் தேடும் வகையில் அமைந்துள்ளது. உயிரியல் அறிவும் சமுதாயப் பண்பாட்டு அறிவும் இதில் தலையானவை. மனிதர்கள் அனைவரும் உயிரியல் அடிப்படையில் ஒத்தவர்கள். உடற்கூறுகள், உடல் தொழில் முதலான அனைத்தும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவை. அவ்வாறிருக்க மக்கள் குழுவினர் தனித்தனி வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் கொண்டுள்ளனர். அதற்குக் காரணம் அவரவர் வாழும் புவிச் சூழலேயாகும். அதன்வழி அமைவதே அவரவர் பண்பாடாகும்.

மேற்கூறிய கருத்துகளை உற்றுநோக்கும்போது உயிரியலும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுகிறது என்பதை உறுதிப்படுத்த முடியும். இதில் உயிரியல் கூறுகள் மேலோங்கிக் காணப்படாமல் உள்ளார்ந்த நிலையில் இருந்தாலுங்கூட அவற்றின் செயல்கள் மனித நடத்தை முறையை அமைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அதே நேரத்தில் நடத்தை முறையை அமைப்பதில் பண்பாடு வெளிப்படையாக செயல்படுவதைப்போல் காணப்படினும் அதன் பங்கு உயிரியல் கூறுகளின் பங்கினை விடக் குறைவேயாகும்.

சமுதாய உயிரியலைச் சிலர் உயிர்சார் இலக்கணம் (biogrammar) என்றும் கூறுவர். எவ்வாறு இலக்கண விதிகளைக் கொண்டு மொழியின் அமைப்பைப் பொருள் காண்கின்றோமோ அவ்வாறே சமுதாய உயிரியலார் படிமலர்ச்சி நிகழ்வோடும் பண்பாட்டு அமைப்போடும் இணைந்த உயிர்சார் இலக்கணத்தைக் கொண்ட மனிதர்கள் எந்தெந்த முறையான நடத்தை முறைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர் என ஆராய்கின்றனர். இதில் அடிப்படைக் கருத்து என்னவெனில், இலக்கணம் எவ்வாறு ஒரு மொழியின் எல்லையை வரையறுக்கிறதோ அவ்வாறே உயிர்சார் இலக்கணமும் மனித நடத்தை முறைகளுக்கு ஓர் எல்லையை வரையறை செய்கிறது என்பதாகும். இன்றைய சமுதாய உயிரியலார் மனிதனையும் விலங்குகளையும் இணைத்து மேற்கூறிய பரப்புகளில் ஆராய்ந்து வருகின்றனர்.

**இனவியல்**

இக்கால மனிதனின் அனைத்து இனங்களும் நியாண்டர்தால் (Neandertal) மூதாதையாயிலிருந்து ஒரே சிறப்பினமாகத் (species) தோன்றியவையாகும். பல்வேறு காரணிகளின் தாக்கத்தினால் இச்சிறப்பினத்திற்குள் பல வேறுபாடுகள் ஏற்பட்டு இன்று பல இனங்களாகப் பிரிவுபட்டுள்ளன. இதன் அனைத்துத் தன்மைகளையும் ஆராய்வதே இனவியலாகும்.

இனத்தைச் சேர்ந்தவர்கள் பிற இனத்தவர்களிடமிருந்து எண்ணற்ற பண்புகளில் வேறுபடுகின்றனர். இப்பண்புகளுள் சில எளிய மரபுக் கூறுகளால் (simple genetic

traits) நிருணயிக்கப் படுகின்றன.ஏனைய கூறுகள் சிக்கல் வாய்ந்த மரபுக் கூறுகளால் (complex genetic traits) நிருணயிக்கப்படுகின்றன.

உடல் நீரிலுள்ள சில புரதங்களின் (proteins) அமைப்பைப் பார்க்கும்போது அவை எளிய மரபுக் கூறுகளால் ஏற்படுத்தப் படுகின்றன. இப்புரதங்கள் அமினோ அமிலங்களின் (amino acids) கூட்டிணைப்போல் உருவாகின்றன. அமினோ அமிலங்களோ சில குறிப்பிட்ட மரபணுக்களால் உண்டாகின்றன. ஆகையால் இம்மரபணுக்கள் இணையும் பாங்கின் அடிப்படையிலே புரதங்களின் அமைப்பும் அமினோ அமிலங்களின் அமைப்பும் ஏற்படுகின்றன. இரத்தம் எளிய மரபணுக் கூறுகளால் ஆக்கப்பெற்றது, இதனுள் பல கூறுகள் இடம்பெற்றுள்ளன. சில இடம்பெறவில்லை. இதனடிப்படையிலேயே இரத்தம் பல வகைகளாக (A, B, AB, O) வகைப்படுத்தப்படுகின்றன. இந்த எளிய மரபணுக் கூறுகளின் அடுக்குநிகழ்வை (frequency) அல்லது அது நிகழும், எண்ணிக்கையை கண்டுபிடிக்கமுடியும்.” இதனடிப் படையிலேயே உயிரியலாரும் உடல்சார் மானிடவியலாரும் மனித இனங்களில் நிகழும் உடனடி மாற்றம் (mutation), மரபணுப் பெயர்ச்சி (genetic draift), மரபணு ஓட்டம் (gene flow) தேர்வு (natural selection) முதலானவற்றை ஆராய்கின்றனர்.

மனிதனின் பெரும்பாலான உடல் பண்புகள் சிக்கலான மரபணுக் கூறுகளால் உண்டாகின்றன. எடுத்துக்காட்டாக, உடல் உயரம், தோல் நிறம் போன்றவை இவ்வகைக் கூறுகளால் திருணயிக்கப்படுகின்றன. சிக்கல்வாய்ந்த மரபுக்கூறுகள் அதன் பண்புகளை வெளிப்படுத்தும்போது அவற்றைச் சுற்றுச் சூழல் (environment), காலநிலை (climate) போன்ற புறச்சூழற் கூறுகள் பெரும்பாலும் கட்டுப்படுத்துகின்றன. அவ்வாறே குறை உணவு உடல் வளர்ச்சியைக் குறைக்கும். சிறந்த ஊட்ட உணவு மரபணுக் கூறுகளின் வெளிப்பாட்டை மிகுதியான அளவு ஊக்குவிக்கும். மேற்கூறிய இவ்வனைத்துக் கூறுகளின் அடிப்படையிலேயே மக்களிடம் வேறுபாடுகள் நிலவுகின்றன.

மனித குலத்தைப் பல இனங்களாகப் பிரிப்பதற்கு மானிடவியலார் பல அலகுகளைக் கையாளுகின்றனர். பெரும்பாலானவை உடல் தோற்றப் பண்புகளை

அடிப்படையாகக் கொண்டவை. சில உடற்கூற்றியற் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை. இப்பண்புகளுள் குறிப்பிடத்தக்கவை தோலின் நிறம், மூக்கமைப்பு, முக வடிவம், தலைமயிர், தலையமைப்பு, கண், உடலுயர்வளவு (stature), தோற்கூற்றியல், இரத்த வகைகள், த.ஃப்பி காரணி (duffy factor), சுவை உணர்வோரும் சுவை உணராதவர்களும் (tasters and non - tasters), காது குரும்பி (ear wax) முதலானவை ஆகும்.

மேற்கூறிய இப்பண்புகளைக் கொண்டு மனித இனத்தை வகைப்படுத்தும்போது அறிஞர்கள் ஏதோ சில பண்புகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வகைப்படுத்தியதால் பல வகைப்பாடுகள் வழக்கிற்கு வந்தன. பொதுவாக இனங்களைக் காக்கேசியர் (Caucasoids), மங்கோலியர் (Mongoloids), நீக்ரோவினர் (Negroids) என மூவகையாகப் பிரிப்பர். வில்லியம் பாய்டு 5 இனங்களாகவும், கூன் 9 இனங்களாகவும், பிரிட்செல் 32 இனங்களாகவும் பிரிப்பார். இதற்கடுத்து, மானிடவியலார் சிலர் இனங்களைப் புவியமைப்பிற் கேற்ப வகைப்படுத்தினர்: ஸ்டான்லி எம். கார்ன் என்னும் அறிஞர் மனித இனத்தைப் புவியியல்சார் இனங்களாகப் (geographical races) பகுத்தார். பிற்கால மானிடவியலார் மக்களின் மரபுப் பண்புகளின் அடிப்படையிலும், இனப்பெருக்க முறைகளின் அடிப்படையிலும் இனங்களைப் பேரினம் (macro-race), நுண்ணினம் (micro-race), இனப்பெருக்க மக்கள்தொகை (breeding population), வட்டார இனம் (local race) போன்ற பல பிரிவுகளாக வகைப்படுத்த முயன்றுள்ளனர்.

இன்று பெரும்பாலான மானிடவியலார் “இனம்“ (race) என்னும் கோட்பாட்டை முதன்மையாகக் கொண்டு ஆராய்வதில்லை. மனிதப் படிமலர்ச்சியின் கொள்கைகளைச் சோதித்துப் பார்ப்பதில் இன்றைய ஆய்வாளர்கள் “இனம்“ என்ற பெரும் பரப்புடைய கோட்பாட்டை எடுத்துக்கொள்ளாமல் தனித்தனி இன மாதிரிகளை (case studies) மட்டுமே எடுத்துக் கொள்கின்றனர். ஏனெனில், மக்கள் அவர்கள் வாழும் சுற்றுச் சூழலிற்கேற்ப தகவமையும் பண்புகளைப் பெற்றுள்ளனர் என்பதால் அவர்களைத் தனித்தனியே, அந்தந்தச் குழலின் பின்னணியில் மட்டுமே ஆராய வேண்டுமென

விரும்புகின்றனர். எடுத்துக்காட்டாக, உயரம் மிகுந்த மலைப்பகுதி மக்கன் அடர்த்தி குறைந்த காற்றை மிகுதியாக இழுக்க வேண்டியுள்ளதால் விரிந்த மார்பினையும், கொள்ளளவு மிகுந்த நுரையீரல்களையும் கொண்டுள்ளனர் குறைவான வேகத்தில் வளரும் எலும்புகளைப் பெற்றுள்ளனர். இவை சமநிலமக்களுக்கு நேர்மாறானவை. அண்மைக்கால ஆய்வு முறைகளின்படி மனித மரபணுப் பண்புகள் மிக நீண்டகாலத் தகவமைப்புக்கு உட்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

மனித வேறுபாடுகளுக்கான காரவு வளரவில்லை தொடக்கு காலத்தில் அறிவியல் முறையிலான அறிவு வளரவில்லை என்பதாக் இன வேறுபாட்டுணர்வு (raciem) தலை விரித்தாடியது. வெள்ளை இனத்தவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் பிற இனத்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் வாதாடியதுடன் அவர்கள் கருத்திற்கு அறிவியல் அடிப்படையில் உண்மை காண அலைந்தனர். இக் காலகட்டத்தில்தான் உடல்சார் மானிடவியலாரும் பிற துறை அறிஞர்களும் அக்கருத்தை மறுத்தனர். இனவெறிக்குட்பட்ட அவர்களின் கொள்கையைப் பொய்யாக்கிய பெருமை மானிடவியலாரைச் சேரும். மண்டையோடுகளின் அளவுகள், பண்பாடுகள் வேறுபட்டிருக்கக் காரணம், மக்களின் தகவமைப்புப் பண்புகள் போன்ற பல உண்மைகளை விளக்கி வெள்ளையர்கள் மட்டும் மிகுந்த நுண்ணறிவு ஈவு (IQ) பெற்றுள்ளனர் என்ற மாயக் கருத்தைப் பொய்யாக்கினர்.

**மானிட உடலளவையியல்**

மக்களின் மக்களின் பல்வேறு வகையான உடல் தோற்றம் பற்றியும். அதன் தன்மைகள் பற்றியும் ஆராய வேண்டியதன் அவசியத்தை மிகத்தொடக்கக் காலத்திலேயே மானிடவியலார் உணர்ந்தனர். அதனால் முகிழ்த்ததே மானிட உடலளவையியல் (anthropometry) மனித வேறுபாடுகளையறிய உடலளவுகள் மிகவும் இன்றியமையாதன. உடல்சார் மானிடவியலார் உடலளவையை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஆராய்கின்றனர். அவை புறத்தோற்ற உடலளவையியல் (somatometry), மண்டையோட்டளவையியல் (craniometry), எலும்பளவையியல்

(osteometry). பிரிவு உயிர்வாழும் மக்களின் புற உறுப்புகளின் அளவுகளை எடுக்கிறது. மனிதனின் உடலுறுப்புகளுள் மண்டையோட்டைப் போல் வேறு எந்தப்பகுதியும் மிகுதியான பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே அப்பகுதியை இரண்டாம் பிரிவான மண்டை யோட்டளவையியல் பிரிவு ஆராய்கிறது. இவ்வகை ஆய்வில் இறந்த மனிதனின் மண்டையோடுகளே அளக்கப் படுகின்றன. மூன்றாவது பிரிவான எலும்பளவையியல் இறந்த மனிதனின் எலும்புகளை அளந்து மனித வேறுபாடுகளின் தன்மைகளை விளக்குகிறது.

மனிதர்களை வகைப்படுத்துவதில் இரத்தக் குழுக்கள் மிகுந்த பயனுள்ளவையாக உள்ளதால் ரத்தவியல் (serology) பற்றிய அறிவு இன்றியமையாததாக உள்ளது. இப்பிரிவு பெரும்பாலும் மானிட உடலளவையியலில் ஓர் உட்பிரிவாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**தோற்கூற்றியல்**

மனிதனின் உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும், விரல்களிலும் உள்ள இரேகைகள், வரியமைப்புகள் (ridge patterns) முதலானவற்றையும் தலைச் சுழிகளையும் பற்றி அறியும் பிரிவே தோற்கூற்றியலாகும்) இது உடல்சார் மானிடவியலின் முதன்மையான உட்பிரிவுகளுள் ஒன்று. முதலில் இப்பிரிவு தோற்கூற்றியல் கூறுகளைக் கொண்டு மனித இனங்களை அடையாளங்காணும் பிரிவாகத் தோன்றியது. இன்று இப்பிரிவின் அறிவு பல நிலைகளில் வளர்ச்சி பெற்று உடற்கூற்றியல், கருவியல், மருத்துவவியல் போன்ற பல துறைகளில் பயனுடையதாக உள்ளது.

மனிதர்களின் உடற்பண்புகள் கூட்டு மரபணுக்களால் (polygenes) நிருணயிக்கப்படுகின்றன. அவ்வாறே ஒவ்வொரு மக்களினத்திலும் அவ்வினத்திற்கென்றே தனிப்பட்ட பண்புகளைக் கொண்டு செல்லும் கூட்டு மரபணுக்கள் உள்ளன. அவை புறச்சூழலால் பாதிக்கப்படாதவை மரபு வழியில் வருபவை. எடுத்துக்காட்டாக, காக்கேசியர், மங்கோலியர், நீக்ரோவினர் போன்றோர் ஒருவருக்கொருவர் முற்றிலும்

மாறுபட்ட பண்புகளைக் கொண்டுள்ளனர் அல்லது ஒவ்வொரு வட்டார இனத்தினரும் வேறுபட்ட பண்புகளைக் கொண்டுள்ளனர்.

தோற்கூற்றியல் கூறுகளும் கூட்டு மரபணுக்களால் நெறிப்படுத்தப்படுகின்றன (polygenically controlled). எனவே இக்கூட்டு மரபணுக்கள் ஒன்றோடு ஒன்று சேரும் முறையிலும், அவற்றின் பண்புகள் வெளிப்படும் முறையிலும் ஏற்படும் மாற்றமே தோற்கூற்றியல் பண்புகள் ஒவ்வோர் இனத்தவரிடமும் வேறுபட்டிருப்பதற்குக் காரணமாகும்.

மனித உடலில் உள்ளங்கை, உள்ளங்கால், விரல்கள் ஆகிய பகுதிகளைத் தவிர வேறு எந்தப் பகுதியிலும் இரேகைகளும் வரியமைப்புகளும் இல்லை. இப் பண்புகள் இனத்திற்கு இனம் எவ்வாறு மாறுபட்டுள்ளன என்பதைத் தோற்கூற்றியலார் ஆராய்கின்றனர். இதை ஆராயும் பொருட்டுத் தோற்கூற்றியலை விரல் தோற்கூற்றியல் (finger dermatoglyphics) உள்ளங்கைத் தோற்கூற்றியல் (palmar dermatoglyphics), உள்ளங்கால் தோற்கூற்றியல் (plantar dermatoglyphics) என மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொள்கின்றனர்.

**மனிதச் சூழலியல்**

மக்கள் இன்று ஏறக்குறைய உலகின் அனைத்துச் குழ்நிலைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இது எவ்வகையான குழ்நிலையையும் ஏற்று வாழ இயலும் என்ற மனிதனின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது அல்லது சூழ்நிலையியோடு முன்மையாகத் தகவமைந்து ஒகிறது கடுநன்மையை மக்கம் முழுமையனர்“ என்பதைக் காட்டு கடுங்குளிர் மிகுந்த தென் துருவம், வடதுருவம், நீரில்லாத - வெப்பம் மிகுந்த பாலைவனப் அருவ, உயரம் மிகுந்த மலைப்பகுதி போன்ற எண்ணற்ற குழ்நிலைகளில் வாழும் மக்கள் உடற் செயலிலும், மரபணுப் பண்பிலும், உருவத் தோற்றத்திலும் எண்ணற்ற மாற்றங்கள் பெற்று வாழ்கின்றனர். எவ்வகையான

கடல் மட்டத்தில் வாழ்வோர் அவர்கள் சுவாசிக்கும் காற்றில் 21 விழுக்காடு உயிர்வாயு (oxygen) உள்ளது. உயரம் மிகுந்த மலைப் பகுதிகளில் உயிர் வாயுவின்

விழுக்காடு அதே நிலையில் இருந்தாலும் காற்றழுத்தம் குறைவானதால் ஒவ்வொரு முறை மூச்சு இழுக்கம்போதும் குறைவான அளவில் உயிர்வாயு உட்செல்கிறது. அதனால் அப்பகுதிகளில் வாழ்வோரிடம் வேகமாக மூச்சிழுக்கும் முறை ஒரு சாதாரண உடலியல் கூறாகக் காணப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு வகையான சுற்றுச்சூழலுடன் மக்கள் கொண்டுள்ள தகவமைப்பு முறைகள், சுற்றுச் சூழலுடன் மக்கள் கொண்டுள்ள கூட்டுவாழ்க்கை (symbiosis), உடற்கூற்றியல், உடலியக்கம்,உயிர் வேதிநிலை, நோய் முறைகள் முதலானவற்றை மனிதச்சூழலியல் பிரிவு ஆராய்கிறது வேறு சில அறிவியல் பிரிவுகளும் மனிதச் சூழலியல் ஆய்வுப் பரப்பினைக் கொண்டுள்ளன. இருப்பினும் உடல்சார் மானிடவியல் மேற்கூறிய கூறுகளை மனிதனை முன்னிலைப் படுத்தியும் பண்பாட்டுப் பின்னணியைக் கருத்தில் கொண்டும் ஆராய்கிறது. மனிதச் சூழலியலை ஆராயும் இப்பிரிவு பெரும்பான்மையில் மக்களின் தகவமைப்பு முறைகளை ஆராயும் மானிடவியல் என்றும் கூறப்பெறும்.

**குடித்தொகையியலும் குடித்தொகை மரபியலும்**

மனித இனக்குழுக்களிடம் காணப்படும் உயிர்சார் வேறுபாடுகளையும், ஒற்றுமைகளையும், மரபுப்பண்புகளின் அமைப்புகளையும், பிறப்பு இறப்பு வீதங்களின் முறைகளையும் மனித மரபியல் (human genetics) அணுகுமுறையில் உடல்சார் மானிடவியலார் ஆராய்கின்றனர். அதோடு, மக்களின் இனப்பெருக்க வீதம், பால்சார்ந்த மக்கள் வீதத்தில் மரபணுப் பெயர்ச்சி (genetic drift) ஏற்கும் நிலைகள் போன்றவற்றையும் இப்பிரிவு ஆராய்கிறது.

குடித்தொகை மரபியல் பிரிவானது மக்களிடையே காணப்படும் இணைதல் முறைகளையும் (mating patterns) அதனோடு தொடர்புற்ற குடித்தொகைச் சமநிலை (population equilibrium), இனப்பெருக்க மக்கள் தொகை (breeding population) ஆகியவற்றின் தன்மைகளையும் ஆராய்கிறது. ஒரு சமுதாயத்தின் குடித்தொகை அமைப்பானது நேரடியாக இனப்பெருக்க மக்கள் தொகையின் அமைப்பைச்

சார்ந்துள்ளது. இனப்பெருக்க மக்கள்தொகையின் செயற்பாட்டினாலேயே குடித்தொகையின் சமநிலையும் அறுதியிடப்படுகிறது.

இணைதல் (mating) என்பது ஒருவர் அவரது சமுதாய அமைப்பிற்கேற்ப ஒருவரை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு பால் வாழ்வில் ஈடுபடுவதைக் குறிக்கும். குடித்தொகை அமைப்பில் இணைதல் முறைகள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. ஏனெனில், குடித்தொகையில் ஏற்படும் நுண்படிமலர்ச்சி (micro evolution), மரபணுக்களில் ஏற்படும் உடனடி மாற்றம் (mutation) போன்றவை இணைதல் முறைகளால் ஏற்படுவன. இவ்வனைத்துக் கூறுகளையும் ஆராயும் இப்பிரிவு குடித்தொகையியல்சார் மானிடவியல் (demographic anthropology) என்றும் கூறப்பெறும்.

**கருவியலும் உடலியங்கியலும்**

கருத்தோற்றத்திலிருந்து இறப்பு வரை மனித உடலியக்கத்தில் ஏற்படும் அனைத்துக் கூறுகளையும் ஆராயும் முறை உடல்சார் மானிடவியலில் ஒரு பகுதியாக உள்ளது. திணைக்குடிகளின் கருவளம், கருச்செழிப்பு முறைகள், அதனைச் சார்ந்த நம்பிக்கைகள், உணவு ஊட்டம், உடலியங்கியல், வளர்ச்சிமுறை (growth) முதலான உயிரிக் காரணிகளை ஒப்பிட்டு, கருமுதல் முதிர்ச்சிபெற்ற மனிதன் வரை இடம்பெறும் அனைத்து உடலியல் கூறுகளை ஆராய்வது இப்பிரிவின் நோக்கமாகும்.

**உணவியல்சார் மானிடவியல்**

மக்கள் அவர்கள் வாழும் சுற்றுச் சூழலை முழுமையாகப் பயன்படுத்தி அவர்களுக்குத் தேவையான உணவினை ஈட்டுவதில்லை. அவரவர் பண்பாட்டால் அறுதியிடப்பட்ட உணவுப் பொருள்களை மட்டுமே சுற்றுச் சூழலிலிருந்து பெறுகின்றனர். எவற்றை உண்பது, எவற்றைத் தவிர்ப்பது, எவை என்னென்ன ஊட்டச்சத்தினைக் கொண்டுள்ளன போன்ற அறிவு அவரவர் பண்பாட்டோடு சார்புடையது. ஒரு பண்பாட்டின் உணவியல் கோட்பாடுகள் அப்பண்பாட்டைச் சேர்ந்தமக்களின் உடலமைப்பையும் உடலியக்கத்தையும் அறுதியிடும் தன்மையைப் பெற்றுள்ளன.

ஆப்பிரிக்காவில் வாழும் சில பழங்குடிகள் பாலைக் குடிப்பதில்லை. இவ்வகை வழக்கம் உலகின் வேறுசில பகுதிகளிலும் உள்ளது. கீழை நாட்டு மக்களுள் சிலர் (orientals), தெற்ற உள்ளப்பியர்களுள் சிலர், மத்தியதரைக் கடல் பகுதியைச் சேர்ந்து ஐரோப்பிகள், யூதர்கள், மேற்கு ஆப்பிரிக்கர்களுள் சிலர் வ அமெரிக்க நீக்ரோக்களுள் சிலர், அமெரிக்க இந்தியர்களுள் சிலர் எஸ்கிமோக்களுள் ஒரு பகுதியினர் ஆகிய இவர்கள் அனைவரும் பாலைக் குடிப்பதில்லை. குறிப்பாக வயதுவந்தோர் (adult) பாலைக் குடிப்பதில்லை. அதற்குக் காரணம் பாலிலுள்ள சர்க்கரைச் சத்தைக் செரிக்க உதவும் லேக்டேஸ் (lactase) என்ற நொதிப்பி (enzyme) அவர்களிடம் இல்லாமையாகும். இது உடலியல் தகவமைப்பாகவோ மரபணுக்கள் ஒன்று சேரும் முறையில் (genetic combination) ஏற்பட்ட பண்பாகவோ இருக்கலாம். மனிதர்கள் அனைவரும் ஒருகாலத்தில் இந்த நொதிப்பியைப் பெற்றிருக்கவில்லை. சூழ்நிலையோடு தகவமையும் காலத்தில் பெரும்பான்மையோர் பெற்றுவிட்டனர். ஏனையோர் பெறாமலேயே உள்ளனர்.

மக்கள் அவரவர் உண்ணும் சாதாரண உணவிற்கும். தேர்ந்தெடுத்து உண்ணும் சிறப்பு உணவிற்கும், பிற ஊட்ட உணவிற்கும் பல்வேறு காரணங்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பண்பாட்டிலும் அதற்கான காரணங்கள் ஆயிரக் கணக்கிலுள்ளன. அவையனைத்தையும் உயிரியல்சார் நோக்கில் ஆராய்வதே உணவியல்சார் மானிடவியலாரின் பணியாகும். இவ்வகை ஆய்வுகளில் ஓர் இனம் அதன் சுற்றுச் சூழலைப் பயன்படுத்தி அதன் உயிர்சார் ஆற்றலை (biomass) அந்த சுற்றுச் சூழலின் மொத்த உயிர்சார் ஆற்றலோடு எவ்வாறு பொருத்தம் பெற்றதாகச் செய்து கொள்கிறது என்பது முதன்மையான அணுகுமுறையாக உள்ளது.

**மூலக்கூற்று உயிரியல்**

மூலக்கூற்று உயிரியல் அணுகுமுறையுடன் இனக் குழுக்களிடமும் உயர்பாலூட்டிகளிடமும் மூலக்கூறுகளின் பண்புகள் எவ்வாறு வகைபடுகின்றன என்பதை அறிவதில் ஒருசாரார் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர். இவர்கள், பிறழ்நிலை

இரத்தச் சிவப்பணுக்கள் (abnormal haemoglobin), பிறழ்நிலை மரபணுக்கள், பிற பிறழ்நிலை உயிரணுக்கள் ஆகியவற்றின் தன்மைகளையும், குன்றிய உடலமைப்புத் தோன்றுவதற்கான காரணங்களையும் ஆராய்கின்றனர். இவ்வகை ஆய்வுகள் மருத்துவ மானிடவியலிலும், உடலியங்கியல்சார் மானிடவியலிலும், இனமேம்பாட்டியலிலும் பயனுடையதாக உள்ளன.

**இனமேம்பாட்டியல்**

குறிப்பிட்ட சில அணுகுமுறைகளில் சிறந்த மனித குலத்தை உருவாக்கும் ஒரு பிரிவே இனமேம்பாட்டியலாகும். இத்துறையை சர் பிரான்சிஸ் கால்டன் என்பவர் தோற்றுவித்தார். இனமேம்பாட்டியல் என்னும் பொருளுடைய “eugenics“ என்ற கிரேக்கச் சொல்லுக்கு “நன்றாகப் பிறத்தல்“ (well - born) அல்லது “மேம்பட்ட மரபணுக்கள்“ (eugens) என்பது பொருளாகும்.

உடலாலும் உள்ளத்தாலும் வலிமையான சந்ததியினரைப் பெற இனப்பெருக்கம் செய்து அதன் மூலம் சிறந்த மனித இனத்தை உருவாக்குவதே இனமேம்பாட்டியலின் குறிக்கோளாகும். மரபு வழியில் குறைபாடுகள் கொண்ட சந்ததியினர் உருவாவதை இது ஆதரிக்கவில்லை. சிறந்த கருவளமுள்ளவர்களை நிலைநிறுத்தி, குறைபாடுடையவர்களை நீக்கியோ மேம்படுத்தியோ வளமான மனித இனத்தை உருவாக்கும் வழிமுறைகள்ளை காண்பதில் இத்துறை இரண்டு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை: ஆக்கமுறை இனமேம்பாட்டியல் (positive eugenics), எதிர்மறை இனமேம் பாட்டியல் (negative eugenics). ஆக்கமுறை இனமேம்பாட்டியல் மேற்கூறிய பண்புகளைக் கொண்டு செல்லும் மரபணுக்களை (genes) மனித மரபணுப் பொதுச் சேர்மத்திலிருந்து (gene pool) குறையாமலிருக்க வழி கூறுகிறது. எதிர்மறை இனமேம்பாட்டியல் விரும்பத்தகாத பண்புகளை ஏற்படுத்தும் மரபணுக்களைத் தடுத்துக் குறைக்க வழிகூறுகிறது. இவ்விரண்டு பிரிவுகளுமே மனிதர்களின் மரபணுப் பொதுச் சேர்மத்தில் காணப்படும் கொல்லும் தன்மையுடைய

மரபணுக்களின் (lethal genes) நிகழ்தன்மையைக் குறைப்பதற்கான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன.

மனித இனத்தின் பண்புகளை வளம்பெறச் செய்ய இணக்கமான கலப்பினை ஆதரித்தல், மனிதர்களின் கருத்திக ஊண்நீரை (germplasm) ஊக்கப்படுத்துதல், வாழும் சூழ்நிலையை இனமேம்பாட்டியலார் மேம்படுத்துதல், சிறந்த ஊட்ட உணவு, சிறந்த கல்வி, சிறந்த மருத்துத்து கின்றனர். இருப்பினும், இளமேம்பாட்டியல் துறை வசதி முதலானவற்றை சிறப்புறாமைக்குக் காரணம் இவர்களின் அணுகுமுறைகளுள் சின்றான விந்தணுக்களைச் சேகரித்து செயற்கை முறையில் கருவூட்டல், சிறந்த பண்புகள் கொண்டோரை இணைத்தல் முதலான ஏற்பற்ற முறைகளை ஆதரித்தமையாகும். 38”

**மருத்துவ மானிடவியல்**

பண்பாட்டுக் கூறுகளுக்கும் உயிரியல் கூறுகளுக்கும் உள்ள உறவை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வதன் மூலம் மனித நோயியல் பற்றி முழுமையாக அறிய முடியும் என்பார் கார்ல்டன் கஜ்டுசெக். இவர் உடல்சார் மானிடவியல் அணுகுமுறையோடும். கொள்ளைநோயியல் (epidemiology) அணுகுமுறையோடும், ஆய்வு செய்து 1976 -இல் நோபல் பரிசு பெற்றவர். நியூகினி மேட்டுநில மக்களிடம் குரு (Kurr) என்ற ஒருவகை நோய் பெருமளவில் காணப்பட்டது. அது ஒருவகை நரம்பியல் நோய், அம்மக்கள் சடங்குப் படையலில் வைக்கும் உணவானது சமைக்கப்படாத மூளைப்பகுதியாகும். அதை உண்பதால் அந்நோய் ஏற்படுகிறது என்பதை கஜ்டுசெக் அறிந்தார்.

நியூகினியில் ∴போர் (Fore) எனப்படும் பகுதியைச் சேர்ந்த மக்களிடம் மட்டும் அந்நோய் மிகுதியாக இருப்பதற்கான காரணத்தையும் இவர் அறிந்தார். அந்நோயை எதிர்த்துப் போரிடாமல் அதனை ஏற்கும் தன்மையுடைய மரபணுக்களே அவர்களிடம் உள்ளன என்பது நீண்ட கால ஆய்விற்குப் பின் தெரிய வந்தது.

தமிழ்நாட்டில் ஏலகிரி மலையில் வாழும் மலையாளிப் பழங்குடிகளின் பண்பாட்டுச் சின்னமாகப் பன்றி திகழ்கிறது. மண ஒப்பந்தத்தின் அடையாளமாகவும், மணப்பரிசாகவும், மருந்து உணவாகவும், தெய்வ வழிபாட்டிலும் முன்னோர் வழிபாட்டிலும் படைக்கும் படையல் உணவாகவும், விதைப்பு, அறுவடைச் சடங்குப் படையலாகவும், உயிர்ப்பலி கொடுக்கும் விலங்காகவும், கருவளத்தை மேம்படுத்தும் உணவாகவும், மங்கல நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் போது வழிபடும் வழிபாட்டுப் பொருளாகவும் பன்றி அவர்களிடம் சிறப்பிடம் பெற்றுள்ளது. அவர்களுள் பெரும்பான்மையோர் பாதியனவு வெந்த பன்றி இறைச்சியை உண்கின்றனர். அதற்கு அவர்களிடமுள்ள சில நம்பிக்கைகளே காரணம். பாதியளவு வெந்த இறைச்சியை உண்பதால் மூளைக் காய்ச்சல் உள்பட பல நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். மேற்கூறிய வகைகளில் உலகம் முழுவதும் பல பழங்குடிப் பண்பாடுகளில் பன்றி சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை மர்வின் ஹேரிஸ் சுட்டிக்காட்டுகிறார்.

நகர மக்களிடமிருந்தும், ஊரக மக்களிடமிருந்தும் தனித்து ஒதுங்கி வாழும் பழங்குடியினரின் பெரும்பாலான நோய்கள் அவரவர் பண்பாட்டோடு தொடர்புடையன. அனைவருக்கும் பொதுவான நோய்களைத் தீர்ப்பதில் மருத்துவவியலார் நவீன மருத்துவ முறைகளைக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் மாறுபட்டச் சூழலில் வாழும் எண்ணற்ற இனக்குழுவினரின் நோய் முறைகளை அறிவதிலும், அவர்களுக்கு நவீன மருத்துவ முறையைக் கொண்டு மருத்துவம் செய்வதிலும் மருத்துவவியலார் வெற்றிபெற இயலவில்லை. ஏனெனில், இனக்குழுவினரின் நோயியலில் சுற்றுச்சூழல், நோய் பற்றிய நம்பிக்கைகள், சடங்குகள், மந்திரம், உணவுமுறை, தொழில்நுட்பம் போன்ற பல கூறுகள் ஒன்றோடு ஒன்று பிண்ணிப் பிணைந்துள்ளன. ஒன்றைப் புரிந்து கொண்டாலொழிய மற்றொன்றைப் புரிந்து கொள்ள முடியாது. இந்நிலையில் மருத்துவ மானிடவியலார் முழுதளாவிய அணுகுமுறையில் இனக்குழுவினரின் நோய் முறைகளை ஆராய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

**பயன்முறை உடல்சார் மானிடவியல்**

ஒரு துறையின் கொள்கைகள், கருத்தாக்கங்கள் (concepts), அணுகுமுறைகள், செயல்முறைகள் முதலானவற்றைக் கொண்டு மனித வாழ்வில் நேரடிப் பயன்களை ஏற்படுத்த முடியுமானால் அதுவே அத்துறையின் பயன்முறையாகும். வாழ்வியற் புலத்தைச் சேர்ந்த சில துறைகளும் அறிவியற் புலத்தைச் சேர்ந்த பெரும்பாலான துறைகளும் பயன்முறை சார்ந்தவையாக (applied scope) உள்ளன. அந்த வகையில் உடல்சார் மானிடவியல் மக்களின் நடைமுறை வாழ்வில் நேரடியாகப் பங்கு பெற்றுப் பல வகைகளில் பயனளித்து வருகிறது.

அன்றாடவாழ்வில் பயன்படுத்தும் பெரும்பாலான பொருள்களை வடிவமைப்பதற்கு மக்களின் உடலளவுகள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நாற்காலிகள், மேசைகள், பேருந்து, தொடர்வண்டி, விமானம் போன்ற பல ஊர்திகளில் அமைக்கப்படும் இருக்கைகள் தலையில் கவசங்கள், மூக்கில் அணியும் கண்ணாடிகள் போன்ற பல பொருள்களை ஒவ்வொருவருக்குமெனச் செய்ய இயலாது. பல பிரிவினர்களாகப் பயன்படுத்தும் வகையில் செய்ய வேண்டும். ஆகவே அனைத்துப் பயனர்களுக்குமான பேராளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் அளவுகளைக் கொண்டு அனைவரும் பயன்பெறத்தக்க வகையில் வடிவமைக்கின்றனர்.

நாம் அணியும் காலணிகளும், புதை காலணிகளும் (shoes) தயார் நிலையில் கடைகளில் கிடைக்கின்றன. ஒவ்வொருவரும். அவரவர் வயதிற்கேற்பவோ உடல் வளர்ச்சிக்கேற்பவோ உடனே வாங்கி அணியுமளவிற்குத் தயார் நிலையில் உள்ளன. அவற்றின் நீளம், அகலம், உயரம் அனைத்தும் ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தோருக்கும் பொருத்தமாக உள்ளன. இது அப்பிரிவைச் சேர்ந்த அனைத்து மக்களுக்குமான அளவுகளின் வீதங்களைக் கணக்கிட்டுச் செய்வதால் மட்டுமே இயலுகிறது. இதைப் போன்றே சாதாரண உடைகள், போர்க் கால டைகள், விண்வெளி வீரர்கள் பயன்படுத்தும் உடைகள், தலைக் கவசங்கள், இன்ன பிற தயார்நிலைப் பொருள்கள் (readymade goods) அனைத்தும் மக்களின் உடலளவுகளைப் பெற்று அவற்றைப் பல நிலைகளில் பொதுமைப்படுத்திச் செய்வதால் மட்டுமே தயார்நிலைப் பொருள்களாகச்

செய்ய முடிகிறது. இதனால் உற்பத்தியாளருக்கு அடிப்படைப் பொருள்களும் உற்பத்திச் செலவும் பெருமளவு குறைகின்றன. மக்களுக்குக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இதற்கு நேரடியாக உதவுவது மானிட உடலளவையாகும்.

மருத்துவத் துறையிலும் மானிடஉடலளவையியல் மிக்க பயனுடையதாய் உள்ளது. இன்றைய நவீன மருத்துவ உலகில் மனிதனின் பெரும்பாலான உறுப்புகளுக்குச் செயற்கை உறுப்புகள் பொருத்தும் முறை தவிர்க்கவியலாததாக உள்ளது. இவ்வகை உறுப்புகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் அனைத்தும் மானிட உடலளவையியலாரின் ஆலோசனையையும், உதவியையும், மேற்பார்வையையும் பெறுகின்றன. மானிட உடலளவையின் பயன்களைக் கூற இதுபோன்ற எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இப்பிரிவின் கருவிகளையும் மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்துகின்றனர். தையல்காரர் பயன்படுத்தும் அளவு நாடாவும் ஒரு மானிட உடலளவையியல் கருவியே.

உயிர் வகைப்பாட்டியல் (biotypology) துறையிலும் மானிட வகைப்பாட் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. மிகச் சிறந்த உயிர் வகைப்பாட்டியலாரான எச். லாகியர் 1834 ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த பன்னாட்டு மானிடவியல் அறிவியல் கழகத்தில் (International Congress of Anthropological Science) உடல்சார் மானிடவியலின் தேவையையும் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார். உயிர் வகைப்பாட்டியலில் மானிட உடலளவையியல் பயன்படுத்தப்படுகிறது. பணியாளர்களைத் தேர்வு செய்வதில் குறிப்பாக, படைப்பிரிவு ஊழியர், விளையாட்டு வீரர்களைத் தேர்வு செய்தல், வாழ்க்கைத் தொழில் சார்ந்த பிரிவில் துணை புரிதல், கற்பித்தல்வழி வகைப்படுத்துதல் (pedagogical classification) போன்ற சூழல்களிலும் மனித இனங்களின் உயிர்சார் பண்புகள் எங்கெல்லாம் பகுத்து வகைப்படுத்த வேண்டியுள்ளதோ அச்சூழல்களிலும் இப்பிரிவு பயனுடையதாக உள்ளது.

இராணுவத்தில் ஊழியர்களைத் தேர்வு செய்யும்போது உடல் உறுப்புகளின் தன்மையையும் அளவுகளையும் கண்டறிந்து அவற்றின் அடிப்படையிலேயே படைப்

பிரிவில் சேர அனுமதிப்பது பன்னெடுங்காலமாக கையாளப்படும். முறையாகும். உடலுறுப்புகளைக் கணித்தல், அடையாளக் குறிகளைக் கண்டறிதல், புற உறுப்புகளின் அளவினை எடுத்தல் முதலானவற்றிற்குத் தேர்ச்சி பெற்ற உடல்சார் மானிடவியலார் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் மருத்துவக் குழுவில் இடம் பெற்றிருப்பர். படைப்பிரிவிற்கு ஆட்களைத் தேர்வு செய்வது மட்டுமல்லாமல் அவர்கள் பயன்படுத்தும் இயந்திரங்களின் இருக்கைகள், துணைப் பொருள்கள், மண்டைக் கவசங்கள், ஆவிக் கவசங்கள் (gasmasks), உடைகள் முதலானவற்றை வடிவமைப்பதிலும் மானிட உடலளவையியலாரின் நிபுணத்துவம் பயன்படுத்தப்படுகிறது.

தண்டனைவியலிலும் குற்றவியலிலும் உடல்சார் மானிடவியல் அறிவு நேரடியாகப் பயன்படுத்தப்படுகிறது. சட்டம்சார்ந்த கணிப்புகளுக்கு, முன்னர்ப் பயன்படுத்தப்பட்ட பெர்ட்டிலன் முறை (Bertilon method) மேலும் மேம்படுத்தப்பட்டு இன்று விரலமைப்பியல் (dactyloscopy) பிரிவில் பயன்படுத்தப்படுகிறது. அண்மைக் காலம் வரை குற்றவியலில் கணிக்கப்படும் உடல் அடையாளங்கள் அனைத்தும் மானிடஉடலளவையின் ஒரு பிரிவான புறத்தோற்ற உடலளவையின் (somatometry) ஒரு பகுதியாகவே இருந்தது. இன்றும் சட்டம்சார்ந்த மருத்துவத்தில் (forensic medicine) இப்பிரிவு மிக்க பயனுடையதாக உள்ளது.

வெள்ளையர்களும் ஐரோப்பியர்களும் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் இன உயர்வுக் கொள்கையைப் (racism) பொய்யாக்கி அது பெரும் பகட்டானது. ஆதாரமற்றது என்று நிரூபித்ததில் உடல்சார் மானிடவியலின் பங்கு தலையானது. மனித குலம் அனைத்திற்கும் மிகப் பெரும் சவாலாக இருந்த இக்கொள்கையைக் காலப்போக்கில் ஒழித்தமை மானிடவியலார் இனித சமுதாயத்திற்காற்றிய பெரும்பணிகளுள் ஒன்று. உடல்சார் மனிடவியலின் பயன்முறைகள் பற்றி இங்குக் கூறியுள்ளவை மிக குறைவானவை: விரிவானவையல்ல உட்பிரிவுகளை பயன்முறைகள் பற்றி இதன் உட்பிரிவுகளை விளக்கியவற்றிலிருந்தும் அறியலாம்.

**தொல்லியல்**

தொல்லியலானது பண்பாட்டு மானிடவியல் ஆய்வுப் பரப்போடும், உடல்சார் மானிடவியல் ஆய்வுப் பரப்போடும் தொடர்புடைய ஒரு கதம்பப் பிரிவாக இருந்து வந்துள்ளது. இருப்பினும், இன்று இப்பிரிவு அதற்கென்ற தனி ஆய்வுப்பரப்பையும், ஆய்வுமுறைகளையும், அணுகுமுறைகளையும் கொண்டு ஒரு தனித்துறையாக விளங்குகிறது. முன்வரலாற்றுக் காலத்தில் (prehistoric period) வாழ்ந்த மக்களின் வரலாற்றையும், வாழ்க்கை முறைகளையும், அவர்களின் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும், வளர்ச்சியையும், விளக்கும் அறிவியலே தொல்லியல் வேறு வகையில் கூற வேண்டுமாயின்“ மனித சமுதாயத்தின் வரலாறு எழுத்துவடிவத்தில் ஏறுவதற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைப் பற்றியதே தொல்லியல்.

கடந்த 5000 ஆண்டுகளாக மட்டுமே மனித வரலாறு எழுத்து வடிவத்தில் குறிக்கப் பெற்றுள்ளது. இக்காலகட்டத்தைச் சேர்ந்த மனித வரலாற்றினை வரலாற்றறிஞர்கள் விளக்கிக் கூறுகின்றனர். ஆனால் பல மில்லியன் ஆண்டுகளாக மனிதப் பண்பாடு தோன்றி வளர்ந்துள்ளது. எழுத்து வடிவத்தில் எழுதப்படாத இக்கால கட்டத்தின் வரலாற்றினை விளக்குவதில் தொல்லியலார் ஈடுபட்டுள்ளனர். மக்கள் விட்டுச் சென்ற பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு அக்கால மக்களின் பண்பாட்டையும் வாழ்வியலையும் மீட்டுருவாக்கம் செய்கின்றனர். மண்ணுக்கடியில் பெரும்பாலும் மக்கள் பயன்படுத்திய தொழிற் கருவிகளும், இறந்த மக்களுக்காகச் செய்யப்பட்ட ஈமச்சடங்குப் பொருள்களும், புதைபடிவங்களும், மட்பாண்டங்கள், அணிகலன்கள் போன்ற சில பொருள்களும் மட்டுமே கிடைக்கின்றன. அவற்றைக் கொண்ட அம்மக்கள் வாழ்ந்த காலம், சூழ்நிலை, தொழில், சமுதாய வாழ்க்கை, சமய நம்பிக்கைகள், கலை போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை ஆராய்கின்றனர். அதனால் தொல்லியல் என்பது இனக்குழு ஒப்பாய்வியலின் ஒரு வகையே என்று கூறுவதும், அதனைத் “தொல்“ இனக்குழு ஒப்பாய்வியல்“ (palacoethnology) என்று கூறுவதும் பொருத்தமானது என்பார் ராட்கிளிஃப் பிரௌன்

தொல்லியலார் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கற்காலம், செப்புக் காலம், இரும்புக் காலம் என மூன்று கால கட்டமாகப் பிரிக்கின்றனர். கற்காலத்தை, பழங்கற்காலம் (palaeolithic period) இடைக்கற்காலம (mesolithic period), புதிய கற்காலம் (neolithic period) என மேலும் மூன்று கால கட்டமாகப் பிரித்து ஆராய்கின்றனர். இந்த ஒவ்வொரு காலத்தையும் மேலும் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வர். ஒவ்வொரு காலகட்டத்தையும் சேர்ந்த தொழிற் கருவிகள் அம்மக்களின் வளர்ச்சி நிலைகளைக் காட்டுவனவாக உள்ளன. பின்வரும் அட்டவணையில் கற்கருவிகளும், அவற்றின் காலங்களும், பயன்படுத்தப்பட்ட முறைகளும் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு அம்மக்களின் தொழில் நுட்ப வளர்ச்சி நிலைகளை மேலெழுந்தவாரியாக அறியலாம்.

ஒவ்வொரு காலத்திலும் மக்கள் பயன்படுத்திய கருவிகளின் தன்மை என்ன, அவற்றை எதற்காகச் செய்தார்கள், எந்த முறையில் செய்தார்கள், கருவிகளின் திறன் என்ன, எந்த வகையான கருவிகள் இயற்கைச் சூழலிற்கேற்ப வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப் பட்டன போன்ற கேள்விகளுக்குத் தொல்லியலார் விடை காண்கின்றனர். கற்கருவிகளின் தொழில் நுட்பம் காலத்திற்கேற்ப மாறியுள்ளதால் அது நேரடியாக மக்களின் உணவு ஈட்டும் முறையைப் பிரதிபலிக்கிறது. ஆகவே கற்கருவிகளின் தொழில்நுட்பத்தைக் கொண்டு தொடக்கக் காலம் முதல் மனித வரலாறு எழுத்துவடிவம் பெறும் வரை மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறெல்லாம் மாற்றம் பெற்று வந்திருக்கிறது என்பதைப் பெருமளவு மதிப்பிட முடிகிறது.

பழங்கற்காலம் தொடங்கிப்புதிய கற்காலம் வரை மக்கள் கற்கருவிகளைச் செய்து வாழ்ந்த இடங்கள் 24க்கும் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் அகழாய்வு செய்து எடுத்த கருவிகளைக் கொண்டு தொன்மையான கருவிகள் எப்பகுதியில் தோன்றின என்றும் அதற்கடுத்த வகையான கருவிகள் எங்கெங்குத் தோன்றின என்றும் மதிப்பிட்டு அக்காலத்திய வாழ்க்கை முறையை விளக்குவர். மக்கள் விட்டுச் சென்ற பிற மண்பாட்டு எச்சங்கள், மக்களின் குடியிருப்பு முறை, வாழ்க்கைத் தொழில், கலை, சமய நம்பிக்கைகள் போன்றவற்றை மதிப்படு

கிறது. இதுவரை இடைத்த சான்றுகளின் படி 100,000 ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டிருந்தனர் என மதிப்பிடப்படுகிறது.

தொல்லியல் ஆய்வுகளுக்கு உடல்சார் மானிடவியலார். மண்ணியலார் ஆகியோரின் நிபுணத்துவம் தேவைப்படுகிறது. அகழாய்வு செய்யும்போது கிடைக்கும் மனிதப் புதைபடிவங்களின் காலத்தையும், அம்மக்களின் பிற வாழ்வியற் கூறுகளையும் விளக்குவதில் உடல்சார் மானிடவியலார் உதவுகின்றனர். அகழாய்வு செய்யும்போது கற்கருவிகள் பல்வேறு மண்ணடுக்குகளைக் சேர்ந்ததாக உள்ளதால் மண்ணியலாரின் உதவியுடன் மண்ணடுக்கியலின் (stratigraphy) காலத்தைக் கணித்து அதன் மூலம் கற்கருவிகளின் காலத்தைக் கணக்கிடுகின்றனர். அவை தவிர காலவரிசையைக் (chronology) கணிப்பதில் தொல்லியலார் அவர்களுக்கென்று பல்வேறு முறைகளைக் கொண்டுள்ளனர். ஆகவே தொல்லியலாரும் உடல்சார் மானிடவியிலாரும் காலப் பரிமாணத்துடன் ஆராயும் ஆய்வு முறையை மானிடவியலுக்குச் சேர்த்துள்ளனர் என்று கூறுவது மிகவும் பொருத்தம். இம்முறை பிற நடத்தைசார் அறிவியல்களில் இல்லை என்றே சொல்லலாம்.

## மொழியியல்

மானிடவியலின் மற்றுமொரு முதன்மையான பிரிவுமொழியியலாகும். மொழியியல் இன்று தனித்துறையாக விளங்கி வந்தாலும் இத்துறை பண்பாட்டு மானிடவியலின் ஓர் உட்பிரிவாக இருந்து வந்தது. எனினும், மொழியைப் பற்றிய ஆய்வுகள் மானிடவியல் ஆய்வுகளைக் காட்டிலும் காலத்தால் முந்தியவை. தொடக்கக்கால மானிடவியல் களப்பணிகளில் மொழியியல் பற்றிய அறிவு முதன்மையாகத் தேவைப்பட்டது. அதனால் மொழிகளை அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் மானிடவியலின் ஓர் ஒன்றிணைந்த கூறாகக் கருதப்பட்டது. அது பெந்கொண்டே மானிடவியலில் மொழியியல் ஆய்வுகள் பல்கிப்

இன்றைய மானிடவியல்சார் மொழியியலாருள் சிலர், வழக்கிழந்து அற்றுப்போகும் நிலையிலுள்ள மொழிகளைப் பதிவு செய்து ஆராய்கின்றனர். ஏனெனில், தொன்மைக் குடியினர் பலர் பண்பாட்டு மாற்றத்தினால் அவர்களின் திணைப்

பண்புகளையும் மொழியையும் விரைந்து இழந்து வருகின்றனர். வேறு சிலர் உடல்சார் மானிடவியலாரைப் போன்று காலப் பரிமாணத்துடன் கூடிய ஆய்வுகளிலும் ஈடுபடுகின்றனர். உலக மொழிகள் எங்கு எவ்வாறு தோன்றின, அவை காலந்தோறும் எவ்வாறு மாறிவந்துள்ளன என்பனவற்றை இவர்கள் ஆராய்கின்றனர். இவ்வகை மொழியியல் ஒப்பியல் அல்லது வரலாற்று மொழியியல் (comparative or historical linguistics) எனக் கூறப்பெறும் மற்றுமொருசாரார் இக்கால மொழிகள் அவற்றின் அமைப்பிலும் பயன்பாட்டு நிலையிலும் எவ்வாறு வேறுபட்டுக் காணப்ப படுகின்றன என்பதை ஆராய்கின்றனர். இது விளக்கு மொழியியல் (descriptive linguistics) என வழங்கப்பெறும். மானிடவியல் மொழியியலார் சிலர் மொழிகளுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை ஆராய்வதை விடுத்து, அனைத்து மொழிகளுக்கும் பொதுவான அமைப்புக்களைக் (universal structures) காண்பதில் ஈடுபடுகின்றனர். இவ்வகை அணுகுமுறை மூலம் மக்கள் அனைவரும் கருத்துப் புலப்படுத்தும் முறையில் (communication system) கொண்டுள்ள பொதுவான அமைப்பு முறைகளை அறிய முடிகிறது. இதன்மூலம் மனித மனத்தின் அடிப்படைச் சிந்தனை முறையை விவரிக்க முடிகிறது. இப்பிரிவு அமைப்பியல் மொழியியல் (structural linguistics) எனக் கூறப்படும். ஒருசாரார்மேற்கூறிய நிலைகளிலிருந்து மாறி பேச்சு வழக்கில் மொழி எவ்வாறு பயன்படுகிறது என்பதை ஆராய்வதில் ஈடுபடுகின்றனர். இவ்வகை மொழியியல் சமுதாய மொழியியல் (socio-linguistics) என வழங்கப்பெறும்.

மானிடவியல்சார் மொழியியலார் பெரும்பாலும் மொழியின் வரலாறு பற்றி அறிவதிலும் நாட்டங் கொண்டுள்ளனர். அவற்றைப் புரிந்துகொள்வதன் மூலம் பண்பாட்டின் அமைப்பைப் புரிந்துகொள்ள முடியுமென நம்புகின்றனர். ஏனெனில், கருத்துப் புலப்படுத்தும் முறையை மொழி மட்டுமே வடிவமைக்கிறது. புற உலகைப் புரிந்து கொள்வதிலும் அவற்றை வெளிப்படுத்துவதிலும் மொழியின் ஆளுகையே மேலோங்கி நிற்கிறது. மொழியின் செல்வாக்கைப் பொருத்தே அம்மக்களின்

அறிதிறனும் (cognition) அமைகிறது மொழிக்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்புகள் பற்றி "பண்பாட்டுக் கோலங்கள்" என்னும் அத்தியாயத்தில் விரிவாகக் காணலாம்.

**பண்பாட்டு மானிடவியல்**

உலகம் முழுவதும் எண்ணிலடங்கா சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும். இந்நூல் பண்பாட்டு மானிடவியலைப் பற்றியதாகையால் இதுபற்றி விளக்கமான அறிமுகம் ஏதுமில்லாமல் இதன் உட்பிரிகளைக் காண்போம்.

பண்பாட்டு மானிடவியலின் உட்பிரிவுகளில் தொல்லியல் மொழியியல் ஆகிய பிரிவுகள் சேர்க்கப்பட்டாலும் இதன் தலையாய பிரிவுகள் இனக்குழுவியல் (ethnography), இனக்குழு ஒப்பாய்வியல் (ethnology) ஆகிய இரண்டு மட்டுமே.

பண்பாட்டை ஆய்வுப் பரப்பாக எடுத்துக் கொண்டு ஆராய முற்பட்ட தொடக்கக்கால ஆங்கிலேய, அமெரிக்க அறிஞர்களின் அணுகுமுறைகளில் வேறுபாடுகள் ஏற்பட்டதால் இப்பிரிவு பண்பாட்டு மானிடவியல், சமுதாய மானிடவியல் (social anthropology) என இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபடுகிறது பண்பாட்டு மானிடவியலார் அமெரிக்க மானிடவியல் மரபினைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களின் துறை அமெரிக்க மானிடவியல்" (பண்பாட்டு மானிடவியல்) என்றும் வழங்கப் பெறும். சமுதாய மானிடவியலார் ஆங்கிலேய மானிடவியல் மரபைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களின் துறை ஆங்கிலேய "மானிடவியல்" (சமுதாய மானிடவியல்) என்றும் வழங்கப்பெறும். இவ்விரு பிரிவுகளுக்குள் உள்ள வேறுபாடுகளை இங்குக் காண்போம்.

**பண்பாட்டு (அமெரிக்க), சமுதாய (ஆங்கிலேய) மானிடவியல்**

அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலும் ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலும் அதனதன் அணுகுமுறைகளில் வேற்றுமையைக் காட்டிலும் ஒற்றுமையையே மிகுதியாகப் பெற்றுள்ளன. இவ்விரு நாடுகளைச் சேர்ந்த வருகைப் பேராசிரியர்கள் அவர்கள் செல்லும் நாட்டிலுள்ள பல்கலைக்கழகம் பேராசிரியர்களின் ஆய்வு

முறைகளை ஏற்றுக்கொள்ள முற்பட்டனர். அதனால் இரு நாட்டினரின் அணுகுமுறைகள் ஒன்றையொன்று வளம்பெறச் செய்தன. அமெரிக்காவில் இன்றுள்ள மானிடவியல் மாணவர்கள் தொன்மைக்கால அமெரிக்க மானிடவியலறிஞர்களான போவாஸ், லோவி அல்லது குரோபர் போன்றோரின் நூல்களைப் படிப்பதைக் காட்டிலும் இக்கால ஆங்கிலேய் மானிடவியலாரின் நூல்களை விரும்பிப் படிக்கின்றனர். இருப்பினும் இவ்விரு நாட்டின் மானிடவியலானது வரலாற்றுக் கால வளர்ச்சியில் பெற்றிருந்த வேறுபாடுகளைப் போன்றே இன்றும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைப் பெற்றுள்ளது.

**அமெரிக்க மானிடவியல்**

அமெரிக்க மானிடவியல் அதற்கே உரிய தன்மையைப் பெறுவதற்குப் புத்துலகத்தில் பரவி வாழ்ந்த திணைக்குடிகள் பல வழிகளில் காரணமாயிருந்தனர். ஐரோப்பியர்கள் அமெரிக்கப் புத்துலகப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியது முதற்கொண்டே அமெரிக்க இந்தியர்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆவலுடையவர்களாய் இருந்தனர். இதில் முழுதோ மானிடவியலாரும். ஓய்வு நேரத்தில் பயில்வோரும். மேம்போக்காக மானிடவியல் அறிவினைப்பெற விரும்பியோரும் ஈடுபட்டனர். அமெரிக்க இந்தியர்களின் தோற்றம். இடப்பெயர்ச்சி, ஐரோப்பியர்களின் தொடர்புக்குப்பின் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றை ஆராய வேண்டுமென இவர்கள் விரும்பினர். இப்பெரும் ஆய்வுப் பரப்பு அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியலுக்கு மிகுந்த வளர்ச்சி உண்டென்பதை உறுதிப்படுத்தியது. அமெரிக்க இந்தியர்களைப் பற்றி ஆராய வேண்டுமென்ற ஆர்வம், வரலாற்றிலும், வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றிலும் ஆர்வங் கொண்டதாகும். இந்நிலையில் அமெரிக்க மானிடவியலின் தந்தை பிரான்ஸ்போவாஸ் தொடக்கக் காலத்தில் புவியியல் ஆய்வுகளோடு மிகவும் தொடர்பு பெற்றிருந்தார். அதோடு டில்தேயின் (Dilthey) தாக்கத்தைப் பெற்றிருந்ததால் அவர் இடம் காலம் (time and space) உள்ளிட்ட ஆய்வுகளையே மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மிகவும் உறுதியாய் இருந்தார். அந்த ஆய்வுப் போக்கையே தம் மாணவர்களுக்கும் கற்பித்தார்.

அமெரிக்காவில் மானிடவியல் ஒரு முழுநேரக் கல்வித் துறையாக வளர்ச்சி பெற்ற காலத்தில், அமெரிக்க இந்தியர்கள் கடந்த காலத்தில் கொடுமைப்பட்டிருந்ததைப் போன்றே அப்போதும் பல கொடுமைகளாலும் அடக்கு முறைகளாலும் துன்புற்றிருந்தனர். அமெரிக்க மானிடவியலார் அவர்களின் நிலையை முதன்முதலில் கண்டபோது அவர்கள் ஒருகாலத்தில் செல்வாக்குடனும் பாதுகாப்புடனும் வாழ்ந்து அப்போது சீர் குலைந்து அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெளிவாக உணர்ந்தனர். அமெரிக்க மானிடவியல் வளர்ச்சி பெற்ற காலம், அங்குச் சிறுபான்மையினருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அறிவார்ந்த நிலையில் தாராளப்போக்குடன் ஏதாவது செய்ய வேண்டும் என்ற காலமாகும். அந்நிலையில் அம்மக்களின் சமுதாய நலத்திற்காக காவடவியலார் பலர் முழுநோயலார் உளர்ந்து வப்படன் பார் செய்ய இறங்கினர். சில மானிடவியலார் வளர்ந்து வரும் நாடுகளில் வாழும் மக்களின் சிக்கல்களை ஆராய்வதில் தீவிரமாக இறங்களில்,

மானிடவியலார் உட்பட அம்மக்களின்பால் ஆர்வம். கொண்ட அனைவரும் அவர்களின் பாசிக்கல்களையும் அன்பங்களையும் நீக்கி அவர்களின் பண்பாடு அழிவதற்குள் அவர்களின் கடந்தகால வாழ்வு, பாரம்பரியம் முதலானவர்கறை எந்த அளவிற்கு மீட்க முடியுமோ அந்த அளவிற்கு மீட்க விரும்பினர். மானிடவியலாரின் இந்த ஆர்வம் அம்மக்களின் தொல் பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்வதற்கு வழிகோலிற்று அவ்வாய்விற்காக முதியோர்களுடன் நேர் காணல், அம்மக்களின் வரலாற்றோடு தொடர்புடைய தொல்லியல் தரவுகள், பழைய கடிதங்கள், கால இதழ்கள், நாட்குறிப்பேடுகள், தொன்மக் கதைகளை ஆராய்தல் முதலான அனைத்து இனக்குழு வரலாறு (ethnohistory) ஆய்வு முறைகளையும் பயன்படுத்தி அம்மக்களின் வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்தனர். மேலும் அம்மக்கள் இடம் பெயர்ந்த நிகழ்ச்சிகள், பண்பாடு மாற்றமடைந்த நிகழ்வுகள் முதலானவற்றோடு தொடர்புற்ற மொழிக்கூறுகளையும் ஆராய்ந்தனர். அதன் மூலம் அமெரிக்க இந்தியர்களைப் பற்றிய

ஆய்வு முறை கால அளவில் ஆழ்நிலையில் அமைந்ததுடன் அதன் கண்ணோட்டம் பரந்த நிலையிலும் அமைந்தது.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை ஆராயும்போது அதன் முற்கால வரலாற்றை ஒதுக்கி விடுவது மலட்டுத் தன்மைக்கு ஒப்பாகும் என போவாஸ் உறுதியாக நம்பினார் ஒவ்வொரு பண்பாடும் தனித்தனியாக பல வரலாற்று நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டே ஒட்டு மொத்தமாக உருவெடுக்கிறது என்றும், வரலாற்றுக் காலத்தில் நிகழ்ந்த பல எதிர்பாரா நிகழ்வுகளாலும் பிற கூறுகளின் சேர்மங்களாலும் ஏற்படுவதே பண்பாடு என்றும் போவாஸ் நம்பினார். நிகழ்காலப் பண்பாட்டுக் கூறுகளின் இயக்கத்தில் வரலாற்றுக் கால நிகழ்ச்சிகள் பெரும் பங்கு பெற்றுள்ளன என்பதால் ஒரு பண்பாட்டுக் கூறின் தன்மையை விளக்க முற்படும்போது அதன் முந்தைய வரலாற்றுப் பின்னணியை முழுவதுமாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அப்போதுதான் அதைச் சிறப்பாக விளக்க முடியும் என்னும் கருத்திலும் போவாஸ் உறுதியாக இருந்தார். வரலாற்றுத் தனி நிகழ்வுகளுக்குப் போவாஸ் முக்கியத்துவம் கொடுத்ததால் அவர் நிலையையும், அவர்தம் மாணவர்களின் நிலையையும் மானிடவியலார் வரலாற்றுச் சார்புக் கொள்கையினர் (historical particularists) எனக் குறிப்பிடுவர்.

போவாஸ் தலைமையிலான அமெரிக்க மானிடவியல் ஒவ்வொரு சமுதாயத்தையும் வரலாற்று அணுகுமுறையுடன் ஆராயும் முறையோடு மேலும் பல தனித்தன்மைகளை வளர்த்துக் கொண்டது. போவாஸ் பரந்த ஆர்வங் கொண்டவராதலால் மொழியியல், உடல்சார் மானிடவியல், தொல்லியல் போன்ற பிரிவுகளின் அறிவைப் பண்பாட்டு ஆய்வுகளில் இணைத்துக் கொண்டார்.

பண்பாடு பற்றிய டைலரின் கருத்தாக்கம் மிகவும் பயனுடையது் அது அனைத்தையும் ஒன்றுபடுத்தி அறிகிறது என போவாஸ் உணர்ந்தார். ஆகவே மானிடவியலில் அனைத்தையும் ஒன்றிணைக்கும் பாங்கினைப் “பண்பாடு“ என்னும் கோட்பாடு கொண்டுள்ளதாக போவாசினர் பிரபலப்படுத்தி அதன் பயனை விளக்கிக் கூறி வந்தனர் “பண்பாடு“ என்னும் கோட்பாடு எவ்வளவு முக்கியமானது என்பதைக்

கணிதவியலின் “சுன்னம்“ (zero) என்னும் கோட்பாட்டோடு ஒப்பிட்டுப்பேசினர். அதனாலேயே அமெரிக்க மானிடவியலானது பண்பாட்டு மானிடவியல் என வழங்கப் பெறலாயிற்று.

அதனையடுத்து, அமெரிக்காவில் விரைந்து பெருகிய மக்கள் தொகையும், அதற்கேற்றாற்போல் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் எண்ணிக்கையில் பெருகியதும் மானிடவியல் துறையின் பணியிடங்களை மிகுதியாக்கின. ஆய்வுப்பரப்பினைப் பெருக்கிக்கொண்ட நிலையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பல்வேறு வகையான புதிய ஆய்வுகளை மேற்கொண்டனர். அதனால் அமெரிக்க மானிடவியலின் ஆய்வுத்தன்மை புதுமையாகவும், முற்றிலும் உண்மையானதாகவும் அமைந்தது. ஓர் ஆய்வைப் போன்ற ஆய்வையே மீண்டும் மீண்டும் செய்தல், செய்து முடித்த ஆய்வு முடிவுகளை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள முயலுதல், பழைய ஆய்வுகளைப் புதிய முறையில் செய்தல் முதலான முறைகளில் அமெரிக்க ஆய்வாளர்கள் ஈடுபடாமல், ஏதாவது புதிதாகச் செய்ய வேண்டுமென எண்ணினர். அதனால் அவர்கள் புதியபுதிய சிக்கல்களை ஆராய்ந்தனர். புதிய உத்திகளைக் கொண்டு சோதனை செய்தனர். ஒரு குறிப்பிட்ட பரப்பிற்குள் ஆய்வுகளைக் குறுக்கிவிடாமல் பரந்த நிலையில் போரட பொலும் ஆராய முனைந்த அமெரிக்க தனித்தன்மையாக அமைந்துவிட்டது.

அமெரிக்கப் மானிடவியலானது உடல்சார் மானிடவியல், இன ஒப்பாய்வில், தொல்லியல், மொழியியல் ஆகிய பிரிவுகளைப் “பண்பாடு“ என்னும் கோட்பாட்டின்கண் ஒன்றிணைத்துப் புதிய முறையியலுடன் ஒரு முழுதளாவிய விரிவான துறையாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

**ஆங்கிலேய மானிடவியல்**

அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலைக் கர்ட்டிலும் இங்கிலாந்தில் வளர்ச்சி பெற்ற சமுதாய மானிடவியல் அதன் பரப்பை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்ட துறையாகும். ஆனால். மிகவும் ஆழ்நிலையிலான ஆய்வுப் பரப்பைக் கொண்டதாகும். அதன் அணுகுமுறை முழுதளாவிய நிலையிலும் மிகவும் ஆழ்நிலையிலும் அமைந்தது.

மாலினோஸ்கியைத் தவிர அனைத்து ஆங்கிலேய மானிடவியலாரும் அமெரிக்கர்கள் பயன்படுத்தும் “பண்பாடு“ என்னும் கோட்பாட்டை எளிதில் கையாள முடியாது எனக் கருதினர். அதனால் அவர்களின் ஆர்வம் சமுதாயக் குழுக்களையும், சமுதாய உறுப்பினர்களிடையே காணப்படும் நிலையான பங்குகளையும் (roles) உறவுகளையும் ஆராய்வதில் மிகுதியானது. அதனாலேயே ஆங்கிலேய மானிடவியல் பெரும்பாலும் “சமுதாய மானிடவியல்“ எனக் குறிக்கப்படும்.

இக்காலச் சமுதாய மானிடவியலின் தந்தையான ராட்கிளி.ஃ.ப் பிரௌன் சமுதாய மானிடவியலைப் பின்வருமாறு குறிப்பிடுவார். (சமுதாய மானிடவியலானது தொன்மைக்குடியினர், பழங்குடியினர், எழுத்தறிவில்லாதார் போன்றோரின் சிறு சமுதாயங்களை முறைப்படியாக ஒப்பிட்டு ஆராய்ந்து அதன்மூலம் மனித சமுதாயத்தின் தன்மையையும் அமைப்பையும் கொள்கை சார்ந்த அளவில் விளக்க முற்படும் அறிவியலாகும்.

சமுதாய மானிடவியலார் சமுதாய உறவுகளைப் (social relations) படிப்பதையே முதன்மையான ஆய்வுப் பரப்பாகச் கொண்டுள்ளனர். குறிப்பாக, குடும்பம், உறவுமுறை, வயது அடிப்படைக் குழுக்கள் (age groups), அரசியல் அமைப்பு, சட்டம், சமயம், பொருளாதாரச் செயல்கள் போன்றவற்றை ஆராய்வர். அவை அனைத்தையும் சமுதாய அமைப்பு (social structure) என்ற பெருந்தலைப்பின் கீழ் ஆராய்கின்றனர் சமுதாய அமைப்பின்கீழ் உள்ள கூறுகளை ஆராயும்போது ஓர் அமைப்பின் கூறுகள் மற்றவையோடு எவ்வாறு சார்புடையதாக உள்ளது என்றும், அது அச்சமுதாய அமைப்பில் எவ்வாறான உறவைப் பெற்றுள்ளது என்றும் விவரிப்பதில் மிகுந்த ஆர்வங் காட்டுகின்றனர். அவ்வகையான ஆய்வுகளில் சமுதாயத்தின் கடந்த கால வரலாறு பயன்படுத்தப்படுவதில்லையாதலால் சமுதாய மானிடவியல் வரலாற்று அணுகுமுறையைப் சாராதது (non- historical). அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியல் இதற்கு நேர்மாறானது என்பதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆங்கிலேயரின் சமுதாய மானிடவியலில் ஒப்பீட்டு முறை (comparative method) உயிர்

மூச்சாக உள்ளதால் இத்துறை சில வேளைகளில் “ஒப்பீட்டுச் சமுதாயவியல்“ (comparative sociology) என்றும் கூறப்பெறும். ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலின் தனித்தன்மைக்கு அதன் வரலாற்றுக் கால வளர்ச்சியே காரணமாகும்.

ஆங்கிலேய மானிடவியலாரின் அணுகுமுறைகள் அவர்களது பேரரசுக் கொள்கையின் தேவைகளை நிறைவு செய்வதாக அமைந்தன. இருப்பினும், ஆட்சியாளர்களின் அனைத்துத் தேவைகளுக்கும் இந்த அணுகுமுறை வேண்டும்போதெல்லாம் பயன்படுத்தப்பட்டது என்றோ அதற்காகவே ஏற்படுத்தப் பட்டதென்றோ கூறமுடியாது. ஆனால், ஆங்கிலேய மானிடவியலார் திணைக்குடிகளின் சமுதாயக் கட்டமைப்பை ஆராய்வதில் பெருமளவு ஈடுபட்டனர். அவர்கள் சொந்த நாட்டிலும் அவர்களின் பேரரசு பரவி இருந்த நாட்டிலும் சென்று ஆய்வு செய்தனர். புத்துலகப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடிகள் அற்றுப்போகும் நிலையிலிருந்தனர். ஆனால் குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினர் அழியும் தருவாயிலில்லை. அவர்களின் மக்கள்தொகை பெரும்பாலும் பெருகிக் கொண்டேயிருந்தது. அதனால் அவர்களைத் தம் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணமே குடியேற்ற அரசு அதிகாரிகளுக்கு இருந்தது. அரசின் அவ்வகையான கொள்கை மானிடவியலாரிடையே பெருகி நின்ற ஆய்வு வேட்கைக்கு ஏற்றதாக அமைந்தது. குறிப்பாக திணைக்குடியினர் எவ்வாறு ஓர் அமைப்பாக உள்ளனர், எக்கூறுகள் அவர்களை ஒன்றாக வைத்துள்ளது போன்ற சமுதாய அமைப்புப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டனர். குடியேற்ற அரசுகள் திணைக்குடிகளை வளர்ச்சிக்கு உட்படுத்தாமல் ஒரே நிலையாக வைத்திருந்தது என்ற கருத்தை மானிடவியலார் கூறத் தவறியதில்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொண்டு செயற்பாட்டியல் (functionalism) அணுகுமுறையில் ஆராய் இந்நிலை மிகவும் உகந்ததாக இருந்தது. அதனாலேயே ஆங்கிலேய வினிடவியல் செயற்பாட்டியல் சார்ந்ததாக வளர்ச்சிபெற்றது.

இங்கிலாந்து மானிடவியலின் கல்விசார் துறை பரந்து விரிந்த நிலையில் இல்லாமல் ஓரளவு குறுகிய நிலையிளைக் கொண்டதாகும். மானிடவியலில்

உயர்கல்வி அளிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையையும், உயர் கல்விக்கடுத்துச் செல்ல வேண்டிய பணியிடங்களின் வாய்ப்பையும், துறையின் விரிவாக்கத்தையும் நோக்கினால் அமெரிக்காவைவிட இங்கிலாந்தில் அதன் அளவு குறைவாகும். இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களில் பணியிடங்கள் குறைவாக உள்ளது போன்றே கல்விசார் நிலையிலும் பல வேறுபாடுகள் உள்ளன. பெரும்பாலான இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களுக்கு இணையாகப் பலர் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஒரு துறையில் முதியோர்கள் பணி விலகும்போது மட்டும் நிரப்பப்படும். பணியிடங்களும் விலகிச் செல்வோரின் ஆலோசனையின்பேரில் அவர்களுக்குப்பின் அந்தப் பதவியை ஏற்பவர் யார் என முடிவு செய்யப்படுகின்றது. அதனால் இளம் ஆய்வாளர்கள் பொறுப்பிலுள்ளோரைத் திருப்திப்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. அதோடு முதியோர்கள் ஈடுபடாத புதிய ஆய்வுப் பரப்புகளில் ஈடுபடுதலும் கூடாது.

இந்நிலையில் அமெரிக்க மானிடவியலின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது அதன் அணுகுமுறை புதியதாகவும், ஆய்வுகள் தனித்தன்மையானதாகவும், புதிய கோணத்தைக் கொண்டதாகவும், செய்த ஆய்வுகள் சோதித்துப் பார்ப்பதாகவும் அமைந்ததேயாகும். ஆனால் இங்கிலாந்து மானிடவியலின் அணுகுமுறையில் பழைய சிக்கல்களை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்தல், பழைய கொள்கைகளை மீண்டும் விரிவாக ஆராய்ந்து விளக்குதல் போன்றவையே பெரும்போக்காக அமைந்தன. அவையே அவர்களின் சாதனையாகவும், சிறப்பிடம் பெறுவதற்கான முறையாகவும் கருதப்பட்டன. அவ்வகையான நிலைக்கு ஆங்கிலேய அரசும் ஒரு வகையில் பொறுப்பாகும்.

ஆங்கிலேய அரசின் தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்ய வேண்டியிருந்ததால் ஆங்கிலேய மானிடவியலில் சமுதாயச் குழுக்களைப் பற்றி அறிவதையே மேலும் மேலும் விரிவாக்க வேண்டியிருந்தது. அதோடு வேலை வாய்ப்பில் குறைவான இடங்களே இருந்ததாலும், முதிய மானிடவியலாரைத் திருப்திப்படுத்தும் முறையில் இளையவர்கள் நடந்து கொள்ள வேண்டியிருந்ததாலும்

புதிய பரப்புகளில் ஆய்வுகள் பெருகவில்லை. அதன் விளைவாக ஆங்கிலேய மானிடவியலார் உறவுமுறை ஆய்வுகளிலும், சமுதாய அமைப்புப் பற்றிய ஆய்வுகளிலும் மிகவும் ஆழ்நிலையில் ஆராய்பவர்கள் என்ற பெயருக்கு இலக்கணமானவர்களாய்த் திகழ்ந்தனர். அதனால் அவர்கள் பண்பாட்டு வரலாற்றியல் ஆய்வுகள், பண்பாட்டிடை நிலையில் உளவியல் ஆய்வுகள் முதலானவற்றைப் பெருமளவு ஒதுக்கிவிட்டனர்.மூ இங்கிலாந்தில் மானிடவியல் துறைகளில் உடல்சார் மானிடவியல், தொல்லியல் ஆகிய பிரிவுகள் சேர்க்கப் படாமல் அவை உயிரியல் போன்ற துறைகளில் சேர்க்கப் பட்டுள்ளன அல்லது தனித்துறைகளாக இயங்குகின்றன அவ்வாறே அமெரிக்க மானிடவியலுக்கென்ற ஆய்வுப் பரப்புகளிலும் ஆங்கிலேயர்கள் ஆய்வுகள் மேற்கொள்வதைத் தவிர்த்து வந்தனர். இன்றும் இங்கிலாந்தில் சமுதாய மானிடவியலின் தனித்தன்மை பெருமளவு காக்கப்பட்டு வருகிறது.

சமுதாய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல் ஆகிய இரண்டும் தனித்தனி நிலையில் காணப்பட்டாலும் அவை இனவரைவியல், இனஒப்பாய்வியல் ஆகிய இரு உட்பிரிவுகளின் அடித்தளத்தின் மீது செயல்படுகின்றன.

**வினாக்கள்**

1. மானிடவியல் உட்பிரிவுகள் யாவை?
2. படிமலர்ச்சி - விளக்கம் தருக.
3. இனவியல் - விளக்கம் தருக.
4. பயன்முறை உடல்சார் மானிடவியல் குறித்து எழுதுக.
5. தொல்லியல் என்றால் என்ன? விளக்குக.
6. மானிடவியலில் மொழியியலின் பங்கினை கூறுக.

## அலகு - 3

### சமுதாய முறை

மனித இனத்தில் இருப்பதைப் போன்று வேறு எந்த ஓரி உயிரினத்திலும் உயி எண்ணற்ற உத வேறுபாடுகள் மலிந்து அடக்கவில்லை. இந்த எண்ணற்ற உயிரியல்சாரா வேறுபாடுகித்து மையமாகக் கொண்டே மனித இனத்தின் வாழ்க்கைப் போடுகளை உடந்து கொண்டிருக்கிறது மனித இனத்தின் படிமலர்ச்சியில் ஒரு உறுப்பினர்களிடையே தசில் எல்பட்ட இவ்வேறுபாடுஒரு சமநிலையின்மையையும் உயர்வு தாழ்வையும் ஏற்படுத்தின. இத்தன்மையின் அளவு வெவ்வேறு காலங்களில் சமுதாயம் பல அமைப்புகளாகப் படிமலர்ச்சி யடைந்தபோது மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ விரிவுபெற்றது.

படிநிலை அமைப்புடைய சமுதாயமுறை அனைத்து மக்களிடமும் உள்ளதா என்ற கேள்வி இன்றளவும் விவாதத்துக்குரியதாக உள்ளது.) அனைத்து வகையான மக்களிடமும் (சமுதாயத்திலும்) படிநிலை அமைப்பு ஏதோ ஒரு வகையில் இடம்பெற்றுள்ளது என்று ஒரு குழுவினர் உறுதிபடக் கூறுகின்றனர். இதில் சமுதாயவியலாரே பெரும் பங்கு வகிக்கின்றனர். கிங்ஸ்லி டேவிஸ், வில்பர்ட் மூர் ஆகியோரின் கருத்துப்படி வர்க்க அமைப்பில்லாமலோ படிநிலை அமைப்பில்லாமலோ எந்த ஒரு சமுதாயமும் இல்லைல செயற்பாட்டியல் முறையில் கூற வேண்டுமானால் எந்த ஒரு சமுதாய அமைப்பும் அதன் செயற்பாட்டு நிலையில் ஏதோ ஒரு வகையான சமநிலையின்மையைக் (inequality) கொண்டிருக்கும். இது ஓர் உலகளாவிய விதியாகும் என இவர்கள் கூறுவர்."

சமுதாயவியலார் இவ்வகையான தம் முடிவிற்குச் சில அடிப்படைக் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். சமுதாய உறுப்பினர்களின் வயது, பால், அவர்களின் செயல் திறன் போன்றவற்றில் காணப்படும் வேறுபாடுகளைக் கூடச் சமநிலையின்மைக்கும் படிநிலைக்கும் காரணமென இவர்கள் சுட்டிக் காட்டுவர். சில

சமுதாயவியலார் ஒவ்வொரு  சிறிய சமநிலையின்மைக் கூறும் படிநிலை அமைப்பிற்கு வகை செய்கிறது என்பர்.

சமுதாயவியலாரின் மேற்கூறிய கழுத்து ஒருபுறமிருக்க, மானிடவியலார், “சமுதாயச் சமத்துவம் (egalitarianism) அல்லது. மாத்துவச் சமுதாயம்“ (egalitarian society) இன்றும் நிலவுகிறது. எமதர். இவ்வகையான சமுதாய முறை வேட்டையாடி உணவு சேகரிக்கும் மக்களிடம் உள்ளது என்றும் இவர்களிடையே ஒவ்வொரு தனி மனிதனும் பொருளாதார, சமுதாய தகுதி நிலைகளில் சமமான வாய்ப்புப் பெறும் நிலை உள்ளது என்றும் கூறுவர்.

சமுத்துவச் சமுதாய முறையிலிருந்து விரிவடைந்த பிறசமுதாய முறைகளில் வர்க்கங்களும் படிநிலைகளும் ஏற்பட்டன. இக்காலத் தொழிற் சமுதாயங்களில் அவரவர் செய்யும் தொழிலின் உட்பிரிவுகளின் தன்மைக்கேற்பச் சமநிலையின்மையும் உயர்வு தாழ்வும் நிலவுகின்றன. ஒத்த தன்மையுடைய தொழிலைச் செய்வோர் அனைவரும் சமுதாயத்தில் ஒரு தனிக்குழுவாக மதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு சமுதாயக் குழுவிற்கென்றும் ஒரு தகுதி (status) நிருணயிக்கப்படுகின்றது. இத்தகுதி சமுதாயக் குழுக்களிடையே உள்ள வேறுபாட்டைப் பொறுத்து அமைகிறது. இவ்வாறு மக்கள் அவரவருக்கென்று ஏற்படுத்திக் கொள்ளும் தகுதியானது, சமுதாய உறுப்பினர்களைப் பல தரப்பிரிவுகளாகப் (ranks) பிரித்து, அதன்மூலம் உயர்வுதாழ்வுடைய பல படிநிலைகளை (hierarchy) ஏற்படுத்துகிறது. இதுவே சமுதாய அற4 (social stratification) என்னும் நிலையை ஏற்படுத்திவிடுகிறது.?

மானிடவியலார் மனித சமுதாயங்களில் வர்க்க முறைகளைப் புரிந்து கொள்வதிலும், சமுதாய அமைப்பில் காணப்படும் படிநிலை முறைகளைப் புரிந்து கொள்வதிலும் செய்த முயற்சியின் விளைவாக, இன்றைய சமுதாய முறைகளை மூன்று வகைகளாக இனம் பிரித்துக் காண்கின்றனர். அவை:

1. சமத்துவச் சமுதாயங்கள் (egalitarian societies)
2. தரநிலைச் சமுதாயங்கள் (rank societies)

3. வர்க்கச்.'.சாதிச் சமுதாயங்கள் (class/caste societies)

**சமத்துவச் சமுதாயங்கள்**

மனித இனத்தின் சீர உயிரியல் படிமலர்ச்சியும் பண்பாட்டுப் படிமலர்ச்சியும் ஒரு சீரான வளர்ச்சிப் பாதையைக் கொண்ட்டுப் களிய நிலையில் தொடங்கி, காலப்போக்கில் பல சிக்கல் வாய்ந்த பல மலர்ச்சியானது கலப்பு (complex) நிலைகளாக மாறி, அது மேன்மேலும் எளிமையற்ற போக்கை வளர்த்துக் கொண்டது. (சமுதாயப் படிமலர்ச்சிக்கும் இக்கூற்று பொருந்தும். முன்னர்க் குறிப்பிட்டது. போன்று தொடக்கத்தில் சமத்துவச் சமுதாயங்களும், அதன்பின்னர்த் தரநிலைச் சமுதாயங்களும், அதன் பின்னர் வர்க்கச் சமுதாயங்களும் ஏற்பட்டன. இவற்றுள் சமத்துவச் சமுதாய முறையானது, முதலில் குலக்குழு அமைப்பாகவும் (band organization) பின்னர்ப் பழங்குடி அமைப்பாகவும் (tribal organization) படிமலர்ச்சியடைந்தது. ஒவ்வொன்று குறித்தும் இங்குக் காண்போம்

**குலக்குழு**

இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் சிறு சிறு குலக்குழுக்களாக (bands) அமைந்து வாழ்ந்தனர் - இக்குலக்குழுக்கள் மண உறவாலும் உறவுமுறையாலும் பிணைக்கப்பட்ட சில குடும்பங்களைக் கொண்டனவாக இருந்தன. இவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாகவும் குழுவின் அளவு சிறியதாகவும் இருந்தது. ஒவ்வொரு குலக்குழுவும் தன்னளவில் தற்சார்புடையதாகவும் தனித்துச் செயற்படக் கூடியதாகவும் (autonomous) விளங்கியது. வேளாண்மை தோன்றிய காலம் வரை அல்லது 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் வரை ஏறக்குறைய அனைத்துச் சமுதாயங்களும் குலக்குழுக்களாக வாழ்ந்தன என்று மானிடவியலறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

இன்றும் வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் பல மக்களிடம் (hunting and food - gathering people) குலக்குழு அமைப்பு அமைப்பு நிலவுகிறது.

வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் வாழ்க்கைப் பொருளாதாரமாகக் (subsistence (economy) கொண்ட இவர்கள், மண்ணில் புதைந்து கிடப்பனவற்றையும் (கிழங்கு வகைகள்), நிலத்தின் மேற்பகுதியில் கிடைப்பனவற்றையும் (காட்டுச் விலங்குகளை வேட்டையாடுதல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல்), நீரில் கிடைப்பனவற்றையும் (மீனும் பிற நீர்வாழ் உயிரினங்களும்) ஈட்டும் தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளனர். இவ்வகையான தொழில் நுட்பத்தை நிலையாகத் தங்கி வாழ்தல் இயலாது ஒரு வகையில் தொடர்ச்சியாகவோ முறைப்படியான பருவக்காலத்திற்கேற்பவோ இடம்விட்டு இடம் மாறி இயற்கையின் ஆதாரங்களைத் திரட்டுவர்.

பொதுவாகக் குலக்குழு அமைப்புடைய மக்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. மக்கள் தொகை அடர்த்தியும் (நெருக்கம்) இவர்களிடம் குறைவு. ஜூலியன் ஸ்டீவார்டு மேற்கொண்ட ஆய்வின்படி குலக்குழு அமைப்புடைய மக்களின் அதிக அளவு மக்கள் நெருக்கம் 5 சதுர மைல்களுக்கு ஒருவராகவும் குறைந்த அளவு 50 சதுர மைல்களுக்கு ஒருவராகவும் உள்ளனர்? ஒரு குலக்குழுவின் எண்ணிக்கையும் அளவும் அக்குழுவினர் எந்த அளவு வள ஆதாரங்களை ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் ஈட்ட முடிகிறது என்பதைப் பொறுத்து அமைகிறது. மார்ட்டன் ∴பிரீடு குலக்குழு அமைப்புடைய மக்களின் எண்ணிக்கை குறித்து மேலும் சில விவரங்களைக் குறிப்பிடுகிறார். அமேசான் வடிநிலப் பகுதிகளில் வாழும் குவாயாக்கி (Guayaki) மக்களின் ஒவ்வொரு கூட்டமும் ஏறக்குறைய 20 பேர்களைக் கொண்டதாகவும், மலாய் நாட்டுப் பகுதியில் வாழும் சீமாங்கு (Semang) மக்களின் கூட்டம் 50 பேர்களைக் கொண்டதாகவும், தென் அமெரிக்காவின் பட்டகோனிய தெகுல்சேக்களின் (Paragonian Tehuelche) கூட்டம் 400 முதல் 500 பேர்களைக் கொண்டதாகவும் உள்ளன. தெகுல்சேக்களின் எண்ணிக்கையே மற்றக் குழுக்களைக் காட்டிலும் மிகுதியான எண்ணிக்கை கொண்டதாக உள்ளது.இக்குழுக்கள் அனைத்தும் பருவக் காலங்களுக்கேற்ப அளவில் வேறுபடுகின்றன. உணவு ஆதாரங்களின் அளவைப் பொறுத்துக் குலக்குழுக்கள் அப்போதைக்கப்போது மேலும் பல சிறிய

குலக்குழுக்களாகப் பிரிவதும் பின்னர் மீண்டும் ஒன்று சேருவதும் உண்டு. எஸ்கிமோக்கள், குளிர் காலங்களில் உணவின் அளவு குறையும்போது சிறிய சிறிய குழுக்களாகப் பிரிந்து உணவைத் தேடுகின்றனர். கோடைக் காலங்களில் உணவு ஆதாரங்கள் பெருகும்போது பிரிந்த குழுவினர் அனைவரும் ஒன்று சேர்ந்து பெரும் குலக்குழுவாகச் செயற்படுகின்றனர்.

குலக்குழு அமைப்புடைய சமுதாயங்கள் அனைத்தும் சமத்துவச் சமுதாய அமைப்பைக் கொண்டவை. மக்கள் அனைவரும் அவரவர் பகுதிகளின் வள ஆதாரங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்வர். சமுதாயத்தில் அனைவரும் ஒரே விதமான தகுதியைப் பெற்றிருப்பர். தனிப்பட்டோர் சொத்து என்னும் சுருத்து நிலவினால் அது குலக்குழுவினர் அனைவருக்கும் சொந்தமானதாக இருக்கும். சொத்துடைமை ஆகவே, அனைவரும் அனைத்தையுமதிர்ந்து கொள்ள வேண்டும். செபதே இவ்வகைச் சமுதாயத்தில் நிலைபெற்றுள்ள கோட்பாடாகும்.

**பழங்குடி அமைப்பு**

இன்றைக்கு ஏறத்தாழ 9,000 ஆண்டுகளுக்கு முன்னர்க் கூட்ட அமைப்பிலிருந்து சற்று மாறுபட்ட "பழங்குடி அமைப்பு" (tribal organization) என்னும் சமுதாய முறை தோன்றியதாகக் கீழ்த்திசை நாடுகளில் கிடைத்த தொல்லியல் விவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வகை முறை பெரு (Peru) பகுதியில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னரும், இடைக்கால அமெரிக்காவில் 3,300 ஆண்டுகளுக்கு முன்னரும் தோன்றிற்று.

பழங்குடியமைப்பானது குலக்குழு அமைப்பைக் காட்டிலும் பெரியது. இதில் ஒரு பொதுவான குடிவழியைக் கொண்ட பல குடும்பங்கள் அல்லது குலங்கள் (clans), கால்வழிகள் (lineages) போன்ற உறவுக் குழுக்கள் இடம்பெற்றன. தொடக்கத்தில் அனைவருக்கும் பொதுவான தலைவன் என்ற முறை வலுவடையவில்லை. குடும்பங்களே அனைத்துச் செயற்பாடுகளிலும் முக்கியமாகக் கருதப்பட்டதால் குடும்பத் தலைவர்கள் முக்கியப் பொறுப்பேற்றிருந்தனர். தொடக்கத்தில் ஒவ்வோர் உறவுக் கூட்டமும் நிலத்தைப்பொதுவாகக் கொண்டிருந்தது. இவர்கள் நிலைத்தையே நம்பிவாழ

முற்பட்டதால் ஒவ்வொரு குழுவும் நிலப்பகுதியை வரையறுத்துக் கொண்டது. அதனால் வழிவழியாக வரும் குடிவழியும் அவரவருக்குரிய நிலமும் சமுதாய வாழ்வில் முக்கிய இடம் பெற்றன. இதற்கான சான்றுகள் கீழ்த்திசைக் கிராமங்களில் தொல்லியல் ஆய்வு செய்தபோது கிடைத்தன. ஒவ்வொரு குடிவழியைச் சேர்ந்த வீடுகளின் கீழ்த் தலைமுறை வாரியாக மண்டையோடுகள் வரிசையாகக் கிடைத்தன.

பழங்குடிச் சமுதாய அமைப்பில் தரநிலைகளோ படிநிலைகளோ இல்லை. தகுதி, மதிப்பு மட்டுமே சில தனியாட்களிடம் வேறுபடுகின்றன. இத்தகுதியும் மதிப்பும் கூடத் தொழிலளவில் ஏற்படுவதில்லை. அவரவர் கொண்டுள்ள திறமையால் மட்டுமே ஏற்படுகிறது. அனைவரும் ஒரே வகையான தொழிலைச் செய்வர். ஒருவன் சிறந்த வேட்டைக்காரனாக இருக்கலாம். அதற்காக அவன் மதிக்கப்படுவான். அப்பண்பு இருக்க செல்வதன்று. சிறந்த வேட்டைக்காரனுக்குப் பிறக்கும் மரபுள் எதிர்மாறாகவும் இருப்பதற்கு வாய்ப்புண்டு. ஆகவே மதிப்பு என்பது சமமின்மைக்கு எந்த வகையிலும் வழிகோலுவதில்லை. இந்நிலையில் இவர்களிடம் வேறுபாடு சிலவகையில் மட்டுமே நிலவுகிறது. அவை வயது, பால் ஆகியவற்றைப் பொறுத்து அமையும். வயது, பால் ஆகிய வேறுபாடுகள் தொழிற் பகுப்பிலும் பிற சமூகப் பொருளாதாரச் செயல்கள் செய்வதிலும் மட்டுமே வேறுபாட்டை ஏற்படுத்தும்.

மாந்தரீகன் (shaman), சமயச் சடங்குகள் செய்வோர் ஆகியோர்கூட மந்திரம், சடங்குகள் செய்யும் காலங்களில் மட்டுமே தனித்தன்மை பெற்றவர்களாகக் கருதப்படுவர். ஏனைய காலங்களில் அவர்களும் மற்றவர்களைப் போன்று வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், வேளாண் பணியில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்வர். தலைமை முறை (leadership) கூடச் சிக்கல்கள் ஏற்படும் காலங்களில் மட்டுமே செயற்படுகிறது. இதனை ஒரு நிலையான அமைப்பாக ஏற்படுத்தி அதன் பொறுப்புகளைக் கவனிக்கும் பொருட்டுச் சிலர் பொருளாதாரப் பணிகளைச் செய்வதிலிருந்து ஒதுங்கிவிடுவதில்லை. அதனால் எந்த வகையிலும் ஒரு பிரிவினர் மற்ற பிரிவினர் மீது ஆதாயம் தேடும் வகையில் செயற்படுவது கிடையாது. வர்க்க அமைப்பில்லா இவ்வகைப் போக்கிற்குக் காரணம் செய்யும் தொழிலில் விரிவு

ஏற்படாததேயாகும். குறிப்பிட்ட சில தொழில்களை மட்டுமே அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. பழங்குடியமைப்புடைய சமத்துவச் சமுதாயத்தினர் எளிய தொழில் நுட்பத்தைக்கொண்டு இயற்கையின் ஆதாரங்களை நம்பி வாழ்வதால் இவர்கள் பெரும்பாலும் குறைவான எண்ணிக்கையுடையவர்களாய் உள்ளனர்.

மத்திய ஆப்பிரிக்காவில் வாழும் இம்புத்திக் குள்ளர்கள் (Mbuti pygmies) சமத்துவச் சமுதாயத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாவர். சடங்குகள், வேட்டை, உறவுமுறை போன்ற எந்த ஒரு நிலையிலும் அவர்களிடம் சமமின்மையோ தரப்பிரிவுகளோ இல்லை. அவர்களின் வேட்டைக் குழுக்களுக்குத் தலைவர்கள் இல்லை. வேட்டைப் பொருள்களும் பிற உணவுப் பொருள்களும் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இவ்வகைப் பண்பே சமத்துவச் சமுதாயத்தின் சிறப்புப் பண்பு என மானிடவியலார் சுட்டிக்காட்டுவர். சமத்துவச் சமுதாயம் பகிர்ந்து கொள்வதை (sharing) அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையைக் கொண்டது. இது சமநிலையின்மையை ஒதுக்கிவிடுகிறது் உறவுப் பிணைப்பை வலுப்படுத்துகிறது் “நாம்“ என்ற உணர்வை மேலோங்கச் செய்கிறது. இவ்வகை உறவு வர்க்கச் சமுதாயங்களில் இல்லை என்பது இங்கு எண்ணிப் பார்க்க வேண்டியதாகிறது.

ஆப்பிரிக்கப் பழங்குடிகளுள் ஒன்றான குங் புஷ்மன் (Kung Bushman) சமுதாயம் ஓரளவு எளிமையற்ற சமூக அமைப் பிணைக் கொண்டது. இவர்களிடையே ஒவ்வொரு குழுவும் தலைவனைக் கொண்டுள்ளது. ஆனால், தலைவர்கள் அதிகார முறை கொண்டவர்களல்லர். மக்கள் அனைவரையும் மூன்றுபடுத்தும் ஒரு பொது மனிதராக மட்டுமே அம் மதிக்கப்படுகிறார். ஒரு வெளியார் புஷ்மன் பகுதியில் உள்ள தண்ணீரக் குழியில் (water hole) நீர் எடுக்க வேண்டுமாயின் தலைவனின் அனுமதி பெற வேண்டும். தலைவனும் மறுப்பதில்லை. அவ்வாறே தலைவர் பதவியானது வேட்டைக் குழுவுக்குத் தலைமையேற்று நிருவகிக்கும் பொறுப்பு பெற்றதுமாகாது. வேட்டைக்குச் செல்வோரே அனைத்தையும் கவனித்துக் கொள்வர்.

சில பழங்குடிச் சமுதாயங்களில் உள்ள வயது அடிப்படைக் குழுக்கள் (age-sets) சமுதாயத்தில் படிநிலையமைப்பை ஏற்படுத்துகின்றன என்று எண்ண முடியாது. இளையோர் குழு முதல் முதியோர் குழு வரை ஒவ்வொரு குறிப்பிட்ட வயதினரும் பல குழுக்களாகச் செயற்பட்டு அந்தந்த வயதிற்கேற்பச் சமுதாயப் பொருளாதாரப் பணிகளைக் கவனிக்கின்றனர்.

இன்று சில பழங்குடிச் சமுதாயங்கள் முடியாட்சித் தான்மையுடைய தலைமை முறையையும் (chiefdoms), அரசுகளையும் (state) கொண்டுள்ளனவாதலால் அவை எவ்வாறு சமத்துவச் சமுதாய முறையில் அடங்கும் என எண்ண வாய்ப்புண்டு. அவ்வகைச் சமுதாயங்கள் பழங்குடிச் சமுதாய முறையிலிருந்து அடுத்த கட்டமான தரநிலைச் சமுதாயத்திற்கோ வர்க்கச் சமுதாயத்திற்கோ மாறும் நிலையை எட்டியுள்ளதாகக் கொள்ள வேண்டும். சமுதாயப் படிமலர்ச்சியில் அதன் வளர்ச்சி நிலைகளை இணைக்கும் அல்லது அதன் தொடர்ச்சியைக் காட்டும் வகையில் பல சமுதாயங்கள் உள்ளன. அவ்வாறான இணைப்பு நிலையைக் குறிப்பனவாக மேற்கூறிய எடுத்துக் காட்டைக் கொள்ள வேண்டும்.

**“பழங்குடி - மேலும் சில விளக்கங்கள்**

மானிடவியலில் பெருவழக்காகப் பயன்படுத்தப்படும் 'tribe“ என்னும் சொல் இலத்தீன் மொழியில் “மூன்றில் ஒன்று“ (onethigd) எனப் பொருள்படும். அதாவது, உரோம் நகரை மூவர் ஒன்று கூடி நிறுவினர் என்பதும் அதில் ஒருவரைக் குறிக்கப் “பழங்குடி (tribe) என்னும் சொல் வந்ததென்பதும் ஒரு வழக்கு. பழங்குடி என்னும் பொருளுடைய சொல் முதன் முதலில் எபிரேயர்களை குடி என்னும் பெயன்பட்டது. எபிரேயர் கள் குழுக் 1000 ஆண்டு வரை குட்டுக்கோப்பற்ற எளிய நிலையில் 12 குழுக்களாக வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவும் தங்கள் குடிவழியை ஜேக்கபின் (Jacob) 2 புகல்வர்களோடு தொடர்புபடுத்திக் கொண்டது. ஜேக்கப் அவர்கள் அனைவருக்கும் பொது மூதாதையராக விளங்கினான். அதன்பின் அக்குழுக்கள் இஸ்ரேலின் 12 பழங்குடிகள் எனவும் கூறப்பட்டன. அதன் பின்னரே “பழங்குடி“ என்னும் சொல்

பொதுவான அதாதையாரிடமிருந்து தோன்றிய பல குடும்பங்களைக் கொண்ட எந்த ஒரு குழுவையும் குறிக்கும் சொல்லாயிற்று.

பழங்குடி என்னும் சொல் தொடக்கக் காலங்களில் அரசியல் குழுக்கள் அல்லது பிரிவுகள் என்னும் பொருளையும் கொண்டிருந்தது. பண்டைய ரோம் அரசில் 35 பழங்குடி உயர்குலக் குழுக்கள் (patrician orders) ஒவ்வொரு வட்டாரத்தை ஆளும் உரிமையைப் பெற்றிருந்தன. ரோமானியப் பகுதியுடன் ஒன்றியிருந்த அவர்கள், கி.மு. 241க்குப் பின்னர் முடியாட்சி ஏற்பட்ட காலத்தில்கூட அரசியல் ஆலோசகர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அதன்பின்னர் உரோமானியர் கைப்பற்றிய பண்டைய பிரஞ்சு நாட்டின் (Gallic) சில குழுவினரையும், ஜெருமனி நாட்டின் சில குழுவினரையும் இச்சொல்லைக் கொண்டே குறிப்பிட்டனர். அந்த ரோமானிய, ஜெருமானியப் பழங்குடிகள் அனைவரும், தந்தைவழிக் குழுவினராகவும், பொதுவான பெயரையும் நிலப்பரப்பையும் தலைவனையும் கொண்டவராகவும் இருந்தனர்.

பல ஐரோப்பிய நாட்டினர் கி.பி. 1400 களில் ஆப்பிரிக்கா, ஆசியா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் குடியேற்ற அரசுகளை ஏற்படுத்தினர். அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களை ஐரோப்பியர் அடிக்கடி “பழங்குடிகள்“ என்றே குறிப்பிட்டனர். ஒவ்வொரு பழங்குடி இனத்தவரும் பொருளாதாரம், சமுதாய அமைப்பு, அரசியலமைப்பு, சமயம் முதலான அனைத்திலும் மிகுந்த வேறுபாடுகளைப் பெற்றிருந்தனர். அவர்களின் வாழ்க்கை முறையை வெள்ளையர்கள் காட்டுமிராண்டித்தனமானது என எண்ணினர். சில மேம்பட்ட குழுவினரையும் பழங்குடி என்றே ஐரோப்பியர்கள், குறிப்பிட்டனர். அதற்குக் காரணம் ஒருவரோடு ஒருவர் தொடர்பற்றுத் தனித்தனியாக வாழ்ந்ததால் அவர்கள் அனைவரையும் ஒரே பெயரில் குறிப்பிட வேண்டுமென்று ஐரோப்பியர்கள் விரும்பியதேயாகும்.

குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தொழில்நுட்பத்தில் ஐரோப்பியர்களைக் காட்டிலும் குறைந்தவர்களாக இருந்ததால் அவர்களைத் தொன்மையானவர்கள் என்றும் கூறினர். அது முதற்கொண்டு காலத்தினூடே பழங்குடி

என்னும் சொல் தொன்மையான குழு“ (primitive group) என்ற பரந்த பொருளுடைய வழக்காக மாறிவிட்டது. இவ்வகை வழக்கு ஏற்பட ஆங்கிலேயர்களே காரணமாவர்.

இவ்வகைக் குழப்பத்திற்கிடையில் மானிடவியலார் பழங்குடி பற்றி ஒரு தெளிவான வரையறையை வகுத்துக் கொண்டு சமுதாய முறைகளைப் பகுத்து ஆராயத் தொடங்கினர்.

“பழங்குடி“ அமைப்பிற்கென்று சில தனித்தன்மைகள் உள்ளன. அவற்றின் அடிப்படையிலேயே ஒரு குடியைப் பழங்குடி எனக் குறிப்பிட வேண்டும் என மானிடவியலார் உறுதியாகக் கூற முற்பட்டனர். ஒரு பழங்குடியைச் சேர்ந்த அனைவரும் குறிப்பிட்ட நிலப் பகுதிக்குள் வாழ்வர். அந்த நிலப்பகுதி துண்டு துண்டாகச் சிதறிக் காணப்படாமல் ஒரு தொடர்ச்சியைக் கொண்டிருக்கும். அந்நிலப் பகுதிக்குள் வாழும் அனைவரும் ஒருபொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றியவர்கள் என்று எண்ணுவர். அதனால் அனைவரும் பொதுவான பெயரைக் கொண்டிருப்பர் அனைவரும் ஒரே மொழியைப் பேசுவர் பொதுவான பண்பாட்டைக் கொண்டவர்களாய் இருப்பர். அதனால் சமுதாய, பொருளாதார, சமய, அரசியல் போன்ற ஒவ்வொரு பண்பாட்டு நிறுவனமும் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும். பழங்குடி என்னும் நிலையில் அனைவரும் அகமண (endogamy) முறையைக் கொண்டவர்கள். எனினும் சமுதாய அமைப்பில் பல புறமணக் குழுக்களும் இடம்பெற்றிருக்கும். ஒரு பழங்குடியைச் சேர்ந்த அனைவரும் ஓரினத்தவர் என்ற உணர்வும், “நாம்“ என்ற உணர்வும் (we feeling) மிகுந்தவர்களாய் இருப்பர். அதனால் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கட்டுப்பாடும் கொண்டவர்களாய் திகழ்வர்.

பழங்குடி பற்றிய மேற்கூறிய கருத்துக்களுடன் அவற்றோடு தொடர்புடைய, முது பழங்குடி (aboriginal tribe) ஆதிக்குடி அல்லது தொல் பழங்குடி (primitive tribe), தொன்மைச் சமுதாயம் (primitive society), எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம் (preliterate society) ஆகிய சொற்களின் வரையறைகளையும் உடன்காணுதல் தெளிவான கருத்திற்கு வழிகோலும்.

பழங்குடி என்பதை மஜும்தார் பின்வருமாறு வரையறை செய்கிறார் : ”பொதுவான பெயரையும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையையும், ஒரே மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில் அல்லது பணியில் சில விலக்குகளைக் கொண்டுவிளங்கும் தன்மையையும் உடையவராய் ஒருவருக்கொருவர் கடப்பாடுடனும், பொருள்களைப் பரிமாறிக் கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுதியே பழங்குடியாகும்”

பழங்குடியின் அனைத்துப் பண்புகளையும் ஏற்கும் ஒரு பழங்குடியினர், மிகத் தொடக்கக் காலம்முதல், அவ்விடத்திலேயே காணப்படின் அப்பழங்குடி “முதுபழங்குடி“ என்று கூறப்படும். இவர்கள் வாழும் நிலப்பரப்பிற்கு முதன்முதலில் குடியேறியவர்களாக இருப்பதால் இவர்களின் பழைமை பல நூற்றாண்டுகளைக் குறிப்பிடும்படியாக இருக்கும். இதனால் இவர்கள் மண்ணின் மைந்தர்கள் (autochthon) என்றும் கூறப்படுவர். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே இடம் பெயர்ந்து தங்கள் வாழிடத்தை அமைத்துக் கொண்டிருக்கும் பழங்குடியினர் “தொல் பழங்குடியினர்“ ஆவர். அதாவது, இப்பழங்குடியினர் தாம் வாழும் நிலப்பரப்பிலேயே தோன்றியவர்களாக இருக்கமாட்டார்கள். முது பழங்குடியினர், தொல் பழங்குடியினர், பழங்குடியினர் ஆகியோர் எழுத்தறிவு தோன்றுவதற்கு முந்தைய காலத்திலிருந்து வாழ்ந்து வருவதால் இவர்கள் “எழுத்தறிவிற்கு முந்தைய சமூகத்தினர் என்றும் சொல்லப்படுவர்.

மேலும், குற்றம் செய்வதை முதன்மைத்தொழிலாகக் கொண்டிருந்தவர்களைக் குற்றவாளிப் பழங்குடி (criminal tribe) எனவும், இத்தொழிலை விடுத்து வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள இன்றைய நிலையில் இவர்களை முன்னாள் குற்றவாளிப் பழங்குடி, (ex - criminal tribe) எனவும், குற்றத் தொழிலிலிருந்து விடுபட்டவர்களைக் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி, (denotified tribe) எனவும் குறிப்பிடுவர். இன்று பின்தங்கிய நிலையில் வாழும் பிற்பட்ட மக்களைத் தனியாகப் பிரித்து அவர்களுக்குத் தனிச் சலுகைகளையும் நல்வாழ்வுத் திட்டங்களையும் செயற்படுத்த இந்திய அரசியலார், நிருவாக வசதிக்காக வகைப்படுத்தம் பழங்குடிப் பிரிவினர் வரைஅறுக்கப்பட்டப் பழங்குடி (scheduled tribe) எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சொல் வழக்கில் உள்ள சிக்கல்கள் : பொது வழக்கில் “பழங்குடி“ என்னும் சொல் தொன்மை நிலையினையும், குன்றிய பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் குழுவைக் குறிக்கிறது. பொருத்தம் பெறாத கூற்றுகளை மிகைப்படுத்தியும், ஒரு குழுவினரின் சொந்தக் கருத்துகளைத் தேவைக்கு மேல் திணித்துக்கொண்டும் மாற்றிக்கொள்ளலாம் கூறப்படும் இந்த வழக்கைக் கைவிட்டு “பழங்குடிச் சமுதாயம்விட்ட என்பர் சில மானிடவியலறிஞர்கள் தொன்மைச் சமுதாயம் (primive society) எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம் (pre - literate society) போன்ற மொழித் தொடர்களுக்கு இணையாக இருக்குமென்பதே அதற்குக் காரணம் ஆகும். ஆனால், அதே நேரத்தில் “பழங்குடி“ என்னும் சொல்லைத் தட்டிக் கழிக்க இயலா நிலையும் உள்ளது. இடம், மொழி, தோற்றம் ஆகியவற்றில் பொதுத்தன்மை பெற்றதும், தனிப்பட்ட வாழ்க்கை முறையைக்கொண்டதுமான மக்கள் குழுவைக் குறிப்பிடும் கலைச்சொல்லாக இச்சொல் மானிடவியலாரால் இன்று பயன்படுத்தப்படுகிறது.

இன்று பெரும்பான்மை ஆப்பிரிக்கர்களும் பழங்குடி என்னும் சொல்லானது. மதிப்பைக் குறைக்கும் சொல்லாக உள்ளது எனக் கருதுகின்றனர். ஆப்பிரிக்கரல்லாத பிற பழங்குடி மக்களும் இச்சொல்லின் பொருளைக் குறை கூறுகின்றனர். அவர்கள் கிராம, நகர மக்களிடமிருந்து தனித்து வாழ்வதால் தங்களைத் “தனிமைப்படுத்தப்பட்ட மக்கள்“ என்னும் பொருளில் குறிக்க வேண்டுமே தவிர பழங்குடி என்றோ தொன்மை மக்கள் என்றோ கூறக்கூடாது என்பர். எடுத்துக்காட்டாக மிகப் பெரும் இனக்குழுவான யொருபா (Yoruba) மக்கள் சில வேளையில் பழங்குடி என்றே வெளியாரால் கூறப்படுகின்றனர். அதனை யொருபாவினர் விரும்புவதில்லை.

பழங்குடி என்னும் சொல், தகுதியைக் குறைக்கின்றது என்ற கூற்று ஒரு புறமிருக்கச் சில அமெரிக்க இந்தியப் பழங்குடிகள் தங்களைப் பழங்குடி என்ற தகுதியிலிருந்து அமெரிக்க அரசு மாற்றிவிட்டதால் தாங்கள் பல நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ளதாக எண்ணுகின்றனர். அதனால், அவர்கள் பழங்குடித் தகுதியை மீண்டும் பெற 1900 - ஆம் ஆண்டிலிருந்தே போராடி வருகின்றனர். அமெரிக்க அரசு தங்களிடம் செய்த உடன்பாட்டின்படி தேவையான சலுகைகளையும், உதவிகளையும்,

பாதுகாப்பையும் பெற வேண்டுமானால் “பழங்குடி“ என்ற தகுதியை மீண்டும் பெற்றால்தான் முடியும் என நம்புகின்றனர் அதற்காகப் போராடியும் வருகின்றனர். இதேவகையில் தமிழகத்தில் அண்மையில் நரிக்குறவர்கள் பழங்குடித்தகுதியைப் பெற முயற்சி செய்கின்றனர்.

மானிடவியலைப் பொறுத்தவரை “பழங்குடி“ என்னும் வழக்கு, 20 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து அதன் பொருளை ஓரளவு இழந்து வருகிறது எனலாம். சில மானிடவியலார் இச்சொல்லிற்கான பொருளை மிகத் துல்லியமாக வரையறை செய்ய இயலாததால் இந்தச் சொல்லை ஒதுக்கிவிட்டனர். வேறு சிலர் இச்சொல்லிற்குக் குடியேற்றக் காலத்தில் வெள்ளையர்கள் போர்த்திய மாயைப் பொருளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். குறிப்பாக ஆப்பிரிக்க வல்லுநர்கள் இச்சொல் தகுதியைக் குறைத்துக் காட்டுகிறதென்றும், சரியான பொருளைச் சுட்டவில்லை என்றும், வேற்றுமையுணர்வுடன் கூறப்பட்ட தென்றும் கருதினர். அதனாலேயே மானிடவியலார் சிலர் “பழங்குடி“ என்னும் சொல்லிற்கு மாறாக இனக்குழு (ethnic group) என்னும் வழக்கைப் பரிந்துரை செய்தனர். இனக்குழு என்பதற்கான பொருள், பொதுவான மூதாதையரையும், மொழியையும், நிலப்பரப்பையும் ஒத்த பண்பாட்டையும், வரலாற்றையும் கொண்ட மக்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. நவீனமயமாகும் நாடுகளில் ஒருவன் தன் உறவுக் கூட்டத்தைக் குறிப்பிடுவதைக் காட்டிலும் தன் ஊர், வாழுமிடம், தான் சார்ந்த கூட்டம் முதலான வழக்குகளையே விரும்பிப் பயன்படுத்துவதால் “இனக்குழு“ என்னும் சொல் பொருத்தமானது என்பர்.

“இனக்குழு“ என்னும் சொல் வேறொரு பொருளை உணர்த்தவும் ஏற்பட்டது என்பதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதல், இரண்டாம் உலகப் போர்களுக்கு முன்னரும் பின்னரும் 'race' (இனம்) என்னும் சொல் மனித குலத்திற்கு மிகப் பெரும் அழிவைத் தேடித்தருவதாக அமைந்தது. எப்போதுமில்லா அளவிற்கு நிறவேற்றுமைகளின் அடிப்படையில் இன உணர்வுகள் உச்சக்கட்டத்தையடைந்தன. இன ஒதுக்கல் (apartheid policy) மூலம் வெள்ளையர் அல்லாத இனத்தவர்கள், சமுதாய, பொருளாதார நிலைகள் முதற் கொண்டு பல வழிகளில் வெள்ளையர்களால்

கொடுமைப்படுத்தப்பட்டனர். இப்போக்கு மனித குலத்திற்கே பெரும் அச்சுறுத்தலாக அமைந்ததால் மனிதநேயத்தில் பற்றுடைய உலக அறிஞர்கள் அதனை எதிர்த்து அறைகூவல் விடுத்தனர். அதன் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகள் சபை அவ்வறிஞர்களை அழைத்து ஒரு மாநாட்டை நடத்தியது. அந்த மாநாட்டின் அறிக்கையில் 6 ஆம் பத்தியில் ஒரு தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**தரநிலைச் சமுதாயங்கள்**

சமத்துவச் சமுதாயங்களின் அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டு அவற்றிற்கு நேர்மாறான பண்புகளைக் கொண்டவையாக தரநிலைச் சமுதாயங்கள் (rank societies) உள்ளன. இச்சமுதாயங்களில் மரபு வழியில் அமையப் பெற்ற சில காரணிகளால் சமுதாயத்தில் தனித்தனித் தகுதிகள் கொண்ட சில தரப்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு தரப்பிரிவும் சமுதாயத்தில் எந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டும் தகுதியுடன் சமுதாயத்தில் செயற்படமுடியும் என்பதைச் சுட்டிக் காட்டும் காரணிகளும் ஒவ்வொரு தரநிலைச் சமுதாயத்திற காட்டன. ஒவ்வொரு பிரிவிற்கும் இவ்வளவு தகுதிதான் உண்டு. என்று அளவிட்டுக் கூறும் இக்காரணிகள் ஒவ்வொரு பிரிவினரும் இவ்வளவு பொருளாதார எவது, தரப்பின்வுள்ள் கவண்டும் என இறையறுப்பதில்லை. அதாவது, தகுதி, மதிப்பு ஆகியவற்றில் சமமின்மையைக் கொண்டுள்ளனவே தவிர பொருளாதார வாய்ப்பில் பெரும்பாலும் சமமின்மையைக் கொண்டவையல்ல.

தரநிலைச் சமுதாய அமைப்பில் அனைவரும் சமதகுதியைப் பெற இயலாத நிலையில் தலைவனே (chief) உயர்ந்த தகுதியைப் பெற்றிருப்பான். அவனே மக்கள் அனைவரையும் வழிநடத்தும் பொறுப்பைப் பெற்றவனாவான் அதனோடு பெரும்பாலான சமுதாயங்களில் உணவுப் பொருள்களைப் பகிர்ந்து கொடுக்கும் உரிமையையும் கொண்டிருப்பான். விளைபொருள்கள், வேட்டையில் கிடைப்பவை, இன்னும் பிற வழிகளில் கிடைப்பவை ஆகிய அனைத்திலும் ஒரு பகுதி தலைவனைச் சென்றடைய வேண்டும். அவற்றை அவன் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பான்.

உணவுப் பொருள்களைத் தலைவன் மறுபங்கீடு (redistribution) செய்யும் முறையானது சொத்துடைமை அனைவருக்கும் பொதுவானது என்ற கருத்தைச் சுட்டிக் காட்டுகிறது. தலைவளே அனைத்து நிலத்திற்கும் பொறுப்பானவன் என்றாலுங்கூட நிலத்தில் பயிரிடுபவனே அதனைப் பயன்படுத்தும் சலுகையைக் கொண்டிருப்பான். சில பாலினீசியச் சமுதாயங்களில் தலைவன் மக்கள் அனைவரின் உழைப்பை நிருவகிக்கும் “மேலாளர்“ (manager) என்னும் தகுதியைப் பெற்றுள்ளான். அவன் அவரவர்களுக்கென்று ஒதுக்கிய நிலங்களில் பயிர் செய்கிறார்களா? அதில் விளையும் தானயிங்களின் ஒரு பகுதியை மறுபங்கீட்டுத் தொகுதிக்குச் செலுத்துகிறார்களா? என்றும் கவனிக்கிறான்.

தென்னாப்பிரிக்காவில் வாழும் சுவாசி (Swazi) இனக் குழுவினரின் (ethnic group) தரப்பிரிவுகளைப் பற்றி ஹில்டா கூப்பர் குறிப்பிடுகிறார். சுவாசியினர் தோட்டப் பயிர் செய்வோரும் கால்நடை வளர்ப்போருமாவர். அவர்கள் தோட்டப் பயிர்த் தொழிலை 10 விழுக்காட்டு நிலங்களிலும் கால்நடை வளர்க்கும் தொழிலை 75 விழுக்காட்டு நிலங்களிலும் செய்கின்றனர். இந்நிலங்களை ஒவ்வொரு தரப்பிரிவினருக்கும் தலைவன் ஒதுக்கிடுத் தருகிறான்.

சுவாசித் தலைவன் அம்மக்களை ஆண்ட முதல் தலைவனின் கால்வழியைச் சேர்ந்தவன். சுவாசி சமுதாயத்தில் தலைவனுக்கும் அவன் தாயாருக்கும் உயர்ந்த மரியாதை வழங்கப்படும். அவர்கள் தனி பட்டப்பெயர்களால் குறிக்கப்படுவர். அவ்விருவரும் மற்ற எவரும் அணியாத மதிப்புமிக்க உடைகளை உடுத்துவர். தலைவனின் கால்வழியைச் (lineage) சேர்ந்த அனைவரும் ”ஞாயிற்றின் மைந்தர்கள்” (children of the sun) எனக் கூறப்படுவர் சமுதாயத்தில் உயரிய நிலையைக் கொண்டவர்கள் என மதிக்கப்படுவர். சமுதாயத்தில் மற்றவர்களின் தகுதியானது அவர்கள் தலைவனின் கால்வழியோடு கொண்டுள்ள உறவுப் பிணப்பைப் பொறுத்து அமையும். அதனால் சில குழுக்கள் உயரிய தகுதியையும் சில குழுக்கள் குறைவான தகுதியையும் பெறும்.

தலைவனுடன் கொண்டுள்ள உறவைப் பொறுத்துப் பல தரப்பிரிவுகள் சமுதாயத்தில் காணப்பட்டாலும் தலைவன் உட்பட எல்லாச் சுவாசியினரும் தரப் பாகுபாடின்றி ஒரே வகையான வீட்டில் வாழ்கின்றனர். ஒரே வகையான தொழிலைச் செய்கின்றனர் ஒரே வகையான உணவை உண்கின்றனர். ஆனால் தலைவனின் தனிப்பட்ட தகுதியானது அவன் மற்றவர்களைக் காட்டிலும் மிகுதியான எண்ணிக்கையில் பசுக்களைக் கொண்டுள்ளதன் மூலமும், அனைத்துப் பிரிவினரின் உழைப்பை நிருவகிக்கும் பொறுப்பு மூலமும், விளைபொருள்களை மறுபங்கீடு செய்வது மூலமும் வெளிப்படும். மறுபங்கீடு செய்யும்போது தலைவன் மட்டும் சற்று மிகுதியாக எடுத்துக் கொள்வான். ஒரு தனிக்குடும்பமோ ஒரு ஆளோ மற்றவர்களைக் காட்டிலும் மிகுதியாகக் கால்நடைகளைப் பெருக்கிக் கொண்டால் அது அவனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். கால்நடைகளின் எண்ணிக்கை மிகுதியாகும் போது அவற்றை மற்றவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அவனுக்குச் சூனியம் வைப்பதும் கால்நடைகளைக் கொன்று உண்பதும் தவிர்க்க இயலாததாகிவிடும். இவ்வாறான முறை தனி ஆளிடம் மிகுதியான செல்வம் சேருவதைப் பண்பாட்டு வழியில் தடுக்கும் ஒரு கருவியாகச் செயற்படுகிறது.

சுவாசி சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாக மரபுவழியில் நிலைபெற்றிருந்த தரப்பிரிவு முறை குடியேற்ற வெள்ளையர்களின் வருகையினால் மாற்றம் பெறத் தொடங்கிவிட்டது. அண்மையில் வெள்ளையர்கள் தொழில் பணப் வெள்ளாநாரத்தை இன்று வெள்ளையர்களின் வலுவாக்கியுள்ளது. சுரங்கங்களில் 12,000க்கும் மேற்பட்ட சுவாசி ஆடவர்கள் கூலிகளாகப் பணிபுரிகின்றனர்.

வடமேற்குப் பசிபிக் கடற்கரைப் பகுதிகளில் வாழும் இந்தியப் பழங்குடிகள் தரநிலைச் சமுதாய வகையில் குறிப்பிடத்தகுந்தவர்கள். இவர்களுள் பெரும்பான்மையினரின் வாழ்க்கைப் பொருளாதாரம் உணவு சேகரித்தலை அடிப்படையாகக் கொண்டது. அதனோடு ஒருவகை மீனைப் (salmon) பிடித்து ஆண்டு முழுவதும் பயன்படுத்துமளவிற்குப் பாதுகாத்து வைப்பர். அதனால் மிகுதியான எண்ணிக்கையுடைய இவர்கள் உணவுப் பஞ்சமின்றி நிலையான இடத்தில்

வாழ்கின்றனர். உணவு சேகரிக்கும் (food- gathering) தொழிலைக் கொண்டிருந்தாலும் இவர்களின் சமுதாய அமைப்பைப் பார்க்கும்போது உணவு உற்பத்தி செய்யும் (food-producing) சமுதாய அமைப்பைக் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி கடல் வளத்தைப் பயன்படுத்துவதேயாகும். இவர்களுள் ஒவ்வொரு தனிமனிதனும் தனித்தனித் தரப்பிரிவு கொண்டவனாய் விளங்குகின்றான். இவர்களின் தகுதியை வெளிப்படுத்தவும் நிலை நாட்டவும் தகுதிக்காட்டுச் சடங்கினைச் (potlatch) செய்கின்றனர். இச்சடங்கு பெயர் சூட்டுச் சடங்காகவோ பிற சிறப்பு நிகழ்ச்சியைக் குறித்து நடத்தும் சடங்காகவோ அமையும், இது பெரு விழா போன்று நடைபெறும். இந்நிகழ்ச்சியின் போது அனைவரையும் அழைத்துப் பெருவிருந்தும் அன்பளிப்பும் வழங்கப்பட வேண்டும். இதற்காகப் பெரும் பொருட் செலவு ஆகும். அவ்வாறு செய்ய வேண்டியது கடமையாகிறது. ஏனெனில், மரபு வழியில் ஒவ்வொருவரும் ஒரு பட்டப் பெயரைக் கொண்டிருப்பர். இப்பட்டப் பெயரைப் பிறந்த மக்களுக்குச் சூட்ட வேண்டுமாயின் அப்பட்டத்திற்கு உரிய தகுதி அச்சமயத்தில் அவனிடம் உள்ளதா என்பதை வெளிப்படுத்தியாக வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்திய பின்னரே அவன் அப்பட்டப் பெயருக்கு உரியவன் என அனைவரும் ஏற்றுக் கொள்வர். ஆகவே இவ்வகைச் சமுதாயங்களில் வழங்கப் பெறும் பட்டப்பெயர்கள் அந்தந்தப் பட்டப் பெயருக்கு உரியவரின் பொருள் வளத்தைச் சுட்டிக்காட்டுவதோடு அப்பட்டப் பெயரை ஒருவன் தக்கவைக்க வேண்டுமாயின் அதற்கான பொருள் வளத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

இயற்கையில் கிடைத்த பொருள்களை நம்பி வாழ்ந்த சமத்துவச் சமுதாய முறையிலிருந்து இயற்கையின் வளங்களைப் பெருக்க (தோட்டக்கலை, கால்நடை வளர்த்தல், வேளாண்மை) முயன்ற மாற்றத்தினால் ஏற்பட்டதே தரநிலைச் சமுதாய முறையாகும். உற்பத்தி முறையில் ஏற்பட்ட இந்த மாற்றமானது உணவுப் பொருள்களைப் பெருக்கியது மக்களின் எண்ணிக்கையைப் பெருக்கியது உபரிப் பொருள்களையும் ஏற்படுத்தியது மக்களை ஓரிடத்தில் நிலையாகத் தங்க வைத்தது.

மக்கள் எண்ணிக்கையில் பெருகியதாலும், ஓரிடத்தில் நிலையாக வாழ முற்பட்டதாலும் உணவுப் பொருள்களை மறுபங்கீடு செய்யும் முறை (Redistributive System) ஏற்பட்டது. இதற்குக் காரணங்கள் பல. மக்கள் முதன்முதலில் குலக் குழுக்களாக (Bands) வாழ்ந்தபோது தொன்மவியல் அடிப்படையிலான குடிவழி (Mythical Genealogy) மூலம் அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு இருந்தது. ஆனால் மக்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்க முற்பட்டவுடன் தொன்மவியல் சாராமல் முறைப்படியாக உறவுக் கூட்டங்களை அடையாளங்காண முடிந்தது. அதற்குக் காரணம் தொடக்கத்தில் மக்கள் இடம்விட்டு இடம் மாறித் திரிந்த காலத்தில் அவர்களின் மூதாதையர்களை வழி வழியாக வந்த பல தலைமுறையினர் அடையாளங் காண முடியாத நிலை இருந்தது. அதனால் அவர்கள் ஒரு தொன்ம மூதாதையரிடமிருந்து (Mythical Ancestor) தோன்றியதாக எண்ணிக் கொண்டனர். நாள்தோறும் சுற்றித்திரிந்த நிலை மாறி மக்கள் ஓரிடத்தில் நிலையாக வாழ முற்பட்டதால் காலப்போக்கில் அவர்கள் எந்த மூதாதையரின் வழி வந்தவர்கள் என்பதைத் தெளிவாக இனங்கண்டு கொண்டனர். உண்மை மூதாதையரை (Real Ancestor) அடையாளங்காண முடிந்ததால் மக்களிடையே தொன்மவியல் சாராத, முறையான குடிவழி முறை தோன்றியது. இவ்வாறு ஒவ்வொரு குழுவினரும் முறைப்படியான குடிவழித் தோற்றத்தை உணர முற்பட்டபின் காலப்போக்கில் மூதாதையரோடு யார் யார் எல்லாம் நெருக்கமான உறவுப் பிணைப்புக் கொண்டுள்ளவர்கள் என்றும் மற்றவர்கள் எந்த அளவு விலகி நிற்கின்றனர் என்றும் எண்ணத் தொடங்கினர். இதன் விளைவாக உறவு நிலையில் தரப் பிரிவுகள் ஏற்பட்டன.

இடம்விட்டு இடம்மாறி வேட்டையாடியும் உணவு சேகரித்தும் வாழ்ந்த காலத்தில் மக்கள் உணவைக் கிடைத்த இடத்திலேயே உண்டு தீர்த்தனர் அல்லது நேருக்கு நேரானவரிடம் பரிமாறிக் கொண்டனர். ஆனால் மக்கள் நிலையாகத் தங்க முற்பட்டவுடன் புதிய முறையிலான உணவு உற்பத்தி மூலம் பெறப்பட்ட உபரிப் பொருள்களைப் பகுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால்

பொருள்கள் ஓரிடம் சேர்க்கப்பட வேண்டிய தேவையும் அதனைச் சீரான முறையில் மறுபங்கீடு செய்ய வேண்டிய தேவையும் ஏற்பட்டன.

இன்று தரப்பிரிவுகள் அமைந்த சமுதாயத்தில் உயரிய தரமுடையோரே மறுபங்கீட்டாளராகச் செயற்படும் நிலை உள்ளது. இவ்வாறான பங்கினை (role) ஏற்றுச் செயற்படும் போது மறுபங்கீட்டாளருக்குத் தனித் தகுதியும், தகுதியுள்ள பக்க பலமும் தேவைப்படுகின்றன. பெரும்பாலான சமுதாயங்களில் இவை மரபு வழியில் அமைக்கப்படுகின்றன. சில சமுதாயங்களில் மறுபங்கீட்டாளருக்குத் தேவைப்படும் தனித்தகுதியும் பக்க பலமும் அவரின் சொந்தத் திறமையினாலும் (சமுதாயச் செயல்களில் ஒத்த உறுப்பினர்களைக் காட்டிலும் சிறப்புத் திறமைகளால் முதலிடம் பெறும் போக்கு), அருட் குணத்தாலும், கொடைப் பண்பாலும் வந்து சேருகின்றன.

தரநிலைச் சமுதாயங்களில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய வேறொரு சிறப்புக் கூறு என்னவெனில் அனைத்து வள ஆதாரங்களும் ஒருவரின் உடைமையாக உள்ளமையாகும். தலைவனே அனைத்து உடைமைகளுக்கும் உரியவன் என்றிருந்தாலும் அவன் பணி "நிருவகிப்பவன்" (Administrator) என்னும் நிலையிலேயே உள்ளது. உடைமைகள் பயன்படுத்து பவரால் சொந்தம் கொண்டாடப்படுகின்றன. வடமேற்குப் பசிபிக் கடற்கரை மக்கள் வாழும் பகுதியில் ஒரு சிறுபகுதி நிலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஒருவன் எண்ணினால் அவன் தலைவனின் அனுமதியைப் பெற வேண்டும் என்பது முறை. அவ்வாறே ஒருவரின் வேண்டுகோளை ஏற்று இசைவளிப்பதே தலைவனின் முறை மறுப்பது தலைவனின் முறையாகாது.

சமத்துவச் சமுதாய முறையிலிருந்து தரநிலைச் சமுதாய முறை தோற்றம் பெற்ற காலத்தில் இரண்டு முறைகளிலும் சில பொதுவான கூறுகள் காணப்பட்டன, வயது, பால் தன்மைக்கேற்ப நிலவிய தொழிற் பகுப்பு (Division of Labour) இரண்டு முறைகளிலும் ஏறக்குறைய ஒரே அளவில் இருந்தது. தரநிலைச் சமுதாயத்தில் "தலைவன்" பொறுப்புக்கூடத் தகுதி, மதிப்பு ஆகியவற்றில் மட்டுமே மற்றவரிடமிருந்து மாறுபட்டதே தவிரச் செய்யும் தொழிலில் மாறுபடவில்லை. மற்றவர்களைப் போலவே தலைவனும் கடினமாக

வேலை செய்தான். ஆனால் “தலைவன்“ என்னும் உயர்தர நிலை மிகவும் முறைப்படியாகச் செயற்படத் தொடங்கியபோது தலைவனும் அவனது கால்வழியினரும் கடினமான வேலைகளையும் கீழ் நிலையான வேலைகளையும் செய்வதிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். மறுபங்கீட்டுப் பொருளாதார முறை ஒரு முக்கியமான பொருளாதார நிறுவனமாக மாறியபோது தலைவன் பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் வங்கியர் (Banker) போன்று செயற்படத் தலைப்பட்டான் தனக்கென்று ஒரு பகுதியை நிறுத்திக்கொண்டான் அனைத்துத் தரப்பிரிவினருடனும் தன் பிணைப்பை உறுதிப்படுத்த அவ்வப்போது பெருவிருந்துச் சடங்குகள் நடத்தினான்.

தரநிலைச் சமுதாயங்களில் அதிகார முறை மெல்ல மெல்ல ஒரு நிலையான நிறுவனமாக மாறத் தலைப்பட்டது. சமத்துவச் சமுதாயத்தில் தலைமை முறை (Leadership) தேவைப்படும் காலத்தில் மட்டுமே செயற்படுகிறது. ஆனால் தரநிலைச் சமுதாயத்தில் நிலம் ஒதுக்குதல், உழைப்பு, நிருவாகம், விளைபொருள்களைச் சேகரித்தல், அவற்றைப் பகிர்ந்தளித்ல் போன்ற பணிகள் காலந்தோறும் மேற்கொள்ள வேண்டியிருந்ததால் தலைமை முறையும் அதிகார முறையும் ஒரு நிலையான செயற்பாட்டைக் கொண்ட நிறுவனமாக மாறின.

தரநிலைச் சமுதாயம் அதற்கடுத்த நிலையை நோக்கிப் படிமலர்ச்சியடையா நிலையில் அதனுள் காண்ப்படும் தரநிலைகள் (Ranks), மக்களிடம் கருத்தளவில் மட்டுமே வேறுபாட்டைக் காட்டுகின்றன. செய்யும் தொழிலிலோ வேறு எந்தச் சமுதாயச் செயல்களிலோ அவை வேறுபாட்டை வெளிப்படுத்தவில்லை. சமத்துவச் சமுதாயத்தில் உள்ளது போன்றே வயது, பால் தன்மைக்கேற்பப் பணிகள் தரப்பிரிவுகள் பாகுபாடின்றிப் பகிர்ந்து செய்யப்படுகின்றன. ஆகவே வேறுபாடு என்பது தனிப்பட்டவர் களின் பால், வயது போன்ற காரணிகளால் ஏற்படுகின்றது. குழுவிற்குக் குழு வேறுபாடுகள் நிலவுவது இல்லை. பட்டப் பெயர்களும் மதிப்புத்தரமும் மரபுவழியில் ஒரு குறியீடாக அமைகின்றன. அதனாலேயே சமத்துவச் சமுதாய முறையும் தரநிலைச் சமுதாயமுறையும் அடிப்படையில் அடுக்கமைப்பற்ற (Unstratified) சமுதாய முறை எனக் கூறப்படுகின்றன.

தரநிலைச் சமுதாய முறையில் ஏற்பட்ட அடுத்த கட்ட படிமலர்ச்சி வர்க்க அமைப்புடைய சமுதாய முறைக்கு வழிகோலிற்று. அதற்குக் காரணம் தரநிலைப் பண்புகள் கருத்தளவில் செயற்பட்டது போக அது “சமுதாய ஆதாயம்“ (Social Advantage) என்ற செயல்வடிவம் பெற்றதாகும். அதாவது, தரநிலைப் பண்புகளைக் கொண்டு “சமுதாய ஆதாயம்“ தேடும் முயற்சியில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினர் மீது ஏற்படுத்திய அத்துமீறல், சமுதாயத்தில் சாதி/வர்க்க அமைப்புகளுக்கு வித்திட்டது.

**சாதி/வர்க்கச் சமுதாயங்கள்**

சாதி என்பது சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவைக் குறிக்கும். இக்குழுவில் இடம்பெறும் தகுதி பிறப்பால் அமைகிறது. அதனால் ஒரு சாதியில் பிறந்தவர் வேறு சாதிக்கு அடைஇயலாது ஒன்றுக்கு மேற்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொள்ளவும் இயலாது. அவ்வாறே ஒரு சாதியினர் வேற்றுச் சாதியினரை மணந்து கொள்ளுதலும் இயலாது. எனவே சாதி என்பது அகமண (Endogamous) முறையைக் கொண்ட ஓர் அமைப்பாகும். பெரும்பாலும் ஒவ்வொரு சாதிக்குமெனச் செய்யும் தொழில்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. சமுதாயத்தில் ஒவ்வொரு சாதிக்குமெனத் தனித் தகுதிநிலை நிருணயிக்கப்பட்டுப் பின் அனைத்துச் சாதிகளும் ஒரு படிநிலையில் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிநிலையில் மேலுள்ள சாதி உயர்ந்ததென்றும் அதற்கடுத்துள்ள சாதி தாழ்ந்ததென்றும் அதற்கடுத்தது மேலும் தாழ்ந்ததென்றும் படிநிலை அமைக்கப்பட்டது. இப்படிநிலையின்படி ஒவ்வொரு சாதியினரும் மற்றச் சாதியினரோடு எவ்வகையான செயலுறவு கொள்ள வேண்டுமென்பதும் ஒருவருக்கொருவர் எவ்வகையான இடைவினை புரிய வேண்டுமென்பதும் மரபுவழி வழக்கத்தால் மிகவும் உறுதியோடு செயற்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட சாதியினர் மற்றச் சாதியினரிடமிருந்து பருகுதற்கு நீரையோ உண்ணுதற்கு உணவையோ பெற மாட்டார்கள். சமய நிகழ்ச்சிகளிலும் சடங்குமுறைகளிலும் இறைப்பணிகளிலும் இவ்வாறான வேறுபாடுகள் நிலவுகின்றன. இதற்குக் காரணம் மேல் சாதியினர்

“தூய்மை“ (purity), “தீட்டு“ (pollution) ஆகிய கோட்பாடுகளை (தடுப்புச் சுவர்களை) ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் சமுதாயப் பொருளாதார ஆதாயத்தை உறுதியாக நிலைப்படுத்திக் கொள்ள முயன்றதேயாகும்.

சாதி முறை என்பது இந்தியச் சமுதாயத்தில் மட்டும் காணப்படுவதன்று. பல உலக சமுதாயங்களிலும் இம்முறை காணப்படுகின்றது. ஆனால், அது பல நிலைகளில் மாறுபட்டுள்ளது. அது பற்றி இங்குக் காண்போம்.

**சாதிமுறையின் வகைகள்**

சமுதாய முறை (simple caste system) என்றும், சிக்கல்வாய்ந்த கலப்புச் சாதிமுறை (complex caste system) என்றும் இருவகையாகப் பிரித்துக் கூறுவர் மானிடவியலார். எளிய சாதிமுறை என்பது இரண்டு அல்லது சாதிமுறையில் மிகுந்த எண்ணிக்கையுடைய சாதிகள் இடம்பெறும். முதல்வகைச் சாதிமுபைடுகள் சேர்ந்த சாதிகள் மேலும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை தீண்டாமைச் சரகள் (pariah castes) என்றும் இனக்குழுச் சாதிகள் (ethnic castes) சொல்லப்படும்.

**தீண்டாமைச் சாதிகள்**

சில சமுதாயங்களில் பெரும்பான்மை மக்கள்தொகை கொண்ட தேசிய மக்களினம் தவிர ஒன்று அல்லது இரண்டு மரபுவழி இனத்தவர் அவர்கள் செய்யும் தொழில்களால் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் சக்கிலித் தொழில், கருமான் தொழில் போன்ற தொழில்களைச் செய்பவர்களாக உள்ளனர்

வர்க்க அமைப்புடைய ஜப்பானியச் சமுதாயத்தில் “எட்டா (Eta) எனப்படும் தீண்டாமைச் சாதி உள்ளது. இச்சாதியைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் உள்ள கறுப்பர்களைப் போலன்றி, ஜப்பானிய உயர் வர்க்க மக்களிடமிருந்து உருவத்தாலோ நிறவேறுபாட்டாலோ தனிப்பிரிவாக வேறுபடவில்லை. அவர்களைப் போன்ற உடலமைப்பையே பெற்றுள்ளனர். ஆயினும், கடந்த காலங்களில் 400,000க்கும் மேற்பட்ட எட்டாவினர் வாழுமிடங்களால் தனிமைப்படுத்தப்பட்டனர் குடியுரிமை பெற

மறுக்கப்பட்டனர் தேசிய இனத்தோடு கலந்து வாழ இயலாமல் ஒதுக்கப்பட்டனர். இவர்கள் ஓர் அகமணக் குழுவாகச் சமுதாய அடுக்கமைப்பில் அடிநிலையில் வைக்கப்பட்டனர். இன்றும் இவர்கள் சக்கிலித் தொழில் செய்தும், இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்தும் பணியைச் செய்வான நிலையில் வய்ந்தும், செய்தும் மிகவும் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் தொகையும் இன்று ஏறக்குறைய 3 மில்லியன் அளவிற்குப் பெருகியுள்ளது.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுள் ஒன்றான சோமாலியாவில் பெரும்பான்மை மக்களினத்தவரிலிருந்து கருமான் தொழில் செய்வோர் தனியாகப் பிரிக்கப்பட்டுத் தனி அகமணக் குழுவாக வாழ்கின்றனர். பெரும்பான்மை மக்களினத்தவர் கொடுக்கும் 16 இரும்பு வேலைகளை நம்பி வாழ்வதால் இவர்களின் நிலை மிகவும் கீழ்நிலையிலேயே உள்ளது. இவ்விரு சாதியினரும் சமுதாயத்தில் ஒன்று சேர முடியாத வகையில் இரு துருவ முனைகளில் உள்ளனர்.

**இனக்குழுச் சாதிகள்**

மத்திய ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியிலுள்ள ரிவாண்டா (Rwanda) நாட்டில் 1960களுக்கு முன் மூன்று சாதிகளையுடைய சமுதாய முறை இருந்தது. இச்சாதி முறை முதலில் தேர்தலினாலும் பின்னர் 1959 - 60 களில் நடந்த ஒரு புரட்சியினாலும் தூக்கியெறியப்பட்டது. 1960களுக்கு முன்னர் இம்மூன்று சாதியினரும் உடல்தோற்றத்தாலும் செய்யும் தொழிலாலும் வேறுபட்டிருந்தனர். துட்சி (Tutsi) எனப்படும் ஆளும் சாதியினர் மிக உயரமாகவும் மெலிந்தும் இருந்தனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினராவர். இவர்கள் பெரும் நிலக்கிழார்கள்.இவர்கள் சமுதாயத்தில் மிகவும் உயரிய தொழில் எனச் சொல்லப்பட்ட ஆயர் தொழிலைச் செய்து வந்தனர்.

துட்சியினருக்கு அடுத்த நிலையிலிருந்து ஹுட்டுச் (Hutu) சாதியினர் ஓரளவு உயரம் குறைந்தவர்களாகவும் பருமனாகவும் இருந்தனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் குத்தகைக் காரர்களாக வேளாண் தொழிலைச்

செய்து வந்தனர். நாட்டின் மொத்த உணவுத் தேவைக்கு உற்பத்தி செய்வோர் இவர்களே. மூன்றாவதும், சாதிப் படிநிலையில் கீழ்நிலையில் இருந்தவர்களுமான துவாவினர் (Twa) மொத்த மக்கள் தொகையில் 1 விழுக்காட்டிற்கும் குறைவானவர்கள். இவர்கள் குள்ளர்கள் (Pygmies) இனத்தைச் சேர்ந்தவர்கள் காட்டுப் பகுதிகளில் வேட்டையாடியும் உணவு சேகரித்தும் வாழ்ந்து வந்தனர்.

இம்மூன்று சாதியினரும் வெவ்வேறு மொழிப் பிரிவைச் இடப்பெயர்வாலும் நில ஆக்கிரமிப்பாலும் சேர்ந்தவர்களென்றும், மூவரும் ஒன்று கூடினர் என்றும் கருதப்படுகிறது. பின்லும் பொதுவான மொழியை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். வேளாண் தொழில் செய்து வந்த ஹுட்டுச் சாதியினர் அவர்களின் உழைப்பிற்கு ஈடான ஊதியம் கிடைக்க நடத்திய போராட்டத்தினால் ஆளும் துட்சிச் சாதியைச் சேர்ந்த அரசர்கள் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர். அதன் பின்னர் வேளாண் சாதியினர் குடியரசு அமைப்புடைய அரசாங்கத்தை நிறுவினர். ஆயினும் காட்டுவாசிகளாக வாழும் துவாவினருள் பெரும்பாலோர் முழுக் குடியுரிமை பெற்றவர்களாக இல்லை.

ஆப்பிரிக்காவில் 19 ஆம் நூற்றாண்டில் உகாண்டாவில் அங்கோல் அரசர்களின் முடியாட்சிப் (Ankole kingdom) பகுதியில் நிலவிய சமுதாய முறை இனக்குழுச் சாதிகளுக்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவர்கள் சமுதாயத்தில் இரண்டு இனக்குழுச் சாதியினரும் நான்கு வர்க்கத்தினரும் (உடயளள) ஒன்றாக வாழ்ந்தனர். அங்கோலில் இரண்டு முக்கிய இனக்குழுச் சாதிகள் இருந்தன. பகிமா (Bahima) எனப்படுவோர் ஆயர்குடியினர். இவர்கள் ஹமிட்டிக் (Hamitic) இனத்தவர் ஆளும் சாதியினர். இவர்கள் போரிடும் திறமையாலும் படைப்பலத்தாலும் ஆதிக்கச் சாதியாக விளங்கினர். பெய்ரு (Bairu) எனப்படும் மற்றொரு சாதியினர் பண்டு மொழி பேசுபவர்கள். இவர்கள் தோட்டப்பயிர் செய்வோராவர். இவர்கள் விளைவிப்பனவற்றை பகிமாக்களிடம் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் மீண்டும் அவற்றை மறுபங்கீடு செய்வர்.

பகிமாக்களும் பெய்ருக்களும் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். ஆனால் பகிமாக்களில் சிலர் (குறிப்பாகத் தலைவர்கள்) இளம் பெய்ரு பெண்களைக் காமக்கிழத்திகளாக வைத்துக் கொள்வர். அதே வேளையில் பெய்ரு ஆடவர்கள் பகிமாப் பெண்களைக் காமக்கிழத்தியர்களாக வைத்துக் கொள்ள முடியாது. பெய்ருக்கள் மிகவும் தகுதி வாய்ந்த பணிகளிலும் அமர்த்தப்பட மாட்டார்கள். அவர்கள் அதிக அளவாக வரி வசூலிக்கும் மாவட்ட அலுவலராகப் (district tax collector) பணி புரிய முடியும். அதுவும் முகிமா (Muhima) என்பவரின் (நான்கு வர்க்கங்களில் ஒன்று) கீழ் மட்டுமே முகிமாக்கள் பெய்ருக்கள் பயன்படுத்த முடியாது. அவர்கள் பெய்ரு பெண்களை காமக் கிழத்தியர்களாக மணந்னவோ இயலாது. பொருளாதார நிலையில் ஒரு முகிமா ஒரு பெய்ருவினை ஏமாற்றினால்கூட அதற்கான தண்டனையைப் பகிமாத் தலைவன் வழங்குவான். செல்வாக்கையும்.

பெய்ருக்கள் மிகவும் அரிதாகக் கால்நடைகள் வளர்ப்பர். அதுவும் இனவிருத்தி செய்ய இயலாத பசுக்களையும், இளங் காளைக் கன்றுகளையும் மட்டுமே வளர்க்க அனுமதிக்கப்படுவர். இக்கால்நடைகள் பெய்ருக்கள் முகிமாக்களுக்கு உதவுவதற்காகத் தரப் படுவதாகும். முகிமாக்களுக்கு உதவியாக முவிரு (ஆறசைர) என்றொரு வர்க்கமும் உண்டு. இவர்களும் கால்நடைகளை வளர்க்க முடியாது.

பகிமா அரசாட்சியில் நிலவிய இவ்விரண்டு இனக்குழுச் சாதியமைப்பு நாளடைவில் விரிவடையத் தொடங்கியது. இவர்களின் அண்டைய பகுதிகளில் வாழ்ந்த மக்களையும் இவர்கள் பகுதியில் சேர்த்துக் கொள்ள முற்பட்டனர் அவ்வாறு சேர்த்துக் கொண்டபோது அபத்தோரோ (Abatoro) எனப்படும் பழங்குடிப் பிரிவையும் இணைத்துக் கொண்டனர். ஆனால் இம்மக்களுடன் பகிமாக்கள் மணஉறவு கொள்ளும் தகுதியை வழங்கினர்.

நான்காம் வர்க்கமாக அபம்பாரி (Abambari) தோன்றியது. பகிமாத் தலைவர்களுக்கும் பெய்ரு இனப் பெண்களுக்கும் ஏற்பட்ட கலப்பினமாக அபம்பாரிப் பிரிவு தோன்றியது. ஆனால் இப்பிரிவினர் பெய்ருக்களுக்குச் சமமாகவே மதிக்கப்பட்டனர். அங்கோல் சமுதாய அமைப்பில் இறுதியாக இடம்பெறும் அபகுக்குப்

(Abahuku) பிரிவினர் அடிமைகளாவர். அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட இவர்கள் செல்வந்தர்களின் வேலையாட்களாகப் பணி புரிந்தனர். அடிமைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. அடிமைகள் தப்பித்துக் கொண்டு வெளியேறித் தங்களைப் பெய்ரு எனக் கூறிக் கொள்ளாமலிருக்க அவர்களின் காதுகள் அறுக்கப்படும். அதற்குக் காரணம் அண்டைய ஆப்பிரிக்க முடியாட்சி அரசுகளில் சில வறுமையான பெய்ருக்கள் அடிமைகளாக அவ்வப்போது சிக்கிக்கொண்டனர். அங்கோலில் பெய்ருக்கள் அடிமைகளாக இல்லை.

இனக்குழுச் சாதிகள் இன்றும் பல ஆப்பிரிக்கச் சமுதாயங்களில் உள்ளன. (எந்தெந்த நாடுகளில் எந்த அளவு உள்ளன என்பதை இந்த அத்தியாயத்தில் இடம்பெறும் அட்டவணையில் காண்க). இச் சாதிகளுள் சில ஆளும் நில அக்கிரமிப்புச் சாதிகளாகவும், சில அவர்களை எதிர்க்களும் நில கீழ்ப்பணியும் சாதிகளாகவும் அல்லது அப்பகுதிகளுக்கு வந்து குடியேறும் சிறுபான்மை இனத்தவர்களாகவும் உள்ளன. இந்து அமெரிக்காவில் உள்ள வெள்ளை கறுப்பு இனத்தவ இன்று கலப்பினைக் கூட இனக்குழுச் சாதிகளின் எச்சமென்று சிலர் கூறுவர்.

**இந்தியச் சாதிமுறை**

இந்தியச் சமுதாயம் சாதிக் குழுக்கள் என்ற ஓர் அடுக்கமைப்பினால் கட்டப்பட்டுள்ளது. இந்த அடுக்கமைப்பு நீண்ட வரலாற்றுக் காலத்தில் தோன்றியதாகும். மிகத் தொடக்கக் காலத்தில் அதாவது கி.மு. 1500 - ஆம் ஆண்டு அளவில் ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது இங்கு வாழ்ந்த மக்களிடையே உடல் அமைப்பாலோ நிற வேறுபாட்டாலோ எவ்விதக் குழுக்களும் செயல்முறையில் இல்லை. ஆனால் இங்கு வந்தேறிய ஆரியர்கள் உடலாலும் நிறத்தாலும் மொழியாலும் சமயத்தாலும் இந்நாட்டு மக்களிடமிருந்து வேறுபட்டனர். அவ்வேறுபாடுகளைப் பயன்படுத்தி இங்கு வாழ்ந்தோரைத் தஸ்யூக்கள் அல்லது தாசர்கள் என்று வேறுபடுத்திக் குறிப்பிடத் தொடங்கினர்.

ஆரியர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்குமிடையே நாளடைவில் செயற்பாடுகள் மிகுதியானதால் ஆரியர்கள் அவர்கள் அளவில் ஒரு தொழிற்பிரிவை ஏற்படுத்திக்

கொண்டனர். இது வேதகாலத்தின் தொடக்கத்தில் (ஏறத்தாழ கி.மு. 1200 -ல் நிகழ்ந்தது. அதன்படி அவர்கள் சமயத்தோடு தொடர்புடைய புரோகிதத் தொழிலை ஏற்றுக் கொண்டனர். அவர்களின் தனித் தன்மையைக் காத்துச் சமுதாய ஆதாயம் தேட வேண்டி ரிக் வேத காலத்தின் பிற்பகுதியில் (கி.மு. 100ஆம் ஆண்டளவில்) சமுதாயத்தின் பல்வேறு செயல்களைத் தனித்தனியே கவனிக்கும் பொருட்டு வருண அடிப்படையில் நான்கு பிரிவுகளை ஏற்படுத்தினர். 19 அப்பிரிவுகளே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனப்பட்டன.

அந்நான்கு வகை வருண அமைப்பில் தொடக்கத்தில் கட்டுப்பாடுகள் இல்லை. செய்யும் தொழிலிலும், மணஉறவிலும் அப்பிரிவுகள் கட்டுப்பாட்டை விதிக்கவில்லை. ஒருவர் மற்றொருவரின் தொழிலை மேற்கொள்ளவும் பிற வருணத்தாரோடு மணஉறவு கொள்ளவும் முடிந்தது. ஆனால் ஒருவர் தம்மினும் கீழான ஒருவருடன் மட்டுமே பெண் எடுக்கும் முறை (அனுலோம் Anuloma - கீழ்க்குடி மணம்) வழக்கிலிருந்தது. ஒருவருடைய வருணத்திற்கும் மேலானவரிடம் பெண் எடுக்கும் முறை (பிரதிலோம் Pratiloma - உயர் குடி மணம் அனுமதிக்கவில்லை. தொழில் மண உறவு ஆகியவற்றில் காணப்பட்ட கட்டுப் பாட்டின்மை கி.மு.600 வாக்கில், அதாவது வேத காலத்திற்குப் பிற்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டு விலக்குக்குள்ளாயிற்று. ஸ்மிருதிகளின் காலத்தில் இந்நான்கு வகை வருண அமைப்பு மறைந்து அகமணப் பகுப்புடைய சாதிப் பிரிவுகள் தோன்றின.

பல்வேறு சாதிக் குழுக்கள் தோன்றியதற்குக் காரணம், வருணங்களுக்கிடையே நிகழ்ந்த கலப்புத்தான் என மனுஸ்மிருகி கூறுகிறது. அக்கலப்பினால் பிறந்தவர்கள் வருணக் கலப்பிற்கேற்பது தனித்தனிப் பிரிவுகளாய் அமைந்தனர். அப்பிரிவுகளுக்குள் மேலும் நிகழ்ந்த கலப்பானது எண்ணிக்கையற்ற உட்பிரிவுகளைத் தோற்றுவித்தது. அக்கலப்புப் பிரிவுகள் பின்னர் அகமண விதியைப் பின்பற்றத் தொடங்கியவுடன் ஒவ்வொன்றும் ஒரு சாதியாய் உருவானது என மனுஸ்மிருதி கூறுகிறது. அவ்வாறு தோன்றிய சாதிகளின் எண்ணிக்கை இன்று ஏறக்குறைய 3000 ஆகும். இன்று இந்தியாவில் ஒவ்வொரு மொழிப்பகுதியிலும் குறைந்தது 200 250 சாதிகள் வரை

உள்ளதென மக்கிம் மாரியட் கூறுகிறார். சாதிகள் தோன்றிய வரலாறு குறித்து வேத இதிகாசங்கள் கூறுவன ஒருபுறமிருக்க அறிஞர்கள் பலர் அவர்களின் கொள்கைகளை விளக்கியுள்ளனர். அவை வருமாறு:

**மரபுக் கொள்கை**

இக் கொள்கையை இந்து சமயத்தின் புராண, இதிகாசங்கள் மட்டுமே விவரிக்கின்றன. சாதி அமைப்பானது மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டதன்று இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்பதே இக்கொள்கையின் மையக் கருத்தாகும். சாதியின் தோற்றமானது வருண அமைப்பிற்குட்பட்டது. அதன்படி பிரமனின் வாய், கை, தொடை, காலடி ஆகிய பகுதிகளிலிருந்து முறையே பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் தோன்றினர். இவர்களுள் பிராமணர்களே உயர்ந்தவர்கள். வேதங்களைக் கற்பதும், அவற்றைக் கற்பிப்பதும், இறைவனுக்கு வழிபாடு செய்வதும், சமுதாயத்தில் சில பிரிவினருக்குச் சமயச் சடங்குகள் செய்வதும், அவர்களின் அன்பளிப்பைப் பெற்று வாழ்வதும் இவர்களின் தொழிலாகும். சத்திரியர்கள் அவர்தம் மறப் பண்புகளால் அனைத்துப் பிரிவினரின் உயிரையும் காப்பதும், நாட்டை ஆளுவதும், வீரர்களாகப் பணிபுரிந்து அதனைக் காப்பதும் தொழிலாகும். வைசியர்கள் உடைமைகளையும் காட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தொழில் செய்வதும் சாணிகம் செய்வதும் தொழிலாகும். சூத்திரர்கள் ஏனைய மூன்று பிரிவினருக்கும் பணி செய்வதும், சமுதாயத்தில் இழிவான வேலைகளைச் செய்வதும் தொழிலாகும் என மரபுக் கொள்கை (traditional theory) கூறுகிறது.

இக்கொள்கையானது, மேற்கூறிய நான்கு பிரிவினரும் மிகவும் இணக்கமாகச் செயற்பட்டுச் சமுதாயத்தின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் தன்மையில் பணிப் பிரிவுகளைச் செய்து கொண்டுள்ளனர் எனக் கூறுகிறது. இக் கொள்கையைப் பற்றி மஜும்தார் குறிப்பிடும்போது, வருணங்களின் தோற்றம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என்றும் அவை சமுதாயத்தைச் செயல் அடிப்படையில் பிரிக்கின்றன என்றும் கொள்ளும்போது, இந்த உவமான விளக்கம் செயல் முறையில் சார்புடைய கருத்தாக உள்ளது என்பார். மரபுக் கொள்கையானது

வேத இதிகாசங்களின் நம்பிக்கையில் ஏற்பட்டதாகும். (வேதங்களில் வருண வகைப்பாடு பற்றிக் கூறப்படுவது பிற்காலத்தவர்களால் புகுத்தப்பட்டது என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது). இக்கொள்கையானது சாதி முறையைப் பகுத்தறிவு வாத அடிப்படையில் விளக்க முற்படவில்லை.

### தொழிற் கொள்கை

சாதி முறையின் தோற்றத்திற்குத் தொழிற் கொள்கை (occupational theory) மூலம் புதிய விளக்கம் கொடுக்க நெஸ்பீல்டு முற்பட்டார். இவரது கருத்துப்படி, சாதிகள் மக்கள் அவரவர் செய்யும் தொழில்களில் காணப்பட்ட வேறுபாட்டினால் ஏற்பட்டன. அத்தொழில் வேறுபாடுகளின் தன்மை “தூய்மை“ (purity), “தீட்டு“ (pollution) ஆகிய கருத்தாக்கங்களால் மதிப்பிடப்பட்டன. நான்கு வருணப் பிரிவினரும் ஏற்றுக் கொண்ட தொழில் வேறுபாடுகள், அவரவரின் தகுதியை அல்லது சமுதாயத்தில் அவர்களுக்குள்ள நிலையைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, சாதி அமைப்பையும் அதன் செயற்பாட்டையும் அறுதியிடும் காரணியாக தொழில்கள் அமைந்தன. பிராமணர்கள் தூய்மையானவர்கள் என்றும், மேன்மைமிக்க தொழிலைக் கொண்டோர் என்றும், அவர்களுக்கு அடுத்து முறையே சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் சாதிப் படிநிலையில் உள்ளனர் என்றும், இறுதியில் கூறப்பட்ட சூத்திரர்க்ளே மிகவும் கீழ் நிலையானவர்கள் என்றும் கருதப்பட்ட தோ செய்யும் தொழிலில் கீழ் நிலை வேறுபாட்டினால் சாமுமை பெற்றது. எனக் ஏறும் தொழிற் கொள்கை முழுமை பெற்றதன்று. சாதிகளைப் பற்றி ஹட்டன் கூறும்போது கூடச் சாதிகளின் படிமலர்ச்சியில் தொழிற்பிரிவுகள் ஒரு காரணியாகத்தான் செயல்பட்டதே தவிர அவை முழுமையான விளைவை ஏற்படுத்தவில்லை என்று கூறுகிறார்.

### சமயக் கொள்கை

இக்கொள்கையை வகுத்தவர் ஹோகார்ட். இவரும் இக்கொள்கையை ஆதரிக்கும் வேறு சில சிந்தனையாளர்களும் சாதிமுறைக்கு அடிப்படை சமயமே என்று கூறுகின்றனர். அவர்களின் கருத்துப்படி இந்து சமயக் கோட்பாடுகளின்

அடிப்படையிலேயே சமுதாயத்தில் நான்கு பிரிவுகள் ஏற்பட்டன. அதற்கு முக்கிய காரணம் இந்து சமயத்தின் கடப்பாடுகளையும் கடமைகளையும் தவறாமல் செய்வதற்கு இந்நான்கு பிரிவுகள் தேவைப்பட்டதேயாகும். இந்துக்களின் வாழ்வில் சமயம் உயிர்மூச்சாக இருப்பதால் சமயக் கோட்பாடுகளே நான்கு வகை வருணங்களை ஏற்படுத்தி ஒவ்வொன்றின் செயற்பாடுகளையும் வகுத்துக் கொடுத்துள்ளன. இந்நான்கு பிரிவுகளுக்கிடையே ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் அவை சமயச் செயல்களை நிறைவேற்றுவதில் ஏற்றுக்கொண்ட பங்கினைப் பொறுத்து அமைந்தன. அதில் பிராமணர்கள் உயர்ந்த நிலையிலும் சூத்திரர்கள் கீழ்நிலையிலும் வைக்கப்பட்டனர். மற்றவர்கள் இடைநிலையில் வைக்கப்பட்டனர். சமயக் கொள்கையும் (religious theory) சாதிகளின் தோற்றங் குறித்து முழு நிறைவான கருத்தினை அளிக்கவில்லை. இது சமுதாய வாழ்வின் பெரும்பகுதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறியதே அதற்குக் காரணமாகும்.

**அரசியற் கொள்கை**

இக்கொள்கையை வகுத்தவர் குர்யே. பிராமணர்களே சாதிமுறையின் தோற்றத்திற்குக் காரணமென இக்கொள்கை விவரிக்கிறது. இக் கொள்கையின் மையக் கருத்து வருமாறு : பிராமணர்கள் சமுதாயத்தில் உயர்ந்த தகுதியைப் பெற்று அதன்மூலம் பல்வேறு சலுகைகளை அனுபவிக்கும் பொருட்டு அவர்கள் செய்த சூழ்ச்சியால் சாதிகள் தோன்றின. பாகு பாடற்ற சமுதாயம் நிலவியபோது பிராமணர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உடலாலும், செய்யும் தொழிலாலும் வேறுபட்டிருந்ததால் அத்தனித்தன்மையைக் காத்து மேல்நிலையை அடையச் சமயக் குருக்களாகச் செயற்படும் உரிமைக்குச் சொந்தம் கொண்டாடத் தொடங்கினர். சமயச் செயல்களையும் கெங்குகளையும் செய்ய சுட்டுப்பட்டா உணவு, குடிநீர், திருமணம் போன்றவற்றின் மீது சில கட்டுவாயினர். விலக்குகளை ஏர்படுத்திக் கொண்டு ஓர் அகானக் குழுவாட்டர். இவையனைத்தும் மற்றப் பிரிவினரை அவர்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதற்றல் அதன்பின்னர் பிராமணர்கள் மற்றவர்கள் மீது அதிகாரம் செய்ய தொடங்கினர். பிராமணர்களுக்கும் சாதிகளின் தோற்றத்திற்கும்

உள்ள தொடர்பை குர்ரே பின்வருமாறு குறிப்பிடுகிறார்: சாதி என்பது இந்திய - ஆரியப் பண்பாட்டில் ஏற்பட்ட பிராமணகி குழந்தை சாதி என்னும் குழந்தை முதலில் கங்கைப் படுகையில் தவழ்ந்து வளர்ந்து பின்னர் அவர்களால் இந்தியாவின் பிற பகுதிகளிலும் வேரூன்றியது.

சாதிகள் தொழிற்பிரிவு அடிப்படையிலோ பிறப்பு அல்லது வேறு எந்த ஓர் அடிப்படையிலோ தோன்றியது என்பதை அரசியற் கொள்கை (political theory) கடுமையாக எதிர்க்கிறது. சாதி என்பது ஒரே பிரிவுதான். இதில் தனிமைப்படுத்தப்பட்ட பல பிரிவுகள் இல்லை. இக்கருத்தையே ரிக் வேதமும் குறிப்பிடுகிறது. பிராமணிய உயர்வுவாதம் என்பது போலியானது பிற்காலத்தில் வேதங்களில் வேண்டுமென்றே இடைச் செருகல் கருத்துகள் ஏற்படுத்தப்பட்டன என இக் கொள்கையாளர்கள் கூறுவர்.

**இனக் கொள்கை**

இனக் கொள்கையை (racial theory) வகுத்தவர் ரிஸ்லி. இக்கொள்கையை மஜூம்தார், குர்யே ஆகியோரும் ஆதரித்தனர். ரிஸ்லியின் கருத்துப்படி ஆரியர்கள் இந்திய மண்ணில் குடியேறிய பின்னரே இனவேற்றுமை குறித்த கருத்துக்கள் ஏற்பட்டன. குடியேறிய ஆரியர்கள் இங்கிருந்தவர்களைக் காட்டிலும் உடல் தோற்றத்தில் பொலிவானவர்களாகத் திகழ்ந்ததால் அதனைப் பயன்படுத்தி அவர்கள் திராவிடர்களைக் கட்டுப்படுத்தத் தொடங்கினர்.

இனக்கொள்கையை விளக்கும்போது குர்யே பின்வருமாறு குறிப்பிடுகிறார். சாதி அமைப்புடைய சமுதாயம் தோன்றியதற்குப் பல காரணிகள் செயற்பட்டிருந்தாலும் அவை அனைத்தும் செயல்களிலிருந்து நீக்க மேற்கொண்ட முயற்சிகளிலிருந்தும், பிராமணர்கள் முதன் முதலில் முதுகுடிகளைச் சேர்ந்து செயற்படுவதைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகளிலிருந்தும் ஏற்பட்ட விரிவாக்கங்களே ஆகும். ஆரியர்கள் தங்களை உயர்ந்த இனத்தினர் என அவர்களாக எண்ணிக் இனத்திகளைத் தஸ்யூக்கள் என்றும், கீழினமென்றும், அதனால் அராகள் தாழ்வான பணிகளையே செய்ய வேண்டும் என்றும் கூறிக் அவர்கள் தா ஆரியர்களின் இவ்வாறான இன

பண்பாட்டு உயர்வு வாதல்கள் சாதி வேறுபாடுகளைத் தோற்றுவித்தன் தீண்டாவர்ல் சாதிகள் என்னும் மற்றொரு பிரிவையும் தோற்றுவித்தன.

**படிமலர்ச்சிக் கொள்கை**

இக்கொள்கையை வகுத்தவர் டென்சில் இபட்சன். இவர், சாதிகள் திடீரென்று தோன்றியவையல்ல் இவை நீண்டகாலப் படிமலர்ச்சியின் விளைவால் தோன்றியவை எனக் கூறுகிறார். இந்த நீண்ட காலப் படிமலர்ச்சியில் பல காரணிகள் பங்கு பெற்றிருந்தன. இன்று சாதியமைப்பில் காணக்கூடிய நான்கு வருணங்களும் நீண்டகாலப் படிமலர்ச்சிக்குப் பின்னரே நான்கு படிநிலைக் குழுக்களாக மாறின. அவ்வாறு மாறும்போது ஒவ்வொரு குழுவும் சமயத்தோடு ஏற்படுத்திக் கொண்ட பிணைப்பு மாறுபட்டது. அம்மாறுபட்ட பிணைப்பால் நான்கு வருணங்களுக்கும் செய்யும் தொழில் மரபு வழி அமைந்தது. உணவு, நீர், திருமணம் போன்ற அடிப்படைக் கூறுகள் விலக்குக்குள்ளாயின. இவ்வகையான வருண வேறுபாடுகளுக்குக் கருமம் (karma) என்னும் கொள்கையும் துணை நின்றது. அக்கொள்கையின் அடிப்படையிலேயே உயர்வும் தாழ்வும் செய்யப்பட்டன. அதனோடு பல்வேறு குழுக்களிடையே இரத்தக் கலப்பு ஏற்படக்கூடாது என்ற எண்ணம், தனிப்பட்ட தொழில்களையே பற்றி நிற்க வேண்டுமென்ற எண்ணம், கருமக் கோட்பாடு, மூதாதையர் வழிபாடு, நிற வேறுபாட்டுணர்வு, பொருளாதார வேற்றுமைகள், வெவ்வேறு இயல்புடைய புவிப்பரப்புகள், பண்பாட்டு மரபுகளில் காணப்பட்ட பல்வேறு வேற்றுமைகள் ஆகிய முதன்மையான காரணிகள் ஒரு நீண்ட படிமலர்ச்சிக் காலத்தில் இந்திய மண்ணில் செயற்பட்டதன் விளைவாகச் சாதியமைப்புத் தோன்றியது எனப் படிமலர்ச்சிக் கொள்கை (evolutionary theory) உறுதிப்படுத்துகிறது.

சாதிகளின் தோற்றம் குறித்து நிலவும் கொள்கைகள் அனைத்தும் ஓரியல்பான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. இக்கொள்கைகள் சாதியமைப்பின் தன்மைகளை விளக்குவதில் கொண்டிருக்கும் ஈடுபாடு அதன் தோற்றத்தைக் காண்பதில் காணப்படவில்லை இந்தியாவைப் பொறுத்தவரை சாதியமைப்பு ஒரு சிக்கலான சமுதாய நிகழ்வாகும். அதனைத் தெய்விகப் படைப்பு காணப்படவில்லை.

என்றோ மனித படைப்பு என்றோ கூறிக் கொண்டு ஆராய்வது ஒருபுறமிருக்க, இன்றைய நிலையில் அது சமுதாய இயக்கத்தில் கொண்டிருக்கும் பங்கினை ஆராய்வது பல விவாதத்திற்குரிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழிவகுக்கும். குறிப்பாக, சமுதாய ஆதாயம் தேடி வேதகாலத்தில் பிராமணர்கள் ஏற்படுத்திய சாதிமுறை இன்றைய சூழலில் ஏற்படுத்தும் விளைவுகளை உரிய இந்தியாவின் மிகக் கொடிய நம்பிக்கை" யாகி (India's Most Danger- ous Myth: The Fallacy of Caste) கடும் விளைவுகள் ஏற்படும்.

**குடிஊழிய முறை**

இந்திய ஊரகச் சமுதாயம் சாதி அடிப்படையிலானது. இதில் ஒவ்வொரு சாதியின் தொழிலும், தூய்மை (purity), தீட்டு (pollution) போன்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் சமுதாயப் படிநிலையில் ஒரு குறிப்பிட்ட படியில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாதியும் ஒரு மரபு நிலையில் இருந்தாலும் அனைத்துச் சாதிகளும் தொழில் உறவு கொண்டு கூட்டாகச் செயல்படுகின்றன. குறிப்பிட்ட ஒவ்வொரு சாதியும் ஒரு தொழிலில் தேர்ச்சி பெற்று விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, துணி வெளுத்தல், இரும்பு வேலை, மரவேலை, தோல் வேலை, மயிர் வெட்டுதல், வேளாண் பணி, புரோகிதப் பணி போங்கு தபணிகளில் தனிப்பட்ட சாதியினர் தேர்ச்சி பயற்றுவிளங்குதால் அச்சாதியினர் தங்கள் தொழிலைமற்ற சாதியினருக்கு ஊழியமாகச் செய்கிறார்கள். அவ்வூழியத்தைப் பெற்ற சாதியினர் அவர்களுக்குக் கைம்மாறாக உணவுப் பொருள்கள், பணம், துணி வகைகள், இன்னும் பிற உதவிகளை ஆண்டுதோறும் செய்வார்கள். இவ்வகையில் ஒவ்வொரு சாதியும் தங்களுக்குத் தெரிந்த தொழிலை மற்றவருக்கு ஊழியமாகச் செய்து கொள்ளும் பரிமாற்ற தொழில் உறவே "குடிஊழிய முறை" (jajmani system) எனப்படும்.

குடிஊழிய முறையில் ஊழியம் செய்வோர் காமின்கள் (kamins) எனப்படுவர். இதன் பொருள் பிரஜைகள் அல்லது குடிமக்கள் என்பதாகும். ஊழியத்தைப் பெற்றுக்கொண்டு ஊழியம் செய்தோரை ஆதரிப்பவர்கள் ஜஜ்மான் (Jajman)

எனப்படுவர். இதன் பொருள் “எசமான்“ அல்லது “ஆண்டை“ என்பதாகும். குடிஊழிய முறையில் ஜஜ்மான்களே முதன்மையிடம் பெற்றுள்ளதால் இம்முறை “ஜஜ்மானிய முறை“ என வழங்கப் பெறலாயிற்று. இந்தியச் சமுதாயத்தில் இவ்வகைத் தொழிலுறவு முறையை மானிடவியலார் முதன் முதலில் வடஇந்தியாவில் ஆராய்ந்ததால் அங்கு வழங்கப்பெற்ற ஜஜ்மான், காமின் போன்ற சொற்களை அப்படியே ஏற்றுக்கொண்டு இம்முறையை “ஜஜ்மானிய முறை எனக் குறிப்பிட்டனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டை யார், குடிமக்கள் யார் என்பது வேறுபட்டதாக இருக்கும். பெரும்பகுதி நிலவுடைமை பெற்ற சாதியினரே ஆண்டை நிலையை அனுபவிப்பர். இவர்கள் அவ்வூரில் மிகுந்த செல்வாக்காகவும் ஆதிக்கச் சாதியாகவும் விளங்குவர். நிலவுடைமை மூலம் அவர்கள் பொருளாதாரத் துறையில் ஓங்கியவர்களாக இருப்பதுடன் அப்பலத்தைப் பயன்படுத்தி கிராமப் பஞ்சாயத்து, அரசியல் ஆகியவற்றில் செல்வாக்காகவும் ஆதிக்கம் மிகுந்தவர்களாகவும் இருப்பர். இந்நிலையில் மற்ற சாதியினர் அவர்களுக்குக் குடி மக்களாக இருந்து ஊழியம் செய்கின்றனர். ஊழியம் செய்யும் சாதிப் பணியாளர்களுள் வேளாண் பணிகளைச் செய்யும் பணியாளர்கள் முதன்மைச் சாதிப் பணியாளர்களாகக் கருதப்படுவர். இதனால் மற்றவர்களின் ஊழியம் குறைத்து மதிப்பிடுவதாகாது. ஆண்டைக்கு ஒவ்வொரு சாதியினரும் முக்கியமானவர்களே. குடி ஊழிய முறையில் ஆண்டை சாதிப் பணியாளர் (ஊழியம் செய்யும் சாதியினர்) உறவு ஒரு நல்லிணக்க அடிப்படையில் அமைகிறது. ஆண்டைகள் ஊழியம் செய்வோருக்குத் தினம் தினம் கூலி. தருவதில்லை. பல மாதங்களுக்கு ஒரு முறை படியாக வழங்குவர். வேளாண் தொழில் செய்யும் சாதிப் பணியாளருக்குத் தன் நிலத்தில் சிறு பகுதியை அவனுக்குப் பயிரிட ஒதுக்குவர். சாதிப் பணியாளர்கள் ஆண்டைகளின் எருதுகளைக் கொண்டு உழுதும், அவரின் மோட்டாரைக் கொண்டு நீர் பாய்ச்சியும் அவர்களுக்கு அவரின் பத்தில் விளைவித்துக் லவாள்க வழங்ககை, உரம். உரிய வையும் சில ஆண்டைகள் இத்துடன் நிற்காமல் பணியாளர்கள் வீடு கட்டிக் கெள்ள்ள இடமும் கொடுப்பர். செய்கட் அவதற்கும் பழுது கொள்ற்கும் வேண்டிய உதவிகளைச் செய்வர். ஆண்டைகள் தங்கள் சாதிப் பணியாளருக்கு ஒவ்வொரு அறுவடையின்போதும்

களத்தன் ஒரு பகுதியை ஒதுக்குவர். வீட்டில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும், ஆண்டிற்கு ஒருமுறை முறைப்படியாகவும் பணியாளர்களுக்குத் துணிமணிகளும், பணமும், பிற அன்பளிப்புப் பொருள்களும் கொடுத்து மகிழ்விப்பார்கள். பணியாளர்களுக்கு வேண்டிய பிற உதவிகளையும் தயங்காமல் செய்வார்கள். அவர்களின் பிள்ளைகளின் படிப்பு, பூப்பு நீராட்டு விழா, திருமணம், வளைகாப்பு, இறப்பு போன்ற பல சடங்குகளின் போது தானியங்களும் பணமும் கொடுத்து உதவுவர். சுருக்கமாகக் கூறவேண்டுமானால் ஆண்டைகள் தத்தம் சாதிப் பணியாளருக்கு இயன்ற அளவு உதவிகளைச் செய்து அவனுக்குப் பாதுகாப்பாக இருப்பர்.

ஆண்டைகளின் தொழிலுறவு இவ்வாறிருக்க சாதிப் பணியாளர்களின் ஊழியம் அதற்கும் மேல் அமைகிறது. ஆண்டை வீட்டுக்குச் செய்ய வேண்டிய அவனது ஊழியத்தைச் செய்வதுடன் ஆண்டை வீட்டின் அனைத்து இன்ப துன்பங்களிலும் முதன்மைச் சாதிப் பணியாளன் பங்கு கொள்கிறான். பிள்ளையைப் பேருந்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு விடுதல், ஆண்டை வீட்டார் ஊருக்குச் செல்லும்போதும் திரும்பி வரும் போதும் சுமைகளை எடுத்துச் செல்லுதல், அடுப்புக்கு விறகு வெட்டிக் கொடுத்தல், நீர் இறைத்தல், கால்நடைகளைக் கவனித்தல், மாட்டுக் கொட்டகையைச் சுத்தம் செய்தல், விழா நிகழ்ச்சிகளின்போது பந்தல்போடுதல், முக்கிய செய்திகளை மற்ற ஊர்களுக்குச் சென்று சொல்லுதல் போன்ற எண்ணற்ற குடும்பப் பணிகளையும், வேளாண் பணிகளையும், கைவேலைகளையும் (எடுபிடி வேலைகள்) முதன்மைச் சாதிப்பணியாளர்கள் செய்வர். இவர்களது பணி இதோடு நின்றுவிடுவதில்லை. ஆண்டை ஈடுபடும் எந்த ஒரு விவகாரத்திலும் அவருக்கு உறுதுணையாக நிற்பர். ஆண்டை பிற குடும்பங்களுடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டால் இவர்களும் ஆண்டைக்கு ஆதரவாக நின்று அக்குடும்பங்களுக்கு எதிரியாகச் செயல்படுவர். அவ்வாறே ஆண்டைகளும் தத்தம் சாதிப் பணியாளர்கள் விவகாரங்களிலும் உறுதுணையாய் இருப்பர்.

ஓர் ஆண்டை தன்னுடைய சாதிப் பணியாளர்களின் பணியில் நிறைவடையா விட்டால் அவர்களைப் பணி நீக்கம் செய்து வேறு பணியாளர்களை அவ்வளவு

எளிதில் நியமிக்க முடியாது. அவ்வாறே பணியாளர்களும் அவர்களுடைய ஆண்டையின் கீழ்ப்பணிபுரிய விருப்பமில்லாமல் திடீரென விலகிவிட முடியாது. இவ்வாறான சிக்கல் ஏற்படும்போது ஆண்டை சாதியைச் சேர்ந்த மூத்தவர்களும் பேசி முடிவு செய்வர். னுடிஊழிய முறையில் ஒவ்வொரு சாதியும் செய்யும் ஊழியத்தைச் சொத்தாக்க் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக ஓர் ஊரைச் சேர்ந்த வண்ணான் அவன் ஊழியம் செய்யும் உரிமை பெற்ற ஆண்டைக் குடும்பங்கள் என்றும் அவனுக்கு மட்டுமே உரியது. அதே ஊரிலுள்ள வேறு வண்ணாரக் குடும்பங்கள் அக்குடும்பங்களுக்கு ஊழியம் செய்து பொருளீட்ட முடியாது. ஆகவே ஒவ்வொரு சாதிப் பணியாளரும் அவர்கள் செய்யும் ஊழிய உரிமையைச் சொத்தாகக் கருதுகின்றனர். ஒரு சாதிப் பணியாளன் தன் சொந்தக் காரணங்களால் வேறு ஊருக்குக் குடிபெயரும் போது அவன் உரிமம் பெற்ற ஊழியத்தை அதே சாதியைச் சேர்ந்த வேறு ஒருவனுக்கு விற்க அவனுக்கு உரிமை உண்டு என வட இந்தியாவில் ஆய்வு செய்த ஆஸ்கார் லூவி கூறுகிறார்.

குடிஊழிய முறை இன்று நவீனமயமாக்கத்தாலும், நகர மயமாக்கத்தாலும், தொழில்மயமாக்கத்தாலும், இடப்பெயர்வாலும், கல்வி வளர்ச்சியாலும், மரபுவழி பஞ்சாயத்து முறைமாறி கட்சி சார்புடைய பஞ்சாயத்து முறை ஏற்பட்டதாலும், மாறிவரும் சமுதாய முறைகளாலும், பணப் பொருளாதாரம் பெருகி வருவதாலும் பல பத்தாண்டுகளுக்கு முன் இருந்த வலுவான நிலையில் இன்று இல்லை. இது வேகமான மாற்றத்திற்கு இலக்காகியுள்ளது.

**வினாக்கள்**

1. சமத்துவ சமுதாயம் குறித்து எழுதுக.
2. பழங்குடி சமுதாயம் குறித்து எழுதுக.
3. தரநிலை சமுதாயம் என்றால் என்ன? விளக்குக.
4. சாதிமுறையின் வகைகளை விளக்குக.
5. இந்திய சாதிமுறையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

## அலகு - 4

### சமய நம்பிக்கைகளும் வாழ்வியலும்

சமயம் என்பது புனிதமான ஒன்றைப் (sacred thing) பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும் என்பார் எமிலி தர்கைம்." இக்கருத்தை மேலும் பரந்த பொருளுடையதாக மாற்றி ஓடியா என்பவர் பகுத்தறிவிற்கு எட்டாததும் (non-rational) செயலறிவிற்கு உட்படாததுமான (non empirical) ஓர் உலகத்துடன் தொடர்பு கொள்ள மக்கள் ஏற்படுத்திக் கொண்ட முறையே சமயம் என வரையறை செய்கிறார்.

சமய நம்பிக்கைகள் முன் வரலாற்றுக் காலந் தொடங்கி இன்று வரை மனித சமுதாயம் எங்கெல்லாம் வாழ்ந்து வந்துள்ளதோ அங்கெல்லாம் மனித வாழ்வியலோடு மிகவும் வேரூன்றியுள்ளன. எந்தெந்தச் சமுதாயங்களில் எவ்வகையான சமய நம்பிக்கைகள் உள்ளன என்பது பற்றிய ஆய்வுகள் செனோ.:.பான்ஸ், ஹெரோடாட்டஸ் காலம் தொடங்கி இன்று வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இவ்வகை ஆய்வுகள் மூலம் வெளி உலகத்திலிருந்து அறவே துண்டிக்கப்பட்டுத் தனிமையில் வாழும் பழங்குடிகளின் சமய நம்பிக்கைகள் முதல் பெரும் சமுதாயமாக வாழும் நவீன மக்களின் சமய நம்பிக்கை வரை அறிய முடிகிறது. பிலிப்பைன்ஸ் தீவில் ஒன்றுக்கும் மேல் ஒன்றாகப் பல வரிசைகளில் பொந்துக் குகைகளை அமைத்து வாழும் தசாதே (Tasade) பழங்குடியினரைப் பற்றி 1978- ஆம் ஆண்டுதான் முதன்முதலில் அறிய முடிந்தது. இப்பழங்குடியினரும் சமய நம்பிக்கைகள் கொண்டுள்ளனர்.

இதுவரை மானிடவியலுக்குத் தெரியவந்துள்ள தரவுகளின் படி முன் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனித மூதாதையர்களான நியாண்டர்தால் மனிதன் (Neanderthal man) காலத்திலேயே சமய நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இவ்வகை மனிதர்களிடம் கண்டெடுக்கப்பட்ட செய்பொருள்கள் (artifacts) இறப்புக்குப் பின்னும் ஏதோ ஒரு வகையான வாழ்வுண்டு என அவர்கள் நம்பியிருக்க வேண்டுமென்பதைப்

புலப்படுத்துகின்றன. எனினும், நம்பிவரலாற்றுக் கால மக்களிடம் இவ்வகைச் சமய நம்பிக்கை முன்வரலாஜ்ண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டது எனத் தொல்லியலார் மதிப்பிட்டுள்ளனர்.

முன் வரலாற்றுக்கால மக்களின் குகைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் அவர்களின் நம்பிக்கை முறைகளை ஊகிப்பதற்கு உதவுகின்றன. பெரும்பாலான ஓவியங்கள் வேட்டை நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்றன. வேட்டையில் எவ்வகையான விலங்கினை எவ்வாறு வேட்டையாட வேண்டுமென விரும்பினார்களோ அந்த வகையில் ஓவியங்களைத் தீட்டியுள்ளார்கள். அவை அவர்களுக்கு வேட்டையாடும் மன வலிமையையும் வேட்டையில் வெற்றி பெறலாம் என்ற எண்ணத்தையும் கொடுத்தன. இவ்வகையான எண்ணங்கள் சமய நம்பிக்கைகளுக்கு அடித்தளமாக அமைந்தன.

தென்கிழக்காசிய நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளின் பல பகுதிகளிலும், ஐரோப்பா முழுவதிலும் முன்வரலாற்றுக் கால மக்கள் இறந்தவர்களைப் புதைத்த இடங்களில் நினைவிற்காகக் பெருங்கற்களை (megaliths) நட்டு வைத்தனர். அவ்விடங்களை அகழாய்வு செய்தபோது பல சடங்குப் பொருள்கள் கிடைத்தன. அப்பொருள்கள் இறந்தவர்களின் ஆவியை நினைவுபடுத்தவே இயல்பிறந்த இயற்கையின் ஆற்றலுடன் (supernature power) தொடர்பு கொள்ளவோ இறந்தவர்களின் உதவியைப் பெறவோ வைத்திருக்க வேண்டும். அவ்விடங்களில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் நியாண்டர்தால் மனிதனின் நம்பிக்கையைச் காட்டிலும் மேலும் கூடுதலான சமய நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக உள்ளன.

சமகாலப் பண்பாடுகளில் நிலவும் அனைத்து வகையான சமய நயசிகைகளும் “சமயம்“ (Religion) என்னும் தலைப்பின் கீழ்ப் பேசப்படுகின்றன. இன்று சமயம் சார்ந்த நம்பிக்கைகள் மாற்றம் ட்டிற்குப் பண்பாடு வேறுபடுகின்றன் காலத்திற்குக் காலம் மனிதன் பெற்று வந்துள்ளன. இம்மாற்றம் முன்வரலாற்றுக் கால மனிதனின் சமய நம்பிக்கையிலிருந்து தொன்மை மக்களிடையே (primitive people) ஆவி நம்பிக்கையாக மாறி பின்னர்ப் பேய், பிசாசு, தேவதை நம்பிக்கைகள் என வளர்ந்து,

இறுதியில் கடவுள் நம்பிக்கையாகப் தொடர்புடைய படிமலர்ச்சியடைந்துள்ளது. ஆவிகளுடன் ஆற்றல்களாயினும் சரி, பேய், பிசாசு, தேவதை ஆற்றல்களாயினும் சரி, கடவுளர்களின் சரி அனைத்து வகைகளும் மனித மனத்தின் முதலானவற்றின்மூ ஆற்றல்களாயினும் படிமலர்ச்சி நிலைகளே. இக்கருத்தின் தன்மைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஆராய்வோம்.

இக்காலத் தமிழ்ச் சமுதாயத்தினர் உலக நிகழ்வுகளை இயல்பிறந்த இயற்கையின் நிகழ்வுகள் (supematural phenomena) என்றும் இயற்கை நிகழ்வுகள் என்றும் இரு நிலைகளாகப் பிரித்துக் காண்கின்றனர். இவ்வகைப் பாகுபாடு அனைத்துப் பண்பாட்டிலும் இடம்பெறவில்லை. சில பண்பாட்டினர் அனைத்து நிகழ்ச்சிகளையும் இயல்பிறந்த இயற்கையின் நிகழ்ச்சிகள் என வகைப்படுத்துகின்றனர். இறையிலிக் கோட்பாட்டினர் இயல்பிறந்த இயற்கை என்னும் கோட்பாட்டை அறவே ஒதுக்குகின்றனர். இந்நிலையில் ஒரு பண்பாட்டினர் எவற்றை இயல்பிறந்த இயற்கையின் நிகழ்வுகள் எனக் கொள்கிறார்களோ அவற்றை வேறொரு பண்பாட்டினர் சாதாரண நிகழ்வுகளாகக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, சில நோய்கள் பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்ணுயிரிகளால் ஏற்படுகின்றன எனச் சில பண்பாட்டினர் உறுதியாக நம்ப, சில பண்பாட்டினர் அவ்வகை நோய்கள் இயல்பிறந்த ஆற்றல்களின் சீற்றத்தினால் ஏற்படுபவை என உறுதியுடன் நம்புகின்றனர்.

பண்டைய ஜூடியோ கிறித்தவர்கள் அப்போது நிகழ்ந்த பெருவெள்ளங்கள், நில அதிர்வுகள், எரிமலைப் பிழம்புகள் சூறாவளிக் காற்றுகள் போன்றவற்றை இயல்பிறந்த இயற்கையின் ஆற்றல்கள் என நம்பினர். ஆனால் இந்நிகழ்வுகள் இன்று சாதாரணமானவை என ஒப்புக் கொள்ளப்படுகின்றன. பண்பாட்டிற்குப் பண்பாடு காணப்படும் இவ்வகை வேறுபாடுகள் ஒவ்வொரு பண்பாட்டினரும் இயற்கை விதி (Natural law) பற்றி ஏற்படுத்திக் கொண்டுள்ள வரையறையைப் பொறுத்துமாறுகிறது என்பது இதன் மூலம் புலனாகும். அதோடு இவ்வேறுபாடுகள் மனித மனத்தினுடைய அறிதிறக் கோலத்தின் (Cognitive pattern) படிமலர்ச்சியோடும் தொடர்புடையது.

அதனாலேயே இன்று உலகில் நூற்றுக்கணக்கான சமய நம்பிக்கைகளும் ஆயிரக் கணக்கான சடங்கு முறைகளும் காணப்படுகின்றன.

மேற்கூறிய கருத்தை உய்த்துணரும்போது “படிமலர்ச்சி“ (evolution) என்பது மிகவும் கவனத்தோடு புரிந்து கொள்ள வேண்டிய கருத்தாக்கமாக அமைகிறது. சமய நம்பிக்கையில் படிமலர்ச்சி ஆவி நம்பிக்கையிலிருந்து கடவுள் நம்பிக்கை வரை வந்துள்ளது எனக் கண்டோம். இதில் தொடக்க நிலை தாழ்ந்தது பொருளாகாது. படிமலர்ச்சியானாலும் என்றோ இறுதிநிலை உயர்ந்தது என்றோ பண்பாட்டுப் படிமலர்ச்சியானாலும், உயிரியல் அல்லது வேறு எந்த ஒரு கூறின் படிமலர்ச்சியானாலும் அனைத்திலும் அல்ர்ச்சியின் கருத்தாக்கம் பொதுவானதே மாறக்கூடியதலும் படிமலர்ச்சி என்னும் கருத்தாக்கம் தொடர்ச்சியான மாற்றல். (ontinuous change) என்பதையே குறிக்கிறது. ஆனால் சமுதாய, பண்பாட்டு, உயிரியல் படிமலர்ச்சியைப் பார்க்கும்போது அனைத்து பகையிலும் ஒவ்வொரு கூறும் எளிய அமைப்புகளாக இருந்து அதன் தளர்ச்சியான படிமலர்ச்சிக் காலத்தில் எளிமையற்ற, சிக்கலான (complex) அமைப்புகளாக மாறி வந்துள்ளன. இவ்வகை மாற்றம் அது நீண்ட காலம் நிலைத்திருக்கும் பொருட்டு அந்தந்தச் சூழலோடு அல்லது அமைப்போடு நன்கு தகவமைய (adaptation) ஏற்படுத்திக் கொண்ட மாற்றமாகும்.

மேற்கூறிய கருத்தின் அடிப்படையிலேயே சமயத்தின் பல்வேறு தன்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். இன்றுள்ள சமய நம்பிக்கைகளுள் எது சிறந்தது? எது சிறப்பற்றது? எது உயர்ந்தது, எது தாழ்ந்தது? என்பன போன்ற மதிப்பீடுகளுக்கு மானிடவியல் கருத்துக்கள் இடம் கொடுப்பதில்லை. மானிடவியலின் நோக்கமெல்லாம் சமயம் என்னும் அமைப்பு அதன் படிமலர்ச்சி நிலையில் எவ்வாறான மாற்றத்தைப் பெற்று வந்திருக்கிறது, ஒவ்வொரு நிலையிலும் அது ஆற்றி வந்த பங்கென்ன, இன்று அனைத்துச் சமுதாயங்களிலும் சமய நம்பிக்கை ஏன் உள்ளது. அது ஆற்றும் பங்கென்ன, அதன் செயற்பாடுகள் என்ன என்பன பற்றியதே உயர்வு, தாழ்வு என ஒப்பிட்டுப் பேசுவதை மானிடவியல் அனுமதிப்பதில்லை அவ்வாறான கருத்தாக்கங்களை அது ஆதரிப்பதுமில்லை. உயர்வு தாழ்வு என ஒப்பிட்டுப் பேசுமளவிற்கு அனைத்துப்

பண்பாடுகளுக்கும் பொதுவான ஓர் அளவுகோல் இல்லை என்பதே மானுடவியல் சுட்டிக்காட்டும் மிக உயர்ந்த மனிதநேயமாகும். (இது பற்றிய கருத்துக்கள், "பண்பாட்டுக் கோலங்கள்" என்னும் அத்தியாயத்தில் "பண்பாடு ஒரு சார்புடைய அமைப்பு என்னும் தலைப்பின் கீழ் இடம் பெறுகின்றன).

**சமயத்தின் தோற்றம்**

சமுதாய அறிவியல்களில் பெரும்பாலும் ஓர் அறிஞருடைய கொள்கையை அல்லது கருத்தை மற்ற அறிஞர்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதை ஒட்டியும் வெட்டியும் பேசும் போக்கு காலத்தொட்டு நடந்துவருவதாகும். இதனால் ஒரே பொருள். குறித்து ஒன்றுக்கும் மேற்பட்ட கருத்துகள் உள்ளதைக் காணமுடிகிறது இந்நிலை சமயத்தின் தோற்றம் பற்றிய கருத்துகளுக்கு கையையும் சமயததின தோற்றம் குறித்து முதலில் எழுந்த கொள்கையையும் அதனை ஒட்டியும் வெட்டியும் ஆராய்ந்ததால் விளைந்த கருத்துகளையும் இங்குக் காண்போம்.

**ஆவி வழிபாடு**

தொன்மைச் சமயம் (Primitive Religion) தோன்றிய முறையை விளக்க முற்பட்ட முதல் மானிடவியல் கோட்பாடே ஆவிவழிபாடு" (Animism) ஆகும். இக்கோட்பாட்டை 19 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலேய மானிடவியலறிஞர் எட்வர்டு பர்னட் டைலர் (1832 - 1917) என்பவர் வகுத்தார். இவர் 1817 -ஆம் ஆண்டு இரண்டு தொகுதிகளாக வெளியிட்ட "தொன்மைப் பண்பாடு" (Primitive Culture) என்னும் நூலின் முதல் தொகுதியில் தொன்மைப் பண்பாட்டின் ஏனைய கூறுகளை விளக்கி, இரண்டாம் தொகுதி முழுவதிலும் தொன்மைச் சமயத்தைப் பற்றி எழுதும்போது ஆவியுலகக் கோட்பாடு குறித்து விளக்குகிறார். ஆவியுலகக் கோட்பாட்டின் மையக் கருத்தை டைலர் குறிப்பிடும்போது "சமயத்தின் தொடக்கம் ஆவிகளின்பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது" என்கிறார்" டைலரின் இக்கருத்து சமயத்தைப் பற்றிய குறைந்த பட்ச வரையறை (Minimum Definition of Religion) எனச் சிறப்பித்துக் கூறப்படும்.

தொன்மை மக்களின் சமய நம்பிக்கை ஏன் ஆவிகளோடு தொடர்புடையதாக இருந்தது என்பதற்கு டைலர் நீண்ட விளக்கத்தினை முன் வைக்கிறார். தொன்மை மக்கள் அவர்களைச் சுற்றிலும் கண்ணுக்குப் புலனாகாத எண்ணற்ற ஆவிகள் அவர்களின் செயல்களைச் செயற்படுத்துகின்றன என உறுதியாக நம்பினர். அவ்வகையான நம்பிக்கை அவர்களிடம் வேரூன்ற காரணம், அவர்கள்தம் புறச்சூழலில் நிகழ்ந்த இயற்கையின் விளைவுகளுக்கான காரணத்தை அறியும்பொருட்டு அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட காரண காரிய விளக்கங்களேயாகும். இயற்கையோடு மிகவும் ஒன்றி வாழ்ந்த அவர்கள் இயற்கையின் ஆற்றல்களைச் சரிவர புரிந்துகொள்ள இயலவில்லை. அவ்வாறே உளவியல், மனவியல் செயல்களையும் அவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.

அடைமழை பெய்யும்போதெல்லாம் ஏற்பட்ட பெரு வெள்ளங்கள் பெரிய பெரிய. மரங்களைச் சாய்த்தன் மண்கரைகளை மழை பெய்யுங் காலத்தில் காதைப் பிளக்கும் இடியும், கண்ணைப் பறிக்கும் மின்னலும் எப்போதாவது வானிலிருந்து எரிந்து விழும் சூறாவளியும் வானுயர்ந்து நின்ற காட்டு மரங்களை வேரோடு மண் புழுதியினையும் அடித்துப் பெரும் ஓசையை எழுப்பின. அவ்வகையான இயற்கையின் சீற்றங்களுக்கு என்ன காரணம் எனப் புரியாமல் தொன்மை மக்கள் அஞ்சினர். அந்த இயற்கை நிகழ்வுகள் சில சமயங்களில் அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தின. அதற்கடுத்து அவ்வப்போது தாக்கிய கொள்ளை நோயால் பலர் உயிரிழந்தனர். அதுபோல பல இயற்கை நிகழ்வுகள் அவர்களின் வாழ்வில் இடம்பெற்றன. அவையனைத்திற்கும் என்ன காரணம் என்பது அவர்களுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

இயற்கை நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட பிரமை போன்றே உளவியல்,மனவியல் செயல்களிலும் அவர்கள் மருட்சியுடன் புரிந்து கொண்டனர். தொன்மை மக்கள் கனவு, நனவு, உறக்கம், இறப்பு பற்றி சிந்திக்கத் தொடங்கினர். அவர்களின் கனவிலும் தூக்கத்திலும் இறந்த மூதாதையர்களையும் பல்வேறு செயல்களையும் கண்டனர். கனவில் ஏற்பட்ட அந்நிகழ்ச்சிகள் அவர்களுக்குள் ஒருவகை பிரமையை ஏற்படுத்தி

மாயையான அனுபவத்தை உண்டாக்கின. அதனைத் தொடர்ந்து பகற்பொழுதில் அவர்கள் உரக்கக் கத்தியபோது சில சமயங்களில் அவ்வொலியை எதிரொலியாகக் கேட்டனர். அவர்கள் தம் சொந்தக் குரலும் கத்திய முறையும் அப்படியே திரும்ப வருவதைக் கண்டு அஞ்சினர். அவ்வகை எதிரொலி எங்கிருந்து வருகிறது? ஏன் வருகிறது? என்பதைச் சோதிக்க இடம் மாறிக் கத்தினர். அவ்வாறு இடம்மாறி கத்தியபோது சில இடங்களில் எதிரொலிகள் வரவில்லை. அதற்கான காரணத்தையும் அவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.

தொன்மை மக்களின் மருட்சித்தன்மை மேலும் நீண்டு கொண்டே சென்றது. நீர் நிலைகள், குளங்கள், ஆறு போன்ற இடங்களில் அவர்கள் குனிந்தபோது அவர்களின் சொந்த நிழல் தெரியவே அதைக் கண்டு மருண்டனர். அதற்கான காரணங்களை அறிவதிலிருந்து அவர்களால் விடுபட இயலவில்லை. வெள்ளம், புயல், சூறாவளி, இடி, மின்னல் ஆகிய இயற்கை நிகழ்ச்சிகள் தொடங்கி கனவில் கண்ட நிகழ்ச்சிகள், எதிரொலி, சொந்த நிழல் நீரில் தெரிவது வரை அனைத்துச் செயல்களுக்கும் எவை காரணம் என விடை காணவியலாத இறுதிக் கட்டத்தில் அவர்கள் எதிர்கொண்ட ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பின் ஓர் ஆவி உள்ளது. அதுவே அச்செயல்களை இயக்குகிறது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். தலைப்பட்டனர். அந்த ஆவிகள் மனிதனின் அனைத்துச் இயக்கவல்லன என உறுதியாக நம்பத் தொன்மை மக்களின் இவ்வகையான நம்பிக்கை இன்றைய நவீன அறிவியல் காலத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றாலும் அவர்களின் அடுத்த கட்டச் சிந்தனை ஆவியுலகக் கோட்பாட்டிற்கு உயிர்மூச்சாக அமைந்தது. அது இன்றைய பெருஞ் சமயங்களிலும் இடம்பெற்றுள்ளது.

ஆவி வழிபாட்டிலிருந்தே (doctrine of spirits) சமயம் தோன்றியது என்று கூறும் டைலர், அக்கோட்பாட்டில் இறப்பு, கனவு ஆகியவற்றோடு தொடர்புடைய ஆன்மாக் கோட்பாடும் (doctrine of souls) அடங்கும் எனக் கூறுகிறார். இயற்கையின் சீற்றத்திற்கும் கனவின் வியத்தகு நிகழ்ச்சிகளுக்கும், எதிரொலி கேட்டதற்கும், அந்தந்தப் பொருள்களில் உறையும் ஆவிகளே காரணமென நம்பத் தலைப்பட்ட

தொன்மை மக்கள் வாழ்வுக்கும் இறப்புக்கும் ஆவிகளே காரணமெனக் கருதினர். மனிதன் இறக்கும்போது கண்ணுக்குப் புலப்படாத “சக்தி“ (ஆவி) வெளிப்படுவதாலேயே அவன் இறக்கிறான் என்றும், அச்சக்தி உடலினுள் இருக்கும்வரை உயிருள்ளவனாக இருக்கிறான் என்றும் கருதினர்.

தொன்மை மக்கள், “ஆவி உடல்“ என்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட பின்னர் அடுத்த கட்டத்தில் உலவும் ஆவி (free soul), உடல் ஆவி (body soul) என்ற இரண்டு ஆவிகள் உடலில் உள்ளன என்று நம்பினர். உலவும் ஆவி உடலிலிருந்து வெளியே சென்று அன்றாட செயல்களோடு தொடர்புற்றுப் பின் மீண்டும் உடலுக்குள் வந்து உறைகிறது. ஆனால் உடல் ஆவி எப்போதும் உடலுக்குள்ளேயே உறைந்துள்ளது. அது எப்போது உடலை விட்டு வெளிப்படுகிறதோ அப்போதே இறப்பு நிகழ்கிறது. உலவும் ஆவி சுவாசத்திற்கும் நிழலிற்கும் காரணமாக அமைகின்றது. உடல் ஆவியோ இரத்தம், தலை (உடல் ஆவி இருப்பதாக எண்ணிய உறுப்பு) ஆகியவற்றின் உருவமாக இருக்கிறது என நம்பினர்.

மேற்கூறிய நம்பிக்கைகளின் அடிப்படையில் ஆவியானது அதன் உருவத்திலும் வடிவத்திலும் தொட்டுணர முடியாதது எனக் கருதினர். அவர்கள் வழக்கில் ஆவி என்ற சொல் “நிழல்“ அல்லது “மறைவு“ என்பதைக் குறிக்கிறது என்றும், ஆவியின் தன்மையை அது தங்கும் உடல் என்னும் கலத்தில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்று நம்பினர். அவர்கள் கனவில் நிகழ்ந்தவைகளையும் ஆவிகளின் பிற செயல்களையும் நேரடியாக உணர்ந்ததன் மூலம், மனிதனுக்கு “நிலையற்ற சதைப்பகுதி“, “ஆத்மீகமான ஆவி“ ஆகிய இரு உடற்கூறுகள் உள்ளன எனத் தீர்மானித்தனர். தொன்மை மக்களின் இவ்வகைக் கருத்தாக்கம் ஆவியுலகக் கோட்பாடு வலுப்பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. இக்கருத்தாக்கம் பெருஞ்சமயங்களிலும் வேரூன்றியுள்ளது.

மனிதனிடம் இவ்விரு உடற்கூறுகள் உள்ளன என்ற நம்பிக்கையால் விளைந்தவையே பச்சைச் சடங்கு (green funeral) உலர்ந்த சடங்கு (dry funeral) என்னும் இருவகை ஈமச்சடங்குகளாகும். இறந்தவுடன் பச்சைச் சடங்கையும்

இறந்தவரின் ஆவி இனிமேல் திரும்பி வராது என முடிவு செய்த பின்னர் உலர்ந்த சடங்கையும் செய்தனர். பச்சைச் சடங்கானது உடல் ஆவி பிரிந்து இறப்புக்குள்ளான சதைப் பகுதிக்குச் செய்யப்பட்டது. உலர்ந்த சடங்கானது ஒருவரது ஆவி இறந்த பின்னும் சிலகாலம் வரை அவர்கள் பகுதிகளில் உலவும் என்றும் பின்னர் இறுதியாக ஓரிடத்தில் உறையும் என்றும் நம்பி அவ்வாறு உறைந்த பின்அவரது ஆவிக்குச் செய்த சடங்காகும்.

தமிழர் வாழ்வியலில்கூட அதன் எச்சங்கள் தொடர்வதைக் காணலாம். இறந்த மறுநாள் புதைக்கும்போதோ எரிக்கும்போதோ ஒரு சடங்கினைச் செய்கின்றனர். இதனைப் பச்சைச் சடங்கு எனக் கொள்ளலாம். இச்சடங்கினைச் செய்த பின்னும் இறந்தவர் தம் ஆவி சில நாட்கள் வரை வீட்டிற்கு வந்து செல்கிறது என நம்புகின்றனர். இதனால் காரியம் செய்யும் வரை வீட்டில் அவரது உடைகளையும் சில உடைமைகளையும் வைத்து தினமும் விளக்கேற்றி வைப்பர். அதனோடு உடைகளின் எதிரில் மணல் பரப்பி வைப்பர் ஒரு சிறிய பாத்திரத்தில் நீரையும் வைப்பர்.சில நாட்களில் மண்ணின் மேற்பரப்பு கலைந்திருக்கும் அல்லது வைத்த நீரின் அளவு குறைந்திருக்கும். இறந்தவர் வீட்டிற்கு வந்ததாலேயே அது நிகழ்ந்தது என எண்ணுகின்றனர். இறுதியாக 14 அல்லது 16-ஆம் நாள் காரியம் செய்து அவரது ஆவியைச் சாந்தியடையச் செய்கின்றனர். இதனை உலர்ந்த சடங்கு எனக் கொள்ளலாம்.

நீலகிரி மலையில் வாழும் தோடர்கள் இறந்தவுடன் பச்சைச் சாவுச் (pachai chaavu - Wet or green funeral) சடங்கையும் ஓராண்டு கழித்து வரைதன் (varaidan or dry funeral) என்னும் உலர்ந்த சடங்கையும் செய்கின்றனர். தோடர்களின் வரைதன் சடங்கானது இந்துக்களின் கருமாதி (காரியம்) சடங்கை ஒத்ததாகும். நீலகிரியில் வாழும் கோத்தப் பழங்குடியினரும் “பிஸ்தௌ“ (pasdau) என்னும் பச்சைச் சடங்கையும் வர்ல்தௌ“ (Varidau) என்னும் உலர்ந்த சடங்கையும் செய்கின்றனர்.

மத்திய இந்தியாவில் வாழும் ஓரவன், சந்தால் ஆகிய பழங்குடியினரிடம் ஆவியுலக நம்பிக்கையை மஜ்னியேத்தான் (majniyethan) வழிபாட்டில் காணலாம். இது தவிர ஓரவன்கள் மழை பெறவும் பயிர், கால்நடை ஆகியவற்றின் நலனுக்கெனவும் தனித்தனியான ஆவிகளை வழிபடுகின்றனர். சட்டிஸ்கார் பகுதியில் வாழும் காமர் பழங்குடியினர் உலவும் ஆவியான மட்ஹி (madhee) கடுகாட்டிலும், உடல் ஆவியான ஜிவ் (jiv) இறைவனிடத்திலும் சேர்கின்றன என நம்புகின்றனர். மிகிர் பழங்குடியினர் இறந்தவரின் ஆவி குடும்ப நலனுடன் தொடர்புடையது என எண்ணுவதால் குழந்தைகளுக்கு இறந்தவரின் பெயரையே சூட்டுகின்றனர். மேற்கு இந்தியாவில் வாழும் பில்லர்கள் விர (vir) என்ற மூதாதையர் ஆவியை வழிபடுகின்றனர்.

டைலரின் ஆவி வழிபாட்டுக் கொள்கைவழி ஒவ்வொரு பண்பாடும் சமய நம்பிக்கையைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்றும், அச்சமய நம்பிக்கையே அந்தந்தப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு அடிக்கல்லாக அமையும் என்றும் வலியுறுத்திக் கூறுகிறார். டைலர் அடிப்படையில் 19 ஆம் நூற்றாண்டுப் படிமலர்ச்சிக் கொள்கைக் குழுவைச் (ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கை) சேர்ந்தவர் என்பதால் இவர் சமயம் எவ்வாறு படிமலர்ச்சி அடைந்தது என்பதையும் விளக்க முற்பட்டார். குறிப்பாக, மார்கனின் அணுகுமுறையிலேயே டைலரும் சமயத்தின் வளர்ச்சியை ஆராய்ந்தார்.

உயிரினங்களின் படிமலர்ச்சி போன்றே பண்பாட்டுப் படிமலர்ச்சியும் சிறிய, எளிய நிலையிலிருந்து எளிமையற்ற, சிக்கலான நிலையை அடைந்துள்ளது. டைலர் தம் படிமலர்ச்சித் திட்டத்தில் இன்றுள்ள அனைத்துச் சமுதாயங்களும் ஆவியுலகச் சமயம் என்னும் நிலையைக் கடந்தே வளர்ச்சி பெற்று வந்துள்ளன. அவற்றின் வளர்ச்சி ஆவியுலக நம்பிக்கை பலகடவுள் வழிபாடு ஒருகடவுள் வழிபாடு என்ற வரிசையில் நிகழ்ந்துள்ளது. இன்றுள்ள பெருஞ் சமயங்கள் அனைத்தும் ஆவியுலக நம்பிக்கை என்னும் நிலையைக் கடந்தே வந்துள்ளன என்பதால் அனைத்தும் குறைந்தபட்ச ஆவியுலக நம்பிக்கையாவது கொண்டிருக்கும் அல்லது எங்கெங்கு உயிர், ஆவி, பேய், பிசாசு, கடவுள் முதலானவற்றின் நம்பிக்கையுள்ளதோ

அங்கெல்லாம் குறைந்த அளவிலேனும் ஆவியுலக நம்பிக்கை இருக்கும் எனக் கூறுகிறார்.

ஆவியுலக நம்பிக்கையை டைலர் கீழ்நிலை ஆவிவழிபாடு (lower animism), மேல்நிலை ஆவி வழிபாடு (higher animism) என்னும் இரு நிலைகளாகப் பிரிக்கின்றார். ஆவி வழிபாடு என்ற அடிநிலையில் தோன்றிய சமய நம்பிக்கை, அதன் படிமலர்ச்சி நிகழ்வில் இறுதியாக ஒரு கடவுள் வழிபாடு என்ற உச்ச நிலையை அடைந்தது. அவ்வளர்ச்சி நிலைகளுக்கேற்பவே மக்களின் வளர்ச்சி நிலையும் அமைந்துள்ளது. என்பார் டைலர்.“ கீழ்நிலை ஆவி வழிபாட்டைக் கொண்டவர்கள் ஒழுக்க நிலை சாராத (amoral) தொன்மை மக்களாவர். இவ்வகையினர் இறப்புக்குப்பின் உயிர் தொடர்ந்து வாழ்கிறது அல்லது நன்மை தீமைகளைச் செய்யும் ஆற்றலைக் கொண்டு நிலைத்திருக்கிறது என நம்புகின்றனர். மேல்நிலை ஆவியுலகக் கோட்பாட்டினர் அவர்கள் வாழுங் காலத்தில் செய்த கருமங்களின் தன்மைக்கேற்ப மதிப்புகளோ தண்டனைகளோ கிடைக்குமென நம்புகின்றவர்கள். இரண்டாம் வகையினரே படிமலர்ச்சிக் கோட்டில் மேல்நிலையில் உள்ளவர்கள் என மதிப்பிட்டார் டைலர்.

டைலரின் கோட்பாட்டைப் பல அறிஞர்கள் திறனாய்வு செய்தனர். ஆவி வழிபாடு கோட்பாட்டை வகுத்ததன் மூலம் டைலர் தொன்மை மக்களைத் தத்துவஞானிகளாகவும் பகுத்தறிவாளர்களாகவும் மிகைப்படுத்திவிட்டார் என்றும், டைலருக்குக் களப்பணி அனுபவம் இல்லையாதலால் தொன்மை மக்களின் சுறுசுறுப்பான வாழ்க்கையில் அவர்களுக்குச் சிந்தனை செய்யவே காலமில்லை என்பதை ஊகிக்கத் தவறிவிட்டார் என்றும் மானிடவியலார் சிலர் குற்றஞ்சாட்டினர்.

டைலரின் கோட்பாடு இயற்கை அறிவியலார் பார்வையிலேயே இருப்பதால் இவர் தொன்மைச் சமயத்தின் ஒரு பகுதியை மட்டும் மிகைப் படுத்திவிட்டார் என மாக்ஸ்முல்லர், தர்க்கைம், மாரட் போன்ற பலர் கருத்துத் தெரிவித்தனர். சமூகப் பண்பாட்டு முறைகளைச் செயற்பாட்டு காரண காரிய, அமைப்புகளோடு (functional -

causal system) ஒப்பிட்டுக் காட்டுவது போல் டைலர் சமயத்தின் வளர்ச்சியினை ஒப்பிட்டுக் காட்டாததால் இக்கோட்பாடு குறைபாடுடையதாய் உள்ளது என மேலும் சிலர் குறை கூறினார்.

தொன்மை மக்கள் அனைவரிடமும் ஆவியுலக நம்பிக்கை இருக்கின்றதென்றும் வளர்ச்சியுற்ற சமயங்களிலும் இது குறைத்த அளவாவது இடம்பெறும் என்றும் டைலரின் வாதத்தைச் சிலர் ஏற்க மறுத்தனர். உலகத்தில் சில குடியினர் ஆவியுலக நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என வாதிட்டாலும் பொதுவான சமயக் கோட்பாட்டை உருவாக்கும்போது ஐயப்பாடுடைய விதிவிலக்கை எக்கோட்பாடும் ஏற்பதில்லை என டைலர் மறுப்புக் கூறினார். இக்கருத்தைத் தாம் முழுமனதோடு என்றும் டைலர் சமயங்கள் இருக்க முடியாது அதன் எச்சங்கள் மறைமுக அளவிலேனும் இடம்பெறும் என்ற தம் "எஞ்சிநிலைத்தலை (survivals) கோட்பாட்டைத் துணையாகக் கொள்கிறார். அதனாலேயே அனைத்து மக்களும் ஆவியுலக நம்பிக்கையை ஏதோ ஒரு வகையில் கொண்டிருப்பர் என டைலர் முடிந்த முடி வதேர் கூறினார். இவர்தம் கருத்துகளை உறுதிப்படுத்த பல கூற்றுகளை முன்வைத்துப் பேசினார். அவற்றுள் ஒன்று எவ்வாறு காடும் விலங்குகளும், வானும் பறவைகளும், தண்ணீரும் மீன்களும் ஒன்றுக்குள் ஒன்றாக உள்ளனவோ அவ்வாறே மனிதனும் ஆவியும் ஒன்றோடொன்று ஒன்றியிருக்கின்றனர். எனவே ஆவியுலக நம்பிக்கையின்றி மனிதன் சமய அமைப்பைப் பெற்றிருக்க முடியாது என உறுதிபடக் கூறினார். டைலரின் கோட்பாட்டைச் சில அறிஞர்கள் குறை கூறிய அதே நேரத்தில் தார்வின் டைலரை மிகவும் உயர்வாகப் போற்றினார். (தார்வினின் கூற்றைப் பண்பாட்டுக் கோலங்கள் என்னும் அத்தியாயத்தில் "தொன்மைப் படிமலர்ச்சியியல்" என்னும் தலைப்பின் இறுதியில் காண்க).

**உயிரியம்**

டைலருக்குப் பின் அவரது பதவியை ஏற்றவரும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மானிடவியலறிஞருமான ஆர்ஆர். மாரட் உயிர்ப்புச் சக்தியின் அடிப்படையில் நிலவும் நம்பிக்கையைக் கண்டறிந்தார். இதையே உயிரியம் (animatism) எனக் குறிப்பிட்டார்.

இது தொன்மைச் சமயத்தின் தோற்றத்தை விளக்க முற்பட்ட இரண்டாவது மானிடவியல் கோட்பாடாகும் மாரட் மெலனீசிய மக்களிடம் ஆய்வு செய்தபோது அவர்கள் கொண்டிருந்த “மனா“ (mana) நம்பிக்கை அடிப்படையில் இக்கோட்பாட்டை உருவாக்கினார். மனா நம்பிக்கைகளின் அடிப்படையில் இக்கோட்பாடு உருவானதால் இது “மனா நம்பிக்கை (manaism) என்றும் கூறப்படும்.

ஆவிகள், பேய், பிசாசு போன்ற இயல்பிறந்த இயற்கையின் (supernature) வடிவங்களையும், இயற்கைப் பொருள்களையும், உயிரினங்களையும், கடவுளரையும் வழிபடாத சமூதாயத்தினர் உள்ளனர். இவர்கள் உயிரினங்களுக்கு (animate) ஆவி உண்டென்பதையும், உயிரற்ற (inanimate) பொருள்களில் ஆவி உண்டென்பதையும் மனிதனைச் சார்ந்த (personal) ஆவி உண்டென்பதையும் அறவே நம்பாதவர்கள். இவ்வகைச் சமுதாயத்தினர் மனிதன், பொருள், இயற்கை முதலானவற்றைச் சாராத, உயிர்ப்புத் தன்மையுடைய ஆற்றலில் நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மெலனீசியர், பாலினீசியர், நியூகினிப் பழங்குடியினராவர். இவர்கள் அனைவரும் “மனா“ என்னும் ஆற்றலில் நம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வகை நம்பிக்கையிலிருந்தே தொன்மைச் சமயம் தோற்றம் பெற்றது என்று மாரட் (R.R. Marret) கூறுகிறார்.

“மனா “ என்னும் மெலனீசியச் சொல்லிற்கு “உயிர்ப்புத் தன்மையுடைய ஆற்றல்“ என்பது பொருள். இயற்கையாய் அமைந்துள்ள திறனைப் பெருமளவு மிகுதிப்படுத்தி அதன்மூலம் சாதாரண மனிதர்கள் சாதிக்க இயலாததைச் செய்ய வைக்கும் எந்த ஓர் ஆற்றலையும் மனா என்று கருதுகின்றனர். மனித சக்திக்கப்பாற்பட்ட அனைத்துச் செயல்களையும் இயக்கவல்லது. இதன் தோற்றம் மனித உணர்வுகளுக்கப்பால் காணப்பட்டாலும் செயல்திறனாகவோ அசாதாரணமான மனிதன் செயல்களின் வழியாகவோ வெளிப்படும் இயல்புடையது. இந்த ஆற்றலை நம்பும் இம்மக்களின் கருத்துப்படி மனா, உலகம் முழுவதும் பரவலாக

நிறைந்திருந்தாலும் சில மனிதர்களிடமும் பொருள்களிலும் மட்டுமே மிகுதியாகச் சேரவல்லது.

தலைவர்கள், சமயகுருக்கள், அசாதாரணத் திறமை - பெற்றுள்ளவர்கள், பெரும் புகழ்பெற்றுள்ள மனிதர்கள், மிகுந்த வலிமை பெற்றுள்ள மனிதர்கள், மற்றவர்களைக் காட்டிலும் மிகக் கூரிய பார்வை கொண்டவர்கள் முதலானோரிடம் மனா ஆற்றல் உள்ளதே அவர்கள் பிறரைக் காட்டிலும் சிறப்புற்றிருப்பதற்குக் காரணமென எண்ணுகின்றனர். கைவினைஞனுக்குக் கைதேர்ந்த கலைப் பொருள்களை உருவாக்கும் திறமையையும், கவிஞனுக்குப் புகழ்பெற்ற கவிதைகளை இயற்றும் திறமையையும், சிலர் மட்டும் குரல் வளம் கொண்டு பாடும் திறமையையும் மனா ஆற்றல் கொடுக்கிறது என்று கூறுகின்றனர். மேலும் படகு செலுத்துதல், போரிடுதல் போன்றவற்றில் ஒருவன் தன்னையொத்த மற்றவரைக் காட்டிலும் மிகுந்த திறன் பெற்றிருப்பதற்கு அவனிடம் உள்ள மனா ஆற்றலே காரணமென்றும் அவர்கள் எண்ணுகின்றனர். இவ்வாறே இயல்பாய்க் காணப்படாத மிகப்பெரும் பாறைகளும், இயற்கைப் பொருள்களும் மனா ஆற்றலைப் பெற்றுள்ளதாலேயே அவ்வாறு உள்ளன என்பர். சுருக்கமாகக் கூறுவதாயின் சிறப்பியல்புடன் உள்ள எந்த ஒரு பொருளும் மனா ஆற்றலைப் பெற்றுள்ளதாலேயே அவ்வாறுள்ளது எனக் கருதுகின்றனர்.

நியூகினித் தீவிலுள்ள தோபு (Dobu) மக்களும் மனா நம்பிக்கை கொண்டுள்ளனர். பயிர்கள் மிகுந்த விளைச்சல் தருவதற்கும், எதிரிகள் அழிவதற்கும், ஆபத்துகள் ஏற்படுவதற்கும், ஏற்படாமலிருப்பதற்கும் மனா ஆற்றல் காரணமாக உள்ளது என அவர்கள் நம்புகின்றனர்.

மனா ஆற்றல் ஒரேயிடத்தில் இருக்கக் கூடியதன்று பல்வேறு பழங்குடி மக்களிடையே கிடைக்கப்பெற்ற இனக்குழுவியல் தரவுகளின்படி இந்த ஆற்றல் ஒருவரிடமிருந்து விடுபட்டு மற்றவருக்குச் செல்லும் தன்மை பெற்றது. இவ்வாற்றல் மனிதர்களிடமிருந்து எந்த நேரத்திலும் வெளியேறலாம்.

ஒரு மனிதனிடம் உள்ள மனா மற்றொரு மனிதனுக்கே செல்ல வேண்டும் என்பதில்லை. மனிதனிடமிருந்து பொருள்களுக்கும், பொருள்களிலிருந்து

மனிதர்களுக்கும் இடம்பெயரும். இதனால் “பொருள் மனா“ (object mana) என்றோ “மனிதர் மனா“ (personal mana) என்றோ தனித்தனி ஆற்றல் இல்லை. அவ்வாறே மனாக்களுள் சிறந்த மனா என்பதும் சிறப்புக் குறைந்த மனா என்பதும் இல்லை. இந்த ஆற்றலைப் பெற்றுள்ள மனிதர்களோ பொருள்களோ வெவ்வேறு பாங்கில் தனிச்சிறப்புப் பெற்றுள்ளதன் மூலம் இந்த ஆற்றலில் வேறுபாடுகள் உண்டு என்று எண்ணிவிட முடியாது. ஆனால், இதன் தன்மை அந்தச் சமுதாயத்தின் அமைப்போடு ஒன்றிக் காணப்படும் இயல்புடையது என்பர் மெலனீசியர். அதாவது ஒரு சமுதாயத்தின் படிநிலை அமைப்பிற்கேற்ப இந்த ஆற்றலும் வெளிப்படுகிறது. அதன் மூலம் ஒரு சமூகத்தின் தலைவர் பொதுமக்களைவிட மிகுந்த மனாவையும், போர்ப்படையைச் சேர்ந்தவர் அத்துறையைச் சேராதவரைவிட மிகுந்த மனாவையும், அரசர் உயர்குடியினரைவிட மிகுந்த மனாவையும், சமய குருக்கள் சாதாரண மக்களைவிட மிகுந்த மனாவையும் பெற இயலும். இதனால் மனா ஆற்றலின் வெளிப்பாடு அந்தச் சமுதாயத்தின் கட்டமைப்போடு ஒத்திசைவு பெற்று அவரவருக்குத் தேவையான அளவு உண்டாகின்றது என எண்ணுகின்றனர்.

சமுதாயத்தில் ஏற்ற இறக்கம், வெற்றி தோல்வி முதலானவற்றை மனா ஆற்றல் வெளிப்படுத்துகிறது என்கின்றனர். ஒரு மெலனீசியத் தோட்டக்காரர் தொடர்ந்து பல ஆண்டுகளாக அவர் பயிரிடும் ஒருவகை வள்ளிக்கிழங்கு (yam) விளையாமல் போகும்போது ஓர் அசாதாரணமான கல்லைப் பார்த்தால் அதைக் போண்டுவந்து அவரது தோட்டத்தில் நட்டுவைப்பார். அந்தக் கல் மனா ஆற்றல் பெற்றுள்ளது என்று நம்புகிறார். அதன் பின்னர் அதற்கடுத்த ஆண்டுகளில் மிகுந்த விளைச்சல் பெற்றால் அதன்மூலம் அவர் கடந்த ஆண்டுகளில் மிகுந்த விளைச்சல் அதற்கான காரணத்தை உறுதிப்படுத்திக் கொள்வார். பின்னர் மனா ஆற்றலுடைய கல்லை நட்டு வைத்ததன் மூலம் மிகுந்த விளைச்சலைப் பெற்றதாக மற்றவர்களிடம் கூறுவார். அவ்வாறே நீச்சல் வீரரோ படகோட்டியோ போர் வீரரோ திடீரெனப் பெரும் ஆற்றலைப் பெற்று தன்னை ஒத்த மற்றவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கும் போது அந்த வெற்றி மனா ஆற்றல் மூலம் கிடைத்தது எனக் கூறுவர்.

இவை அனைத்திற்கும் மேலாக மனா ஆற்றல் சமுதாய ஏற்றத் தாழ்விற்கும் காரணமென அவர்கள் நம்புகின்றனர். ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவினரிடம் மனா ஆற்றல் மரபுவழியில் தொடர்ந்து நிலை பெற்றுள்ளது என்றும், அம்மக்களின் வழிவருவோரும் மிகுந்த மனா ஆற்றலைப் பெற்றவர்களாகப் பிறக்கின்றனர் என்றும் நம்புகின்றனர். இவ்விளக்கம் சமுதாய ஏற்றத் தாழ்விற்கான காரணத்தை வலுப்படுத்துவதோடன்றி இதுகாறும் ஒருவர் பெற்றுள்ள தகுதியைத் தக்க வைப்பதற்கும் (status quo) உதவுகிறது. அதனாலேயே சில அரச குடியினர் தம் குடும்பத்தாருடன் மட்டுமே மணஉறவு கொள்கின்றனர். அவ்வகை மணம் அரசகுடித் தகாப்புணர்ச்சி (royal incest) எனப்படும். அதற்குக் காரணம் தங்கள் குடும்பத்தார் பெற்றுள்ள மனா ஆற்றல் பிறருடன் கலப்பதால் குறைந்துவிடும் என்ற அச்சமேயாகும். அவ்வகை அகமண (endogamy) முறையினைப் பண்டைய பெரு, இன்கா, ஹவாய், எகிப்திய அரச குடியினர் கொண்டிருந்தனர். அவ்வாறே மறக்குடியினர், தெய்வவழிபாடுகள் செய்வோர் போன்ற குலத்தவர்கள் தங்களுக்கென்று தனியான மனாஆற்றல் உண்டென நம்புகின்றனர்.

மனா ஆற்றல் நன்மை தரக்கூடியது போன்றே ஆபத்தையும் விளைவிக்கக்கூடியது. ஒருவன் தான் பெற்றுள்ள மனா ஆற்றலோடு தன்னை ஒன்றவைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அவனுக்கு அது ஆபத்தை விளைவிக்கும். பாலினீசியப் பழங்குடித் தலைவன் ஒருவன் பயன்படுத்தும் பொருள்களைச் சாதாரண மக்கள் தொடக்கூடாது. அதனாலேயே அம்மக்களிடம் “விலக்கு“ (taboo) என்னும் கருத்தாக்கம் மனாக் கோட்பாட்டோடு தொடர்புடையதாக உள்ளது. பாலினீசிய மொழியில் “விலக்கு“ என்னும் பொருளுடைய “tabu“ என்னும் சொல்லிற்குப் “புனிதத்தன்மை“ என்றும் “தடை செய்யப்பட்டவை“ என்றும் பொருளுண்டு. சிலைகள், கோயில்கள், உயர்குலத்தவர்கள், கடவுளின் படகுகள், இன்னும் பிற பொருள்கள் அனைத்தும் சாதாரண மக்கள் தொடுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

மனா ஆற்றல் உலகின் பிற சமுதாயங்களிலும் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. அமெரிக்கச் சமவெளிப் பழங்குடிகளும் வடஅமெரிக்காவில் அல்கான்குயின் (Algonquin) மொழி பேசுவோரும் மனா ஆற்றலை “வாக்கன்“ (wakan), “மனிட்டாவ்“ (அயனைவைழர) என்று குறிப்பிடுகின்றனர். வட அமெரிக்க இந்தியர்கள் சிலர் இதனை ஓரண்டா (orenda), ஆரன் (aren), வக்குவா (wakua) எனவும் குறிப்பிடுகின்றனர்.

இந்திய மானிடவியலறிஞர் டி.என். மஜும்தார் மனா நம்பிக்கைக்கு ஒத்த வகையில் “போங்கா“ (Bonga) என்னும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். பல்வேறு ஆவிகளும் அவற்றின் செயல்களுமே மனிதர்களை இயக்குகின்றன என்னும் ஆவி வழிபாட்டிலிருந்து (animism) மாறுபட்டதே “போங்கா நம்பிக்கை“ (bongaism) என்பார் மஜும்தார்.

போங்கா உயிர்ப்புச் சக்தி கொண்டதும் வடிவமற்றதுமாக வெளிப்படும் தன்மையுடையது் தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் உயிர் கொடுக்கக்கூடியது வளர்ச்சியைத் தூண்டக்கூடியது மழை, புயல், வெள்ளம், கடுங்குளிர், தனிமனிதர்களுக்கிடையே காணப்படும் ஆற்றல் முதலானவற்றிற்குக் காரணமாக அமைவது. ஹோ (Ho), முண்டர் போன்ற பழங்குடிகளிடையேயும் சோட்டா நாக்பூர் பகுதிப் பழங்குடிகளிடையேயும் போங்கா நம்பிக்கை உள்ளதாக மஜும்தார் குறிப்பிடுகிறார். இவர் போங்காவை மெலனீசியரின் மனா கோட்பாட்டிற்கு (manaism) இணையானது எனக் கூறுகிறார்.

இன்று இந்து சமயம், கிறித்தவம், இசுலாம் போன்ற பெரும் சமயத்தைச் சேர்ந்தவர்களிடையேயும் உயிரிய நம்பிக்கை (antimatism) அதிஷ்டம் (good - luck) என்னும் பெயரில் வேரூன்றியுள்ளது. அதிஷ்டம் என்னும் கோட்பாடு உயிரியக் கோட்பாட்டின் திரிபே. “இது “மனா“ ஆற்றலின் அனைத்துத் தன்மைகளையும் பெற்று விளங்குகிறது. அதிஷ்டம் என்னும் ஆற்றல் ஆவிகளைச் சாராதது, உயிர்ப்புச் சக்தி கொண்டது, உருவமற்றது இயற்கைக் கப்பாற்பட்டது. இந்த ஆற்றல் மனித

சக்திக்கப்பாற்பட்ட அனைத்துச் செயல்களையும் இயக்கவல்லது சமுதாயத்தில் உடனொத்தவர்களைக் காட்டிலும் சிலர் மிகப்பெரும் திறனைப் பெற்றுள்ளதற்கு அதிஷ்டமே காரணமென மக்கள் நம்புகின்றனர். ஆகவே அதிஷ்டத்தை “இந்திய மனா“ அல்லது “தமிழக மனா“ என்று கூறுவதில் தவறில்லை. (மனா அல்லபாடு குறித்த செய்திகள் அதிஷ்டம் என்னும் கொட்பாடுக்கும் பெருமளவு பொருந்துமாதலால் பற்றிய செய்திகளை மீண்டும் இங்கு நினைவுபடுத்திக் கொள்க.)

**இயற்கை வழிபாடு**

ஆவிகளின் நம்பிக்கையிலிருந்தே தொன்மைச் சமயம் தோன்றியது என்ற டைலரின் கருத்தையடுத்து ஆவிகள் சாராத ஒருவகை உயிர்ப்புத் தன்மையுடைய ஆற்றலின்பால் கொண்ட நம்பிக்கையே தொன்மைச் சமுதாயத்தின் தோற்றத்திற்குக் காரணம் என்ற மாரட்டின் கருத்து ஏற்பட்டது. ஆவிகள் நம்பிக்கையும், ஆவிகள் சாராத ஆற்றலின் நம்பிக்கையும் சமயத்தின் தோற்றத்திற்குக் காரணமன்று இயற்கையின் ஆற்றல் மீது கொண்ட நம்பிக்கையே காரணமென ஜெர்மானிய அறிஞர் மேக்ஸ்முல்லர் கூறினார். இவர்தம் கொள்கை இயற்கை வழிபாடு (naturism) எனப்படும்.

மனித இனத்தவரிடையே சமயம் பற்றிய நம்பிக்கை முதன்முதலில் ஏற்பட்டிருக்குமாயின் அது இயற்கைப் பொருள்களின் ஆற்றலில் நம்பிக்கை கொண்டு அப்பொருள்களை வழிபட்டதன் மூலமே ஏற்பட்டிருக்கும் என்பார் மேக்ஸ்முல்லர். எகிப்திலும் பிற பகுதிகளிலும் செய்த அகழாய்வுகளின் மூலம் இயற்கை வழிபாட்டிற்கான சான்றுகள் கிடைத்துள்ளன என்கிறார் இவர் அப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களை நுணுகி உய்த்துணர்ந்தால் தொன்மை மக்கள் இயற்கைப் பொருள்களின் மீது கொண்டிருந்த அச்சங்கலந்த வியப்பையும், மதிப்பையும், ஈடுபாட்டையும், போற்றத்தக்க எண்ணத்தையும் அறிய இயலும். இயற்கைப்பொருள்களை வழிபாட்டுப்பொருளாக ஏற்றுக் கொண்டதற்கு அவர்கள் தவறாகப் பொருள் கொண்ட முறையை இன்றும் மக்கள் வழங்கும் சொற்றொடர்கள் மூலம் அறியலாம் என்பார். எடுத்துக்காட்டாக, சூரியன் உதயமாகிறது, சூரியன் மறைகிறது, இடியும் மின்னலும் மழையைக் கொண்டு வருகின்றன, மரங்கள்

பூக்களையும் கனிகளையும் உண்டாக்குகின்றன. இவ்வாறான கருத்தாக்கம் சூரியன், இடி, மின்னல், மரம் போன்ற இயற்கை நிகழ்வுகள் அல்லது பொருள்கள் அதனுள் ஓர் உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டுள்ளதன் மூலமே அவ்வாறு நிகழ்கிறது என்ற எண்ணத்தால் ஏற்பட்டதாகும். உயிரற்ற இயற்கைப் பொருள்களில் உயிர்ப்புத் தன்மை இருக்கிறது அதனுள் பெரும் ஆற்றல் உள்ளது என்று எண்ணினர். அதனாலேயே மேக்ஸ் முல்லர் தொன்மை மக்களின் சிந்தனை குறைபாடுடைய மனத்தால் (diseased mind) விளைந்தது என்பார்.

தொன்மை மக்கள் இயற்கைப் பொருள்களை வழிபட்டனர் என்பதை ஏற்றுக் கொள்வதில் எவ்வித சிக்கலும் இல்லை. ஆனால் இயற்கை வழிபாட்டிலிருந்தே சமய நம்பிக்கை தோன்றியது என்ற கூற்றைக் கொள்கையாக ஏற்றுக் கொள்வதில் சிக்கல்கள் எழுகின்றன. இவ்வகையான கூற்றுக்குச் சான்றுகள் உறுதியாக இல்லை என அறிஞர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

**தர்கைமின் கொள்கை**

தொன்மைச் சமயம் தோன்றிய முறை குறித்து தர்க்கைம் ஒரு புதிய கருத்தை முன் வைக்கிறார். "சமய வாழ்வின் தொடக்க" (The Elementary Forms of Religious Life, 1912) என்னும் நூலில் இதைப் பற்றி எழுதும்போது இன்றுள்ள சமய நம்பிக்கைகள் அனைத்தும் குலக்குறி (totem) நம்பிக்கையில் இருந்து வளர்ச்சி பெற்றவையாகும் எனக் கூறுகிறார். இக்கருத்தை இவர் வேறு வகையிலும் விளக்குகிறார். அதாவது, இன்றுள்ள சமய முறைகளில் என்னென்ன பண்புகள் இன்றியமையாதன எனக் கருதப்படுகிறதோ (வழிபாட்டுப் பொருள், அது பற்றிய நம்பிக்கை, நம்பிக்கையில் உறுதி கொண்டுள்ளோர், சடங்குகள் செய்தல் போன்றவை) அவை அனைத்தையும் கொண்ட ஆரம்பகாலச் சமயமாக குலக்குறிச் சமயம் தோன்றியது என்கிறார்.2 இனி குலக்குறியின் சிறப்பியல்புகள் குறித்தும் அவை தொன்மைச் சமயத்தில் கொண்டிருந்த பங்கு குறித்தும் காண்போம்.

**குலக்குறி**

இன்று குலக்குறி என்னும் பொருளில் பேசப்படும் "totem" என்னும் ஆங்கிலச் சொல் கிழக்கு வடஅமெரிக்காவிலுள்ள அல்கான்கின் (Algonkin) பழங்குடியினர் வழங்கும் "ஆட்டோ தீமன்" (Ototeman) என்னும் சொல்லோடு மொழியில் இச்சொல்லுக்கு "உடன் பிறந்தான் உடன் பிறந்தாள் உறவு (brother-sister kin) என்று பொருள். சொல்லான "ஒத்தி" (ote) என்பதற்கு இரத்த என்பது பொருள். வடஅமெரிக்க இந்தியப் பழங்குடியினர் பத்தியில் வணிகம் செய்யச் சென்ற ஆங்கிலேயர் ஒருவர் மூலம் கி.பி. 1792 இல் இச்சொல் ஆங்கிலேயர்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டு வழவநஅ" எனத் திரிபுற்றது.

சில சமூகத்தினர் தம் குலத்தவர்கள் சில பொருள்களிலிருந்து தோன்றியவர்கள் என்றும் அதனோடு வேறு பல முறைகளில் தொடர்புற்றவர்கள் என்றும் நம்புவதால் அப்பொருளை அவர்தம் குலத்தின் குறியாகக் (totem) கொண்டுள்ளனர். இவ்வகையான நம்பிக்கையுடையோர் எவ்வாறான குலக்குறிகளைக் கொண்டுள்ளனர் எனத் தொகுத்துப் பார்த்தால் விலங்குகள், தாவரங்கள், இயற்கைப் பொருள்கள் ஆகியவையே முதன்மையாக உள்ளன. குலக்குறி அமைப்புடைய சமுதாயங்களில் குலக்குறியின் செயற்பாடு சமுதாயத்தின் பல நிறுவனங்களோடு தொடர்புடையதாக உள்ளது. குறிப்பாக, திருமண முறை உறவுமுறை, வழிபாட்டு முறை, உணவு முறை போன்றவற்றோடு இது மிகவும் நெருக்கமான செயலுறவைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு சமூகத்திலும் அச்சமூகத்தவர் குலக்குறியோடு கொண்டுள்ள நடைமுறைகள், நம்பிக்கைகள், செயற்பாடுகள் அனைத்தும் ஒட்டு மொத்தமாகக் குலக்குறியம் (totemism) என்று கூறப்படும்.

குலக்குறி நம்பிக்கை பெரும்பாலும் பழங்குடிச் சமுதாயங்களில் அதன் முழுத் தன்மையுடன் காணப்படுகிறது. பழங்குடியல்லாத சமூகங்களில் இத்தன்மை முழுமையானதாகவோ எச்சங்களாகவோ காணப்படுகிறது. ஒரு குலக்குறிக்கும் அதனோடு தொடர்புடைய குழுவிற்கும் உள்ள உறவு குழுவிற்குக் குழு மாறுபடுகிறது.

உலகம் தழுவிய நிலையில் ஒன்றாக இல்லை. சில குழுவினர் அவர்தம் குலக்குறியோடு கொண்டுள்ள உறவு கருத்தியலாகவும் (ideological), சிலருடைய உறவு இயல் கடந்த மறைமெய்மை சார்ந்ததாகவும் (mystical), சிலருடைய உறவு பயபக்தியுடன் போற்றும் தன்மையாகவும் (reverential), வேறு சிலருடைய உறவு உணர்ச்சிவயப்பட்ட நிலையாகவும், சிலருடைய உறவு அவர்தம் குடிவழித் தொடர்பைக் காணும் முறையாகவும் உள்ளன.

குலக்குறி அமைப்புடைய சமுதாயங்களிலிருந்து பெறப்பட்ட இனக்குழுவியல் தரவுகளைத் தொகுத்துப் பார்க்கும் போது குலக்குறி முறை பல நிலைகளில் மாறுபட்டிருந்தாலும் அனைத்துச் சமுதாயங்களும் பல பொதுப் பண்புகள் கொண்டிருப்பதைக் காணவியலும். அவை : 1. குலக்குறி பொதுவாக விலங்காகவோ, தாவரமாகவோ, இயற்கைப் பொருளாகவோ இருக்கும். 2. ஒத்த குலக்குறியுடையோர் அனைவரும் ஒருவழி மரபுடையவராக (unilineal) இருப்பர். 3. குலக்குறியைக் கொண்டுள்ள குழுவினர் அதைத் துணைவன், உறவினன், பாதுகாப்பவன், மூதாதையர் என நம்புவர். 4. ஒவ்வொரு குலத்தவரும் (குழுவினரும்) குலக்குறிக்குத் தனிப்பட்ட பெயரோ தனிக்குறியோ வழக்கில் கொண்டிருப்பர். பெரும்பாலும் குலக்குறியின் பெயரையே அக் குழுவினரும் கொண்டிருப்பர். 5.தனி ஒருவருக்கென்று குலக்குறியும் அல்லது குழுவினர் அனைவருக்கும் பொதுவான குலக்குறியும் காணப்படுவதுண்டு. சில சமூகங்களில் முதன்மைக் குலக்குறிகளும் இடம் பெறுவதுண்டு. 6. குலக்குறியைச் சில நிகழ்ச்சிகள் தவிர பொதுவாக உண்ணவோ கொல்லவோ மறுப்பர். 7. குலக்குறிக்கு முறைப்படியான வழிபாடுகள் செய்வர்.

குலக்குறியின் தோற்றம் குறித்துப் பல அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். அவர்களுள் மக்லீனன், ஆண்ட்ரூ லாங், பிரேசர், வில்கெம் ஸ்மித், ராட்கிளி∴ப் பிரெளன், லெவி ஸ்ட்ராஸ், கோல்டன் வீய்சர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரின் கருத்துகளும் ஒத்திசைவு பெறாமல் தனித்தனி வகையில் அமைந்தன. குலக்குறி அமைப்புடைய சமுதாய நிலையே தொடக்ககாலச் சமுதாய முறை என்றும் இந்நிலையைக்கடந்த பின்னரே இன்றுள்ள அனைத்து வகையான

சமுதாயங்களும் வளர்ந்துள்ளன என்றும் மக்லீனன் கூறினார்.13 குலக்குறியின் தோற்றம் குறித்த ஆண்ட்ரூ லாங் ஒரு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார். இவர்தம் கருத்துப் படி உலகின் பல்வேறு சூழல்களில் வாழ்ந்த மனிதக் குழுவினர் அவரவர் இயற்கைச் சூழலில் காணப்பட்டனவற்றுள் சிறப்பானதொன்று வாழ்விற்கு முதன்மையானது எனக் கருதியதால் அதை அவர்தம் குலக்குறியாக ஏற்றுக் கொண்டனர்.

மக்லீனன், லாங் ஆகியோரின் கருத்துகள் வெவ்வேறாக அமைய, குலக்குறி குறித்துப் பெருமளவு ஆய்வு செய்த பிரேசரின் கருந்து குலக்குறி குறிக்கருத்துகளிலிருந்து மாறுபலக்குது பிரேசர் 1990 நான்கு தொகுதிகளாக வெளியிட்ட ‘குலக்குறியமும் புறமணமும் (Totemism and Exogamy) என்னும் நூல்வரிசை குலக்குறி குறித்து விரிவானதொரு முன்னோடி ஆய்வாக அமைந்தது. ஆங்கிலேய மானிடவியலாரான இவர் ஆஸ்திரேலிய, மெலனீசிய முதுகுடிகளின் (aborigines) குலக்குறி முறைகளை விரிவாகவும் ஆழ்ந்தும் ஆராய்ந்தார். முதுகுடிகளின் குழந்தைப் பிறப்புப் பற்றிய நம்பிக்கையே குலக்குறியின் தோற்றத்திற்கு வழிகோலியது என்று கூறினார்.

ஆஸ்திரேலிய முதுகுடியினர் இறக்கும்போது அவர்களின் ஆவிகள் உடலிலிருந்து பிரிந்தவுடன் பூமிக்குள் சென்று விடுகின்றன என்றும் பின்னர் அவை தாவரங்கள், விலங்குகள், இயற்கைப் பொருள்கள் ஆகியவற்றில் உறைகின்றன என்றும், அவ்வாவிகள் குழந்தைகள் உருவில் மீண்டும் உயிர்த்தெழுகின்றன என்றும் நம்புகின்றனர். இந்நிலையில் ஓர் ஆணும் பெண்ணும் புணர்ச்சியில் ஈடுபடும்போது அவர்களுக்கருகில் எது உள்ளதோ (தாவரம், விலங்கு, இயற்கைப் பொருள்கள்) அதில் உறைந்துள்ள முன்னோரின் ஆவி பெண்ணின் கருப்பையினுள் புகுவதால் கருவுறுதல் நிகழ்கிறது என அவர்கள் எண்ணுவர். அதனால் அவர்கள் முன்னோர் ஆவி உறைந்த பொருளையே அவர்தம் குலத்தின் குறியாகக் கொண்டனர் என்பார்.14 ஆஸ்திரேலிய முதுகுடிகளின் கருத்து, பிற குடிகளிலும் காணப்படுவதால் கருவுறுதல் கருத்தின் அடிப்படையிலேயே குலக்குறி தோற்றம் பெற்றது என்பார் இவர். பிரேசரின்

கொள்கை கருவுறுதலை அடிப்படையாகக் கொண்டமையால் இவர்தம் கொள்கை கருவுறுதற் கொள்கை (conceptionalism) எனப் பெருவழக்காயிற்று.

குலக்குறியின் தோற்றம் குறித்து வேறு பல கொள்கைகளும் நிலவுகின்றன. இறந்த மூதாதையர்களின் புனைபெயர்களுக்கும் சுற்றுச்சூழலில் உள்ள முக்கிய பொருள்களின் பெயர்களுக்கும் இடையே வேறுபாடு தெரியாமல் குறிப்பிடத் தொடங்கியதால் குலக்குறி ஏற்பட்டு அதைத் தொன்மைக் குடியினர் மதித்து மரியாதை செலுத்தினர். தொல்பழங்காலத்தில் மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம் சில சொற்களே. ஆகவே சொற்களின் குறைபாடு காரணமாக ஒரே சொல்லே திரும்பத் திரும்ப வழங்க வேண்டியிருந்தது என்பார் ஹெர்பர்ட் ஸ்பென்சர். லார்டு ஆவ்பரி என்பன்றி இயற்கைப் பொருள்களை வணங்கியதிலிருந்து குலக்குறி தோன்றியது என்கிறார். வணங்கப்பட்ட தாவரம், விலங்கு, இயற்கைப் பொருள் ஆகியன முதலில் தனிமனிதனுக்கும் பின்னர் குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது என்றும் அதுவே பின்னர் அக்குழுவின் குலக்குறியாகவும், பெயராகவும் மாறியது என்பார் லார்டு ஆவ்பரி.

தொன்மைக் குடியினர் தங்கள் உயிரை விலங்கின் உடலிலோ, தாவரங்களிலோ, இயற்கைப் பொருள்களிலோ வைக்க இயலும் என நம்பினர். அவ்வாறு அவர்களின் உயிரை வேற்றுப் பொருள்களில் வைத்துவிட்டால் அவர்களை எவரும் அழிக்க முடியாது எனவும் அப்பொருள் அழிக்கப்பட்டால் அவர்களும் அழிந்து போவர் எனவும் நம்பினர். தம் சுற்றுச் சூழலிலுள்ள சிறப்பானதொரு பொருளிலேயே அதை (உயிரை) வைக்க இயலும் என நம்பியதால் அதைக் குலக்குறியாகக் கொண்டு அதற்குத் தீங்கிழைக்காமலும், கொல்லாமலும், உண்ணாமலும் காத்து வந்தனர் என்பார் வில்கெம் ஸ்மித்.

குலக்குறியின் தோற்றம் குறித்த கொள்கைகள் மேற்கூறியவையோடு முடியவில்லை. மனிதர்களின் ஆவி விலங்குகளிடம் சென்று உறையும் என்னும் நம்பிக்கையில் ஏற்பட்டதே குலக்குறி என்பார் வில்கென். அயலார் ஒரு கூட்டத்தினரைக் குறிப்பிடும்போது அம்மக்கள் எவ்வகை உணவை மிகுதியாக. நம்பியிருந்தார்களோ அதன் பெயரால் குறிப்பிடத் தொடங்கியதால் ஏற்பட்டதே குலக்குறி என்பார் ஏ.சி.

ஹூடன் ஒரு கூட்டத்தினரின் சமூக மனநிலையின் (social mind) ஒன்றுபட்ட வெளிப்பாடாக (collective representation) அமையப் பெற்றதே குலக்குறி என்பார் எமிலி தர்கைம். இயற்கைச் சூழலுடன் ஓர் இரத்த உறவுடைய கூட்டத்தினர் உள்ளார்ந்த மன நிலையில் கொள்ளும் உறவே குலக்குறி என்பார் சிக்மண்ட் பிராய்டு. ஓர் எதிர்பாராத வரலாற்று நிகழ்வால் ஏற்பட்ட கருத்து பல இடங்களில் வாழ்ந்த குடியினரிடம் பரவியதால் குலக்குறி நம்பிக்கை தோன்றியிருக்கலாம் என்பார் வெர்ரியர் எல்வின். எடுத்துக்காட்டாக, ஒருவன் கழுகைக் கொன்ற சில காலம் கழித்து கண்பார்வை இழக்க நேரும்போது அதைக் குணப்படுத்த மந்திரவாதியிடம் சென்றிருப்பான். அவனது கடந்த கால வரலாற்றை ஒன்றுபடுத்திப் பார்க்கும் மந்திரவாதி கழுகு கொன்றதற்கும் கண்பார்வை போனதற்கும் தொடர்புபடுத்தி அதை. இனிமேல் கொல்லக்கூடாது எனக் கூறியிருப்பான். இத்தகைய பல குலக்குறிகள் தோன்றியிருக்கும். பல்வேறு நிகழ்வுகளால் என்பார் எல்வின்.

தொன்மைக் குடியினர் கர்டுகளடர்ந்த சுற்றுச் சூழலுடன் வாழ்ந்ததால் அவர்கள் பகுதியில் வாழ்ந்த ஆற்றல்மிக்க வலங்குகளுடன் தொடர்பு கொண்டால் வேட்டையின்போது தம் குலத்தவருக்கு ஆற்றல் கிடைக்கும் என நம்பினர். அதோடு வேட்டையின்போது குறிப்பிட்ட விலங்கைக் கொல்லாமல் விட்டால் அது அவர்களின் வேட்டைக்குத் துணைபுரியும் எனவும் நம்பினர். மீன்களைப் போல் தங்கள் குலத்தவர்கள் பெருக வேண்டும் என எண்ணி மீனைக் குலக்குறியாகக் கொண்டனர். குறிப்பிட்ட ஒருவகை ஆற்றலுடன் கூடிய விலங்கின் ஆற்றல் தங்கள் குலத்தவருக்குக் கிடைக்க வேண்டும் என்னும் ஆவலில் அதைக் குலக்குறியாகக் கொண்டனர். இவ்வகை குலக்குறி நம்பிக்கை வேட்டுவச் சமுதாயங்களிலும் அதையடுத்து எளிய முறையில் தொடங்கிய வேளாண் வாழ்க்கையிலும் தொடங்கியதற்கான சான்றுகள் மிகுதியாக உள்ளன.

குலக்குறி ஒரு குழுவிற்குப் பொதுவாகவோ தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் என்று தனியாகவோ இருக்கும். வடஇந்தியப் பழங்குடியினரான தெல்கி காரியர் (Delhi Kharia) எட்டுக் குலக்குறிகளைக் கொண்டுள்ளனர். அவை:

“முரா“ (ஆமை), “சோரங்கு“ (பாறை), “சமாத்“ (மான்), “சார்காட்“ (ஒருவகைப் பறவை), “சார்லிகா“ (பழம்), “தாப்னோ“ (ஒருவகைப் பறவை), “கிரோ“ (புலி), “ஹன்ஸ்தா“ (விலாங்கு மீன்). இக்குலங்கள் ஒவ்வொன்றும் புறமணக் குலங்களாகும் (exogamous clans). நீலகிரி மலைத் தொடரில் வாழும் குறுபர்கள் (Kurubas) “கும்புஸ்“ (Gumpus) எனப்படும் கால்வழிக் குழுக்களாகப் பாகுபடுகின்றனர். இக்கால்வழிக் குழுக்கள் மேலும் பல கிளைக்குழுக்களாகப் பாகுபடுகின்றன. இவை “கோத்திரம் (பழவசயள) எனக் கூறப்படும். இவர்களிடையே உள்ள 66 உட்குலங்களின் பெயர்கள் தெரியவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க சில வருமாறு : யானை, பாம்பு, தேள், எருமை, ஆமை, கட்டெறும்பு, நாய், செம்மறியாடு, கருங்காலி மரம் (ebony), சீரகச் செடி (cummin), துவரை, மல்லிகை, கொத்துமலர், (chrysanthemum), சாமை, மிளகு, பால், வெண்ணெய், நெருப்பு, சூரியன், சந்திரன், கடல், வெள்ளி தங்கம், வெண்கலம், பவழம், சங்கு (counch - shell), மண் உப்பு (earth salt), சக்கிமுக்கிக்கல் மோதிரம், தங்க மோதிரம், மெட்டி, மேளம், கம்பளம், கோடரி, தறி, மூங்கில்குழாய், வண்டி, குடிசை, பேய், மூப்பன் (headman), மஞ்சள் இவற்றுள் மஞ்சள் (turmeric) கோத்திரம் குறிப்பிடத்தக்கது. இது இம்மக்களுக்கு விலக்குடைய பொருளாகும். இதனால் மஞ்சளுக்குப் பதில் “கொர்ர“ (korra) எனப்படும். தானியத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் மஞ்சள் என்னும் பெயராலேயே அவர்கள் கோத்திரம் குறிப்பிடப்படுகிறது.

நீலகிரி மலைத்தொடர்களில் வாழும் கசவர்களிடம் ஏழுகுலங்கள் உள்ளன. அவை : 1. பாம்புக் குலம் (nagara-kula), 2. வெள்ளிக்குலம் (belhi - kula), 3. பூமிக் குலம் (bhumi - kula), 4. சம்பர் குலம் (sambar kula), 5. ஓர் குலம் (or-kula), 6. கரட்டகுர குலம் (karataguru kula), 7. உப்பிளிகுரு குலம் (uppiliguru - kula). இந்த ஏழு குலங்களும் புறமணக் குலங்களாகும். நீலகிரியில் வாழும் தோடர்களின் சமுதாயம் சற்று மாறுபட்டது. இவர்களின் சமுதாயம் தார்த்தரோல், தெய்வளி என்னும் இரண்டு பெருங் கூட்டங்களைக் (moities) கொண்டுள்ளது. இவை இரண்டும் அகமணக் (endogamous) கூட்டங்களாகும். தார்த்தரோல் பெருங்கூட்டத்தைச் சேர்ந்தோர்

அவர்களுக்குள்ளேயும், தெய்வளியாள் பெருங்கூட்டத்தைச் சேர்ந்தோர் அவர்களுக்குள்ளேயும் மணந்து கொள்ள வேண்டும். இருப்பினும் இவ்விரு பெருங்கூட்டங்களுக்குள் பல குலப் பிரிவுகள் உள்ளன. தார்த்தரோல் பெருங்கூட்டத்தில் 12 குலங்களும் தெய்வளியாள் பெருங்கூட்டத்தில் 6 குலங்களும் உள்ளன. இவை புறமணப் பிரிவுகளாகச் செயல்படுகின்றன. குலக்குறிகளின் முதன்மையான செயல் சமய வாழ்வோடு மட்டும் தொடர்புடையதன்று.இவை திருமண முறையையும், மரபு முறையையும் நெறிப்படுத்திக் காட்டும் சமுதாய அலகாகவும் செயல்படுகின்றன. ஒரு குலக்குறியைக் கொண்ட குலத்தவர்கள் அனைவரும் தாய் அல்லது தந்தை வழியில் வரும் ஒருவழி மரபினராய் (unilineal descent) உள்ளனர். ஆதலின் அவர்கள் அனைவரும் இரத்த உறவுடையவர்களாய் இருப்பர். அதனால் அனைவரும் மணத்துணையை வேற்றுக் குலத்திலிருந்தே பெறுவர்.

சமுதாய அமைப்பில் ஏற்படும் மாற்றத்திற்கேற்பப் புதிய குலக்குறிகள் தோன்றுவதுண்டு. வட இந்தியாவில் வாழும் ஓரவன் (Oraon) பழங்குடிகளை விரிவாக ஆய்வு செய்த எஸ்.சி. ராய் குறிப்பிடத்தக்க ஒரு சமுதாய முறையைக் கண்டறிந்தார். இவற்றுள் தொடக்கத்தில் பல குடும்பங்கள் ஒன்றிணைந்து ஒரு பொதுவான குலக்குறியைக் கொண்டு காணப்படும். இக் குழுவினர் எண்ணிக்கையில் மிகுதியாகும்போது பல குழுக்களாகப் பிரிகின்றனர். முன்னதை இணைதல் (fusion) முறை என்றும் பிந்தியதைப் பிளவு முறை (fission) என்றும் குறிப்பிடுவார். பல ஓரவன்கள் ஒன்றிணைந்து புலிக் குறியைக் கொண்டிருந்தனர் எனவும் இவர்கள் சமூகத்தினர் மிகவும் விரிவடைந்த போது புதிய குலத்தவர்கள் புலியின்றக்கு கயிர்கக்கொன்புலியின் நகம், புலத்தபல் ஆகியவற்றைக் குலக்குறிகளாகக் கொண்டனர் எனவும். குறிப்பிடுகிறார். இந்தியாவில் குலக் குறியமைப்புடைய பழங்குடிவும் பரவலாகக் காணப்படுகின்றனர்.

குழு குலக்குறி முறை ஆப்பிரிக்கா, இந்தியா, மெலனீசியா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்காவின் சில பகுதிகள், சைபீரியா, நடுஆசியா முதலான பகுதிகளில் வாழும் பழங்குடியினரிடையே தாணப்படுகிறது. தனி ஒருவருக்கென்று குலக்குறியும் சில

பழங்குடிகளிடையே உள்ளது. தனக்கும், தான் சார்ந்திருக்கும் உலகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட பொருள் பெருமளவு உடன் நிற்கும் என நம்பும் பழங்குடிகள் தனித்தனியான குலக்குறிகளைக் கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியப் பழங்குடிகளில் இத்தகைய முறை காணப்படுகிறது.

குலக்குறியைக் கொண்ட பழங்குடியினருள் பெரும்பான்மையோர் தம் குலக்குறியை மரத்திலோ வேறு சில வடிவங்களிலோ சித்தரித்த கம்பங்களைத் தம் குடியிருப்புப் பகுதி அல்லது தாம் விரும்பும் பகுதியினுள் நட்டு வழிபடுகின்றனர். இதைக்குலக்குறிக் கம்பம் (totem pole) என்று கூறுவர். இதற்குப் பல சடங்குகள் நடத்திச் சிறப்பாக வழிபடும் முறை அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தியா, மத்திய தரைக் கடல் தீவுகள் ஆகிய பழங்குடிகளிடையே பரவலாகக் காணப்படுகிறது. பழ்ங்குடிச் சமுதாயங்கள் தவிர ஊரகச் சமுதாயங்களிலும் குலக்குறிமுறை பரவலாக உள்ளது. ஒரு காலத்தில் ஆந்திரப் பிரதேசப் பகுதியிலிருந்து தமிழகப் பகுதிக்கு வந்த தெலுங்கு பேசும் மக்களின் குலக்குறிப் பெயர்கள், தாவரங்கள், விலங்குகள், உலோகங்கள், ஆபரணங்கள், இயற்கைப் பொருள்கள் ஆகியவற்றின் பெயரில் உள்ளன. தமிழகத்திலேயே தோன்றிவாழும் கொங்கு வேளாளரிடமும் குலக்குறிப் பெயர்கள் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன.

கொங்கு வேளாளர்கள் குலக்குறியைக் கூட்டம் என்று குறிப்பிடுகின்றனர். இவர்களிடம் தாவரங்கள், பறவைகள், விலங்குகள் போன்றவையே பெரும்பாலும் குலக்குறிகளாக உள்ளன. இம்மக்களிடம் ஆந்தையைக் குலக்குறியாகக்கொண்ட கூட்டம் ஒன்றுள்ளது. இக்கூட்டத்தின் கிளைப்பிரிவுகள் சாத் தந்தை, பொருளந்தை, கண்ணாந்தை, கொற்றந்தை, தேவாந்தை எனப் பகுக்கப்படுகின்றன. எண்ணை, ஈஞ்சை, பதறி (இலந்தை) போன்ற தாவர வகைகளைக் குலக்குறியாகக் உள்ளனர். பயிர், துவரை, வெண்டை ஆகிய செடிகளைக் கொண்டவர்களும் குலக்குறியாகக் கொண்ட கூட்டத்தினர் முறையே பயிர், துவரை, வெண்டுவன் எனக் கூறப்படுகின்றனர். மீன், மேதி (எருமை), குண்டெலி, பாண்டி (எருதி), மாதங்கள் (யானை) ஆகிய பெயர்களைக் கொண்ட கூட்டத்தினரும் உள்ளனர். செங்குண்ணி என்னும் கூட்டத்தினர் செங்கூன்

என்னும் மீன் வகையைக் குலக்குறியாகக் கொண்ட கூட்டத்தினர் உள்ளனர். இவர்கள் கண்ணன், முழுக்காதன், செவ்வாயன் எனவும் கூறப்படுகின்றனர். இவர்களுள் முழுக்காதன் கூட்டத்தில் காது குத்துவது இழுக்காகக் கருதப்படுகிறது. ஆதலின் காதுகுத்தும் சடங்கின்போது இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதற்கான ஒரு சடங்கைச் செய்த பின்னர் காது குத்துகின்றனர். கொங்குப் பகுதியில் காடைவிநாயகர், காடை ஈசுவரர் ஆகிய கோயில்கள் இன்றும் உள்ளன. காடைப் பறவையைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் அப்பறவையை வழிபடுகின்றனர். இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களுள் பலர் “காடையப்பன்“ என்றும் பெயர் வைத்துக் கொள்கின்றனர்.

ஒருகுலக்குறிக் குழுவினர் மற்றொரு குழுவைச் சண்டையில் வென்றுவிட்டால் வென்ற குழுவின் சின்னம் எல்லா குழுக்களின் வணக்கத்திற்குரியதாக மாறிவிடும். யானை ஒரு குழுவின் குலக்குறி. இந்தக் குழு பெரியதாகிப் பல குழுக்களை வென்று ஏனைய குழுக்களைத் தனக்குக்கீழ் கொண்டு வந்தால், அது அரசாக மாறும்போது யானை அதனுடைய கொடியாக மாறுகின்றது. இந்த யானை வம்சம் மூசிகக்குழுவை (எலிக்குழு) வென்றது. ஆகவே எலிக்குழு யானைக் குழுவின் கீழ்இருந்தது. உறையூரில் யானைக்கும் கோழிக்கும் நடைபெற்ற சண்டையில் கோழி யானையை வென்றதாகவும் அவ்வூருக்கு இதன் பெயரால் கோழியூர் என்று பெயர் வந்ததாகவும் இலக்கியங்களில் கூறப்படுகின்றது. யானையைக் கோழி வெல்வது என்பது இயலாதது. எனவே இதைக் கோழி, யானை ஆகியவற்றை குலக்குறியாகக் கொண்ட மக்களிடையே நடைபெற்ற சண்டையில் கோழிக் கூட்டத்தினர் வென்றனர் என்பது ஏற்புடையதாகும்.

குலக்குறி நம்பிக்கையைத் தொடர்ந்து தொன்மை மக்களிடம் தோன்றிய வழிபாட்டு முறைகளுள் பின்வருவனவும் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுகின்றன.

**போலிப் பொருள் வழிபாடு**

இயல்பிறந்த இயற்கையின் ஆற்றல்கள் (supernatural powers) சில பொருள்களில் உறைந்துள்ளன என எண்ணி அவற்றை வழிபடும் முறை பெரும்பாலான பண்பாடுகளில் காணப்படுகிறது. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களைச்

செய்யவல்லன என்றும், நற்பலன்களை (goodluck) ஏற்படுத்தவல்லன என்றும் மக்கள் நம்புகின்றனர்.

போலிப் பொருள்வழிபாட்டில் (fetishism) வழிபாட்டிற் சூரிய பொருள்கள் உயிருள்ளவையாகவோ, உயிரற்றவையாகவோ, இயற பொருள்வையாகவோ, செயற்ண்டை யொடுககளே உள்ளன. பெரும்பாலான பண்பாட்டில் மண்டையோடுகள், எலும்புகள், செதுக்கப்பட்ட சிற்பங்கள், விசித்திரமான கற்கள், மரப்பொருள்கள், கையால் வரையப்பட்ட சித்திரங்கள், பறவையினங்களின் இறகுகள் போன்ற பலவகைப்பட்ட பொருள்கள் வழிபாட்டுப் பொருள்களாக உள்ளன. இவையனைத்தும் இயற்கை மீறிய ஆற்றல்களைக் கொண்டுள்ளன என்று மக்கள் நம்புகின்றனர். தமிழ்நாட்டில் செப்பு அல்லது இரும்பினால் செய்யப்பட்ட தாயத்துகளைக் கட்டிக் கொள்வதும், மந்தரித்துக் கட்டிக் கொள்ளப்படும் பிற பொருள்களும், நரிப்பற்களை அணிவதும் போலிப் பொருள் வழிபாட்டின் தொடர்ச்சியே. இப்பொருள்கள் மந்திர ஆற்றல்களைக் கொண்டுள்ளதால் இவற்றை அணிவோருக்குத் தீமைகள் நெருங்காமல் நற்பலன்கள் ஏற்படும் என்னும் நம்பிக்கை மக்களிடம் உள்ளது.

மேற்கு ஆப்பிரிக்காவிலும் காங்கோ நாட்டிலும் வாழும் பெரும்பாலான பழங்குடியினர் இயற்கையில் காணப்படும் சில அசாதாரணமான கற்களையும், விலங்குகள் உருவத்திலும் மனிதர்கள் உருவத்திலும் அமையும் சிற்பங்களையும் வழிபடுகின்றனர். வடஅமெரிக்காவின் பெரும் சமவெளிப் பகுதியில் வாழும் இந்தியப் பழங்குடியினரிடம் இறகுகள், அம்புகள், கிளிஞ்சல்கள் ஆகியவற்றையும் மேலும் சில பொருள்களையும் ஒன்றாகக் கட்டி வைத்துள்ள மூட்டை வழிபாட்டுப்பொருளாக உள்ளது. இதற்குப் பெரும் ஆற்றலுண்டு என அம்மக்கள் நம்புகின்றனர். தோகோ (Togo) மக்கள் மினா (mina) எனக்கூடிய இரட்டைச் சிற்பங்களில் மந்திர ஆற்றல் மிகுந்துள்ளது என நம்பி அவற்றிற்கு உணவைப் படையலிட்டு வழிபடுகின்றனர்.

போலி உருவ வழிபாட்டு முறை குறித்து முதன் முதலில் கி.பி. 1400 களில்தான் புத்தாய்வாளர்களுக்குத் தெரிய வந்தது. ஐரோப்பியர்கள் கி.பி. 1400 - இல் ஆப்பிரிக்காவில் குடியேறிய போது அங்குள்ள மக்கள் மேற்கூறிய பொருள்களில்

மிகுந்த பக்தி கொண்டு வழிபட்டதை அறிந்து எழுதினர். ஐரோப்பியப் புத்தாய்வாளர்கள் கண்ட இவ்வழிபாட்டு முறை குறித்து இன்று பெருமளவு அறிய முடிகின்றது. மானிடவியலுக்கு இன்றுவரை கிடைத்துள்ள எண்ணற்ற இனக்குழுவியல் தரவுகள் மூலம் போலி உருவ நம்பிக்கையும், அவற்றை வழிபடும் முறையும் ஆப்பிரிக்காவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரவியுள்ளன எனத் தெரியவருகிறது. இந்நம்பிக்கை பழங்குடி மக்களின் சமயத்தில் மட்டும் வேரூன்றியுள்ளது எனக் கூற வியலாது. பழங்குடியல்லாதாரின் சமயத்திலும் இது காணப்படுகிறது. போலிப் பொருள் வழிபாடு இயற்கை கடந்த ஆற்றலின் மீது கொண்ட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் இவ்வழிபாட்டு முறை ஆவியுலக நம்பிக்கையின் (animism) திரிபு என்றோ அதன் தொடர்ச்சி என்றோ கூறலாம். முன்னோர் வழிபாடு

**முன்னோர் வழிபாடு**

இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடாகும் (ancestor worship). இவ்வழிபாட்டில் வேறுபல கூறுகளும் அடங்கியுள்ளன. அஃதாவது, இவ்வுலக வாழ்வு இம்மை மறுமை கொண்டது பல பிறப்புக்களைக் கொண்டது ஒரு பிறவியில் செய்வது மறு பிறவியில் அமையும் வாழ்வுக்குக் காரணமாகிறது ஒரு பிறவியில் ஒருவர் பெறும் ஆற்றல் அவர் இறந்த பின்னும் அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுகின்றது போன்ற நம்பிக்கைகள் முன்னோர் வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன. அவற்றோடு பின்வரும் நம்பிக்கைகளும் முன்னோர் வழிபாட்டிற்கு மிகவும் தொடர்புடையனவாக உள்ளன.

1. இறந்த மூதாதையர்களின் ஆற்றலும் அனுபவமும் வாழ்வோரைச் செழுமைப்படுத்தும் என்ற நம்பிக்கையில் மூதாதையர்களை வழிபடுகின்றனர்.

2 இறந்தோரின் ஆசி என்றென்றும் வா ருக்குக் கிடைக்க வேண்டும் என முன்னோர்களை வழிபடுகின்றனர்.

3. இறந்ததோரின் விருப்பங்களையும் அவருக்குப் பிடித்தமானவற்றையும் நிறைவேற்றி அவரை வழிபடுதல் மூலம் தீய ஆற்றல்களிலிருந்து முன்னோர்கள் தப்ப வைப்பார்கள் என்றும் அவரும் சினம் கொள்ளாமல் அருள் குணத்துடன் ஆதரிப்பார் என்றும் நம்பி முன்னோருக்கு வழிபாடு செய்கின்றனர்.

19 - ஆம் நூற்றாண்டு மானிடவியல் கொள்கையாளரான டைலர் (E.B.Tylor) சமுதாயவியலாரான ஹெர்பர்ட் ஸ்பென்சர் போன்றோர் முன்னோர் வழிபாட்டு முறையை முதிர்ச்சியடையாத மனப்பக்குவ முடையோரின் சமய நம்பிக்கை என மதிப்பிட்டனர். தொன்மைக் குடியினர் இறப்பையும் இறப்புக்குப் பின்னர் நிகழும்“ செயலையும் புரிந்து கொள்ளவியலா நிலையில் ஏற்பட்ட மருட்சியினால் இறந்தோரின் ஆவிகளை வழிபடத் தொடங்கினர் என்கின்றனர். (இறப்பு குறித்த தொன்மைக் குடியினர் கொண்டிருந்த கருத்தாக்கங்களை விளக்கும் டைலரின் கூற்றை “ஆவியுலகக் கோட்பாடு“ என்னும் உட்தலைப்பில் காண்க.)

இறந்த மூதாதையர்களைப் பற்றிய எண்ணங்கள் தொன்மைக் குடியினரிடையே பலவாறாக உள்ளன. குல (clan) அமைப்பும் கால்வழி (lineage) அமைப்பும் மிகவும் வேரூன்றியுள்ள பழங்குடிச் சமுதாயங்களில் குல மூதாதையர் அக்குலத்தவர் அல்லது கால்வழியினர் அனைவராலும் வணங்கப்படுகிறார். இவ்வகைச் சமுதாயங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட மூதாதையர்களும் வழிபாட்டுக்குரியவராகின்றனர். ஏனெனில் சில பழங்குடியினர் அவர்களின் குலங்கள் யாருக்கும் நினைவில் இல்லாத வகையில் மிக நீண்ட காலத்துக்கு முன்னர் வாழ்ந்த ஒரு மூதாதையர்வழி தோன்றியது என்று மதிப்பிடுவர். இவரைத் தொன்ம மூதாதையர் (mythical ancestor) என வழங்குவர். இவருக்கடுத்த அனைவரும் நன்கறிந்த வகையில் வாழ்ந்து இறந்த உண்மை மூதாதையர் (real ancestor) ஒருவரையும் வழிபடுவர்.

மேற்கு ஆப்பிரிக்காவில் தகோமிப் (Dahomey) பழங்குடியினர் அவர்கள் இனத்தவர் தோன்றுவதற்குக் காரணமாகவிருந்த மூத்த முன்னோரையும் (founder of the clans), குடிவழிப் பட்டியலில் நினைவிற் கொள்ளவியலா நிலையில் 10,11

தலைமுறைகளுக்கு முன்னர் வாழ்ந்த முன்னோரையும், அனைவருக்கும் தெரிந்த வகையில் வாழ்ந்து அண்மையில் இறந்த முன்னோரையும் வழிபடுகின்றனர். இம்மூன்று முன்னோர்களையும் ஆண்டுதோறும் விழா எடுத்துச் சடங்குகள் செய்து வழிபடுகின்றனர். ஆப்பிரிக்காவில் வாழும் பெரும்பாலான பழங்குடியினர் முன்னோர் வழிபாட்டைக் கொண்டுள்ளனர்.

மலேசியாவில் வாழும் சீமாங் (Semang) போன்ற பழங்குடியினர் அனைத்து வகையான குடும்பச் சடங்குகளையும் இறந்த மூதாதையர்கள் நினைவாகவே செய்கின்றனர். இறந்தவர்கள் எப்போதும் அவர்கள் வீட்டிற்கு அருகிலேயே உறைந்துள்ளனர். என்றும் அவர்கள் உயிரோடு இருக்கும்போது பழைமையைப் போற்றிக் காக்க வேண்டுமென்றும் மரபுவழி வாழ்வில் மாற்றங்கள் ஏற்படக்கூடாது என்றும் அடிக்கடி கூறுவதை நினைவிற் கொண்டு செயற்படுவர். நடைமுறை வாழ்வில் முன்னோர்களின் கருத்துகள் அடிக்கடி எண்ணப்படுவதால் இவர்களிடம் முன்னோர் வழிபாடு இன்றும் நிலைத்துள்ளது.

சீன மக்கள் முன்னோர் வழிபாட்டை மிகத் தொடக்கக் காலத்திலிருந்தே மேற்கொண்டிருந்தனர். கி.மு. 1000 ஆண்டு வாக்கிலேயே இவ்வழிபாட்டைக் கொண்டிருந்தனர் என்பர் இனக்குழுவியலார். சீனாவில் முன்னோர் வழிபாடானது சமூகத்தினர் அனைவருக்கும் பொதுவானதாக இல்லாமல் ஒவ்வொரு குடும்பத்தினரும் தனிப்பட்ட முறையில் வழிபடும் முறையாக இருந்த முன்னோரின் நினைவாகச் செதுக்கப்பட்ட சிறு தூண்கள் வீட்டில் நடப்பட்டன. முன்னோர்களை வழிபடும் நாட்களில் இத்தூண்கள் முன் படையலிட்டும் வாசனைப் பொருள்கள் மணக்கச் செய்தும் வழிபட்டனர். கன்பூசியச் சமய நெறியின் தோற்றத்தாலும் பொதுவுடைமைக் கொள்கையின் வளர்ச்சியாலும் முன்னோர் வழிபாடு மறையத் தொடங்கியது. ஜப்பான், ஆப்பிரிக்கா, அமெரிக்கா, மத்திய தரைக்கடல், தென்கிழக்காசியா (இந்தியா உட்பட) பெரும்பாலான பகுதியில் முன்னோர் வழிபாடு காணப்படுகிறது. பண்டைய எகிப்திலும் உரோமிலும் இறந்தோரை வழிபாட்டு மரபாகக் (cult) கொள்ளும் முறை சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

இந்து சமய நம்பிக்கையிலும் இந்தியாவிலுள்ள பெரும் பாலான பழங்குடியினரின் சமய நம்பிக்கையிலும் முன்னோர் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. இந்துக்கள் இறந்த மூதாதையருக்கு ஆண்டுதோறும் தெவஷம் (திதி) கொடுப்பதன் மூலமும் ஒவ்வொரு அமாவாசையின்போதும் நோன்பிருந்து முன்னோரை நினைவு கொள்ளுதல் மூலமும் முன்னோர் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளமையை உணர முடியும்.

**மந்திரம்**

தொன்மைச் சமயத்தில் மந்திரம் (magic) ஒரு பிரிக்கவியலாத கூறாகும். இது அறிவியல் தோன்றுவதற்கு முந்திய கலையாகும். இதைக் கண்டறிந்து செயற்படுத்திய பெருமை தொன்மை மக்களையே சாரும். இயற்கைச் சூழலுடன் ஒன்றி வாழ்ந்த தொன்மை மக்கள் பல சமயங்களில் அவர்களின் ஆற்றல்களால் இயற்கையின் சீற்றங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை. அத்தகைய சூழலில் அவர்களையும் அவர்களைச் சுற்றியுள்ள இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் முழுப் பலனைப் பெற முயற்சித்தனர். பின்னர் அவ்வாற்றலைக் கையகப்படுத்திக் (possession) கட்டுப்படுத்தும் அல்லது மேலாதிக்கம் செலுத்தும் வழிமுறையை மேற்கொண்டனர். கையகப்படுத்திய ஆற்றலை, சில சூத்திரங்கள் அல்லது வாய்பாடுகளாகச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் அவ்வாற்றலைச் செயல்படுத்தம் நிலையை மேற்கொண்டனர்.

அவ்வாறு அவர்களுடைய குத்திரமும் அமையும்போற்றல் அவர்களுக்கு அடங்கிப் போவது தவிர வேறு அமையும்போது அவர்கள் செயல் தொடர்பு கொள்ளப்போகும் பொருளிலை என்னும் நிலையை ஏற்படுத்தினர். அதற்குச் வழியில்லையும், வழிபாடுகளையும், கடுமையான உடல் வருத்தும் சடங்குகளையும் மேற்கொண்டனர். இவ்வனைத்துச் செயல்களின் வெளிப்பாடாக மந்திரம் அமைந்தது. இது உண்மையில் தொன்மை மங்களின் தொழில்நுட்பப் பற்றாக்குறையைப் போக்கத் தோன்றிய ஒரு கற்பனைத் (போலி) தொழில் நுட்பமாகும்.

மந்திரத்தின் தோற்றம், அதன் செயல்முறைகள் ஆகியன தொன்மை மக்களிடம் எவ்வாறு ஏற்பட்டன என்பதை அறிய டைலர், மக்லீனன், ஸ்பென்சர், பிரேசர் ஆகியோர் முயன்றனர். இவர்களுள் பிரேசர் மேற்கொண்ட பரந்த ஆய்வு பெருமளவு வெற்றியைத் தந்தது. உலகின் எண்ணற்ற பண்பாட்டினரிடையே கள ஆய்வு மூலம் தொகுத்த தரவுகள் வாயிலாக மந்திரம் பின்வரும் அமைப்பைக் கொண்டுள்ளது எனப் பிரேசர் வரையறுத்தார்.

**மந்திரம்**

கொள்கை சார்ந்தது
(theoretical)
(அல்லது)
மந்திரம் என்பது ஒரு போலி அறிவியல்
(magic as pseudo - science)

செயல்முறை சார்ந்தது
(practical)
(அல்லது)
மந்திரம் என்பது ஒரு
போலிக் கலை
(magic as pseudo - art)

ஆக்கநிலை சார்ந்தது
(positive)
**எ-டு:** சூனியம் (witchcraft)
பில்லி சூனியம் (sorcery)

எதிர்நிலை சார்ந்தது
(negative)
**எ-டு:** விலக்குகள் (taboos)

இதையடுத்து மந்திரத்தின் செயல்பாடுகள் பின்வரும் இரு கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளதாகக் கூறினார்.

1. ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது (like produces like)

2. ஒருமுறை தொடர்பு கொண்டால் தொடர்ந்து தொடர்பு 4 (once in contact continues to act).

மேற்கூறிய இரு கோட்பாடுகளின் செயல்முறையில் இருவிதிகள் அடங்கியுள்ளதாகப் பிரேசர் விளக்கினார். முதல் கோட்பாடு “ஒத்த விதி“ (law of similarity) எனப்படும். இவ்விதியோடு தொடர்புடைய மந்திரம் ஒத்த மந்திரம் (homoeopathic magic) அல்லது பாவனை மந்திரம் (imitative or mimetic magic) எனப்படும்.

இரண்டாம் கோட்பாடு “தொடர்பு“ அல்லது “தொத்து விதி (law of contact or contagion) எனப்படும். இவ்விதியோடு தொடர்புடைய மந்திரம் தொத்து மந்திரம் (contagious magic) ஆகும். ஒத்த விதி,தொத்து விதி ஆகிய இரு விதிகளும் மந்திரச் செயலுறவுகளைப் பொறுத்த அளவில் ஒரே வகையாக இருப்பதால் அவற்றை ஒத்துணர்வு மந்திரம் (sympathetic magic) என்னும் ஒரே வகைக்குள் அடக்குவார் பிரேசர். இதற்குக் காரணம் இரண்டு மந்திரங்களிலும் “காரணமும் விளைவும் “ அல்லது “வினையும் பயனும்“ (உயரளந யனெ நககநஉவ) ஒன்றாக இருப்பதேயாகும் என்பார் பிரேசர்20 இக்கருத்துக்களைப் பிரேசர் பின்வரும் வரைபடம் மூலம் விளக்குகிறார்.

ஒத்துணர்வு மந்திரம் : sympathetic magi

(ஒத்துணர்வு விதி : law of sympathy

ஒத்த மந்திரம் - homeopathic magic

(ஒத்த விதி - law of similarity)

தொத்து மந்திரம் தொடர்பு விதி

( law of contact)

ஒத்த மந்திரத்தில் “ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது“ என்பது விதியாகும். இவ்விதியின்படி என்ன விளைவு ஏற்பட வேண்டும் என விரும்பப்படுகிறதோ அதற்கேற்றாற் போல் செய்யப்படும் செயலும் ஒத்திருக்கும். குழந்தைப்பேறு வேண்டுவோர் சிறு மரத்தொட்டில்களைச் செய்து கோயில்களுக்கு நேர்த்திக் கடன் செய்வதும் உடல் உறுப்பின் குறைபாட்டை நீக்க அதே போன்ற உறுப்பை நேர்த்திக் கடனாகத் தருவதும் தமிழகத்தில் வழக்கங்களாக உள்ளன. இச்செயல்கள் அனைத்திலும் அடைய விரும்புவதும் அதற்காகச் செய்யப்படுகின்ற செயலும் ஒத்துள்ளன. ஆதலின் இது ஒத்த மந்திரத்தின் அடிப்படையில் நிகழ்கிறது.

தொத்து மந்திரத்தில் “ஒருமுறை தொடர்பு கொண்டது தொடர்ந்து தொடர்பு கொண்டேயிருக்கும்“ (once in contact always in conact) என்பது விதியாகும். அதாவது மந்திரத்தின் மூலம் விரும்பியதுடன் ஒருமுறை தொடர்பு கொண்டுவிட்டால் அது தொடர்ந்து அதனுடன் தொடர்புகொண்டு எண்ணியதை நிறைவேற்றும். கன்றை ஈன்ற பசுவின் இளங் கொடியினை ஆல், அத்தி போன்ற பால் மரத்தின் மீது கட்டும் பழக்கம் தொத்துமந்திரத்தின் அடிப்படையில் அமைந்ததே. பசுவுடன் தொடர்புடைய இளங்கொடியைப் பால்மரத்துடன் இணைப்பதன் மூலம் ஈன்ற பசுவும் பால்மரத்தைப் போல் பால் வளத்துடன் இருக்கும் என்னும் நம்பிக்கையே இச்செயலுக்குக் காரணமாகும்.?? பொருளாதாரப் பலனே தொடக்கக் கால மந்திரங்களின் நோக்கமாயிருந்தது. வேட்டையிலும், மீன்பிடித்தலிலும், வணிகம் செய்தலிலும் நல்ல பலன் கிடைக்கவும், பயிர்கள் செழித்து வளரவும், கால்நடைகள் பெருகவும் மந்திரம் பயன்படுத்தப்பட்டது. அவற்றோடு இயற்கையின் சீற்றங்களிலிருந்து தப்பிக்கவும் மந்திரம் பயன்படுத்தப்பட்டது. பின்னர் காலப்போக்கில் தொன்மை மக்கள் மந்திர ஆற்றலைப் பல வகைகளில் அவரவர் விருப்பம்போல் பயன்படுத்தத் தொடங்கினர். அப்பயன்பாட்டின் அடிப்படையில் மந்திரங்கள் தூய மந்திரம் (white magic), தீய மந்திரம் (black magic), உற்பத்தி மந்திரம் (productive magic), பாதுகாப்பு மந்திரம் (protective magic), அழிப்பு மந்திரம் (destructive maric) பலவாறாக அமைந்தன.

இன்று தூய மந்திரம் தனிமனிதன் நலனுக்காகவும் சமுதாயத்திலுள்ள அனைவரின் நலனுக்காகவும் பயன்படுத்தப் படுகிறது. விலங்குகள் கிடைக்கவும், விளைச்சல் பெருகவும், போரில் வெற்றி பெறவும், நோய்களைத் தீர்க்கவும் தூய மந்திரம் பயன்படுத்தப்படுகிறது. தீய மந்திரம் இதற்கு நேர்மாறானது. பகைவனைக் கொல்லவும், இடையூறு செய்யவும் இவ்வகை மந்திரம் பயன்படுகிறது. சூனியம் (witchcraft), பில்லி சூனியம் (sorcery). ஏவல் சூனியம் (voodoo), கெட்ட ஆவி, பேய் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு அல்லது ஒரு சமூகத்திற்கு எதிராக ஏவுவது இம்மந்திரத்தின் தன்மையாகும். இயற்கையின் கொடூரங்களி லிருந்தும் காப்பாற்றிக் கொள்ள பாதுகாப்பு மந்திரம் பயன்படுத்தப்படுகிறது. தங்களிடமுள்ள குறைகள், தீமைகள் போன்றவற்றைப் பிற உயிரிகள் அல்லது பொருள்களுக்கு மாற்றிவிட மாற்றுவிக்கும் மந்திரம் (transference of evil) பயன்படுகிறது.

தொன்மைச் சமயம் தொடங்கி இன்றைய நவீன சமயங்கள் வரை அனைத்துப் படிமலர்ச்சி நிலைகளிலும் மந்திரம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. சமயங்களின் படிமலர்ச்சிக் காலத்தில் மந்திரம் தொடர்ந்து வலுப்பட வில்லையாயினும் அதன் தொடர்ச்சி மேல் நிலையிலும் காணக்கூடியதாகவே உள்ளது. மந்திரம் எத்தன்மையானது? அது சமயத்தில் பெற்றுள்ள பங்கு என்ன? போன்ற கேள்விகளுக்குச் செயற்பாட்டியலாரின் விளக்கம் பொருத்தமாக உள்ளது. மக்கள் இக்கட்டான சூழலை எதிர்கொள்ளும்போது ஏற்படும் மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தி அவர்களின் வாழ்வைத் தகவமைந்த நிலைக்குக் கொண்டுவரும் கருவிகளாகவே சமயமும் மந்திரமும் செயல்படுகின்றன என்பது செயற்பாட்டியல் வகையில் கூறும் அனைத்து அறிஞர்களின் சாரமாகும்.

இருப்பினும் சமயமும் மந்திரமும் வெவ்வேறு நோக்கங்கள் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. மந்திரம் தனிமனிதர் சார்ந்தது. ஆனால் சமயம் சமூகத்தினர் அனைவரையும் சார்ந்தது. மந்திரம் சூழ்ச்சித் திறத்துடன் செய்தலை அடிப்படையாகக் கொண்டது (manipulative). சமயமோ இரந்து வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டது (supplicative). முன்னது ஒரு உடனடி முடிவைத் தேடிச்செய்வது பிந்தியது

இம்மைக்கும் மறுமைக்குமாகச் சேர்ந்து ஒரு நீண்ட கால முடிவைத் தேடி வேண்டுவது. அவ்வாறே முன்னது நன்மைக்காகவும் தீமைக்காகவும் செய்யப்படுவது பிந்தியது நன்மைக்காக மட்டுமே வேண்டப்படுவது. இவை இரண்டும் தனிப்பட்ட நோக்கங் கொண்டவை என்றாலும் இரண்டும் மக்களின் சமய வாழ்வில் இணைந்தே காணப்படுகின்றன.

மக்களின் சமய வாழ்வில் மந்திரத்தின் ன் எதிர்வடிவமாக (negative form) விலக்கு (taboo) செயல்படுகிறது. இங்கு எதிர்வடிவம் என்பது அதன் செயலுறவை மட்டுமே குறிக்கிறது. சுருக்கமாகக் கூற வேண்டுமானால் மந்திரம் இயக்காற்றல் சார்ந்தது (dynamic). விலக்கு நிலையான தன்மையைப் பெற்றது (static) சமுதாய வாழ்வில் இவை இரண்டின் இறுதி விளைவுகள் ஒரே திசையில் செல்வனவாக உள்ளன. இருப்பினும் சமுதாய வாழ்வைக் குறிப்பிட்ட எல்லைக்குள் வரையறுப்பதற்காக மட்டுமே விலக்கு முதன்மையாகச் செயல்படுகிறது. இதனால் இது நெறிமுறையின் (Norms) மறுவடிவமாகவும் காணப்படுகிறது. இதன் மூலம் சமுதாய வாழ்வில் இதை இதைச் செய்யக்கூடாது, குறிப்பிடக்கூடாது, வாழ்வில் இனது, நினைக்கக் கூடாடித்தான்என் பன்ய போன்ற தட்டவிதிகளையும் இதை இதை இப்படித்தான் செய்ய வேண்டும். குறிப்பிட வேண்டும், நடக்க வேண்டும், நினைக்க வேண்டும். என்பன போன்ற வழிகாட்டுதலையும் விலக்கு செயல்படுத்துகிறது. சமுதாயத்தின் கட்டமைப்பைக் காப்பதே இதன் முதன்மையான செயற்பாடு என்பார் ராட்கிளி.்.ப் பிரௌன்.

இவ்வத்தியாயத்தின் தொடக்கம் முதல் இதுவரை தொன்மைச் சமயத்தின் பெரும்பாலான தன்மைகளை ஆராய்ந்தோம். இத்தன்மைகளையும் இன்றுள்ள பெருஞ் சமயங்களின் தன்மைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் “சமயம்“ என்னும் அமைப்பில் அடிப்படையாகச் சில உட்கூறுகள் இடம் பெற்றுள்ளமையை அறிய இயலும். அவற்றை இங்குக் காண்போம்

**சமயத்தின் உட்கூறுகள்**

1. புனிதத்தன்மை என்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை. (the creation of the concept of "sacred”)

2. சடங்கு முறைகளைப் பெற்றுள்ளமை. (the establishment of rituals)

3. நம்பிக்கை முறைகளைப் பெற்றுள்ளமை. (the establishment of system of beliefs)

4. சமயத்தின் அனைத்துத் தன்மைகளையும் உறுதியாகப் பின்பற்றக்கூடிய நம்பிக்கையாளர்களைப் (பக்தர்கள்) பெற்றுள்ளமை. (the formation of an organization of believers)

**புனிதத்தன்மையை ஏற்படுத்தியுள்ளமை**

மனித வாழ்வு என்னும் சக்கரத்தின் மைய அச்சாகத் திகழ்வது சமயம். இச் சமயத்தின் மைய அச்சாகத் திகழ்வது புனிதத்தன்மை (sacul;l) சமயம் என்னும் அச்சாகத் திகழ்வது புனிதாழ்வில் மையப்படுத்திவிட்ட அனைத்துச் சமயத்தினரும் அதனை அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளிலிருந்து ”புனிதத் தன்மை” என்பதன் மூலம் தனிமைப்படுத்தி அதன் பயனை அடையலாயினர். இப்புனிதத் இன்மை அன்றாடவாழ்வின் சாதாரண செயல்களுக்கப்பார்புனிதத் வெளிப்படுத்தக்கூடியது. இது மனித ஆற்றல்களுக்கப்பாற்பட்ட ஓர் ஆற்றலை இயக்கவல்லது. இதன் இயக்காற்றல் இதுதான் எனத் துல்லியமாக வரையறை செய்யவியலாதது. இது நன்மை. தீமைகளை விளைவிக்கும் ஆற்றலாகவும் செயல்பட வல்லது. இதன் பலனை ஒருவர் அனுபவிக்க வேண்டுமானால் அதற்கெதன் மரபுவழியில் ஏற்படுத்தியுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி அதனை (புனிதத் தன்மையை) அணுக வேண்டும்.

சமயம் என்னும் அமைப்பின் உயிர்மூச்சு என மக்களால் கருதப்படும் புனிதத்தன்மையின் சிறப்பியல்பு இடம், பொருள் போன்ற எந்த ஒன்றோடும் தொடர்புடையது. தொன்மை மக்கள் ஆவியையும், இந்துக்கள் பிரம்மன், சிவன்,

விஷ்ணு, சரஸ்வதி போன்ற இறைவர்களையும், கிறித்தவர்கள் இயேசு பிரானையும், இஸ்லாமியர் முகமது நபியையும் புனிதத்தன்மை எனக் கொண்டுள்ளனர். எனினும், இப்புனிதத்தன்மையோடு தொடர்புடையவைகளும் புனிதத்தன்மையாக மதிக்கப்படும். இது அந்தந்தச் சமய நம்பிக்கையைப் பொறுத்து அமையக் கூடியது. இயற்கைப் பொருளாகவோ, குலக்குறிக்கம்பமாகவோ பலியிடும் இடமாகவோ, கோயிலாகவோ, தொழுகையிடமாகவோ, கற்பூரத் தட்டாகவோ, தீர்த்தம் தரும் பாத்திரமாகவோ, குங்குமம்,விபூதி, பஞ்சாமிருதம் போன்றவையாகவோ, பூசைப் பொருள்களாகவோ, கழுத்து, கை அல்லது உடலின் பிற இடங்களில் அணியும் சமய நம்பிக்கையுடைய பொருளாகவோ (சிலுவை, கடவுள் உருவம் பொறிக்கப்பட்ட அணிகள்), அரச மரம், வேப்ப மரம் இணைந்த மரங்களாகவோ, இறைவனுக்கென்று விடப்பட்டுள்ள விலங்குகளாகவோ (பசு, ஆடு முதலியன), நாகப்புத்தாகவோ, பசு, பாம்பு, கருடன், மயில் போன்ற விலங்குகளாகவோ இருக்கலாம். இப்புனிதத்தன்மை அந்தந்தச் சமய நம்பிக்கைக்கு ஏற்ப அமைந்திருக்கும்.

குலக்குழுக்களாகவும் கூட்டங்களாகவும்வாழ்ந்த தொன்மை மக்கள் அவர்தம் கூட்டத்தினரின் அன்றாட வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களின் போது எப்போது “புனிதத்தன்மை“ என்ற ஒன்றை ஏற்படுத்தினார்களோ அப்போதே சமயம் தோன்றிவிட்டது எனலாம். தொன்மைச் சமயத்தை விளக்கும்போது தர்கைம் மக்கள் தம் அன்றாட வாழ்வியல் நிகழ்ச்சிகளைப் புனிதம் சார்ந்தது (sacred), “புனிதம் சாராதது“ (profane), என இரண்டு வகைகளில் மட்டுமே இனங்கண்டனர் எனக் கூறுகிறார்.

ஒவ்வொரு சமயத்திற்கென்றும் உள்ள புனிதத் ஏதோ ஒரு வகையில் நிலைபேறாக்கம் பெற்றுள்ளது. மக்களுள் சிலர், வலிமை மிக்கவராகவும் வளமுடனும் வாழ்ந்த மக்களின் புனிதத் தன்மையை ஏற்றுக்கொண்டனர். இன்றுள்ள மக்களு சமயங்களுள் பல தனிமனிதர்கள் ஏற்படுத்திய புனிதத் தன்மையை ஏற்றுக் கொண்டுள்ளன. இயேசுபிரான் தோற்றுவித்த புனிதத் தன்மையை கிறித்தவமும்

முகமதுநபி தோற்றுவித்த புனிதத் தன்மையை இஸ்லாமும் ஏற்றுக்கொண்டுள்ளன. தன்மையானது

**சடங்கு முறைகள்**

புனிதத் தன்மை என்னும் பிரம்மையைத் தோற்றுவித்து அதன் மூலம் சமயம் என்னும் முறையை ஏற்படுத்திய நிகழ்வில் இரண்டாம் கட்டமாக “சடங்குகள்“ (rituals) ஏற்பட்டன. இச்சடங்குகள் சமயத்தின் கருப்பொருளாகக் கருதப்படும் புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகும் - புனிதத் தன்மையோடு தொடர்புகொள்ள மேற்கொள்ளப்படும் முறையான செயல் முறைகளாகும்.

சடங்குகள் வேறு சில செயல்களுக்காகவும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. குறிப்பாக, புனிதத்தன்மையைப் பாதுகாக்கவும், அதற்குக் களங்கம் ஏற்படாமலிருக்கவும், தீயவற்றிலிருந்து தனிமைப்படுத்தித் தூய்மையாக வைக்கவும் மேற்கொள்ளப் படுகின்றன (எடுத்துக் காட்டாக, தீர்த்தம் கொடுக்கும் பாத்திரம் மூலம் நீர் பருகுவதும் பூசையின்போது கற்பூரம் ஏற்றும் தட்டைக் கொண்டு அன்றாடம் உணவு உண்பதும் தவிர்க்கப்படுகிறது). அடுத்தது புனிதத்தன்மையோடு தொடர்பு கொண்டு அதன் ஆற்றலைப் பெற்றுப் பயனடைய சடங்குகள் செய்யப்படுகின்றன. இறுதியாக, புனிதத்தன்மையை மக்கள் இறைவன் என்னும் பெயரால் மனித உருவமாக்கியோ (anthropomorphism) மனித உணர்வுகளாக்கியோ (anthropopathism) வழிபட முற்படுவதால் இறைவனுக்கும் மனமுண்டு என எண்ணி இறைவனின் மனத்தை நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செயல்களும் சடங்குகளாயின.

சமுதாய வாழ்வில் சடங்குகள் பெரும் பங்காற்றுகின்றன. சமய நிகழ்ச்சிகளின் போது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சடங்கும். அதில் பங்கு பெறுவோர் அனைவரையும் ஒன்றுபட வைக்கிறது ”ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள அனைவரின் ஒன்றுபட்ட மனத்தின் வெளிப்பாடே அச் சமூகத்தவரின் சமயம் என்பார். தர்கைம். தொன்மைச் சமயம் முதல் இன்றைய பெருஞ் சமயங்கள் வரை அனைத்திலும் இடம் பெறும் சடங்குகள் மக்ககள் இணக்கமுறச் செய்கின்றன: ஒன்றுபட வைக்கின்றன்

கருத்து வேறுபாடுகளை மறைக்கச் செய்கின்றன. இதன்மூலம் அனைவரின் “ஒன்றுபட்ட நடத்தைமுறை“ (collective behaviour) ஏற்படுகிறது இது சமுதாயக் கூட்டமைப்பை வலுப்படுத்தி நிலைப்படுத்துகிறது.

சமயச் சார்புடைய சடங்குகள் தவிர வாழ்வியல் சடங்குகளும் மக்கள் வாழ்வில் நிறைந்துள்ளன. இவை பண்பாட்டின் பல நிறுவனங்களின் செயல்முறைகளோடு தொடர்புடையவை. ஆதலின் இவ்வகைச் சடங்கு முறைகள் மானிடவியல் ஆய்வுகளில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவ்வகை ஆய்வுகளுக்கு வித்திட்டவர் அர்னால்டு வான் கென்னப் ஆவார்.

பழங்குடிச் சமுதாயங்கள் முதல் ஊரகச் சமுதாயங்கள், நகரச் சமுதாயங்கள் வரை அனைத்துச் சமுதாயங்களிலும் எண்ணற்ற வாழ்வியற் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. தமிழர்களிடமும் பல்வேறு சடங்குகள் காலம் காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளன. இச்சடங்குகள் அனைத்தும் வாழ்வைப் பல தொடர் நிலைகளாகப் பிரித்து ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மக்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெயர் சூட்டுச் சடங்கு, காதுகுத்துதல், பூநூல் திருமணம், மஞ்சள் நீராட்டு விழா, திருமணம், வளைகாப்பு ஆகியன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இறப்புச் சடங்கிலும் பல நிலைகள் உள்ளன. இறந்தவரை அடக்கம் செய்தலும், மறுநாள் பால் ஊற்றுதலும், 14-16 ஆம் நாளில் காரியமும், அன்று நிகழும் தாலியறுப்புச் சடங்கும், இவற்றையடுத்து ஆண்டுதோறும் தெவஷம் கொடுத்தல் சடங்கும் நிகழ்கின்றன. ஒவ்வொரு சடங்கிற்குப் பின்னும் உலக வாழ்வியல் பற்றிய மக்களின் பார்வையும் (world view) அது பற்றிய அவர்களின் கருத்தாக்கமும் அடங்கியுள்ளன என்பதை இங்கு உய்த்துணர வேண்டும்.

அர்னால்டு வான் கென்னப் என்னும் மானிடவியல் அறிஞர் மக்களின் வாழ்வியற்சடங்கு முறைகளை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றைத் தகுதிப் பெயாச்சிச் சடங்குகள் (rites of passage) என வரையறை செய்தார். ஒவ்வொரு தகுதிப் பெயர்ச்சிச் சடங்கும் மக்களை ஒருநிலையிலிருந்து பிரித்து மறுநிலைக்கு அறிமுகப்படுத்துகிறது என முடிவு செய்தார். இவ்வகைக் கருத்தை வலுவாக்கிக்

கொண்ட அவர் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகளைப் பிரித்தல் சடங்குகள் (seperation rites), நிலைமாற்றச் சடங்குகள் (transitional rites), சேர்ப்புச் சடங்குகள் (incorporate rites) எனப் பகுத்தார். முதல் வகைச் சடங்குகள் ஒருவரை அவரது தகுதியிலிருந்து பிரியும் நிகழ்வைக் குறிக்கவும், இரண்டாம் வகைச் சடங்குகள் அவரது தகுதியில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கவும், மூன்றாம் வகைச் சடங்குகள் அவருக்குச் சார்த்தப்படும் புதிய தகுதியைக் குறிக்கவும் நிகழ்த்தப்படுகின்றன என முடிவு செய்தார்.

சங்ககாலத் தமிழர் பண்பாட்டிலும் பல தகுதிப் பெயர்ச்சி நிலைகள் பிரிக்கப்பட்டுள்ளமை ஆய்வுக்குரியதாகும். குறிப்பாக, குழந்தைப் பருவத்தைக் காப்பு, செங்கீரை, தாலப்பருவம், சப்பாணி, முத்தப்பருவம், வருகை, அம்மானை, சிறுவரை, சிற்றில், சிறுதேர் எனப் பகுத்துள்ளமை தகுதிப் பெயர்வு என்னும் கருத்தாக்கத்தைக் கொண்டவையே அவ்வாறே பெண்களின் வாழும் காலத்தைப் பேதை, பெதும்மை, மங்கை,மடந்தை,அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் தகுதி நிலைகளாகப் பகுத்துள்ளதும் மேற்கூறிய கருத்தாக்கத்தின் அடிப்படையைக் கொண்டது எனக் கருத இடமுண்டு. இது போன்ற எண்ணற்ற தகுதிப் பெயர்வுகள் தமிழர் பண்பாட்டில் இடம் பெற்றுள்ளன. அவற்றோடு பெயர் சூட்டுச் சடங்கு, காதுகுத்துதல், பூநூல், திருமணம், மஞ்சள் நீராட்டு விழா, திருமணம், வளைகாப்பு, அறுபதாம் கல்யாணம், இறப்போரை எரித்தல், புதைத்தல், பால் ஊற்றுதல், காரியம் செய்தல், தெவஷம் கொடுத்தல் (திதி) போன்றவையும் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள் என்னும் கருத்தாக்கத்தைக் கொண்டு ஆராய வேண்டிய ஒன்றாகும்.

**சமய நம்பிக்கைகள்**

மனித ஆற்றலுக்கப்பாற்பட்ட ஆற்றல் ஒன்றுள்ளது என்ற தொன்மை மக்களின் நம்பிக்கையே சமயம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது தொன்மை மக்களின் அந்நம்பிக்கை படிமலர்ச்சிக் காலத்தில் பல நிலைகளில் படிமலர்ச்சியடைந்ததால் அது பல சமயப் பிரிவுகளாக வளர்ச்சி பெற்றது. ஒவ்வொருசமயப் பிரிவிலும் படிமலர்ச்சியடைந்த அந்நம்பிக்கை அச்சமயப் பிரிவின் நிலைபேறுடைமைக்கு

வழிவகுத்தது. நீண்டு நிலை பெற்றுள்ள ஒவ்வொரு சமயமும் மக்களிடம் வேரூன்றியுள்ள சமய நம்பிக்கைகளால் மட்டுமே நிலைபெற முடிகிறது.

சமய நம்பிக்கை, புனிதமானதற்கும் (sacred) அதனோடு தொடர்புடைய சடங்குகளுக்கும் இடையேயுள்ள உறவைச் சுட்டிக் காட்டுகிறது் மக்கள் அவற்றோடு தொடர்பு கொள்ளுவதால் ஏற்படும் பலனைச் சுட்டிக் காட்டுகிறது் அவ்வாறு தொடர்பு கொள்வதற்காகச் செய்யப்படும் சடங்குகளின் பொருளைச் (அநயனிைபெ) சுட்டிக் காட்டுகிறது (எ-டு: இந்துக்கள் கோயிலுக்குச் செல்லும் போது, குளித்து விட்டுச் செல்ல வேண்டுமென்பது “சமய நம்பிக்கை“. உடலளவில் தூய்மையாக இருப்பதென்பது மனஅளவிலும் தூய்மையாக இருப்பதன் குறியீடாக (symbol) அமைகிறது. உடலளவிலும் மனஅளவிலும் தூய்மையாகக் கடவுளை அணுக வேண்டும். அப்போது தான் கடவுள் பக்தரின் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு அருள் புரிவார் என்கிறது இந்துக்களின் சமய நம்பிக்கை.

தொன்மை மக்கள் புனிதத் தன்மையை ஆவி என நம்பி வழிபட்டனர். இந்நம்பிக்கை படிமலர்ச்சிக் காலத்தில் தொடர்ந்து மாற்றம் பெற்று வந்துள்ளது. இந்துக்களின் பல கடவுள் வழிபாட்டில் (polytheism) புனிதத் தன்மைக்கு (இறைவன்) மனித உருவமும்,மனித உணர்வுகளும் சார்த்தப்பட்டன. இஸ்லாம், கிறித்தவம் போன்ற சில சமயங்கள் வாழ்ந்து இறந்த மகான்களைப் புனிதத்தன்மையாகக் கொண்டுள்ளன. புனிதத் தன்மையின் நிலை ஆவியுலக வழிபாட்டைக் கொண்ட தொன்மைச் சமயம் முதற் கொண்டு இன்றைய ஒரு கடவுள் வழிபாட்டு முறை (monotheism) வரையில் பல நிலைகளாக மாறியுள்ளதால் சடங்கு முறைகளிலும் மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளன. இந்துக்களின் சமயவாழ்வில் இடம்பெறும் சடங்கு முறைகளைப் போன்று இஸ்லாம், கிறித்தவம் போன்ற சமயங்களில் இடம் பெறவில்லை. இச்சமயங்களில் சடங்குகளின் முக்கியத்துவம் குறைந்துள்ளது. ஆனால் அதை ஈடு செய்யும் வகையில் வேறு முறைகளில் சமய நம்பிக்கை இவர்களிடம் வேரூன்றியுள்ளது.

**சமய வாழ்வைப் பின்பற்றுவோர் (பக்தர்கள்)**

ஒவ்வொரு சமயமும் அதன் புனிதத் தன்மையையும், அச்சமயத்தின் பிற உட்கூறுகளையும் கட்டிக்காக்கும் போதுதான் அச்சமயம் வலுவுடன் நிலைபெற முடியும். அவ்வாறு கட்டிக் காப்பதற்கு அச்சமய நம்பிக்கையை முற்றிலும் கடைபிடிப்பவர்கள் இருக்க வேண்டும். இத்தன்மை இன்று வாழும் சமயங்கள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு சமயத்தின் நிலைபேறுடைமையைக் கவனிக்கும்போது வழிபாட்டு இடங்களை உண்டாக்குதல், சடங்குகள் நிகழ்த்துதல், தனித்தன்மையின் ஆற்றலோடு தொடர்பு கொள்ளவும் அதன் பயனை அடையவும் பூசாரிகள், சமயப் பரப்பிகள் போன்றோரைச் செய்ற்பட வைத்தலும் போன்ற பல செயல்கள் ஒவ்வொரு சமயத்திலும் இடம் பெறுகின்றன. இவ்வனைத்துக் கூறுகளும் ஒருங்கிணைத்துச் செயல்படும் முறையிலேயே அச்சமயத்தின் வாழ்வும் வரலாறும் அமைகிறது.

சமய நம்பிக்கையற்ற மக்களின் வாழ்வில்கூட (secular life) சமய நம்பிக்கைகள் கொண்ட சில கூறுகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாக, தேசியக் கொடியைப் புனிதத் தன்மையாக எண்ணி வணங்குதல், தாய் நாட்டை நேசித்தல், நாட்டுப்பற்றுடையோர் (பக்தர்கள்) அமைப்புகளின் செயல்கள், அரசியலமைப்புச் சட்டத்தை மதித்தல், தலைவர்களின் வாக்குகளைக் காப்பாற்ற தியாகம் செய்தல் போன்ற அனைத்தும் சமய வாழ்வின் சாயல்களே என்பர் மானிடவியலார் சிலர்.

**மக்கள் வாழ்வில் சமயத்தின் பங்கு**

மனித இனத்தின் வளர்ச்சியில் சமய நம்பிக்கை ஆவியுலக வழிபாட்டில் தொடங்கி ஒரு கடவுள் வழிபாடு வரை பல நிலைகளாகப் படிமலர்ச்சியடைந்து வந்துள்ளது. இருப்பினும் அனைத்து நிலைகளிலும் சமய நம்பிக்கையானது மக்கள் வாழ்வில் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ள நிலையே காணப்படுகிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்த சமயம்சார் மானிடவியலார் பின்வரும் கருத்துகளை முதன்மையாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

1. வாழ்வின் எதிர்காலம் எப்படியிருக்கும் என கணிக்க முடியாத நிலையில் தோன்றும் ஒரு பயம் கலந்த எதிர்பார்ப்பு உணர்வுகளைத் தேற்றிக் கொண்டு அதன் மூலம் ஒரு வகையான நம்பிக்கையைப் பெற்று வாழ்க்கை நடத்துவதில் சமயம் பெரும் பங்காற்றுகிறது. இவ்வுலக வாழ்வில் அடுத்து என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாததாகையால் ஒவ்வொருவரும் தமக்கு எவ்வித இடையூறும், தொல்லையும் ஏற்படக் கூடாது என விரும்புகின்றனர். இதற்கடுத்து, ஏறக்குறைய எல்லா சமயங்களுமே இயல்பிறந்த இயற்கை அல்லது இயற்கைக்கப்பாற்பட்ட உலகம் (supernature) ஒன்று உண்டு என வரையறை செய்து இறப்புக்குப் பின் மனிதனுக்கு அவ்வுலகத்தில் மீண்டும் ஒரு வாழ்வு உள்ளது எனக் கூறுவதால், புரிந்து கொள்ளவியலாத வருங்கால வாழ்வில் சிக்கல்களின்றி எதிர்கொள்ள விரும்பி சமய வாழ்வை ஏற்றுக்கொண்டு அதன் நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர்.

2. ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் அவர்களுடைய சமுதாயம் சுட்டிக்காட்டும் நெறிமுறைகளையும் (norms) விழுமியங்களையும் (values) முறையாகப் பின்பற்றி நடப்பதால் மட்டுமே அச்சமுதாயம் நிலைபெற முடியும். இந்நிலையில் நெறிமுறைகளும் விழுமியங்களும் சமுதாய வாழ்விற்கு மிகவும் முக்கியமானது எனச் சுட்டிக்காட்டுவதோடு அதனைக் கண்டிப்புடன் ஏற்றுச் செயல்பட வைப்ப திலும் சமயம் பெரும் பங்காற்றுகிறது. மக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள். விழுமியங்கள் ஆகியவற்றுள் பெரும்பாலானவற்றைச் சமய ஒழுக்கம் சார்ந்ததாக (moral) அறிவுறுத்தி அதற்குத் தனி மதிப்பை ஏற்படுத்துகிறது. இவற்றுள்ளும் சிலவற்றைப் புனிதத் தன்மையாக்கி (ளயஉசநன) அதற்குச் சிறப்பிடம் கொடுக்கிறது. இவ்வாறு சமயத்ரதன் சிறப்பம்சங்களோடு கூடிய நெறிமுறைகளையும் விழுமியங்களையும் பின்பற்றுவோருக்குச் சமயம் ஆதரவளிக்கிறது என்ற. கருத்தாக்கத்தைச் சமயங்கள் கற்பிக்கின்றன.

பெற்றோருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற நெறிமுறை வீட்டிலும் பள்ளியிலும் கற்பிக்கப்படுகின்றது. பெற்றோரை மதிப்பவனும் வழிபடுபவனும் இறைவனை மதிப்பதற்கும் வழிபடுவதற்கும் சமம் என்ற கருத்து இந்நெறிமுறையின்

ஆழ்நிலைக் கருத்தாசு அமைவதால் ஒவ்வொரு வரும் இந்நெறி முறையைக் கடைபிடிக்காமல் தப்பித்துச் செயல்பட விரும்புவதில்லை. இந்து, இஸ்லாம், கிறித்தவம், யூதசமயம் போன்ற பல சமயங்களில் இந்நெறிமுறை புனிதத்தன்மையாகக் (sacred) குறிப்பிடப்படுகிறது. அவ்வாறே திருமணம் என்ற எல்லைக்கு வெளியே பாலுறவு கொள்வதை ஒழுக்கக்கேடு என சமயங்கள் வலியுறுத்துகின்றன. இதுபோன்று மேலும் பல நெறிமுறைகள் சமயச் சார்புடையனவாக விளங்குகின்றன. இவ்வாறு சமுதாயத்தின் கட்டுக்கோப்பை நிலைப்படுத்தும் நெறிமுறைகளும் விழுமியங்களும் சமயக்கூறுகளோடு தொடர்பு பெறுவதால் அவை வலிமையையும் ஆற்றலையும் பெற்றுச் செயல்படுகின்றன.

3. சமுதாய நலனுக்கு எதிராகச் செயல்படும் போக்கைச் சமயம் கட்டுப்படுத்துகிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் சில அமைப்புகள் (காவல் துறை, நீதிமன்றம், அறிவுரை கூறும் மன்றம் போன்றவை) ஏற்படுத்தப்பட்டு அவை மூலம் சமுதாய நலனுக்கு எதிராகச் செயல்படுவோர் தண்டிக்கப்பட்டோ அறிவுரை கூறப்பட்டோ தண்டனைகள் கொடுக்கப்பட்டோ திருத்தப்படுகின்றனர். ஆனால் சமயம் இவ்வனைத்தையும் கடந்து ஒரு புதிய பரிமாணத்துடன் செயல்படுகிறது மனித ஆற்றலுக்கு உட்படாத இயற்கை மீறிய ஆற்றல் ஒன்றுள்ளது என வலியுறுத்தி நன்மை செய்வோருக்கு நன்மை விளையும், நன்மை செய்வோர் சிக்கலை எதிர்கொள்ளும்போது தெய்வீக ஆற்றல் மூலம் காப்பாற்றப்படுவர் இறப்புக்குப் பின்வாழ்வுண்டு - அதில் அவரவர் செய்யும் செயல்களுக்கேற்ப மறுஉலகில் ஏற்படும் வாழ்வு இறைவனால் அமைத்துக் கொடுக்கப்படும் தீமை செய்வோர் தொடர்ந்து இன்னல்களையும் பாவங்களையும் சந்தித்து இறப்புக்குப் பிந்திய வாழ்விலும் அவற்றைச் சந்திக்க வேண்டிவரும் என்பன போன்ற எண்ணற்ற கருத்தாக்கங்களைச் சமயம் வலியுறுத்துகின்றது. இதன் மூலம் மக்களை நெறிபிறழ்வு நிலைக்குத் தள்ளாமல் நன்னிலையிலேயே இருக்க வகை செய்கிறது.

4. ஒரு சமுதாயத்தின் அமைப்பில் கடுமையான மாற்றங்கள் ஏற்படும்போது அல்லது அதனுள் உள்ள சில நிறுவனங்கள் இக்கட்டான சூழலை

எதிர்கொள்ளும்போது அவற்றின் கட்டுக்கோப்பு சிதறாமலிருக்க சமயம் துணை நிற்கிறது. போர்க்காலங்கள், உள்நாட்டுக் கலவரங்கள், குழுச் சண்டைகள், தொழிற் புரட்சி, கடுமையான வறட்சி, தனிமனித விரக்தி போன்ற எண்ணற்ற நிகழ்வுகள் தலைதூக்கும் போது சமுதாய அமைப்பின் கட்டுக்கோப்புச் சிதைவுறும் (social disorganization) நிலைக்குத் தள்ளப்படும். இந்நிலையைத் தர்கைம் “நெறிமுறையின்மை“ அல்லது “கட்டுக்கோப்பின்மை“ (anomie) என்பார். ஒரு சமுதாயத்தின் பழக்கப்பட்ட மரபு முறை சிதைவுறுதலையே இது குறிக்கிறது. இதன் மூலம் “சமுதாய உறுதிப்பாடு“ (social solidarity) தளர்ந்து கலகலத்து விடும்.

சமுதாய மாற்றத்தின் போதும் (social change) பல நிறுவனங்கள் மாறுதல்களுக்கு இலக்காகின்றன. இவற்றுள் மொழியும் சமயமும் மட்டுமே அவ்வளவு விரைவில் உட்படுவதில்லை. இதற்குக் காரணம் மனித வாழ்வியலில் இவை இரண்டும் இருகண்களைப் போன்று கருதப்படுவதேயாகும். இவை வழியேதான் உலக வாழ்வு முழுவதும் உணரப்படுகிறது. இதனால் அனைத்துச் சமுதாயத்தினரிடமும் சமயமும் மொழியும் மற்ற நிறுவனங்களைப் போல அவ்வளவு விரைவான மாற்றங்களை ஏற்றுக் கொள்வதில்லை.

5. சமயம் என்னும் நிறுவனத்தின் மிகப் பெரும் ஆற்றல்களாகச் சடங்குகளும் வழிபாட்டு மரபுகளும் திகழ்கின்றன. இவை சமூகத்தை ஒன்றிணைத்துக் கட்டுக்கோப்பாகச் செயற்பட வைப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. ஒவ்வொரு சமயத்திலும் தனிமனிதர்களாக ஈடுபடாமல் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளும் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான நிகழ்ச்சிகள் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்று சேர்த்து அவர்களுக் கிடையே கூட்டுணர்வை வலுப்படுத்துகின்றன் சமூகப் பிணைப்பை மிகுதிப்படுத்துகின்றன.

6. மனிதர்கள் அனைவரும் சமம் என்னும் கருத்தை அனைத்துச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. அதோடு, அன்பு, கருத்தை வலியுறுத்துவதால் இவை

தனிமனிதர்களை ஒன்றிணைக்கின்றன. சமுதாய அமைப்பில் முன்பின் தெரியாதவர்களாக இருந்தாலும் அவர்களுக்கிடையேபிணைப்பை ஏற்படுத்துகின்றன. எடுத்துக் காட்டாக, இந்து சமயத்தில் சைவ, வைணவப் பிரிவுகளும், பிறக சமயங்களில் இதுபோன்ற உட்பிரிவுகளும் இப்பிரிவினர்கள் ஒருவருக்கொருவர் உறவினராக இல்லான . விருப்பினும் பொதுவாழ்விலோ பிற இடங்களிலோ பழக வாய்ப்பேற்படும்போது பற்றுடையவராகவும், அன்பு செலுத்துபவராகவும், உதவி செய்பவராகவும் பழகுவர். இவ்வாறான உணர்வுகளுடன் சமூகத்தில் அனைவரையும் பிணைக்கும் ஆற்றல் மற்ற எல்லா நிறுவனங்களைக் காட்டிலும் சமயமே மிகுதியாகக் கொண்டுள்ளது.

7. சமுதாயத்தின் ஒட்டு மொத்த கட்டுக்கோப்பிற்கு மட்டுமன்றித் தனிமனித வாழ்வியலின் கட்டுக்கோப்பிற்கும் சமயம் துணை நிற்கிறது. தனிமனிதர்களுக்கு ஏற்படும் இன்பம் துன்பம் நல்லவை, கெட்டவை பொருள் இழப்பும், செல்வவளமும் அவதூறும், செல்வாக்கும் அழிவும், வளமும் பாவமும் வீடு பேறும் தோல்வியும், வெற்றியும் போன்ற அனைத்தும் இறைவனால் கொடுக்கப்படுபவையே என்ற மக்களின் நம்பிக்கை சமயம் போதிப்பதாகும். இதனாலேயே மக்கள் தம் வாழ்வின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் ஈட்டுவதற்கு வழிகாட்டுமாறு இறைவனை வேண்டுகின்றனர்.

சமுதாய வாழ்வில் மக்கள் எவ்வாறெல்லாம் நடக்கவேண்டுமென்ற விதிமுறைகளைச் சமய போதிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. இவை நெறிமுறைகளாகவும், விழுமியங்களாகவும், சட்டதிட்டங்களாகவும் சமுதாயத்தில் வடிவம் பெற்றுள்ளன. இவற்றை மீறுவது சமயக் கட்டுப்பாட்டை மீறுவதாகும் என்ற அச்ச உணர்வை மக்களுக்குச் சமயம் போதிக்கிறது. இந்த அளவில் சமுதாயத்தில் நடத்தை முறைகளைச் சுட்டிக் காட்டுவதும் அதனைப் பின்பற்ற அறிவுறுத்துவதும் சமயத்தின் பெரும் பணியாக விளங்குகிறது.

8. தனிமனிதர்தம் வாழ்வியலில் எதிர்கொள்ளும் உடலியல், உளவியல், வாழ்வியல் சிக்கல்களையும் மாற்றங்களையும் தாங்கிக் கொள்ளும் நிற்வியல் சக்கம் கொடுக்கிறது. எடுத்துக்காட்டாக பிறப்பு: பூப்பெய்தல், திருமணம், இறப்பு, நோய்

வாய்ப்பட்டு மீளுதல் போன்ற உடலியல் வாழ்வியல் மாற்றங்களும் தோல்வியைச் சந்தித்தல், மற்றவர்களால் ஏமாற்றப்படுதல், பழிவாங்கப்படுதல், திடீரென இழப்பைச் சந்தித்தல் போன்றவையும் தனிமனிதரின் உளவியலை மிகுதியாகப் பாதிக்கக்கூடியவை இவ்வகையான பாதிப்புகளிலிருந்து மீளுவதற்கு மரபுவழியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சமய வழிமுறைகள் மூலம் தனிமனிதர்கள் இறைவன் அல்லது இயற்கை மீறிய ஆற்றலுடன் தொடர்பு கொள்கின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் பலன் கிடைக்கிறதா இல்லையா என்பதைக் காட்டிலும் மக்கள் மன வெழுச்சியிலிருந்து மீண்டு அமைதியைத் தேடிக்கொள்கிறார்கள் என்பதே முக்கியம். இவ்வகையில் சமயம் மனித சமுதாயத்தின் வலுவான பிடியிலிருந்து விடுபட இயலவில்லை.

9. மனிதன் ஏன் வாழவேண்டும்? எதற்காக வாழ வேண்டும்? எப்படி வாழவேண்டும்? என்பதற்கு விளக்கங் கூறுவதாக சமயம் திகழ்கிறது. இவ்வுலக வாழ்வில் வாழ்வியல் தொடர்பான பலவற்றைக் குறித்துச் சிந்திக்கும்போது இறுதியாக இது ஏன்? என்ற கேள்வியைக் கேட்டால் அதற்கான பதிலின் இறுதிக்கட்டம், இயற்கை மீறிய ஆற்றல் அல்லது இறைவனால் படைக்கப்பட்டது என மட்டுமே அமைகிறது. நடைமுறை வாழ்வில்கூட மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களுக்கு விளக்கம் காண்பதில் சமயமே துணை நிற்கிறது. சமயம் கூறும் கருத்துக்களும் உண்மை எது? பொய் எது? என்பதை ஆராய்வதில் ஆர்வங்காட்டாமல் அதனைப் “புனிதத்தன்மையானது“ என்ற அளவுகோலாகக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். இந்த அளவுகோலைப் பின்பற்றி மக்கள்தம் நடத்தை முறைகளையும் சமுதாய அமைப்பில் கட்டுண்டு செயல்படும் தன்மையையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியவர்களாய் ஆக்கப்படுகின்றனர். எனவே சமயம் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் ஓர் உயிரோட்டமுள்ள சமுதாய நிறுவனமாகச் செயலாற்றுகிறது என்பதில் ஐயமில்லை.

**வினாக்கள்**

1. சமயத்தின் தோற்றமும் குறித்து எழுதுக.

2. ஆவி வழிபாடு - விளக்குக.

3. உயிரியியம் - விளக்கம் தருக.

4. இயற்கை வழிபாடு குறித்து எழுதுக.

5. குலக்குறியியம் குறித்து எழுதுக.

6. முன்னோர் வழிபாடு குறித்து எழுதுக.

7. மக்கள் வாழ்வில் சமயத்தின் பங்கினை விவரிக்க,

## அலகு - 5

### உணவு ஈட்டுதலும் பரிமாற்ற முறைகளும்

பசி என்பது ஓர் உயிரியல் நிகழ்வு. இது ஓரணு உயிரியான அமீபா முதல் படிமலர்ச்சியின் உச்ச நிலையில் இருக்கும் மனிதன் வரை அனைத்து உயிரினங்களிலும் நிகழ்கிறது. உயிரினங்கள் உடல் ஆதாரங்களைச் செலவிட்டு இயங்குகையில் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அவ்வாதாரங்களின் இருப்பு நிலை மிகவும் குறையும்போது அது பசி என்னும் உணர்வாக வெளிப்படுகிறது. உண்மையில் பசி என்பது உடலியல் இயக்கத்தின்போது அடிப்படை எரிபொருள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் குறைவதைச் சுட்டிக்காட்டும் ஓர் உயிரியல் அளவு மானியாகும். இந்த இயற்கை நிகழ்வு ஏற்படும் போது ஒவ்வோர் உயிரினமும் அதற்கு ஏற்ற எரிபொருளை (உணவு) உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இக்குறிப்பிட்ட உயிரியல் நிகழ்வை மையமாகக் கொண்டே உலகின் அனைத்து வகையான செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

மனித இனத்தவர்களின் உணவு ஈட்டும் முயற்சி நான்கு பெரும் நிலைகளில் படிமலர்ச்சியடைந்துள்ளது. கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் வரை வேட்டையாடுதலும் இயற்கையில் கிடைக்கும் உணவுப் பொருள்களைச் சேகரித்தலுமே முதன்மையான வாழ்க்கைத் தொழிலாக இருந்தது.“ கி.மு. 7,000 ஆண்டு வாக்கில் வடக்கு ஆப்பிரிக்கா, சிற்றாசியா (Asiaminor), தெற்காசியா போன்ற பழைய உலகப் பகுதிகளிலும் புத்துலகத்தைச் சேர்ந்த பாலைவன மக்களும், புத்துலகப் பகுதியில் வாழ்ந்த பிற தொன்மைப் பண்பாட்டினரும் கால்நடைகளை மேய்த்து வாழத் தொடங்கினர். கி.மு. 3,000 ஆண்டு வாக்கில் உலகின் பெரும்பாலானவர்கள் வேளாண்மையை முதன்மையான வாழ்க்கைத் தொழிலாக ஏற்கத் தொடங்கினர். குறிப்பாக, மத்திய தரைக்கடல் பகுதியிலும், தெற்காசியா, கிழக்காசியா போன்ற பழைய உலகப் பகுதிகளிலும், மத்திய மெக்சிகோ முதல் தெற்கு ஆண்டீஸ் வரையுள்ள புத்துலகப் பகுதியிலும் வேளாண்மைத் தொழில் வளர்ச்சி பெற்றது?.

இதனடிப்படையிலேயே மானிடவியலார் மனித இனத்தின் உற்பத்தி முறையைப் பின்வரும் 4 படிமலர்ச்சி நிலைகளாகப் பகுத்துக் காண்கின்றனர்.

1. வேட்டையாடி உணவு சேகரித்தல்
2. கால்நடைகளை வளர்த்தல்
3. எளிய வேளாண் முறை (உழுது பயிரிடும் முறைக்கு முந்திய வேளாண்மை, காட்டெரிப்பு வேளாண்மை, தோண்டுகழி கொண்டு விதைத்தல் ஆகியன).
4. பண்பட்ட வேளாண்மை (உழுதல் வேளாண்மை).

மேற்குறிப்பிட்ட நான்கு நிலைகளும் இன்று மக்களிடம் நிலை பெற்றுள்ளதால் அதனைப் புரிந்து கொள்ளுதல் மூலம் ஒவ்வொரு படிமலர்ச்சி நிலையிலும் மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளவியலும். சமகாலப் பண்பாடுகளைப் புரிந்து கொள்ளுதலே நம் முதன்மையான இலக்காதலால் படிமலர்ச்சி நிலைகளுக்கு இங்குச் சிறப்பிடம் கொடுக்கப்படவில்லை.

மர்டாக்கின் இனக்குழுவியல் வரைப்படத் தரவுகளின்படி உலகின் மொத்த நிலப்பரப்பில் 15 விழுக்காடு இன்றும் வேட்டையாடி உணவு சேகரிக்கும் மக்கள் வசம் உள்ளது. இவ்வகை வாழ்க்கைப் பொருளாதாரம் ஆஸ்திரேலிய முதுகுடிகள் தொடங்கி பசிபிக் தீவுப் பகுதி, ஆப்பிரிக்கா, சில அமெரிக்கப் பகுதிகள், அந்தமான் தீவு ஆகிய பகுதிகளில் வாழும் பல பழங்குடிகள் உட்பட தென்னிந்தியப் பகுதியில் வாழும் சோளநாயக்கர், காடர், ஏனாதி, செஞ்சுக்கள் வரை உள்ளது. ஐரோப்பாவிலும் மத்தியதரைக்கடல் பகுதியிலும் வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறை இல்லை. கிரீன்லாந்துப் பகுதியில் வாழும் ஒரு பிரிவு எஸ்கிமோக்களிடம் வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறை உள்ளது. இதற்கு மாறாக இலாப்பியர்கள் (Lapps) கலைமான்களை வளர்த்து வாழ்கின்றனர். இம்மக்களின் அண்டையப் பகுதியான சைபீரியாவில் வாழும் யுகாகிர் (Yukaghir), சமோயத் (Samoyed), துங்குஸ் (Tungus) ஆகிய குடியினர் வேட்டையாடியும் கலைமான்கள் வளர்த்தும் வாழ்கின்றனர்.

இன்று ஆப்பிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் ஆயர் வாழ்க்கையும் வேளாண் தொழிலும் இணைந்த பொருளாதார முறை காணப்படுகிறது. கலகாரிப் பாலைவன புஷ்மன், காங்கோ குள்ளர்கள் போன்றவர்கள் இதற்கு விதிவிலக்காகும். இவர்கள் வேட்டையாடி உணவு சேகரிக்கும் மக்களாவர். இந்தோனேசியா வில்ளலி பாடியினரைத் தவிர ஏனையோர் தோட்டப் பயிர் விளனிப்பவளகவும் பண்பட்ட வெனைனமை செய்பவராகவும் உள்ளனர். வேளாண் தொழிலே இன்று உலகில் முதன்மையான வாழ்க்கைப் பொருளாதாரமாக விளங்குகிறது. ஐரோப்பா, மத்தியதரைக்கடல், ஆப்பிரிக்கா, தென் கிழக்காசியா, இந்தியா ஆகிய பகுதிகளில் வேளாண் முறை செழித்துள்ளது. அமெரிக்க இந்தியர்களுள் பலர் வேட்டையாடி உணவு சேகரிக்கும் தொழிலைக் காட்டிலும் மக்காச் சோளம், திணை வகைகள், பீன்ஸ், காய்கறி வகைகள் போன்றவற்றை விளைவிக்கின்றனர். பசிபிக் கடற்பகுதி மக்களுள் பெரும்பான்மையானவர்கள் தோட்டப் பயிர் செய்தும் மீன்பிடித்தும் வாழ்கின்றனர். டாஸ்மேனியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் வாழும் சில பழங்குடிகள் இதற்கு விதிவிலக்கு. இவர்கள் வேட்டைத் தொழிலை முதன்மையாகக் கொண்டவர்கள். இவ்வாறு உலகம் தழுவிய நிலையில் பொருளியல் முறைகளை ஒப்பிட்டுக் காண்பதற்கு மர்டாக்கின் உலக இனக்குழுவியல் வரைபடத்தரவுகளே அடிப்படையாக அமைகின்றன.

**பொருளியல் முறைகள்**

மக்கள் வாழ்விற்காகத் திட்டமிட்ட முறையில் புறச்சூழல்களோடும் சமூகச் சூழல்களோடும் இடைவினை புரியும் செயலே பொருளாதாரச் செயல்கள் எனப்பொருளியல்சார் மானிடவியலார் கூறுவர். மக்கள் தம் சுற்றுச்சூழலில் கிடைப்பனவற்றில் மிகப் பெரும் பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளும் உத்தியே பொருளாதார நடவடிக்கைகள் என்றும் அதனை வேறுவகையில் பொருள்படுத்திக் கூறுவார் நாஷ். அனைத்துச் சமுதாயங்களிலும் பொருளாதாரச் செயல்களின் இறுதிஇலக்கு பொருள் உற்பத்தியாக அமைகிறது. இந்த உற்பத்தி என்னும் இலக்கில் நிலம், உழைப்பு (labour), தொழில்நுட்பம், மூலதனம் ஆகிய காரணிகள் மிகவும்

முதன்மையானவையாகச் செயல்படுகின்றன. இங்கு நிலம் என்பதில் நீர் வளமும் அடங்குகிறது. நிலமும் நீர்வளமும் உற்பத்தி முறையைப் பெருமளவு அறுதியிடும் காரணிகளாகச் செயல்படுகின்றன. வணிக நோக்கமற்ற உற்பத்தி முறையைக்கொண்ட பழங்குடிகளின் உற்பத்தி முறையில் நான்கு நிலைகள் செயல்படுகின்றன. அவை 1. தொழில் நுட்பமும் தொழிற் பகுப்பும் (division of labour) 2. உற்பத்தி அலகுகளில் அமைப்பு 3. பொருள் பரிமாற்ற முறைகள் 4. சொத்தையும் மூலதனத்தையும் நிருவகிக்கும் முறை.

ஒவ்வொரு சமுதாயமும் அது கொண்டுள்ள தொழில்நுட்பத்திற்கு ஏற்பவே அதன் சுற்றுச்சூழலின் வளத்தைப் பயன்படுத்துகிறது. தொழில்நுட்பம் என்பது பெரும்பான்மையில் கையாளப்படும் கருவிகள், அணுகுமுறைகள், வேலையைச் செய்யும் முறைகள் போன்வற்றைச் சேர்ந்தது. பழங்குடியினர் பயன்படுத்தும் தொழில் நுட்பம் மிகவும் எளிமையானது. தொழிற்பகுப்பு என்பது செய்யும் தொழிலை ஆண்கள் செய்யக் கூடியவை, பெண்கள் செய்யக்கூடியவை, முதியோர் செய்யக்கூடியவை, வாலிப வயதினர் செய்யக்கூடியவை, சிறுவர்கள் செய்யக் கூடியவை எனப் பாகுபடுத்துதல், மற்ற மூன்று கூறுகளின் பொருள் வெளிப்படையானதே. இந்நிலையில் இந்த நான்கு முறைகளும் வேட்டையாடி உணவு சேகரித்தல், ஆயர் வாழ்க்கை, நாடோடி வாழ்க்கை, வேளாண்தொழில் ஆகிய உற்பத்தி முறைகளில் எவ்வாறு செயல்படுகின்றன என இங்குச் சுருக்கமாகக் காண்போம் ஏனெனில் உற்பத்தி முறைகள் பற்றிய செய்திகள் சமுதாய முறை, அரசியல் முறையும் சமூக ஒழுங்கும் என்னும் அத்தியாயங்களிலும் இடம் பெறுவதால் இங்குச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. ஆதலின் பரிமாற்றமும் பகிர்ந்து கொள்ளுதலும் பற்றி இவ்வத்தியாயத்தில் விரிவாக எழுதப் பெற்றுள்ளது.

**வேட்டையாடி உணவு சேகரித்தல்**

வேட்டையாடுதல், மீன்பிடித்தல், காட்டில் கிடைக்கும் காய் கனிகள், கெர்டை வகைகள், தேன், பிற உண்ணும் பொருள்களைச் சேகரித்தல், மரப்பட்டைகள், நார், மரப்பொருள்கள் போன்றவற்றைச் சேகரித்து மற்ற மக்களுக்குக் கொடுத்து

அவர்களிடமிருந்து தேவையான பொருள்களைப்பெறுதல் ஆகியவை மூலம் உணவுத் தேவைகளை ஈட்டும் முறையே வேட்டையாடி உணவு சேகரித்தல் (hunting and food - gathering) முறையாகும். உணவுத் தேவைகளை ஈட்டும் முறைகளில் இதுவே மிகவும் எளிய முறையாகவும் முதன் முதலில் ஏற்பட்ட முறையாகவும் உள்ளது. உலகில் எங்கெங்கெல்லாம் இவ்வகைச் சமுதாயத்தினர் உள்ளனர் என்பதை இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் கண்டோம். இவ்வகைச் சமுதாயத்தினர் பல சிறு குழுக்களாகப் பிரிந்து தங்கள் உணவுத் தேவைகளை ஈட்டுகின்றனர். இவர்களின் வாழ்க்கை முறை சமுதாய முறை என்னும் அத்தியாயத்திலும் அரசியல் முறையும் சமூக ஒழுங்கும் என்னும் அத்தியாயத்திலும் இடம்பெறுவதால் அவற்றை மீண்டும் இங்கு விவரிப்பது இரட்டிப்புச் செய்தியாக அமைந்துவிடும்.

**நாடோடித் தன்மையும் ஆயர் வாழ்க்கையும்**

ஒரு குறிப்பிட்ட வாழிடத்தைக் கொண்டு நிலையாக வாழாமல் பருவக் காலத்திற்கேற்பத் தொடர்ச்சியாக இடம் விட்டு இடம் சென்று வாழும் மக்களே நாடோடிகளாவர் (nomads). இவர்கள் இடம் பெயர்ந்து வாழும் முறை ஒரு முறைப்படுத்தப்பட்ட சுழற்சியாக இருக்கும். இதனாலேயே இவர்கள் இடம் பெயர்ந்து வாழ்பவர்கள் (migrated people) என்று குறிப்பிடப்படுவதில்லை. இடப்பெயர்ச்சி என்பது வாழிடத்தை மாற்றும் போது ஒரு முறையான சுழற்சி முறையைக் கொண்டிராது.

நாடோடிகள் என்னும் சொல் வேட்டையாடி உணவு சேகரிக்கும் நாடோடிகளையும் (nomadic hunters and gatherers), ஆயர் வாழ்க்கையை மேற்கொண்டுள்ள நாடோடிகளையும் (pastoral nomads), தட்டுமுட்டுச் சாமான்களைச் செப்பனிடுதலையும் வாணிகம் செய்தலையும் மேற்கொண்டுள்ள நாடோடிகளையும் (tinker and trader nomads) .

வேட்டையாடி உணவு சேகரிக்கும் நாடோடிகளின் வாழ்க்கை பலவாறு வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆப்பிரிக்காவிலுள்ள கலகாரிப் பாலைவனத்தில் வாழும் புஷ்மன் (Bushmen) மக்களைப் போன்ற பல இனக்குழுவினர் தினந்தோறும் இடம்

விட்டு இடம் சென்று வாழ்பவர்களாக உள்ளனர். அந்தமான் ஓங்கே (Onge) பழங்குடியினர் போன்ற சிலகுடியினர் நீண்ட இடைவெளி கொண்டு இடம் பெயர்ந்து வேட்டையாடி உணவு சேகரிக்கின்றனர். கேரளத்தில் நிலாம்பூர் பள்ளத்தாக்குகளில் வாழும் சோளநாயக்கப் பழங்குடிகளும் பருவக் காலத்திற்கேற்ப இடம்பெயர்ந்து உணவு சேகரிக்கின்றனர். தமிழகப் பகுதியில் வாழும் நரிக்குறவப் பழங்குடியினர் தினந்தோறும் இடம்விட்டு இடம் சென்று பொருளீட்டுகின்றனர். மேற்கூறிய பழங்குடியினர் அனைவருமே பல்வேறு இடங்களுக்குச் சென்று கொண்டேயிருந்தாலும் அவர்கள் மீண்டும் பழைய இடத்திற்கு வந்து சேருவர். அதோடு அடுத்தடுத்த ஆண்டுகளிலும் ஏறக்குறைய பழைய முறையிலேயே பல இடங்களில் சுற்றித் திரிந்து மீண்டும் தொடங்கிய இடத்திற்கே வந்து சேருவர். வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடிகள் பெரும்பாலும் தனித்தனியான சிறு குழுக்களாகப் (isolated bands) பிரிந்து செல்வர். அவர்களைச் சுற்றியுள்ள காட்டுப் பகுதிகளில் எங்கெங்கு நீர்க்குட்டைகள் உள்ளன, என்னென்ன பரவகைகள், விலங்கினங்கள் உள்ளன என்பதை அறிந்திருப்பர்.

ஆயர் வாழ்க்கை மேற்கொள்ளும் நாடோடிகள் கால்நடை வளர்த்தலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். வாழுமிடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் கால்நடைகளை வளர்க்க வேண்டிய நிலை இவர்களுக்கு உள்ளதால் பருவ காலங்களுக்கேற்பவோ சீரவெளி கொண்டே இடம் விட் அரேபியக் வளர்ப்பேள்றனர். ஆப்பிரிக்க அயர்களும் அரேபியக் கால்நடை வளர்ப்போரும் கால்நடைகள் வளர்த்தலை மையமாகக் கொண்டே வாழ்கின்றனர். தோடர்கள், ஆப்பிரிக்கப் பழங்குடிகள், திபேத்துப் பழங்குடிகள் இவ்வகைக்கு மேலும் சில எடுத்துக்காட்டுகளாவர்.

ஆயர் நாடோடிகள் கால்நடைகளை வளர்த்தலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டிருப்பினும் சிலர் குறைந்த அளவில் வேட்டையாடி உணவு சேகரித்தலையோ, வணிகம் செய்தலையோ மேற்கொள்கின்றனர். தென்மேற்கு ஆசியப் பகுதிகளிலும் வடக்கு ஆப்பிரிக்காவிலும் வாழும் சிலநாடோடிகள் கால்நடை வளர்க்கும் தொழிலோடு பிறதொழில்களையும் செய்கின்றனர்.

சில நாடோடிகள் மேற்கூறிய தொழில்களில் ஏதோ ஒன்றை முதன்மையாகக் கொண்டுள்ளதுடன் சில துணைத் தொழில்களையும் செய்ய முற்படுகின்றனர். குறிப்பாக, மழைக் காலங்களில் குறைந்த அளவில் வேளாண்மை செய்யும் போது இவர்கள் ஓரிடம் தங்கி வேளாண் பணிகளைக் கவனித்துவிட்டு மீண்டும் நாடோடி வாழ்வில் ஈடுபடுகின்றனர். இவ்வகையான மக்கள் நாடோடி வாழ்வில் முழுமையாக ஈடுபடாததால் இவர்கள் அரை நாடோடியினர் (semi- nomads) எனக் கூறப்படுவர். இவர்களின் வாழ்க்கைமுறை வேளாண் தொழிலோடு இணைந்த ஆயர் வாழ்க்கை (transhumance) என்று கூறப்படும். சில ஆயர்குடி நாடோடியினர் தோட்டப் பயிர்களை மிகுதியாக விளைவிப்பவர்களாக உள்ளதால் மானிடவியலார் இவர்களைத் தோட்டப் பயிரிடுவோர் (horticulturists) எனக் கூறுவர். நிலையான வேளாண் தொழில் செய்யும் சமுதாயத்தினரிடமிருந்து இவ்வகை மக்களைத் தனிமைப்படுத்தும் பொருட்டு இவ்வாறு வகைப்பாடு செய்வர்.

இருபதாம் நூற்றாண்டிலிருந்தே முழுமையான நாடோடித் தன்மை வெகுவாகக் குறைந்து வருகிறது. இதற்குப் பொருளாதார, அரசியல் மாற்றங்களும் தொழில்துறை வளர்ச்சிகளும் காரணமாகும்.

**வேளாண் முறை**

மானிடவியலார் வேளாண் முறையைத் தோட்டப் பயிர் வேளாண்மை (horticulture) என்றும், வேளாண்மை (agriculture) என்றும் இருவகைப்படுத்துவர். தோட்டப் பயிர்கள் பெரும்பாலும் கிளந்த எளிய கொண்டு படுவதாகும். உழுது பதிரிடாமல் எளிய கருவிகளைக் கொண்டு நிலத்தைக் கொத்தித் தோட்டப் பயிர்களை விளைவிக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் தோண்டுகழி (digging - stick) போன்ற எளிய கருவிகளை முதன்மையான கருவிகளாகப் பயன்படுத்துவர் தோட்டப் பயிர் செய்யும் குடியினர் அதனை ஒரு முழு நேரத் தொழிலாகக் கொள்ளாமல் ஒரு துணைத் தொழிலாகவே செய்கின்றனர். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இன்று தோட்டப் பயிர் விளைவிக்கும் குடியினர் உள்ளனர்.

வேளாண் முறை என்பது உழும் கருவிகளைக் கொண்டு பெரும்பரப்பில் பயிர் வகைகளை விளைவிப்பதாகும். இன்றைய நவீன சமநில வேளாண் முறை தொடக்கத்தில் காட்டெரிப்பு வேளாண் முறையாக (slash and burn cultivation) இருந்து வளர்ச்சி பெற்றதாகும். இம்முறையை இன்றும் பல பழங்குடிகள் செய்து வருகின்றனர். இவ்வகை வேளாண்மையில் காட்டுப் பகுதியில் வாழும் பழங்குடியினர்அவர்களின் குடியிருப்புக்கருகில் ஓர் இடத்தைத் தேர்வு செய்து அங்குள்ள காட்டினை அழித்து வெட்டிய மரங்களைத் தீயிட்டுக் கொளுத்துவர். இவ்வாறு கொளுத்துவதால் கிடைக்கும் சாம்பல் நிலத்திற்கு உரமாக அமைந்து நல்ல விளைச்சலைத் தரும் என நம்புகின்றனர். இவ்வாறு தயார் செய்யப்படும் நிலத்தில் மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரை பயிரிடுவர். அதன்பின் வேறொரு புதிய இடத்தைத் தேர்வு செய்து மீண்டும் பழைய படியே காட்டை அழித்து அதனை எரித்து அங்குப் பயிரிடுவர். இவ்வாறு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்விட்டு இடம் பெயர்ந்து பயிரிடுவதால் இவ்வகை வேளாண்மை இடம் பெயரும் வேளாண்மை (shifting cultivation) எனப்படும். இது "சுவிடன் வேளாண்மை" (swidden cultivation) என்றும் கூறப்படும்.

இந்தியப் பழங்குடிகளும் இவ்வகை வேளாண்மையைப் பெருமளவு செய்தனர். இப்போது இது குறைந்துவிட்டது. வடகிழக்கு மாநிலங்களில் வாழும் நாகர்கள் இவ்வகை வேளாண்மையை "ஜீம்" (jhum) என்றும், மத்தியப் பிரதேசமரியர்கள் பெண்டா (penda) என்றும். ஒரிசாவில் வாழும் கந்தர்கள் (khonds), "பொடு" (podu) என்றும் பெய்கர்கள் "பீவார்" என்றும் குறிப்பிடுகின்றனர். வட ஒரிசாவில் வாழும் பூயியா பழங்குடியினர் காட்டிலுள்ள அனைத்து மரங்களையும் வெட்டி எரித்துப் பயிர் செய்யும்போது அதனைத் தகி" (dahi) எனவும், புதர்கள், சிறுசெடிகள் ஆகியவற்றை மட்டும் எரித்துப் பயிர் செய்யும்போது அதனைக் "கொமன்" (Koman) எனவும் குறிப்பிடுகின்றனர்.! இன்று அரசு காட்டுவள மேம்பாட்டை வளப்படுத்த இவ்வகை வேளாண்மையை 1952 - இல் ஒரு சட்டமியற்றித் தடை செய்தது. சட்டத்தின் மூலம்

இதனை உடனே முழுமையாகக் கட்டுப்படுத்த இயலவில்லை. காலப்போக்கில் இது குறைந்து வருகிறது.

இடம்பெயரும் வேளாண் முறை இந்தியாவில் மட்டுமல்லாமல் தெற்கு யுக்காடன், ஆஸ்திரேலியா, நியூகினி, பர்மா, சுமத்ரா, போர்னியோ, அமெரிக்கா, பசிபிக் கடற்பகுதி, ஆப்பிரிக்காவில் சில பகுதிகள் போன்ற இடங்களில் உள்ள பழங்குடியினரும் செய்கின்றனர். நியூகினியில் வாழும் செம்பகாமாரிங் (Tsembaga Maring) பழங்குடியினர் காடுகளை அழித்து வள்ளிக்கிழங்கு, சேனை, கரும்பு போன்ற பயிர்களை விளைவிக்கின்றனர். அமெரிக்காவில் வாழும் எனமாமோ (Yanamamo) பழங்குடியினர் இடம்பெயரும் வேளாண்மை மூலம் வாழையைப் பயிர் செய்கின்றனர்

காட்டெரிப்பு வேளாண்மையை விடுத்து இன்று சமநிலத்தில் உழவு வேளாண்மை (plough cultivation) செய்யும் பழங்குடிகளும் உள்ளனர். முண்டர், ஒரவன் போன்றோர் சமநில உழவு வேளாண்மையைச் சிறப்பாகச் செய்கின்றனர். ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கோயர்கள் மலைச் சரிவுகளில் அணைகள் அமைத்து நீர்பாசனத்தைச் சிறந்த முறையில் நிருவகிக்கும் திறன் பெற்றுள்ளதால் இவர்களைச் சிறந்த நீரியல் பொறியியலார் என்று மானிடவியலார் சிறப்பித்துக் கூறுவர். இவ்வாறே பிலிப்பைன்சில் உயர்ந்த மலைச் சரிவுகளில் பல மைல்கள் தலைக் குத்தூசி வடிவில் வளைந்து வளைந்து கால்வாய்களை அமைத்துப் பயிர் செய்யும் பழங்குடியினரும் உள்ளனர்.

**பரிமாற்றமும் பகிர்ந்து கொள்ளுதலும்**

அனைத்துச் சமுதாயங்களிலும் மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுப் பொருள்களையும் செய்யும் பணிகளையும் (services) பரிமாறிக் கொள்கின்றனர். இவை பரிமாற்றம் (reciprocity), மறுபங்கீட்டு முறை (redistribution system), சந்தை அல்லது அங்காடி முறை (market system) ஆகிய மூன்று நிலைகளில் நடைபெறுகின்றன. சமுதாயத்தின் அமைப்பிற் கேற்பவும், உற்பத்தி முறைக்கேற்பவும், நுகர்வுத் தேவைக் கேற்பவும், அரசியல் முறைக்கேற்பவும் இம்மூன்று

முறைகளுள் ஏதாவதொன்று முதன்மையாக ஒவ்வொரு சமுதாயத்திலும் தெயல்படுகிறது. ஒவ்வொரு முறை குறித்தும் இங்குக் காண்போம்.

**பரிமாற்றம்**

பரிமாற்றம் என்பது சமதகுதி உள்ளோர் பணத்தைப் பயன்படுத்தாமல் ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளைப் பெறுவதைக் குறிக்கும். இதில் மூன்றுவகைப் பரிமாற்றம் இடம்பெறுகிறது. அவை: பொதுப்படியான பரிமாற்றம் (generalized reciprocity), சமச்சீர் பரிமாற்றம் (balanced reciprocity), எதிர்மறைப் பரிமாற்றம் (negative reciprocity). இவற்றிற்குள்ள வேறுபாடு பரிமாறிக் கொள்ளும் நபர்களின் சமூக இடைவெளியைப் (social distance) பொறுத்து அமைகிறது. பொதுப்படியானப் பரிமாற்றம் கடப்பாடு எண்ணம் மிகுந்த நெருங்கிய உறவுக் கூட்டத்திற்குள் நிகழ்கிறது. சமச்சீர் பரிமாற்றம் நண்பர்கள் வட்டத்திலும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்ட இரு வேறு பழங்குடிகளுக்குள்ளும் நிகழ்கிறது. எதிர்மறைப் பரிமாற்றம் முன்பின் தெரியாத புதியவர்களுடனும் பகைமை உணர்ச்சியுடன் வாழும் இருவேறு குழுக்களிடையேயும் நிகழ்கிறது என்கிறார் ஷாலின்ஸ்.

**பொதுப்படியான பரிமாற்றம்**

இவ்வகைப் பரிமாற்றத்தில் உறவினர்கள் மற்றவர்களுக்குப் பொருள்களைக் கொடுக்கும்போது கணக்கு வைத்துக் கொண்டோ உடனே அதற்கு ஈடான வேறு பொருள் கிடைக்க வேண்டுமென்றோ எண்ணுவதில்லை. இவ்வகைப் பரிமாற்றம் தன்னலம்சாராத நிலையில் அமைவதால் பரிமாறிக் கொள்வோருக்குள் மன அளவில் அவர்கள் ஒருவருக்கொருவர் கடப்பாடு மிக்கவர்கள் என்பது புலனாகிறது. தமிழ்ப் பண்பாட்டில் திருமணத்தின்போது மணமக்களுக்கு நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் அன்பளிப்புகளைத் தருகின்றனர். இது அன்பின் அடிப்படையில் அமைகிறது. இதற்கு ஈடான ஒரு பொருள் உடன் கிடைக்கும் என எண்ணிச் செய்வதில்லை. இவ்வகை அன்பளிப்பு மிகத் தொடக்கக் காலத்தில் நிலவிய ஒருவகை

உதவி முறையிலிருந்து தோன்றியதாகும். இன்றும் பல பழங்குடிகளிடம் பூப்பு நீராட்டு விழா, திருமணம், இறப்பு போன்ற இன்றியமையாத நிகழ்ச்சிகளின் போது நிகழ்ச்சியை நடத்தும் குடும்பம் இன்னலுக்குள்ளாகக் கூடாது என எண்ணி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வரும் மிக நெருங்கிய உறவினர்கள் அவரவரிடம் உள்ள பொருள்களைக் கொண்டு வந்து கொடுப்பர். இதனடிப்படை யிலேயே திருமணம் செய்யும் குடும்பத்தின் பொருட் செலவினை ஓரளவாசிலும் ஈடுகட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் செனனர்கள் அன்பளிப்பு வழங்க முற்பட்டனர். அது நாளடைவில் மாறி அன்பளிப்புப் பரிமாற்றமாக (Gift Exchange) மாறியுள்ளது. இன்றைய நிலையில் இது பொதுப்படியான மரிமாற்றமாக இல்லாமல் சமச்சீர் பரிமாற்றமாக மாறியுள்ளது. ஒருவர் திருமணத்தின்போது அன்பளிப்பு அவர் தம் வீட்டில் நடக்கும் பிற நிகழ்ச்சியின்பேரும். வந்து சேர வேண்டும் என எண்ணுகிறார்.

வேட்டையாடி உணவு சேகரிக்கும் சமுதாயங்களில் பொதுப்படியானப் பரிமாற்றம் பெரும்பாலும் உணவுப் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதாக அமைகிறது, வேட்டைக்குச் செல்லும் குழுவினர் வேட்டையாடிப் பெற்ற இறைச்சியை அவர்களின் உறவினர்களுடன் சமமாகப் பகிர்ந்து கொள்வர் அல்லது உறவு நெருக்கத்தின் அடிப்படையில் பகிர்ந்துகொள்வர். மலாயாவில் வாழும் சிமாய் (Semai) பழங்குடியின வேட்டைக் குழுவானது பல நாட்கள் திரிந்து இறுதியாகப் பெரிய காட்டுப் பன்றியை வேட்டையாடும், அதனைக் குடியிருப்புப் பகுதிக்குக் கொண்டுவந்தவுடனேயே அக்குடியிருப்பைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுகூடுவர். கிடைத்த இறைச்சியை இருவர் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுப்பர். ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் இறைச்சி இரு பருவ ஆண்கள் மனநிறைவுடன் உண்ணுமளவிற்கு இருக்கும். ஒவ்வொரு கூறிலும் பன்றியின் அனைத்து உறுப்புகளும் இருக்குமாறு பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. கலகாரிப் பாலைவனப் பகுதிகளில் வாழும் குங்புஷ்மன் (Kung Bushmen), வடதுருவத்தில் வாழும் எஸ்கிமோக்கள் ஆகியோரும் இவ்வகைப் பரிமாற்ற முறையைக் கொண்டுள்ளனர். சில பழங்குடிகளுள்

வேட்டையாடியோருக்கெனச் சில பகுதிகள் ஒதுக்கிவிட்டு மற்றதைப் பகிர்ந்து கொடுப்பர்.

வேட்டையாடி உணவு சேகரிக்கும் சமுதாயம் என்பது நேருக்கு நேர் (face-to-face) உறவுடைய உறுப்பினர்களைக் கொண்டதாகும். ஒரு குடியிருப்பில் வாழ்வோர் அனைவரும் ஒரேகுலம், கால்வழி அல்லது கூட்ட அமைப்பில் மிக நெருங்கிய உறவினர்களாக இருப்பர். இதனால் ஒருவரை ஒதுக்கிவிட்டு மற்றவர்கள் வாழமுடியாது என்பதால் அனைவரும் கிடைக்கும் பொருள்களைப் பரிமாறிக் கொள்வர். இவ்வகைச் சமுதாயத்தில் செயல்முறையாக (adaptive mechanism) உள்ளது. இவர்களின் முதாயத்தில் உள்ள விதிமுறைகள் நிலையானதாக உள்ளது் அனைவராலும் பின்பற்றக்கூடியதாக உள்ளது. இதனால் ஒருவர் கொடுக்கும் பொருள் ஏதோ ஒரு நாள் வேறொரு பொருளாக அவருக்குக் கிடைக்குமென்பது உறுதி. இதனால் ஒருவர் அவர் வேட்டையாடிய இறைச்சி முழுவதையும் வேட்டைக்குச் சேன்றவனுடைய குடும்பத்தினர் ஒரே நேரத்தில் உண்ண முடியாது. இரண்டாவது, மீதமுள்ள இறைச்சியைப் பக்குவப்படுத்தி வருங்காலத்தில் பயன்படுத்தும் முறை அவர்களிடம் இல்லை. மூன்றாவது, பதப்படுத்தும்முறை தெரியாதவர்களாக உள்ளதால் வீணாகப் போகும் இறைச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதால் அவர்களிடமிருந்தும் ஒருநாள் இறைச்சியைப் பெற்று உண்ணலாம் என எண்ணுகின்றனர். இதனால் ஒருவர் உடல்நலக் குறைவு அல்லது வேறு காரணங்களால் வேட்டைக்குச் செல்லாத காலங்களிலும் அவருக்கு உணவு கிடைக்கிறது.

**சமச்சீர் பரிமாற்றம்**

இவ்வகைப் பரிமாற்றத்தில் ஒரு பொருள் கொடுத்தால் அதற்கு ஈடான பொருள் குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு நிலவுகிறது. இவ்வகைப் பரிமாற்றம் பெரும்பாலும் அன்பளிப்புப் பரிமாற்றம் (gift exchange) எனப்படும். சில சமயங்களில் செய்யும் பணியும் பரிமாறிக் கொள்ளப்படலாம். தமிழக ஊரகப் பகுதிகளில் இன்றும் மாத்துஏர் என்ற முறை உள்ளது. இது சமச்சீர் பரிமாற்றத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒரு குடும்பத்தின் வேளாண் பணியில்

சில நேரங்களில் மிகவும் நெருக்கடியான உழவுப்பணி ஏற்படும் அவ்வாறான காலத்தில் அக்குடும்பத்துக்கு வேண்டியவர் தனக்கு வேலையில்லாமல் இருந்தால் தன்னிடம் உள்ள எருதுகளையும் கலப்பையும் கொண்டுவந்து அவர்களோட நிலத்தில் உழுவார். ஒவ்வொரு நாளும் உழும் உழவு “ஒரு ஏர்“ எனப்படும். இவ்வாறு பணி அளவிற்கேற்ப “பல ஏர்“ உழுது வைப்பார். பின்னர் இவருக்குத் தேவைப்படும் காலத்தில் இவர் உழுத ஏர் கணக்குப்படி அவருக்கு உழவு செய்து கொடுக்கப்படும். இவ்வகை மாத்து ஏர் உழவு முறை பெரும்பாலும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்களிடம் மிகுதியாக நிகழ்கிறது. மாற்று ஏர் உழவு முறையில் உழவு செய்ய வருபவர் அவருடைய காலை உணவு அவருடைய வீட்டிலிருந்து வந்தால் அதற்கு ஈடுசெய்வோரும் அவர் உழும் நாளில் தம் வீட்டிலிருந்தே உணவு கொண்டு வரச் சொல்வார். அவ்வாறில்லாமல் சொற்று ஏர்க்காரருக்கு நிலத்துக்காரர் உணவு கொடுத்தால் ஈடுசெய்யும் போதும் அவ்வாறான முறையே பின்பற்றப்படுகிறது.

**குலா பரிமாற்றம்**

இதுவரை மானிடவியலார் கண்டறிந்த அனைத்து வகையான பரிமத்துவமுறைகளைக் காட்டிலும் ட்ரோபிரியாண்டுத் தீவுப் பழங்குடிகளிடம் மாலினோஸ்கி கண்டறிந்த குலா பரிமாற்றமே (kula exchange) மிகவும் புகழ் பெற்றதாக விளங்குகிறது. ட்ரோபிரியாண்டுத் தீவுக் கூட்டத்தில் சிதறிக்கிடக்கும் பல தீவுகள் உள்ளன. இத்தீவுகளில் பல்வேறு மொழி பேசும் பல பழங்குடிகள் வாழ்கிறார்கள். இவர்கள் அனைவருக்குமிடையே நிலவும் பரிமாற்றமே “குலா பரிமாற்றம்“ எனப்படும். இதில் இருவகையான மதிப்புமிக்க பொருள்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. ஒன்று: சிவப்பு கிளிஞ்சல்களால் செய்யப்பட்ட கழுத்தணிகள் (neclaces). இது செல்லவா (soulova) எனக் கூறப்படுகிறது. இரண்டு வெள்ளைக் சிளிஞ்சல்களால் செய்யப்பட்ட கைக் காப்புகள் (arm bands). இது முவாளி (mwali) எனக் கூறப்படுகிறது. இவற்றுள் கழுத்தணிகள் வலத்திசையிலும் (clockwise) கைக் காப்புகள் எதிர்த்திசையிலும் (anti-clockwise) பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

இவற்றுடன் உணவுப் பொருள்களும் பிற பொருள்களும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

ஒருவர்தம் பொருளைப் பரிமாறிக் கொள்ள பல்வேறு தீவுகளில் உள்ளோரைக் கூட்டாளிகளாகத் திடீரென ஏற்படுத்திக் கொள்ள முடியாது. நீண்ட காலத் தொழில் கூட்டாளிகளாக இருப்பதையே விரும்புவதால் ஒருவர் தம் தொழில் கூட்டாளிகளை மரபு வழியில் பெறுகின்றனர். பழங்குடித் தலைவனுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டாளிகள் இருப்பர். சாதாரண மனிதர்கள் குறைந்த எண்ணிக்கையுடைய கூட்டாளிகளையே வைத்திருப்பர். இதனால் குலா பரிமாற்றம் கூட்டாகச் சேர்ந்து பரிமாறிக் கொள்ளும் ஒரு முறையல்ல. ஒவ்வொருவரும் மற்ற தீவுகளில் உள்ளோருடன் நட்புறவை ஏற்படுத்தி அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் கூட்டாளியாகவே இருக்கும் வண்ணம் தொழில் உறவு வைத்துக் கொள்வார்கள்.

ஒவ்வொரு தீவிலும் கிளிஞ்சல்கள் பல கிடைக்கின்றன. இவற்றால் செய்யப்படும் கழுத்தணிகளும் கைக் காப்புகளும் பல வகைகளாக அமைகின்றன. இதனால் ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப்பு உள்ளது. ஒருவன் தன்னிடமுள்ள மதிப்புயர்ந்த பொருளைத் தன் தொழில் கூட்டாளிக்குக் கொண்டு சென்று கொடுப்பதன் மூலம் அவனுக்கு அதற்கு ஈடான மதிப்புமிக்கப் பொருள் கிடைப்பதற்காக ஒரு வலுவான உத்திரவாதத்தை ஏற்படுத்திக் கொள்கிறான். ஒருவன் தன்னுடைய தொழில் கூட்டாளி தன்மேல் செயல்படவும் வேண்டி கூட்டாளியைச் சந்தித்தவுடன் நறுமணப் பொருள்களாலும் தைலங்களாலும் வாசனையூட்டுவான். பிணப் இருவரும் வாயைச் சிவப்பாக்கிக் கொள்வார்களின் பின்னர். படர்தாமரை போன்ற வடுக்களைச் சுத்தம் செய்து தோலை வழவழப்பாக்கிக் கொள்வார்கள். இவ்வாறு இருசாராரும் செய்து கொள்வதற்குக் காரணம் அவர்களின் தொழில் உறவும் நட்பும் நெடுங்காலத்திற்கு நிலைபெறுவதற்காக ஆகும்.

குலா பரிமாற்றப் பயணம் அவரவர் மீன்பிடிக்கச் செல்லும் தோணிகளில் மேற்கொள்ளப்படுகிறது. தயார் செய்யப்பட்ட உணவுப் பொருள்களையும் பரிசுப் பொருள்களையும் (கழுத்தணி அல்லது கைக்காப்பு) பிற பொருள்களையும் ஒன்றாகச்

சேர்க்கின்றனர். படகில் ஏற்றுவதற்கு முன்னர் படகின் சொந்தக் காரனும் அவனுடைய மனைவியும். சில மந்திர உச்சரிப்புகளைச் செய்கின்றனர். எடுத்துச் செல்லும் பொருள்களை மூடப் பயன்படுத்தும் பாய் மதிப்புமிக்க பெரும் பொருள்களுடன் மூடிவர வேண்டுமென வசியம் செய்யப்படுகிறது. கணவனின் பயணம் பெரும் வெற்றியாக அமைய வேண்டுமென மனைவி வசியம் செய்கிறாள். தன் கணவனின் வருகையைப் பற்றியும் அவன் கொண்டு செல்லும் பொருள்களைப் பற்றியும் தொழில் கூட்டாளி கனவுகாண வேண்டுமென்றும் கூட்டாளி பரிமாற்றத்தில் ஊக்கமாக ஈடுபட வேண்டுமென்றும் வசியம் செய்கிறார். எல்லா ஏற்பாடுகளும் முடிந்தவுடன் கடற்காற்று பயணத்திற்கு ஏற்றதாக இருந்தாலும் அன்றைய பொழுதை பெண்கள், குழந்தைகள், நாய்கள், அன்றாட நடவடிக்கைகள் தொடர்பில்லாத, மனிதன் குடியேறாத ஒரு பகுதியில் கழிக்க வேண்டுமென்ற மரபு உள்ளது. அப்போது ஒரு சடங்கினையும் செய்கின்றனர்.

ட்ரோபிரியாண்டுப் பழங்குடிகளுள் பெரும்பாலோர் சிறந்த மாலுமிகள் பயணத்தில் ஒவ்வொரு இரவிலும் பவழப் பாறைகளில் இறங்கி விடுகின்றனர். நீண்ட அமைதிக் காலங்களில் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. பயணம் தொடங்கும் போது பல காற்று வசியங்களைச் செய்கின்றனர். தாழை இலைகளால் செய்யப்பட்ட அவர்களின் கப்பற் பாய்களை மணந்து கொள்ளுமாறு கடற்காற்றைக் கேட்டுக் கொள்கின்றனர். தன் கணவனை யாரும் திருடிப்போகாமல் இருக்கவும். தவறு செய்யும் குழந்தைகளை (படகில் செல்வோர்) அணைக்கவும், காற்றைப் பெண்பாலாகக் கொண்டு வேண்டுகின்றனர். வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு செயலைப் போலவே காற்றையும் மந்திரத்திலிருந்து நம்புகின்றனர். போய்ச் சேர வேண்டிய தீவில் நம்புகின்றஅலங்காரம் செய்து கொள்வார்கள் பல மந்திர உச்சரிப்புகளைக் கூறிப் பயண வெற்றிக்காகத் தங்களிடம் ஆற்றரை வரவழைத்துக் கொள்வார்கள். உண்டானதாக

ட்ரோபிரியாண்டுப் பழங்குடிகள் பரிமாறிக் கொள்ளும் மதிப்புமிக்கக் கழுத்தணிகளையும் கைக்காப்புகளையும் நீண்ட நாட்கள் அவர்களிடம் வைத்துக்

கொள்ள முடியாது. குறிப்பிட்ட சுற்று வழியில் அவை ஒருவரிடமிருந்து தொழிற் கூட்டாளிகள் பல மூலம் வேறொருவருக்கு மாறிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு பொருள்கள் மாறிக் கொண்டே செல்வதால் கழுத்தணிகளுக்கும் கைக்காப்புகளுக்கும் நீண்ட வரலாறு அமைவதுண்டு. அவ்வளையம் பல ஆயிரம் மைல்களைச் சுற்றியதாக இருக்கும் பலர் கை மாறியதாக இருக்கும் பலர் குடும்ப நிகழ்ச்சிகளில் பயன்பட்டதாக இருக்கும் பல சிறப்புச் சடங்குகளில் பங்கு பெற்றதாக இருக்கும் இவை போன்ற இன்னும் பல பெருமைகளைப் பெற்றதாக இருக்கும். பொதுவாக ஒரு பொருள் அது கிளம்பிய இடத்திற்கு மீண்டும் வந்து சேர இரண்டிலிருந்து பத்தாண்டுகள் வரை ஆகலாம். குலா பரிமாற்றத்தில் பொருள் மதிப்புப் பற்றிப் பேசுவதும், பேரம் பேசுவதும் கிடையா. ஒருவர் கழுத்தணியையோ கைக் காப்பையோ தன் தொழிற் கூட்டாளிக்குக் கொடுத்தவுடன் உடனேயே அவரிடமிருந்து பொருளை எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அவருக்கு அவ்வகைப் பொருள் கண்டிப்பாக வந்து சேரும். இவ்வகைப் பரிமாற்றம் சிதறிக் கிடக்கும் தீவுக் கூட்டத்தில் ஒரு சங்கிலித் தொடராய் மேற்கொள்ளப்படுவதால் இது “குலா வளையப் பரிமாற்றம்“ (மரடய சபைெ நஒஉாயபெந) எனவும் கூறப்படும்.

**குடிஊழிய முறை**

இந்திய ஊரகச் சமுதாயம் சாதி அடிப்படையிலானது. இதில் ஒவ்வொரு சாதியின் தொழிலும், தூய்மை (purity), தீட்டு (pollution) போன்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் சமுதாயப் படிநிலையில் ஒரு குறிப்பிட்ட படியில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாதியும் ஒரு மரபு நிலையில் இருந்தாலும் அனைத்துச் சாதிகளும் தொழில் உறவு கொண்டு கூட்டாகச் செயல்படுகின்றன. குறிப்பிட்ட ஒவ்வொரு சாதியும் ஒரு தொழிலில் தேர்ச்சி பெற்று விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, துணி வெளுத்தல், இரும்பு வேலை, மரவேலை, தோல் வேலை, மயிர் வெட்டுதல், வேளாண் பணி, புரோகிதப் பணி போங்கு தபணிகளில் தனிப்பட்ட சாதியினர் தேர்ச்சி பயற்றுவிளங்குதால் அச்சாதியினர் தங்கள் தொழிலைமற்ற சாதியினருக்கு ஊழியமாகச் செய்கிறார்கள். அவ்வூழியத்தைப் பெற்ற சாதியினர் அவர்களுக்குக் கைம்மாறாக உணவுப் பொருள்கள், பணம், துணி வகைகள், இன்னும் பிற உதவிகளை

ஆண்டுதோறும் செய்வார்கள். இவ்வகையில் ஒவ்வொரு சாதியும் தங்களுக்குத் தெரிந்த தொழிலை மற்றவருக்கு ஊழியமாகச் செய்து கொள்ளும் பரிமாற்ற தொழில் உறவே "குடிஊழிய முறை" (jajmani system) எனப்படும்.

குடிஊழிய முறையில் ஊழியம் செய்வோர் காமின்கள் (kamins) எனப்படுவர். இதன் பொருள் பிரஜைகள் அல்லது குடிமக்கள் என்பதாகும். ஊழியத்தைப் பெற்றுக்கொண்டு ஊழியம் செய்தோரை ஆதரிப்பவர்கள் ஜஜ்மான் (Jajman) எனப்படுவர். இதன் பொருள் "எசமான்" அல்லது "ஆண்டை" என்பதாகும். குடிஊழிய முறையில் ஜஜ்மான்களே முதன்மையிடம் பெற்றுள்ளதால் இம்முறை "ஜஜ்மானிய முறை" என வழங்கப் பெறலாயிற்று. இந்தியச் சமுதாயத்தில் இவ்வகைத் தொழிலுறவு முறையை மானிடவியலார் முதன் முதலில் வடஇந்தியாவில் ஆராய்ந்ததால் அங்கு வழங்கப்பெற்ற ஜஜ்மான், காமின் போன்ற சொற்களை அப்படியே ஏற்றுக்கொண்டு இம்முறையை "ஜஜ்மானிய முறை எனக் குறிப்பிட்டனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டை யார், குடிமக்கள் யார் என்பது வேறுபட்டதாக இருக்கும். பெரும்பகுதி நிலவுடைமை பெற்ற சாதியினரே ஆண்டை நிலையை அனுபவிப்பர். இவர்கள் அவ்வூரில் மிகுந்த செல்வாக்காகவும் ஆதிக்கச் சாதியாகவும் விளங்குவர். நிலவுடைமை மூலம் அவர்கள் பொருளாதாரத் துறையில் ஓங்கியவர்களாக இருப்பதுடன் அப்பலத்தைப் பயன்படுத்தி கிராமப் பஞ்சாயத்து, அரசியல் ஆகியவற்றில் செல்வாக்காகவும் ஆதிக்கம் மிகுந்தவர்களாகவும் இருப்பர். இந்நிலையில் மற்ற சாதியினர் அவர்களுக்குக் குடி மக்களாக இருந்து ஊழியம் செய்கின்றனர். ஊழியம் செய்யும் சாதிப் பணியாளர்களுள் வேளாண் பணிகளைச் செய்யும் பணியாளர்கள் முதன்மைச் சாதிப் பணியாளர்களாகக் கருதப்படுவர். இதனால் மற்றவர்களின் ஊழியம் குறைத்து மதிப்பிடுவதாகாது. ஆண்டைக்கு ஒவ்வொரு சாதியினரும் முக்கியமானவர்களே. குடி ஊழிய முறையில் ஆண்டை சாதிப் பணியாளர் (ஊழியம் செய்யும் சாதியினர்) உறவு ஒரு நல்லிணக்க அடிப்படையில் அமைகிறது. ஆண்டைகள் ஊழியம் செய்வோருக்குத் தினம் தினம் கூலி. தருவதில்லை. பல மாதங்களுக்கு ஒரு முறை படியாக வழங்குவர். வேளாண் தொழில்

செய்யும் சாதிப் பணியாளருக்குத் தன் நிலத்தில் சிறு பகுதியை அவனுக்குப் பயிரிட ஒதுக்குவர். சாதிப் பணியாளர்கள் ஆண்டைகளின் எருதுகளைக் கொண்டு உழுதும், அவரின் மோட்டாரைக் கொண்டு நீர் பாய்ச்சியும் அவர்களுக்கு அவரின் பத்தில் விளைவித்துக் லவாள்க வழங்ககை, உரம். உரிய வையும் சில ஆண்டைகள் இத்துடன் நிற்காமல் பணியாளர்கள் வீடு கட்டிக் கெள்ள்ள இடமும் கொடுப்பர். செய்கட் அவதற்கும் பழுது கொள்ற்கும் வேண்டிய உதவிகளைச் செய்வர். ஆண்டைகள் தங்கள் சாதிப் பணியாளருக்கு ஒவ்வொரு அறுவடையின்போதும் களத்தன் ஒரு பகுதியை ஒதுக்குவர். வீட்டில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும், ஆண்டிற்கு ஒருமுறை முறைப்படியாகவும் பணியாளர்களுக்குத் துணிமணிகளும், பணமும், பிற அன்பளிப்புப் பொருள்களும் கொடுத்து மகிழ்விப்பார்கள். பணியாளர்களுக்கு வேண்டிய பிற உதவிகளையும் தயங்காமல் செய்வார்கள். அவர்களின் பிள்ளைகளின் படிப்பு, பூப்பு நீராட்டு விழா, திருமணம், வளைகாப்பு, இறப்பு போன்ற பல சடங்குகளின் போது தானியங்களும் பணமும் கொடுத்து உதவுவர். சுருக்கமாகக் கூறவேண்டுமானால் ஆண்டைகள் தத்தம் சாதிப் பணியாளருக்கு இயன்ற அளவு உதவிகளைச் செய்து அவனுக்குப் பாதுகாப்பாக இருப்பர்.

ஆண்டைகளின் தொழிலுறவு இவ்வாறிருக்க சாதிப் பணியாளர்களின் ஊழியம் அதற்கும் மேல் அமைகிறது. ஆண்டை வீட்டுக்குச் செய்ய வேண்டிய அவனது ஊழியத்தைச் செய்வதுடன் ஆண்டை வீட்டின் அனைத்து இன்ப துன்பங்களிலும் முதன்மைச் சாதிப் பணியாளன் பங்கு கொள்கிறான். பிள்ளையைப் பேருந்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு விடுதல், ஆண்டை வீட்டார் ஊருக்குச் செல்லும்போதும் திரும்பி வரும் போதும் சுமைகளை எடுத்துச் செல்லுதல், அடுப்புக்கு விறகு வெட்டிக் கொடுத்தல், நீர் இறைத்தல், கால்நடைகளைக் கவனித்தல், மாட்டுக் கொட்டகையைச் சுத்தம் செய்தல், விழா நிகழ்ச்சிகளின்போது பந்தல்போடுதல், முக்கிய செய்திகளை மற்ற ஊர்களுக்குச் சென்று சொல்லுதல் போன்ற எண்ணற்ற குடும்பப் பணிகளையும், வேளாண் பணிகளையும், கைவேலைகளையும் (எடுபிடி வேலைகள்) முதன்மைச் சாதிப்பணியாளர்கள் செய்வர். இவர்களது பணி இதோடு நின்றுவிடுவதில்லை. ஆண்டை ஈடுபடும் எந்த ஒரு விவகாரத்திலும் அவருக்கு உறுதுணையாக நிற்பர். ஆண்டை பிற

குடும்பங்களுடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டால் இவர்களும் ஆண்டைக்கு ஆதரவாக நின்று அக்குடும்பங்களுக்கு எதிரியாகச் செயல்படுவர். அவ்வாறே ஆண்டைகளும் தத்தம் சாதிப் பணியாளர்கள் விவகாரங்களிலும் உறுதுணையாய் இருப்பர்.

ஓர் ஆண்டை தன்னுடைய சாதிப் பணியாளர்களின் பணியில் நிறைவடையா விட்டால் அவர்களைப் பணி நீக்கம் செய்து வேறு பணியாளர்களை அவ்வளவு எளிதில் நியமிக்க முடியாது. அவ்வாறே பணியாளர்களும் அவர்களுடைய ஆண்டையின் கீழ்ப்பணிபுரிய விருப்பமில்லாமல் திடீரென விலகிவிட முடியாது. இவ்வாறான சிக்கல் ஏற்படும்போது ஆண்டை சாதியைச் சேர்ந்த மூத்தவர்களும் பேசி முடிவு செய்வர். னுடிஊழிய முறையில் ஒவ்வொரு சாதியும் செய்யும் ஊழியத்தைச் சொத்தாக்க் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக ஓர் ஊரைச் சேர்ந்த வண்ணான் அவன் ஊழியம் செய்யும் உரிமை பெற்ற ஆண்டைக் குடும்பங்கள் என்றும் அவனுக்கு மட்டுமே உரியது. அதே ஊரிலுள்ள வேறு வண்ணாரக் குடும்பங்கள் அக்குடும்பங்களுக்கு ஊழியம் செய்து பொருளீட்ட முடியாது. ஆகவே ஒவ்வொரு சாதிப் பணியாளரும் அவர்கள் செய்யும் ஊழிய உரிமையைச் சொத்தாகக் கருதுகின்றனர். ஒரு சாதிப் பணியாளன் தன் சொந்தக் காரணங்களால் வேறு ஊருக்குக் குடிபெயரும் போது அவன் உரிமம் பெற்ற ஊழியத்தை அதே சாதியைச் சேர்ந்த வேறு ஒருவனுக்கு விற்க அவனுக்கு உரிமை உண்டு என வட இந்தியாவில் ஆய்வு செய்த ஆஸ்கார் லூவி கூறுகிறார்.

குடிஊழிய முறை இன்று நவீனமயமாக்கத்தாலும், நகர மயமாக்கத்தாலும், தொழில்மயமாக்கத்தாலும், இடப்பெயர்வாலும், கல்வி வளர்ச்சியாலும், மரபுவழி பஞ்சாயத்து முறைமாறி கட்சி சார்புடைய பஞ்சாயத்து முறை ஏற்பட்டதாலும், மாறிவரும் சமுதாய முறைகளாலும், பணப் பொருளாதாரம் பெருகி வருவதாலும் பல பத்தாண்டுகளுக்கு முன் இருந்த வலுவான நிலையில் இன்று இல்லை. இது வேகமான மாற்றத்திற்கு இலக்காகியுள்ளது.

**நீலகிரி கூட்டுவாழ்க்கை**

நீலகிரி மலைத் தொடரில் வாழும் தோடர்கள், கோத்தர்கள், படகர்கள், குறும்பர்கள், இருளர்கள் ஆகியோர் அங்குள்ள சுற்றுச் சூழலுக்கேற்ப மிகவும் தகவமைந்து வாழ்கின்றனர். அவர்களுக்குள் நிலவும் கூட்டுவாழ்க்கை (symbiosis) அவர்களின் தேவைகளைத் தன்னிறைவு செய்கிறது. தோடர்கள் மலையின் மிக உயரமான பகுதிகளில் ஆயர்வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். கோத்தர்கள், தோடர்கள் வாழும் பகுதியைக் காட்டிலும் சற்று உயரம் குறைந்த பகுதியில் வாழ்கின்றனர். இவர்கள் தினை, சாமை போன்ற பயிர்களை விளைவிப்பதுடன், இரும்பு வேலை, கைவினைப் பொருள்கள் செய்தல், தோல்பொருள்கள் செய்தல், இசைக் கலைஞர்களாகப் பணிபுரிதல் போன்ற பல தொழில்களைக் செய்கின்றனர். கோத்தர்கள் வாழும் பகுதிக்குக் கீழுள்ள அடர்ந்த காட்டுப் பகுதிகளில் குறும்பர்களும் இருளர்களும், உணவு சேகரிக்கும் தொழிலைச் செய்கின்றனர். இடம்விட்டு இடம் பெயரும் வேளாண்மையும், நிலையான வேளாண்மையும் ஓரளவு செய்கின்றனர். இவ்விருவரின் வாழ்க்கை முறை ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருக்கிறது. குறும்பர்கள் மேற்கூறிய தொழில்களுடன் மாதிரியாகூ றுதல், மருத்துவம் செய்தல் போன்வற்றிலும் நேடன் பெற்றவர்களாக விளங்குகின்றனர். படகர்கள் மலைப்பகுதிகளில் பெங்காங்கு உள்ள சமநிலப் பகுதிகளிலும், அடுக்கு நிலங்களை அமைக்கும் வசதியுள்ள இடங்களிலும் அமைன்றனர். இவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் வளமிக்கவர்கள். நீலகிரி மலைப் பகுதியில் வெவ்வேறு உயரப் பகுதிகளில் (altitude) வாழும் இவர்கள் வெவ்வேறு தொழிலைக் கொண்டவர்களாக இருப்பினும் அனைவரும் அவரவரிடம் உள்ள பொருள்களைப்.'.பணியைப் பரிமாறிக் கொள்கின்றனர். அதாவது தோடர்கள் தம் எருமைகளிடமிருந்து பெறப்படும் பால், பால் பொருள்கள், இறந்த கால்நடைகள், சடங்கு நிகழ்ச்சிகளில் படைக்கப்படும் இறைச்சி ஆகியவற்றை மற்ற நால்வருக்கும் கொடுத்து அந்நால்வரிடமுள்ள பொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறே மற்றவர்களும் அவர்களிடமுள்ள பொருள்களைக் கொடுத்து அதற்கு ஈடானவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வகையான கூட்டுப் பரிமாற்ற

முறை மானிடவியலுக்குத் தெரிந்த வரை உலகின் பிற பகுதிகளில் மிகவும் அரிதாகும்.

**மெலனீசியரின் பன்றி விருந்துப் பரிமாற்றம்**

மெலனீசியத் தீவுகளில் வாழும் பழங்குடியினர் அவர்களின் தேவைக்கும் மிகுதியான இடங்களில் மரவள்ளிக் கிழங்கு வகைகளை (yam) விளைவிக்கின்றனர். ஏனெனில் இயற்கையின் விளைவால் எதிர்பாரா வகையில் இவர்களுக்குப் பஞ்சக்காலம் வந்துவிடும். ஆகவே குறைந்த அளவு உணவாவது கிடைக்க வேண்டுமெனப்பரந்த அளவில் வள்ளிக்கிழங்கினைப் பயிரிடுவர். சில ஆண்டுகளில் எதிர்பாரா வகையில் மிகப் பெருமளவில் கிழங்குகள் விளைந்துவிடும். மிகுதியானவற்றை நெடுநாட்கள் சேமிக்க முடியாததால் அவற்றைப் பன்றிகளுக்கு உணவாக்கிவிடுவர் சில ஆண்டுகளில் தொடர்ந்து அதிக விளைச்சல் ஏற்படும்போது அவற்றைப் பன்றிகளுக்கு உணவாக்கி விடுவதால் பன்றிகளின் எண்ணிக்கை மிக உயர்ந்த அளவை எட்டிவிடும். இவ்வாறு பெருகிய பன்றிகளை நீண்டகாலம் வைத்திருக்க முடியாது ஏனெனில் வரும் காலம் பஞ்சக் காலமாக மாறிவிட்டால் அவற்றிற்கு உணவு போட முடியாது. ஆகையால் மிகுதியானப் பன்றிகளை விளைச்சல் இல்லாமல் வாடும் அண்டைய கிராமங்களில் உள்ளோருடன் பகிர்ந்து கொள்வர். இதற்கு ஒரு விருந்துச் சடங்கு ஏற்பாடு செய்யப்படும். இதனை யார் செய்வது என்ற தகுதி பல கால்வழிக் குடும்பங்களிலிருந்து பன்றிகளைப் பெற்று அண்டைய கிராமத்தவர்களின் பங்கேற்பை ஒருங்கிணைத்துச் செய்யும் ஆற்றல் உள்ளோருக்குக் கிடைக்கும். இவர் பெரிய மனிதர் (big man) எனக் கூறப்படுவார். இத்தகுதியை அடைவதிலும் போட்டிகள் ஏற்படலாம். இப்போட்டியில் பெறும் வெற்றி பின்வரும் அடிப்படையில் நிகழ்கிறது . பல கால்வழிக் குடும்பங்களுடன் நல்லுறவு பெற்றவராக இருத்தல் வேண்டும். அவர் விருந்துக்கு வரும் அண்டைய மக்களை ஒருங்கிணைக்கும் திறனைப் பெற்றிருக்க வேண்டும். பஞ்சம் ஏற்படும் காலத்தில் விருந்து உண்ட அண்டைய கிராமத்தவர்களிடமிருந்து சம அளவு விருந்து கிடைக்க ஏற்பாடு செய்பவராக இருத்தல் வேண்டும் போன்ற பல காரணிகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.13

**தகுதிகாட்டுச் சடங்கு**

வடமேற்குப் பசிபிக் கடற்கரைப் பகுதியில் வாழும் அமெரிக்க இந்தியப் பழங்குடிகள் தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ள அல்லது நிலைநாட்ட பெரும்விருந்துச் சடங்குகளை நடத்துகின்றனர். இது அம்மக்களால் “போட்லாட்ச்“ (Potlatch) எனச் சிறப்பாக வழங்கப்படுகிறது. விருந்து கொடுப்போர் விருந்தினருக்கு மதிப்புமிக்க உணவினை வழங்குவதோடு போர்வைகள், செப்புத் தகடுகள், தோணிகள் (canoes), பிற அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றையும் கொடுத்து அவரின் தகுதியை நிலைநாட்ட பெரும் பொருள்களை விருந்தினர்கள் முன் எரித்துக் காட்டுவர். சில காலம் கழித்து விருந்திற்கு வந்த குலத்தவர்களுள் ஒருவர் அவருடைய தகுதியைக் காட்ட விருந்து கொடுத்தவருக்கும் மற்ற குலத்தவருக்கும் விருந்து கொடுப்பார். ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்போட்டி மனப்பான்மை பெருகிற்று . அவர்கள் அறிமுகப்படுத்திய உரோமக் கம்பளிகள், பல்வேறு வகையான ஐரோப்பியப் பொருள்கள் இவர்களின் அன்பளிப்புப் பட்டியலில் இடம் பெறலாயின. 19ஆம் நூற்றாண்டு வரை தகுதிகாட்டுச் சடங்கு அவர்களிடம் சிறப்புப் பெற்றிருந்தது. இன்று இது வழக்கிழந்து வருகிறது. இதற்குக் கனடா அரசின் இனக்கூடும் காரணமாகும். தகுதிகாட்டுச் சடங்கின் இன்னொரு குகை, சமுதாய முறை என்னும் அத்தியாயத்திலும் இடம் பெற்றுள்ளது.

மத்திய கலிபோர்னியாவில் வாழும் போமோ இந்தியர்கள் (Pomo Indians) அவர்தம் சமூக நன்மதிப்பை (social credit) ஒருவகைச் சமச்சீர் பரிமாற்றம் மூலம் பெறுகின்றனர். மக்காச் சோள விளைச்சலையும் மிக உயர்ந்த அளவு மீன்பிடிப்பையும் பெற்ற கிராமத்தினர் அண்டைய கிராமத்தவரை விருந்திற்கு அழைப்பர். விருந்தில் கலந்து கொள்ளும் கிராமத்தவர் ஒவ்வொருவரும் அவருடைய கிராமத் தலைவனிடம் மணிவகைகளைக் (Beads) கொடுப்பர். மணிகளைக் கொடுத்த குடும்பத்தவர் மட்டுமே விருந்துக் குழுவில் இடம்பெற முடியும். ஒவ்வொருவரும் எவ்வளவு மணியை அவர்கள் தலைவனிடம் கொடுத்தார்கள் எனக் கணக்கிடாமல் விருந்து கொடுப்பவர் விருந்துக்குப்

பின் அவர் பெற்றுக் கொண்ட மணிகளுக்கு ஈடாக மக்காச்சோளமும் மீனும் விருந்தாளிகளிடம் கொடுப்பார்.

ஆப்பிரிக்க நூயர் (Nuer) பழங்குடியினர் முக்கியமான வாழ்வியல் சடங்குகளின் போது கால்நடைகளை அன்பளிப்பாகக் கொடுப்பார்கள். கொடுத்தவர் பெயராலேயே அக்கால் நடைகள் அழைக்கப்பெறும். இவ்வாறான சமச்சீர் பரிமாற்றங்கள் உலகின் பிற பகுதிகளிலும் பல வகைகளில் நிகழ்கின்றன.

**மௌனப் பரிமாற்றம்**

ஒரே பகுதியில் வாழும் இரு தனிப்பட்ட இனக் குழுவினரிடையே பகைமை நிலவும்போது அவர்களின் பொருளியல் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு பகைமையை மனதில் கொள்ளாமல் மௌனப் பரிமாற்றம் (dumb barter or silent trade) என்னும் முறையைக் கையாளுகின்றனர். மலாய் நாட்டில் வாழும் சீமாங் (Semang) குள்ளர்கள் காட்டுப் பகுதிகளில் வேட்டையாடியும் உணவு சேகரித்தும் வாழ்பவர்கள். இவர்கள் சமநிலப் பகுதிகளில் வாழும் சகாய் (Sakai) என்னும் வேளாண் மக்களோடு நீண்ட காலமாகப் பகைமை உணர்வோடு வாழ்ந்து வருகின்றனர். இதற்குச் சில வரலாற்றுப் பின்னணிகள் காரணமாகும். இவர்களிடையே பகைமை உணர்வு நிலவினாலும் சீபாங் பழங்குடியினர் முன்பின் தெரியாத அயலாரிடம் பொருள் படு: மாற்றம் செய்வதைவிட, தெரிந்த எதிரியே மேல் என்னும் கொள்கையில் வேளாண் மக்களோடு பொருள்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். சீமாங் பழங்குடியினர் காடுகளில் சேகரிக்கும் பொருள்களை வேளாண் மக்களின் கிராமங்களுக்கு அருகில் இருவரும் நெடுநாட்களாகப் பரிமாறிக் கொள்ளும் பழக்கப்பட்ட இடத்தில் வைத்துவிடுவர். பின்னர் சில மணி நேரம் கழித்துச் சென்று வேளாண் மக்கள் வைக்கும் பொருள்களை எடுத்துக் கொள்வர். வேளாண் மக்கள் பெரும்பாலும் சீமாங் பழங்குடியினருக்குத் தேவைப்படும் உப்பு, பாசி மணி வகைகள், இரும்புக் கருவிகள் போன்றவற்றையே வைப்பர்.

சீமாங், சகாய் மக்களுக்குள் நிலவும் உறவைப் போன்றே இலங்கையில் மலைப்பகுதிகளில் வாழும் வெத்தர்கள் (Veddas) வேட்டையாடிய விலங்குகளைச் சமநிலப் பகுதிகளில் வாழும் சிங்களக் கருமான்கள் வீட்டின் முன்வாசலில் இரவில் வைத்து விடுவர். மறுநாள் இரவு மீண்டும் அவ்வாசலுக்குச் சென்று கருமான்கள் வைக்கும் பொருள்களை எடுத்துச் செல்வர் ஹெரோடாட்டஸ் (Herodotus) கார்த்தகீனிய (Carthaginian) வணிகர்களுக்கும் ஆப்பிரிக்காவின் வடமேற்குக் கடற்கரையில் வாழும் பழங்குடிகளுக்கும் இடையே நடைபெற்ற மௌனப் பரிமாற்றம் குறித்து எழுதுகிறார். கப்பல்களில் வரும் இவ்வணிகர்கள் அவர்களின் பொருள்களைக் கடற்கரையில் வைத்து விட்டு கப்பலுக்குள் சென்று புகையை அடையாளமாகக் கிளப்பிவிடுவர். இவ்வடையாளத்தைக் கொண்டு பழங்குடியினர் தங்கத்தை அவ்விடத்தில் வைத்துவிட்டு அவர்கள் வைத்த பொருள்களை எடுத்துக் கொள்வர்.

இன்றைய நவீன வழக்கில் மௌனப் பரிமாற்றம் பல நிலைகளில் நடைபெறுவதாகக் கூறலாம். இன்று நம் நாட்டில் நடைபெறும் கள்ளச் சாராய மது வகைகள் பரிமாற்றமும் ஒருவகை மௌனப் பரிமாற்றமே. இதனை ஓர் எடுத்துக்காட்டோடு காணலாம். அர்கன்சாஸ் (Arkansas) பகுதியில் ஒசார்க் (Osark) மலைப் பகுதியில் வருவாய் அதிகாரிகளுக்குத் தெரியாமல் மக்காச்சோள மதுவகை ஒன்று இரவுப் பொழுதில் பரிமாறிக் கொள்ளும் குழுவினருக்குத் தெரிந்த இடத்தில் வைக்கப்படும். காலையில் அவ்விடத்திற்குச் சென்று மது பெற்றுக் கொண்டவர் வைத்துச் சென்ற டாலரை எடுத்துக் கொள்வர். நம் நாட்டில் இன்று கள்ளச் சாராயம் காய்ச்சுவே இருக்கும் அதனைப் பெற்று இன்று கள்சய்வோருக்கும் இடையே இவ்வகைப் பரிமாற்றம் சின இடங்களில் நடைபெறுவதாகத் தெரிகிறது.

**அன்பளிப்புப் பரிமாற்றம்**

“தொன்மைப் பண்பாடு தொடங்கி இன்றைய நவீன தொழில்துறைப் பண்பாடு வரை அனைத்து வகைப் பண்பாட்டிலும் காணப்படும் பரிமாற்ற முறை இது. குழந்தை பிறத்தல், பெயர்சூட்டல், பூப்புநீராடல், ஏற்புச் சடங்கு செய்தல், மண ஒப்பந்தம் செய்தல், திருமணம், இறப்பு போன்ற நிகழ்ச்சிகளில் மக்கள் பலவகையான

பொருள்களைக் கொடுக்கின்றனர். இது வாழ்வியல் சடங்கு என்னும் நிறுவனத்தோடு மட்டும் தொடர்பு கொள்ளாமல் அன்பு, சமுதாயத் தகுதி, உறவின் பங்கு (மணை சழடந) செல்வத்தின் அடையாளம், மற்றவருக்கு உதவுதல் போன்ற எண்ணற்ற கூறுகளோடும் தொடர்புடையது.

இன்று மிகவும் எளிய பண்பாட்டைக் கொண்ட சில குடிகளுள் ஒருவராகக் கருதப்படும் அந்தமான் பழங்குடியினர் வாழ்வில் அன்பளிப்புப் பரிமாற்றம் மிகவும் சிறப்பு பெற்றதாகும். இரு நண்பர்கள் பல நாட்கள் சந்திக்காமல் முதல் முறையாகச் சந்திக்கும்போது அவர்கள் செய்யும் முதல் வேலை ஒருவருக்கொருவர் அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொள்வதாகும். இளையவர்கள் (ஆண், பெண் இருபாலரும்) முதியோர்களைச் சந்திக்கும்போதும் ஏதாவதொரு பொருளை அன்பளிப்பாகக் கொடுப்பார்கள். இதற்கு ஈடாக பொருள் எதையும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் சம வயதுடையோர் சந்திக்கும்போது ஒருவர் கொடுக்கும் பொருளுக்கு ஈடாக வேறொரு பொருளை அவரிடமிருந்து எதிர்பார்ப்பர். ஒரு பகுதியைச் சேர்ந்த குழுவினர் அண்டையப் பகுதியைச் சேர்ந்த குழுவினருடன் சில முக்கிய நிகழ்ச்சிகள் முன்னிட்டுச் சந்திக்கும் போது அன்பளிப்புப் பரிமாற்றம் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இவர்களை மிக விரிவாக ஆராய்ந்த ராட்கிளிஃப் பிரௌன் இவர்களிடம் நிலவும் அன்பளிப்புப்பரிமாற்றத்தைக் குறிப்பிடும் போது ஒவ்வொரு அந்தமான் பழங்குடியினரிடமும் உள்ள பொருள்கள் பலர் கை மாறி வந்த அன்பளிப்புப் பொருளாகத்தான் இருக்கும் என்கிறார்.

திபேத்துப் பகுதியில் வாழும் ஒரு பழங்குடி இனத்தவர் காலையில் முதன் முதலாகச் சந்திப்போருக்குத் தன் கழுத்தில் உள்ள துண்டை அன்பளிப்பாக மற்றவர் கழுத்தில் போடுவார். அவரும் அவ்வாறே தன் துண்டை ஈடாக அவருக்குப் போடுவார். காலையில் தொடங்கும் இவ்வகை அன்பளிப்புப் பரிமாற்றம் பின்னர் பகல் பொழுதில் பலவகைப் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதிலும் தொடர்கிறது.

**மறுபங்கீட்டு முறை**

மறுபங்கீட்டு முறை (redistribution system) என்பது ஒரு சமூகத்தின் விளைபொருட்கள் அனைத்தும் தலைவரிடம் சேர்க்கப்பட்டு அவர் மூலம் மீண்டும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் முறையாகும். இவ்வகை முறை தரநிலைச் சமுதாயங்களில் காணப்படுகிறது பல ஆப்பிரிக்கச் சமுதாயங்களில் ஒரு பழங்குடிப் பரப்பு முழுவதும் அப்பழங்குடி அரசன் கையில் இருக்கிறது. அப்பகுதிக்குள் பல தரப்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிற்கும் அப்பிரிவைச் சேர்ந்த ஒருவன் தலைவனாக இருப்பான். அரசன் நிலத்தை அப்பிரிவுத் தலைவனுக்கு ஒதுக்கித் தருவான். அதனை அவனது இரண்டாம் தலைவன் பிரிவைச் சேர்ந்தோருக்குப் பிரித்துத் தருவான். நிலத்தில் விளையும் அனைத்துப் பொருள்களும் அரசனிடம் கொடுத்துவிட வேண்டும். அவர் மைய நிருவாக அமைப்பு மூலம் அதனை ஒவ்வொரு தரப்பிரிவிற்கும் மீண்டும் பகிர்ந்தளிப்பார். வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதார முறையிலிருந்து தோட்டப் பயிர் வகைகளை (horticulture) விளைவிக்கும் பொருளாதாரம் வரை இவ்வகை மறுபங்கீட்டு முறை ஏற்படவில்லை. பலதரப்பிரிவுகள் கொண்ட சமுதாய முறை தோன்றிய பின்னர்தான் மறுபங்கீட்டு முறை ஏற்பட்டது. மறுபங்கீட்டு முறை பற்றி ஓர் எடுத்துக்காட்டுடன் அறியவும் தரநிலைச் சமுதாய முறையின் அமைப்பு என்ன என்பது பற்றி அறியவும் “சமுதாய முறை“ என்னும் அத்தியாயத்தில் “தரநிலைச் சமுதாயங்கள்“ என்னும் உட்தலைப்பைக் காண்க.

**பணப் பொருளாதாரமும் அங்காடி முறையும்**

மக்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்காக உணவு சேகரித்த நிலையிலிருந்து விடுபட்டு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாறியபோது உற்பத்தியில் தொடர்ச்சியாக உபரிப் பொருள்கள் மிகுந்தன. தேவைக்கும் மிகுதியான பொருள்களை வீணாக்காமல் அவற்றைக் கொடுத்துவிட்டு வேறு பொருள்களைப் பெற வேண்டுமென விரும்பினர். நேருக்கு நேரான மக்களிடமும் அவ்வகை உபரிப் பொருள்கள் விளைந்துள்ளதால் ஒரு மைய இடம் தேடி அயலின மக்களிடம் அவற்றைக்கொடுத்து விட்டு அதற்கு ஈடான பொருள், பணம் பெறத்

தலைப்பட்டனர். தொடக்கத்தில் இன்றைய செலாவணி (currency) முறையோ பண அடிப்படையிலான வணிக முறையோ ஏற்படவில்லை, மெலனீசியப் பழங்குடிகள் தங்களிடமுள்ள உபரிப் பன்றிகளைக் கொடுத்துவிட்டு மதிப்பு மிக்க கிளிஞ்சல்களைப் பெற்றுக் கொண்டனர். அவர்களின் அண்டையப் பழங்குடிகள் அவர்களின் உபரிப் பொருள்களைக் கொடுத்துவிட்டு கேட்டுப் பெற்றனர். இவ்வாறு ஒரு பரந்த பகுதியில் வாழ்ந்த ஒன்றுக்கும் மேற்பட்ட குடியினர் ஒரு பொதுப் பொருளை மையமாகக் கொண்டு பரிமாறிக் கொண்ட முறையே தொன்மைப் பணமாகக் (primitive money) கருதப்பட்டது. கிளிஞ்சல்கள் உலகின் பல பகுதிகளில் பணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பசிபிக் கடற்பகுதியிலும் ஆப்பிரிக்காவிலும் சிப்பி மீன் வகையிலிருந்து பெறப்படும் ஒரு வகைச் சோழி (cowrie shell) பணமாகப் பயன்படுத்தப்பட்டது. கலிபோர்னியப் பகுதியில் வாழும் இந்தியப் பழங்குடிகள் ஒருவகை இரட்டைச் சிப்பிகளைப் (dentalium) பணமாகப் பயன்படுத்தினர். அமெரிக்கக் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த இந்தியர்கள் டச்சு மக்களுடன் ஒருவகைச் சோழியைப் (Wampum) பணமாகப் பரிமாறிக் கொண்டனர். அஸ்தெக்குகள் (Aztec) ஒருவகைப் பீன்சைப் (cacao beans) பணமாகப் பயன்படுத்தினர். இவை தவிர சில ஆப்பிரிக்கப் பகுதிகளில் இரும்புக் கருவிகளும், வடமேற்கு பசிபிக் கடற்கரை இந்தியர் களிடம் கம்பளிப் போர்வைகளும் பணமாகப் பயன்படுத்தப் பட்டன. ஆடுகள், மாடுகள், அம்புக் கருவிகள் போன்றவற்றைத் தொன்மை மக்கள் மணப்பெண் பணமாகப் பயன்படுத்திய நிகழ்ச்சிகளையும் இங்குத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

ஜார்ஜ் டால்டன் என்னும் பொருளியல்சார் மானிடவியலார் பணத்தைப் பொது நோக்கப் பணம் (general purpose money) என்றும் சிறப்பு நோக்கப் பணம் (special purpose money) என்றும் வகைப்படுத்துகிறார். கிளிஞ்சல்கள், இரும்புக் கருவிகள், அம்புகள், கம்பளி, கால்நடைகள் போன்றவை சிறப்பு நோக்கப் பணம் என வகைப்படுத்துகிறார். அங்காடி முறையில் பயன்படுத்தப்படும் பணமுறை பொது நோக்கப் பணம் என்கிறார். சிறப்பு நோக்கப் பணமென்பது தொழில்துறை பெருகாத

காலத்தில் (pre-industrial stage) சில குறிப்பிட்ட பொருள்களைச் சில நிகழ்ச்சிகளில் மட்டுமே பரிமாறிக் கொள்ளவேண்டியிருந்தது. அப்போது அவர்களால் விலைமதிப்புமிக்க பொருத்து எது எனக் கருதப்பட்டதோ அதைப் பணமாகக் கருதிப் பெற்றுக் கொண்டார்கள். அவ்வகைப் பரிமாற்றம் தொடர்ச்சியான உபரிப் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதன் அடிப்படையில் நிகழவில்லை என்கிறார்.

அங்காடி முறையின் (market system) வளர்ச்சியைப் பொறுத்த வரை தொடக்கத்தில் நிறுவன அமைப்பில்லாத அங்காடி முறை பழங்குடி மக்களிடம் தோன்றியது. எடுத்துக்காட்டாக, ட்ரோபிரியாண்டுத் தீவு மக்கள் முறையான அங்காடி அமைப்பைக் கொண்டிராதவர்கள். இருப்பினும் இவர்கள் ஒரு பொதுவான இடத்தில் கூடி சிறப்பு நோக்கப் பணத்தைக் கொண்டு பொருள்களைப் பரிமாறிக் கொள்கின்றனர் அல்லது பொருள்களைப் பண்டமாற்றம் மூலம் பகிர்ந்து கொள்கின்றனர். இவர்கள் “தாப் கிளிஞ்சல்கள்“ (dap shells), “கோ கிளிஞ்சல்கள்“ (ko shells) என்னும் இரண்டு வகைக் கிளிஞ்சல்களைச் சிறப்பு நோக்கப் பணமாகப் பயன்படுத்துகின்றனர். இவற்றுள் தாப் கிளிஞ்சல்கள் 22 மதிப்புத்தரமும் (22 main values), கோ கிளிஞ்சல்கள் 16 மதிப்புத் தரமும் கொண்டதாக விளங்குகின்றன. ஒருவன் புதிய மனைவியை வாங்க வேண்டுமானால் அவன் அப்பெண்ணின் தகுதிக்கேற்ப கிளிஞ்சல் பணத்தைக் கொடுத்தே வாங்க வேண்டும்.

பணச் செலாவணியைக் கொண்டு நகர அங்காடியில் பொருள்களைப் பரிமாறிக் கொண்ட முறை கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் ஏதென்ஸ் நகரில் தோன்றியது. இது “அகோரா“ (agora) எனச் சொல்லப்பட்டது. தோட்டக்கலைப் பயிர் வகைகளின் வளர்ச்சி நிரந்தர வேளாண் முறைக்கு வழிகோலியது. இத்தொழிலில் ஏற்பட்ட உற்பத்தி நிலையான உபரியை ஏற்படுத்தியபோதுதான் அங்காடி முறை நிறுவனமுற்ற அமைப்பாக உருவெடுத்தது. இங்குப் பொருள்கள் தேவைக்கும் அளிப்புக்கும் (supply) இடையே நிலவிய இடைவெளியின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு விற்கப்பட்டன. அங்காடி ஒரு திறந்த பரிமாற்ற இடமானது. இங்குப் புதியவர்கள் வந்து

பொருள்களை விற்கலாம் பெற்றுக் கொள்ளலாம் என்ற முறை தோன்றியது. இதன்பின்னர் படிப்படியாக ஏற்பட்ட தொழிற்புரட்சியால் ஏற்பட்ட அங்காடி முறை மிகவும் சிக்கல் வாய்ந்த (complex) பல அமைப்புகளைத் தன்னுள் ஏற்றுக்கொண்டது. அதனால் பழங்குடிகளின் நவீன மக்களின் அங்காடி முறையையும் ஒரே அடிப்படையில் ஆராய முடியாது கொள்கையாக்கத்தின் என மானிடவியல் அறிஞர்களுள் ஒருசாரார் கூறுகின்றனர். இவர்களுள் ஆங்கிலேயப் பொருளியல்சார் மானிடவியலார் கார்ல் பொலான்யி முன்னோடியாகக் கருதப்படுகிறார். மேற்கத்திய தொழில்துறை சார்ந்த மக்களின் உற்பத்தி, அங்காடி அமைப்பு, வாணிக முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இன்றைய பொருளியல் (economics) துறையினரின் கொள்கைகள் மூலம் பழங்குடிகளின் பொருளியலை ஆராய முடியாது என்கிற கருத்தை உடையவர் (substantivist) பொலான்யி. இதற்கு மாறான கருத்துடையவர்கள் (formalists) "பருநிலைப்படுத்தல்" (maximizing), "பொருளியலாக்கம் (economizing) போன்ற பொருளியல் கருத்தாக்கங்களைக் கொண்டு தொன்மைப் பொருளியலையும் (primitive economics) ஆராய இயலும் எனக் கூறுகின்றனர்.

**சொத்துரிமையும் மரபுரிமையும்**

மனிதப் பண்பாட்டில் சொத்துரிமையும் மரபுரிமையும் ஓர் உலகளாவியக் கூறாகத் திகழ்கிறது. மக்கள் சொத்தினைத் தனிப்பட்ட டைமைகளாகவோ அவர் சார்ந்த. குழுவின் உடைமையாகவோ, மொத்தச் சமுதாயத்தின் உடைமையாகவோ கருதுகின்றனர். இங்குச் சொத்து எனக் கூறப்படுவது நகரும் பொருள்களையும் நகராப் பொருள்களையும் குறிக்கிறது. வேட்டை நிலை உற்பத்தி முறையில் ஒவ்வொரு குழுவும் அதற்கென்ற நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. ஆஸ்திரேலிய முதுகுடிகள், ஆப்பிரிக்க புஷ்மன், அந்தமான் ஒங்கே போன்ற எண்ணற்ற வேட்டுவக் குடியினர் அவர்களுக்கென்றே நிலப்பரப்பைக் கொண்டுள்ளனர். இப்பரப்பு அவர்களின் உட்பிரிவுகளுக்கு (குலம், கால்வழி போன்றவை) ஏற்பவும் மேலும், பகுக்கப்படுகிறது. வேட்டைக் கருவிகள், வீட்டுப் பொருள்கள், பிற பொருள்சார் கூறுகள் தனிமனிதர் சொத்தாகக் கருதப்படுகின்றன. ஆயர்குடிகளிடமும் இவ்வாறான முறை உள்ளது.

மேய்ச்சல் நிலம் பொதுச் சொத்தாகவும் கால்நடைகள் தனிமனிதர் சொத்தாகவும் விளங்குகின்றன. இந்தியப் பகுதியில் வாழும் தோடர், போட்டியா, ஆப்பிரிக்கப் பகுதியில் வாழும் தோதோத்து (Dodoth), நூயர், ஜிய் (Jie) போன்ற பிற குடியினர், அரேபியக் கால்நடை வளர்ப்போர் போன்ற குடிகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாவர். சமுதாயப் படிமலர்ச்சியில் குழுவாகச் சேர்ந்து நிலத்தை உரிமை கொண்டாடும் இம்முறை மனிதர் குலக்குழுக்களாக (bands) வாழ்ந்த நிலையில் தொடங்கியது. இந்தத் "தொன்மைப் பொதுவுடைமை" (primitive communism) வேட்டை நிலைப் பண்பாடு, ஆயர் பண்பாடு ஆகியவற்றோடு அற்று விடுகிறது. காட்டெரிப்பு வேளாண்மையிலும் தொன்மைப் பொதுவுடைமையின் தொடர்ச்சி காணப்படுகிறது. பெரும்பாலான சமுதாயங்களில் காட்டெரிப்பு வேளாண்மை குடும்ப அளவிலேயே வந்துள்ளது.

கலிபோர்னியாவில் வாழும் யூரொக்குப் (Yurok) பழங்குடியில் தோணி (canoe) வைத்திருப்பது தனிமனிதர் சொத்து இருப்பினும் தோணி இல்லாதார் ஆற்றைக் கடக்க அழைக்கும் போதும் பொருள்களை ஏற்றிச் செல்ல அழைக்கும்போதும் அவர் உதவியாக வேண்டும். தோணியில் பயணம் செய்யும் போது தோணி ஓட்டுநருக்குக் காயங்கள், விபத்து ஏற்பட்டாலோ அவரது வீடு எரிந்துவிட்டாலோ, இதுபோன்ற எந்த ஒரு விபத்து ஏற்பட்டாலோ தோணியில் பயணம் செய்வோர் ஈடுகட்ட வேண்டும்.

ட்ரோபிரியாண்டுத் தீவினரிடமும் தோணி தனிமனிதன் சொத்தாக இருந்தாலும் அவன் கால்வழியினரும் அதைப் பயன்படுத்தும் உரிமையைப் பெறுகின்றனர். ஒரு கால் வழியைச் சேர்ந்தோர் தோணியாளனுடன் சேர்ந்து மீன்பிடிக்கச் செல்வர் அதனைத் தோணியாளன் மறுக்க முடியாது. தோணியின் உரிமைக்காக அவன் மற்றவர்களிடமிருந்து பிடிக்கும் மீனில் ஒருபகுதியைப் பெறுவான். இது விதிமுறை சார்ந்த பங்கல்ல. அவரவர் விருப்பப்படி கொடுப்பதையே தோணியாளன் பெற்றுக்கொள்வான்.

இந்தியச் சமுதாயத்தில் குடிஊழிய முறையில் ஊழியம் செய்யும் குடும்பங்களின் மரபுரிமை இதே அத்தியாயத்தில் இடம்பெறும் குடிஊழிய முறை என்னும் உட்தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

மறுபங்கீட்டு முறையைக் கொண்ட தரநிலைச் சமுதாயங்களில் சொத்தும் மரபுரிமையும் எவ்வாறு செயல்படுகிறது என்பதைச் "சமுதாய முறை", "அரசியல் முறையும் சமூக ஒழுங்கும்" என்னும் அத்தியாயங்களில் காண்க. பழங்குடிச் சமுதாயங்களில் மரபுரிமை (inheritance) தந்தைவழிச் சமுதாயங்களில் ஆண் வழியிலும், தாய்வழிச் சமுதாயங்களில் பெண் வழியிலும் வருகின்றன. இவ்வகைச் சமுதாயங்களில் மரபுரிமை மூத்த மகனுக்குக் கொடுக்கும் முறையும் (primogeniture) இளைய மகனுக்குக் கொடுக்கும் முறையும் (ultimogeniture) காணப்படுகிறது.

**வினாக்கள்**

1. உணவு ஈட்டுதலும் பரிமாற்ற முறைகளும் குறித்து எழுதுக.
2. வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறையைக் கூறுக.
3. வேளாண் முறை குறித்து எழுதுக.
4. பரிமாற்றமும் பகிர்ந்து கொள்ளுதலும் குறித்து எழுதுக.
5. குடி ஊழியமுறை குறித்து எழுதுக.
6. மறு பங்கீட்டு முறை என்றால் என்ன? விளக்குக.

**சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

தொலைபேசி எண்: 9788749246, 9944182841

EMAIL ID: spetchi29@gmail.com.